வரலாறு

வானவன்மாதேவி ஈசுவரம்

நல்வாழ்த்துக்கள்

✆ கடை : 709362
வீடு : 714461

மைசூர், பெங்களூர், பாண்டிச்சேரி
முதலிய நகரங்களில் தயாராகும்
மணம் மிக்க ஊதுபத்திகளை
வாங்கச் சிறந்த இடம்

ப. முக்கப்பிள்ளை

பல்பொருள் அங்காடி,

285, பெரிய கடைவீதி,

திருச்சிராப்பள்ளி – 620 008.

"குன்றென நிமிர்ந்து நில்"

வரலாறு 8

ஆய்விதழ்

1998

இரா. கலைக்கோவன்
பொறுப்பாசிரியர்

மு. நளினி
அர. அகிலா
உதவி ஆசிரியர்கள்

இரா. கண்ணையன்
மேலாளர்

வெளியிடுவோர்

டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
48, புத்தூர் நெடுஞ்சாலை, திருச்சிராப்பள்ளி – 620 017.

எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும்

வரலாறு இதழின் ஆறாம் தொகுதியிலிருந்து அதன் அட்டையை வடிவமைப்புச் செய்து அச்சிட்டு வழங்கி வரும் திரு. தே. ர.ஃபேல் இந்தத் தொகுதியின் அட்டைக்கும் பொறுப்பேற்றுள்ளார். அன்பிற் சிறந்த அப்பெருந்தகைக்கும், வழக்கம் போல் புரவலர்களாய்ச் சூழ இருந்து இந்தத் தொகுதி மலர அன்போடு உதவிய பேராசிரியர்கள் கோ. வேணிதேவி, சீ. கீதா, திருமதி. வாணி செங்குட்டுவன் ஆகியோருக்கும் வரலாற்றின் கனிந்த கைகூப்பு.

இந்த இதழில் தாருகாவனேசுவரர் கோயிற் கல்வெட்டுகள் விரிவான அளவில் ஆராயப்பட்டுள்ளன. சோழர் காலம் தொடங்கி நாயக்கர் காலம் வரை தொடர்ந்து புரக்கப்பட்ட இக்கோயில், திருப்பணிச் செல்வர்களால் கல்வெட்டுகளை அறவே இழந்துள்ளது. குடமுழுக்கு, திருப்பணி என்ற சொற்களைக் கேட்டாலே அஞ்சுமளவிற்குத் திருக்கோயில்கள் இவற்றால் சீரழிக்கப்படுவது கண்கூடு. எவ்வளவோ எடுத்துரைத்தும் பொறுப்பில் உள்ளவர்கள் கருத்து கொள்ளாமலிருப்பது ஏனென்று தெரியவில்லை. இந்தக் கொடுமைகளை எப்படித் தடுப்பதென்றும் விளங்கவில்லை.

தமிழ்நாடு முழுவதும் பரவியுள்ள ஆய்வாளர்கள்தான் இதற்கொரு முடிவுகட்டவேண்டும். மக்களுக்குக் கல்வெட்டுகள், சிற்பங்கள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை விளங்க உரைப்பதுடன், எக்காரணம் கொண்டும் அவை குடமுழுக்குக் கோலாகலங்களின் பூச்சுகளுக்கும், சிதைவுகளுக்கும் ஆளாகாது காப்பாற்றிடல்வேண்டும். ஆங்காங்கே உள்ள ஆய்வமைப்புகளும் இப்பணியில் முழுமூச்சாய் ஈடுபடுவது அவசியமாகும். இன்றொரு விதி செய்யத் தவறினோமாயின் இனி எந்தநாளும் கல்வெட்டுகளைக் கோயில்களில் காண்பது குதிரைக்கொம்புதான். வாருங்கள் தோழர்களே கையிணைப்போம். இந்த நாட்டின் வரலாற்றை அழிவினின்று காப்போம்.

வரலாறு இதழின் உதவி ஆசிரியர் மு. நளினி முனைவர் பட்டம் பெற்றுள்ளார். கல்வெட்டாய்விலும், கோயிற்கலைகளிலும் சிறந்து விளங்கும் அவரது ஒளிமயமான எதிர்காலத்திற்கு வரலாறு இதழின் வாழ்த்துக்கள்.

அன்புடன்,

இரா. கலைக்கோவன்

"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்."

இந்த இதழில் . . .

பக்கம்

1. புதிய கல்வெட்டுகள்

1. கொங்கராயக்குறிச்சிக் கல்வெட்டுகள் 1
2. திருநெடுங்களம் கல்வெட்டுகள் 3
3. தழுதாழைச் சிவன்கோயில் கல்வெட்டுகள் 12
4. முக்காணி அனுமந்தமூர்த்திக் கோயில் கல்வெட்டு 16
5. திருச்செந்தூர்க் கல்வெட்டு 18
6. சக்கம்மாள்புரம் கல்வெட்டு 20
7. வெண்பாவூர்க் கல்வெட்டு 21

2. பதிப்பிக்கப்படாத பாடங்கள்

திருக்கோளக்குடிக் கல்வெட்டுகள் - 3 22

3. ஆய்வுக் கட்டுரைகள்

1. கண்ணனூர் முருகன் கோயில் 37
2. மண்டகப்பட்டுக் குடைவரை 44
3. உறையூர் முத்திரை ஓலைகள் 53
4. பொலன்னறுவையின் வானவன் மாதேவி ஈசுவரம் 61
5. சேதுபதி மன்னர்களின் தமிழ்க்காசுகள் 69
6. சிலட்டூர்ப் பொன்னம்பலநாதசுவாமி திருக்கோயில் 71
7. சில அரிய தட்சிணாமூர்த்தி வடிவங்கள் 80
8. திருப்பராய்த்துறைத் தாருகாவனேசுவரர் கோயில் 87

9.	இசுரேலில் தமிழ்	130
10.	தமிழகக் குகைக் கல்வெட்டுகளில் சமணம்	136

4. பொதுப்பகுதி

1.	பெருமைச் சுவடுகள்	142
2.	நூல் மதிப்புரை	147
3.	அன்புள்ள உங்களுக்கு	150
4.	அங்கும் இங்கும் - 1998	154
5.	உண்டாலம்ம இவ்வுலகம்	157
6.	கட்டுரையாளர்கள்	162

பாராட்டி வாழ்த்துகிறோம்

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் தொல்லியல் அலுவலர் திரு. ச. கிருஷ்ணமூர்த்தி திருவாவடுதுறை ஆதீனத்தின் கீழுள்ள திருமடங்கள் குறித்தும், அங்குள்ள செப்பேடுகள், கல்வெட்டுகள் குறித்தும் ஆதீன வெளியீடாகிய மெய்கண்டார் இதழில் தொடர்ந்து பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். கல்வெட்டு, சிற்பம், ஓவியம் தொடர்பான பன்னிரண்டு நூல்களை எழுதி வெளியிட்டுள்ள பெருமையும் இவருக்குண்டு.

தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்து புதிய கல்வெட்டுகளைக் களஆய்வுகள் வழிக் கண்டுபிடித்துப் பதிப்பித்துள்ள திரு. ச. கிருஷ்ணமூர்த்தி அனைத்துத் திருமடங்களுக்கும் அன்பான உறவினர். காட்சிக்கு எளியராகவும், எல்லார்க்கும் இனியராகவும் விளங்கும் இவர்தம் தளர்வறியா உழைப்பையும், ஆய்வுப்பணிகளையும் போற்றி, 11.2.2000 அன்று திருவாவடுதுறைத் திருமடத்தில் நிகழ்ந்த நமசிவாய தேசிகரின் குருபூசையின்போது, ஆதீனத்தின் இருபத்து மூன்றாவது பட்டம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிகரவர்கள் திரு. ச. கிருஷ்ணமூர்த்திக்குச் 'சரித்திரச் செம்மல்' எனும் விருதினை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

விருது பெற்ற ஆய்வாள அன்பரை வரலாறு இதழ் மனமுவந்து பாராட்டி வாழ்த்துகிறது.

1. புதிய கல்வெட்டுகள்

1. கொங்கராயக்குறிச்சிக் கல்வெட்டுகள்

எஸ். இராமச்சந்திரன், கொற்கை

தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் வட்டத்தில் உள்ள கொங்கராயக் குறிச்சியில் கற்பக விநாயகர் கோயில் என வழங்கப்படும் செங்கற்கோயில் உள்ளது. இக்கோயிலின் வாயில் நிலையில் இரு வட்டெழுத்துக் கல்வெட்டுகள் உள்ளன. இவ்வூரிலுள்ள வீரபாண்டீசுவரர் கோயிலின் கருவறை வாயில் நிலையில் தமிழ் எழுத்துக்களில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று உள்ளது. தகவல் தந்து உதவியவர்கள் திரு. எஸ். வெங்கடாசலம் மற்றும் திரு. சாம் தேவசகாயம்.

வட்டெழுத்துக் கல்வெட்டுகள்

முதற் கல்வெட்டு

இடம்: *கற்பக விநாயகர் கோயில் வாயில் நிலை.*

செய்தி: *கொங்கராயக்குறிச்சியின் பழைய பெயர் முதுகோனூர் எனத் தெரிகிறது. இவ்வூரில் சேய்ஞல்லூர்ச் சேனம்பிரான் என்பவர், முன்றுறை வீரர் ஜினாலயம் எடுப்பித்துள்ளார். சேய்ஞல்லூர் என்ற ஊர் தற்பொழுது செயதுங்கநல்லூர் என வழங்கப்படுகிறது.*

காலம்: கோச்சடைய மாறன்; கி.பி. பத்தாம் நூற்றாண்டின் இடைப்பகுதியைச் சேர்ந்ததாகும்.

1	ஸ்வஸ்திஸ்ரீ கோச்ச	7	ட்டு முதுகோனூர்ப்
2	டைய மாறற்கு	8	பால் சேய்ஞல்லூர்
3	யாண்டு இரண்டு	9	ச் சேனம்பிரான் எ
4	இதனெதிர் மூன்	10	டுப்பித்த முன்று
5	று இவ்வாண்டு தி	11	றை வீரர் ஜினா
6	ருவழுதி வளநா	12	லயம்

இரண்டாம் கல்வெட்டு

இடம்: *கற்பக விநாயகர் கோயில் வாயில் நிலை.*

செய்தி: *குன்றங் கிழவன் என்பவர் வேளான் வீராணன் என்பவர் நினைவாக முதுகோனூர் முன்றுறை வீரப் பெரும்பள்ளியில் விளக்கு ஒன்று*

எரிப்பதற்கான ஏற்பாட்டினைச் செய்ததாக இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.

காலம்: முதல் இராஜராஜர்; கி.பி. 997.

1 காந்தளூர்ச் சாலை கல
2 மறுத்த கோஇராசராச
3 கேசரிபன்மற்கு
4 யாண்டு பன்னிரண்டு
5 திருவழுதி வளநாட்டு மு
6 துகோனூர் முன்றுறை வீர
7 ப் பெரும்பள்ளிக்கு வே
8 ளான் வீராணனை சாத்தி
9 [கு]ன்றங் கிழவன் அட்
10 டின விளக்கொன்று
11 [செ]லுத்த

தமிழ் எழுத்துக் கல்வெட்டு

இடம்: வீரபாண்டீசுவரர் கோயில் கருவறை வாயில் நிலை.

காலம்: கி.பி. 11 - 12 ஆம் நூற்றாண்டாகலாம்.

1 ஸ்வ[ஸ்தி*]ஸ்ரீ இத்திருநிலை செய்வித்தா
2 ன் அம்பலநாதன் சோறன்

பாபேல் கோபுரம்

திருமறையில் காணப்படும் எல்லா இடங்களிலும் அகழ்வாராய்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன. பாபேல் கோபுரத்தையும், எரிகோ நகர வாயிற் கதவுகளையும். ஈராக் நாட்டின் வடக்குப் பகுதியில் துருப்பிடித்த அழுத்தமான கற்கள் உள்ள பகுதியினையும் அகழ்வாராய்ச்சியின் மூலம் கண்டுபிடித்துள்ளனர். ஆதியாகமம் புத்தகத்தில் மக்கள், மோட்சத்தைத் தொடும் மட்டும் உயரிய கோபுரத்தைக் கட்ட முயற்சிசெய்த இடம் இதுவே (வடக்கு ஈராக் நாட்டிலுள்ளது) என முடிவுக்கு வந்துள்ளனர். இன்ஸ்புரூக் பல்கலைக்கழகப் (University of Innsbruck) பேராசிரியர்கள் இத்தகைய அகழ்வாராய்ச்சியில் இப்பொழுது ஈடுபட்டுள்ளனர். அண்மைக் காலம்வரை, இக்கோபுரம் பாபிலோன் (BABYLON) நகரில் இருந்திருக்கவேண்டும் என்று கருதப்பட்டது.

முனைவர் தாமஸ் எட்மண்ட்ஸ்

2. திருநெடுங்களம் கல்வெட்டுகள்

கோ.. சங்கீதா, சு. முத்துலட்சுமி, சோ. மாலதி, அர. அகிலா,
மு. நளினி

திருச்சிராப்பள்ளித் தஞ்சாவூர் நெடுஞ்சாலையில் சிராப்பள்ளியிலிருந்து ஏறத்தாழ இருபது கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள பாடல் பெற்ற தலம் திருநெடுங்களம். பல்லவர் காலத்திலிருந்தே இப்பகுதி சிறப்புற்று விளங்கியமைக்குச் சான்றாகச் சில புதிய கல்வெட்டுகள் தற்போது கிடைத்துள்ளன. இங்குச் சமணக் கோயில் ஒன்று இருந்தமைக்கான சிற்பச் சான்றுகளும், கல்வெட்டுச் சான்றுகளும் மைய ஆய்வர்களால் கண்டறியப்பட்டுள்ளன. கோயிலில் உள்ள இரண்டாம் கோபுர வாயிற்காவலர் சிற்பங்களும், எழுவர் அன்னையர் சிற்பங்களும் முற்சோழர் காலத்தன. புதிய கல்வெட்டுகளைப் படியெடுக்கத் துணை நின்ற திரு. பழனிவேல், ஜெயராஜ் ஆகியோர்க்கும், கல்வெட்டுகள் தூக்கியெறியப்பட்டபோது அவற்றை மீண்டும் திருக்கோயிலுக்குள் கொணர்ந்து சேர்க்க உதவிய திரு. குருசாமிக்கும் மையத்தின் நன்றி.

முதற் கல்வெட்டு

இடம்: பலிபீடத்திற்கு முன் இருந்த பலகைக் கல்வெட்டு. தற்போது உட்திருச்சுற்றின் தென்பகுதியில் உள்ளது.

செய்தி: கல்வெட்டுப் பகுதிக்கு மேல் இரண்டு வீச்சரிவாள்கள், குத்துவிளக்குகள், துரட்டி ஆகியன செதுக்கப்பட்டுள்ளன. ஸ்ரீபுறக்குடிப்பள்ளியைச் சேர்ந்த சேந்தன் குழுவினரின் காவலில் இப்பகுதி இருந்திருக்கலாம். இங்குச் சமணப் பள்ளி இருந்தமைக்கான தடயங்கள் கிடைத்திருப்பதால் அப்பள்ளியைக் காவல் காத்தவர்களாகவும் இருக்கலாம். 'இது காத்தார் அடி என் தலை மேலன' என்று கூறும் மரபிலிருந்து மாறுபட்டு, காத்தார் அடி மேல் என் கையும், தலையும் என்று கூறியிருப்பது புதுமையாக உள்ளது.

காலம்: கி.பி. எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதி.

1 ஸ்ரீபுறக்குடிப்பள்ளி சேந்த .

2 குழுவிநார் காவல் இது காத்

3 தார் அடி மேல்லன் கையும் தலயும்

இரண்டாம் கல்வெட்டு

இடம்: *இரண்டு கோபுரங்களுக்கும் இடையிலுள்ள நந்தி மண்டபத்திற்கு முன்னால் இருந்த பலகைக் கல்வெட்டு. தற்போது உட்திருச்சுற்றின் தென்பகுதியில் உள்ளது.*

செய்தி: *கோயிலில் திருவிளக்கு எரிக்கத் தற்புருஷக் கண்ணர், ஒழுகன் தாழி, சாத்தன் வன்னி, இடையர்கள் நம்பி, சுவரன் காரி ஆகியோர் தந்த பன்னிரண்டு கழஞ்சு பொன்னுடன், தட்டார் பொன் ஒரு கழஞ்சும் சேர்த்தளிக்கப்பட்டது.*

காலம்: கி.பி. எட்டாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி.

1 ஸ்ரீதற்புரு

2 ழ கண்ணர் திருவி[ள]

3 க்கினுக்கு வைத்த பொன்

4 எழு கழஞ்சு ஒழுகன் தாழி

5 வைத்த பொன் கழஞ்சு சாத்

6 தன் வன்னி கழஞ்சு இடைய

7 ன் நம்பின் கழஞ்சு இடையன்

8 சுவரங்காரி இரு கழஞ்சு

9 தட்டார்ப் பொன் கழஞ்சுமா

10 கப் பதின்முக்கழஞ்சு தி[ரு]

11 விளக்கினுக்கு முதல் வை

12 •த்தது

மூன்றாம் கல்வெட்டு

இடம்: மேலது; பின் பக்கம்.

செய்தி: *மாற்பிடுகு விழுப்பேரையனான சாத்தன் உதையாங்குரன், ஒலோச்சன், சேந்தன் ஆகிய பலர் இணைந்து கோயிலுக்குப் பொற்கொடையளித்தனர். கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.*

காலம்: *தந்திவர்மரின் இரண்டாம் ஆட்சியாண்டு; கி.பி. 798.*

1 ஸ்வஸ்திஸ்ரீ தந்திப் போத்தரைய[ற்கு யா]

2 ண்டு இரண்டாவது மாற்பிடுகு வி[ழு]

3 ப்பேரைய[ன*]ரயின சாத்தனுதை

4 யாங்குரன் திருநெடுங்களத்து

5 . . படாரா[ர்*]க்கு ஒழுக்கவி வைத்த

6 பொன் பதினைங் கழஞ்சு ஒலோச்

7 ச வைத்த [½] சேந்தன் வைத்த

8 பொன் 6ங் கழஞ்சு [சானந்தமி]

9 சாத்தி வைத்த பொன் 6ங் கழஞ்சு

நான்காம் கல்வெட்டு

இடம்: உட்திருச்சுற்று மாளிகையின் வடமேற்குக் கூரையிலிருந்து அகற்றி எடுக்கப்பட்ட தூண். மூன்று கல்வெட்டுகள் உள்ளன. தற்போது உட்திருச்சுற்றின் தென்பகுதியில் உள்ளது.

செய்தி: காமநெறி என்பார் கோயில் தேவதானமான மேலைக்குறிச்சி எனும் ஊரைச் சேர்ந்த களர், திடல் நிலங்களைப் பண்படுத்திக் கோதுகுலவர்க் காணி என்று பெயரிட்டு, இந்நிலம் உழுவார், நிலம் விளைந்தாலும் விளையாவிட்டாலும் நாளொன்றுக்கு முந்நாழி குத்தலரிசியைச் சிறுகுடியாக (வரி?) வழங்குமாறு செய்தார்.

காலம்: கோமாறஞ்சடையரின் பதினொன்றாம் ஆட்சியாண்டு; கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ

2 கோமாறஞ்சடை

3 யற்கு யாண்டு

4 11ஆவது திரு

5 நெடுங்களத்து

6 த் தேவருடைய

7 தேவதானம் மே

8 லைக்குறுச்சி [தோ]

9 ன்றின நான்று

10 துடங்கி விளைந்த

11 றியாத களருந் திட

12 லு மயக்கி திருநெடுங்

13 களத்து கணத்தாரோம்

14 கோதுகுலவர்க் காணி எ

15 ன்று பே

16 ரிட்டு இத்

17 தேவதான

18 முழுவார் இ

19 ச்செய் போ

20 கஞ் செல்வி

21 லுஞ் செய்
22 யாவிடிலு
23 ம் நாள் வாய்
24 முந்நாழி குத்
25 தலரிசி சத்
26 திர முட்டா
27 மை சிறுகுடி
28 செலுத்துவ
29 தாக மயக்கி
30 வைத்தேன்
31 காமநெறி
32 மை[ன]ன்
33 இது காத்தா
34 னடி என்
35 றலை மே
36 லன

ஐந்தாம் கல்வெட்டு

இடம்: மேலது.

செய்தி: தேவூர் நாட்டு ஏனத்தன்குடி சாத்தன் சேரன் கோயிலுக்கு இரு கழஞ்சு பொன் கொடை. கல்வெட்டில் இடம்பெறும் மாங்கானல் நெடுங்களத்திற்கு அருகிலுள்ள ஊர்.

காலம்: கோமாறஞ்சடையரின் பதின்மூன்றாம் ஆட்சியாண்டு; கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு.

1 கோமாற
2 ஞ்சடை
3 ய[ற்*]க்கு யா
4 ண்டு 1 ஆ
5 மாட்டைக் கெ
6 திர் 12ஆ
7 வது திருநெ
8 டுங்களத்து
9 மாதேவர்
10 க்குத் தே
11 வூர் நா
12 ட்டு ஏ
13 நத்த
14 ந்குடி
15 சாத்த
16 ங் சே
17 சரந்
18 வை
19 த்த
20 பொந்நி
21 ரு கழஞ்
22 சு இது மா
23 ங்கான
24 லன் கட
25 வது

ஆறாம் கல்வெட்டு

இடம்: மேலது.

செய்தி: பெரியந்தைக்குடி வடுகன் வடுகி இக்கோயிலில் இரவும் பகலும் விளக்கெரியச் செய்தார். கல்வெட்டு முற்றுப் பெறாததால் கொடைப் பொருளை அறியமுடியவில்லை.

காலம்: இராசகேசரிவர்மனின் இருபத்தேழாம் ஆட்சியாண்டு; கி.பி. பத்தாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோரா
2 சகேசரிபந்ம
3 க்கு யாண்டு
4 யிருபத்து ஏ
5 ழாவது திருநெ
6 டுங்களத்து மா
7 தே$_3$வர்க்கு நொந்தா
8 விளக்கிரவும் பக
9 லு[ம்*] எரிய பெரிய
10 ந்தைகுடி வடுக
11 ந் வடுகி வைத்த

ஏழாம் கல்வெட்டு

இடம்: உட்திருச்சுற்று மாளிகையின் வடமேற்குக் கூரையிலிருந்து அகற்றி எடுக்கப்பட்ட மற்றொரு தூண். இரண்டு கல்வெட்டுகள் உள்ளன. தற்போது உட்திருச்சுற்றின் தென்பகுதியில் உள்ளது.

செய்தி: குழித்தண்டலை முருகன் நாற்பத்தைந்து ஆடுகள் தந்து பகல் விளக்கெரிக்க உதவினார். ஆடுகளை ஏற்றுக்கொண்டு விளக்கெரிக்க ஒப்புதலளித்தவர் எயில் நாட்டு அட்டுப்பள்ளி நியமத்து கள்வன் உலங்கண்.

காலம்: முதற் பராந்தகரின் பத்தொன்பதாம் ஆட்சியாண்டு; கி.பி. 926.

1 ஸ்வஸ்திஸ்ரீ
2 மதிரை கொ
3 ண்ட கோப்
4 பரகேசரிபந்
5 மற்க்கு யா
6 ண்டு 19
7 ஆவது
8 திருநெடுங்
9 களத்து மா
10 தே$_3$வர்க்கு குழித்
11 தண்டலை வாச்
12 சிய கோத்திரத்
13 து முருகன் வ
20 சவணாநேன் எயி

14 . டிச்சான் வை

15 த்த பகல் விள

16 க்கு ஆழாக்கி

17 னுக்கும் ஆடு நா

18 ற்பத்து அஞ்

19 சுங் கொண்டு [வ]ச்

21 ணாட்டு அட்டுப்பள்

22 ளி நியமத்து கள்

23 வ(டு)ந் உலங்கண்

24 இது பம்மாஹேச்$_0$வ

25 ர ரக்ஷை

எட்டாம் கல்வெட்டு

இடம்: சோமாஸ்கந்தர் திருமுன் வடசுவர்.

செய்தி: மலைநாட்டுக் கொடுங்களூர்க் குமரன் ஸ்ரீகண்டன் இக்கோயிலில் திருநந்தாவிளக்கெரிக்க நெடுங்களத்து சபையாரிடம் நிலம் விலைக்கு வாங்கிக் கொடை. அம்பலச் செய், இவ்வூரிலிருந்த அம்பலத்தையும் அதற்காக அளிக்கப்பட்ட நிலக்கொடையையும் சுட்டுகிறது. கல்வெட்டின் தொடர்ச்சியும் முடிவும் கிடைக்கவில்லை.

காலம்: முதற் பராந்தகர்; கி.பி. பத்தாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ மதிரை கொண்ட கோப்பரகேசரிபந்மக்கு யாண்

2 களத்து மாஹாதேவர்க்கு மலைநாட்டு கொடுங்கோலூர் நெ

3 ஸ்ரீகண்டன் இரவும் பகலும் எரிய்வதாக வைய்த்த நொ

4 னுக்கு வைய்த்த பூமிய் இத்திருநெடுங்களத்து ஸபை$_4$யிடை

5 ய் கொண்டு உடைய பூமிய்க் கெல்லைய் கீழ்பாற்க்கெல்லை சூடு

6 க்கு மேக்கும் தென்பாற்க் கெல்லைய் அம்பலச் செய்க்கு வடக்கும் மே

7 . . குளத்துக்குக் கிழக்கும் வடபாற்க் கெல்லை சாதகுட்டி

8 பெருநான்கெல்லையுள் அகபட்ட நிலம் இதிரு

9 நொந்தாவிளக்கு எரிய வைய்த்துக் குடுத்தேன்

10 ஹாதே$_3$வர்க்கு குமரன் ஸ்ரீகண்டனேன் இவன்யே

ஒன்பதாம் கல்வெட்டு

இடம்: மேலது.

செய்தி: *வானவன் பேரையன், தாங்கி இருநீக்கி ஆகியோரிடம் இக்கோயிலில் ஸ்ரீகாரியம் ஆராய்ந்த செம்பியன் வடபுறையூர் நாட்டு மூவேந்த வேளார் ஆளுக்கு நாற்பத்தைந்து ஆடுகள் பெற்று ஒரு விளக்கெரியச் செய்தார். இவ்வாடுகள் இடையர் குடும்பத்தாரிடம் ஒப்புவிக்கப்பட்டன. சாவா மூவாப் பேராடு என்ற மரபுத் தொடருக்குப் பதிலாக சாவா மூவாப் பல்லாடு என வந்திருப்பது நோக்கத்தக்கது.*

காலம்: கி.பி. பத்தாம் நூற்றாண்டு.

1 *ஜர்கன்மி செம்பியன் வடபுறையூர் நாட்டு மூவேந்த வேளார் ஸ்ரீகார்ய்யத்*

2 *ச வாநவன் பேரையன் வைத்த விளக்கில் அரை விளக்கினால்*

3 *[ை]வத்த ஆடு ந[ா*]ப்ப[த்*]தஞ்சும் தாங்கி இருநீக்கி வைத்த திருவிளக்கு அை*

4 *ன் வசம் வைத்த ஆடு நாப்பத்தஞ்சும் ஆக ஆடு தொண்ணூறும்*

5 *ற்று கொண்டமையில் இப்பன்னிரண்டாவது ஸ்ரீகார்ய்யம் மாரா [ய்*]கின்ற செ*

6 *வந்த வேளார் இவகளை தண்டி வைப்பித்த ஆடு 90 இத்தொண்*

7 *ம் தம்பிமாரும் வசம் நா[ப்ப]த்தஞ்சும் வானவன் பேரையன் அரை*

8 *ம்பிமாரும் வசம் [இருப]த்திரண்டரை கருவூரன் எச்சில் வசம் இருபத்தி*

9 *வை சாவா மூவாப் பல்லாடு இவை பன்மாஹேச்வர ரக்ஷை*

பத்தாம் கல்வெட்டு

இடம்: *திருச்சுற்று மாளிகையின் வடமேற்குப்பகுதி; கூரை.*

செய்தி: *வடகவிர நாட்டுப் புறக்குடிப்பள்ளி கனகசேனன், சித்திரைத் திருவிழாவிற்கு இவ்வூர் வீரன் வசம் பொலியூட்டாக நூறு ஈழக் காசுகள் தந்தார். இக்கொடை கொண்டு தேவர் பூஜை, ரிஷி பூஜை நடத்தப்பட்டன. ரிஷி சமுதாயத்தை என்ற சொல்லாட்சி கவனிக்கத்தக்கது. கல்வெட்டு சிதைந்திருப்பதால் செய்தியை முழுமையாக அறியமுடியவில்லை.*

காலம்: கி.பி. பத்தாம் நூற்றாண்டு.

1 *ப்பள்ளி உடையான்*

2 *. . . ராளன் ஸ்ரீமத் பு[றக்குடி]*

3 ப்பள்ளி உடையான்

4 வீரன் வசம் இவ்வூர்ச் சி[த்தி]

5 ரைத் திருவிழாவுக்குப் பெ[பாலி]

6 வூட்டாக வைத்த ஈழக் கா

7 சு 100 இக்காசு நூற்றுக்குங் . . .

8 வாய்ப் பூவழி கலநே நெல் . . . .

9 பொலிவதாகவும் போ . . .

10 இரண்டு பலிசையும் எ . . .

11 த நெல்லு 200 கலம் இந்நெல் . . .

12 ற்றுக் கலமும் ஸ்ரீமத் புறக்கு[டிப்பள்ளி சி]

13 த்திரைத் திருவிழாவுக்கு . . .

14 நாளைக்குந் தேவர் பூஜை . . .

15 ரிஷி பூஜையும் சந்த்ரா[தித்]

16 தவற் செல்வதாக வை[த்தே]

17 ன் வடகவிர நாட்டுப் பு[றக்குடிப்ப]

18 ள்ளி உடைய கனகஸேந . . .

19 இது சந்த்ராதி$_{3}$த்தவற் கொண்டு . . .

20 ப்போமானோம் ஸ்ரீமத் புறக்கு[டிப்பள்ளி]

21 ஸ்த$_{4}$ஸத்து ரிஷி ஸமுத$_{3}$ாயத்தே$_{4}$ . . . .

22 வானவன் பெருந்தந்ய இ . . . .

பதினொன்றாம் கல்வெட்டு

இடம்: மேலது.

செய்தி: விளக்கெரிக்கப் பாடி கல்லால் 120 கழஞ்சு பொன் கொடை. இதை முதலாகக் கொண்டு நாளும் நாராய நாழியால் இருநாழி நெல்லளந்து, நெய் பெற்று, திரியிட்டு, இரண்டு நந்தாவிளக்குகள் எரிக்கப்பட்டன. திருநெடுங்களத்து சபையார், ஊரார், கிளிமதிமங்கலத்து சபையார் இப்பொறுப்பேற்றிருந்தனர். கல்வெட்டின் தொடக்கமும் தொடர்ச்சியும் கிடைக்கவில்லை.

காலம்: கி.பி. பத்தாம் நூற்றாண்டு.

1 . . . ள கோயில்
2 விடுதந்த பொன்
3 பாடிக்கல்லால்
4 நூற்றிருபதின்
5 கழைஞ்சு இப்
6 பொன் முதல் கெ
7 டாமே யிபொன்
8 முட்டினால் நிய
9 தி நாராய நாழியா
10 ல் இரு நாழி நெல்
11 கொண்டு இரவு
12 ம் பகலுமிர
13 ண்டு நொந்தா
14 விளக்கு முட்டா
15 மே எரிப்பதாக
16 வுமிதனுக்கு வே
17 ண்டுந் நூ[ல்*]த்திரி
18 இடுவதாகவும் இ
19 ப்பரிசு முட்டில் . .
20 . . . . திரு
21 நெடுங்களத்துச் ச
22 வைஓமும் ஊ[ரோ]மும்
23 கிளிமதிமங்கலத்
24 து ஸவையர்[களோ]
25 ம் திருநெடுங்கள

வில்லரின் விரல் பழக்கம்

சங்ககால மறவர்களின் பழக்கவழக்கங்கள் ஆய்வுக்குரியன. இவை இலக்கியப் பாடல்களின் காதலடிகளுக்குள் கரைந்துகிடக்கின்றன. தேடி அகழ்ந்தால் . . .! இதோ ஒரு முத்து (அகம் 215)! படிப்பறிவற்ற ஆனால் அநுபவ அறிவுடைய மறவர்கள் வில்லேந்தியவர்கள்; வடித்த கூரம்புகளைக் கொண்டவர்கள்; வழிப்போக்கர்களைக் கொன்று தம் வாழ்க்கையை வளர்ப்பவர்கள்; கொடுந்தொழில்தான் என்றாலும் கொன்றவர்களைக் கற்பதுக்கையிலிட்டு மூடிய கருணையாளர்கள். இவர்களிடம் ஒரு விசித்திரப் பழக்கம் இருந்தது! யாரையேனும் அல்லது எதையேனும் குறிபார்த்து வில்லை வளைத்து அம்பினைத் தொடுத்து எய்யும்போது, ஒரு வேளை குறித்த இலக்குத் தப்பிவிடுமாயின், அதாவது, குறி தவறிப்போகுமாயின் இம்மறவர்கள் மிக வருந்தி அம்பினைத் தொடுத்த கை விரலை வாயால் கவ்விக் கொள்வராம். இது வெட்கத்தால் விளைந்த வேதனைப் பழக்கம் போலும். இன்றும் வாயில் விரல் வைத்துக்கொண்டு வெட்கப்படுபவர்கள் இருக்கத்தானே செய்கிறார்கள்!

3. தழுதாழைச் சிவன்கோயில் கல்வெட்டுகள்

ப. அங்கவை, அர. அகிலா, மு. நளினி

பெரம்பலூர் மாவட்டத்தில் பெரம்பலூர்த் துறையூர்ச் சாலையில் அரும்பாக்கத்திற்கு முன்னமைந்த ஊர் தழுதாழை. இவ்வூர்க் கயிலாசநாதர் கோயிலிலும், அதனருகே கிடைத்த கற்பலகைகளிலிருந்தும் படித்தறியப்பட்ட கல்வெட்டுகள் இங்குத் தரப்பட்டுள்ளன. ஒருதள விமானமான சிவன் கோயில் பிற்சோழர் காலப் பழமையது. முன்னால் சிறு முகமண்டபம். இவ்வூரிலிருந்து இரு சிற்பத்தொகுதிகளும் கண்டறியப்பட்டன. ஒன்று கல்வெட்டோடு கூடியது.

முதற் கல்வெட்டு

இடம்: *கயிலாசநாதர் கோயிலின் முன் உள்ள பலகைக் கல்.*

செய்தி: *மிலாடாகிய ஜநநாத வளநாட்டு வெம்பாற் கூற்றத்தின் கீழ்த் தழுதாழை இருந்தது. இறைவன் வடகயிலாயமுடையார். செம்பை நாயகரான மகதை நாடாழ்வார் கல்யாணத் திருமேனியாக வேண்டுமென விழைந்து ஆத்தூர் அருகே உள்ள ஆறகளூரைச் சேர்ந்த வேளான் நீலன் நாயகப் பெருமாள் இக்கோயிலில் சந்திரசேகரர், நாச்சியார், கூத்தாடுந்தேவர், நாச்சியார் திருமேனிகளை எழுந்தருளுவித்ததுடன், அவற்றிற்குத் திருவமுது, கறியமுது படைக்கவும் சந்தி விளக்கெரிக்கவும் நிலக்கொடையளித்தார். தழுதாழை ஏரி, முற்றூட்டு நிலம், பிடாரிக்கோயில், கல்லாறு, கணபதிக்கு நத்தக் காலில் தந்த நிலம், ஆறகளூர் வேளான் ஆதித்தன் நீலன் தந்த நிலக்கொடை, ஏரி உள்வாய் எனப் பல பயனுள்ள தரவுகள் இக்கல்வெட்டில் புதைந்துள்ளன.*

காலம்: *கி.பி. 1169.*

1 ஸ்வஸ்திஸ்ரீ இராஜாதிரா
2 ஜ தே$_3$வற்கு யாண்டு ஆறா
3 வது மிலாடாகிய ஜநநா
4 த வளநாட்டு வெம்பாற்
5 கூற்றத்து தழுதாழை ம
6 ஹாதே$_3$வர் வடகயிலா
7 யமுடையாற்கு செம்பை
8 ப நாயகநாந மகதை நா
9 டாழ்வார் கல்லியாண தி
10 ருமேநி ஆக வென்
11 று ஆறகளூர் வேளா
12 ன் நீலன் நாயக பெ
13 பருமானேந் எ
14 ழுந்தருளுவித்த
15 சந்திரசேக[ரதே]
16 வரும் நாச்சிய

17 ாரும் கூத்தாடு
18 ந்தேவரும் நாச்
19 சியாற்கும் திரு
20 வமுதுபடிக்கு
21 இவ்வூர் நந்செ
22 நிலத்து ஏரிக
23 ரைக்குக் கிழக்கு
24 ஆறகளூர் வே
25 ளாந் ஆதித்த நீ
26 லந் இட்ட நில
27 ங்காலுக்கு ே
28 மற்கும் வடக்கு [பி]
29 டாரி நிலத்துக்கு
30 [த்] தெற்கும் முற்றூ
31 ட்டு நிலத்துக்கும்
32 [ந]டுவுபட்ட நிலம் அ
33 ரையே ஒரு மாவும்
34 கணவதியாற்கு நத்த
35 க்காலில் விட்ட நில
36 ம் ஒரு மாவும் புறணி
37 யில் ஏரி உள்வாய்
38 க்கு மேற்கு நிலம்
39 இரு வேலியும் கல்
40 லாற்றுக்குத் தெ
41 ற்கும் புந்செய் நி
42 லத்தில் கறியமு
43 துக்கும் சந்தி
44 விளக்குக்கு
45 ம் விட்ட நிலம்
46 முக்கால் சந்த்ராதி
47 த்தவற் செல்
48 ல பந்மாஹேச்ᵒவ
49 ர இரக்ஷை அ
50 றமறவற்கற
51 மே துணை அ
52 ற வல்ல துணை
53 இல்லை.

இரண்டாம் கல்வெட்டு

இடம்: மேற்படி; மற்றொரு பலகைக் கல்.

செய்தி: மகதை நாடாழ்வானான செம்பை நாயகனுக்கு நன்றாக அவர் கன்மி ஆறகளூர் வேளான் ஆதித்தன் நீலன் கோயிலுக்கு நந்தவனம் அமைக்கவும், இறைவனுக்குப் படையலிடவும் நிலக்கொடையளித்ததோடு திருமஞ்சனக் கிணறும் வெட்டித்தந்தார். இவர் முதற் கல்வெட்டு குறிப்பிடும் நீலன் நாயகப் பெருமானின் தந்தையாகலாம்.

காலம்: கி.பி. 1144.

2.

1 ஸ்வஸ்திஶ்ரீ குலோத்துங்கசோழ தே$_3$

2 வற்கு யாண்டு 11 ஆவது மிலாடாகிய ஜநநா

3 த வளநாட்டு வெம்பாற் கூற்றத்து தழுதாழை

4 மஹாதே$_3$வற்கு செம்பை நாயந் கந்மியாந

5 ஆறகளூர் வேளாநேந் மகதை நாடாழ்வாநாந

6 செம்பை நாயகநுக்கு நன்றாக அமுது செய்ய

7 தழுதாழை நந்செ நிலத்திலே பெரிய செய் உ

8 ட்பட கால் செய்யும் திருமுந்பே திருநந்தவாநம் ஒரு

9 மாவும் திருமஞ்சணக் கிணறும் புந்செ இருவேலியு

10 ம் தேவதாநமாக சந்த்ராத்தித்தவற் செல்லவிட்டேந் ஆ

11 றகளூர் வேளாந் ஆதித்தன்

12 நீலநேந் இந்நிலங்கள் மா

13 ற்றுவான் ஶ்ரீஆஞை ஏழெச்

14 சமறுவாந்

மூன்றாம் கல்வெட்டு

இடம்: கயிலாசநாதர் கோயில் முகமண்டபத் தெற்குச் சுவர்.

செய்தி: செம்பையாழ்வார் இராஜராஜதேவரான வாணகோவரையன் தம் அரசும், மரபுவழியும் செழிக்கத் தேவையூரில் உள்ள தேவதான, திருவிடையாட்டம் ஒழிந்த பிற நிலப்பகுதிகளையும் அவற்றிற்கான வரியினங்களையும் கோயிலுக்களித்தார்.

காலம்: கி.பி. 1239.

1 ஸ்வஸ்திஶ்ரீ திரிபுவன சக்கரவத்திகள்

2 ஶ்ரீராஜராஜதே$_3$வற்கு யாண்டு 23

3 வது விலாடாகிய ஜநநாத வளனாட்டு வெம்பா

4 ர்க் கூற்றத்து தழுதாழை உடையார் வடகை

5 யிலாயமுடை[ய*] நாயனார்க்கு செம்பையாழ்வார் இ

6 ராசராசதேவராந வாணகோவரையநேன் எநக்கு

7 ராஜ்யமும் என் வங்சமும் ரக்ஷரத்த$_2$மாகவும் இந்நாட்டு தே

8 வையூர் தேவதாந திருவிடையாட்டம் முன்பு உள்ள

9 இறையிலிக்கு சாதநப்படி விட்டு இவ்வூர் நான்கெல்

10 லைகுள்பட்ட நன்செ புன்செய் ஏந்தல்களு மற்று

11 ம் எற்பேற்பட்ட பல்வகை ஆயங்களும் த$_4$ம்மத$_4$ாந

12 மாக சந்திராதித்[த*]வரை இறையிலியாக கு[டு*]த்தே

13 ன் இது மாறுவான் ஏழாநூழியும் ஏழச்சமும் அறுவான்

14 ஸ்ரீமாகேச்$_0$வர ரக்ஷை

நான்காம் கல்வெட்டு

இடம்: திரு. சிவநாதன் வயலில் இருந்தது. தற்போது கோயில் வளாகத்தில் கிடத்தப்பட்டுள்ளது.

செய்தி: தொண்டைமான் துறை எனும் பக்கத்து ஊரிலிருந்து தழுதாழை வரும் ஒற்றையடிப் பாதையின் பெயர். கல்வெட்டுள்ள இச்சிற்பம் முதன் முதலில் அங்குதான் நெடுங்காலம் இருந்தது.

காலம்: பதினேழு அல்லது பதினெட்டாம் நூற்றாண்டு.

1 சவாரு சிண்ணவெடி நாய

2 க்கர் கொடி

வருமா அந்தநாள்?

யானையுடன் பொருது வென்று அதன் தந்தம் பறிக்கும் வீர வேட்டுவனைக் காதலித்தாள் தலைவி. தந்தையும் தாயும் அவள் காதலை மதித்து அவனையே அவள் கணவனாய் ஒப்பினர். மணநாளும் குறிக்கப்பட்டது. அந்தநாள் வரத்தான் போகிறதென்றாலும், அது விரைந்து வரவேண்டுமென்ற தவிப்பு தலைவிக்கு. தலைவியின் மனமறிந்த தோழி, அவள் தவிப்பு நீக்கக் கருதியவளாய், 'நம் வீட்டில் உறையும் தெய்வத்தை மெல்லிய விரல்களைக் குவித்து வணங்கிப் பலிசெலுத்தி, மணநாள் விரைந்து வருமாறு வேண்டுவோம் வா' என்று வழிகாட்டினாள் (அகம் 282). இந்த 'மனையுறை தெய்வம்' என்ற சங்க கால நம்பிக்கையே இன்று 'வீட்டு சாமி' யாகத் தொடர்கிறது.

4. முக்காணி அனுமந்தமூர்த்திக் கோயில் கல்வெட்டு

எஸ். இராமச்சந்திரன், கொற்கை

தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் வட்டத்தில் அமைந்துள்ள முக்காணியின் தென்மேற்கே, தாமிரபரணிப் பாலத்தையொட்டி அனுமந்தமூர்த்திக் கோயில் என வழங்கப்படும் சிறிய கோயில் உள்ளது. இக்கோயிலில், கல்தூண் ஒன்றின் மேற்பகுதியில் அனுமன் சிவலிங்கத்தைச் சுமந்து வரும் காட்சியும், திரிசூல வடிவமும் சித்தரிக்கப்பட்டுள்ளன. சிற்பத்தின் கீழே தொடங்கும் கல்வெட்டு தூணின் மற்ற மூன்று பக்கங்களிலும் தொடர்கிறது.

இடம்: அனுமந்தமூர்த்திக் கோயில் கல்தூண்.

செய்தி: இராமேசுவரத்திலுள்ள இராமலிங்கசுவாமி திருக்கோயிலுக்கு, இப்பகுதியிலுள்ள சகல சமுதாயத்தினரும் கட்டளைக் குடிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

காலம்: இராணி மங்கம்மாள்; கி.பி. 1693.

1 ராம
2 சேது
3 86
4 8 [வருடம்] மா
5 சி [மாதம்] 72
6 ராமலி
7 ங்கசு
8 வாமி
9 சேது
10 தற்ம
11 த்துக்கு
12 கற்த்தா
13 க்கன் க
14 ட்டளை
15 யிட்ட மு
16 க்காணி
17 வடகரை
18 ப் பழைய
19 மாணி[ய]ம்
20 கொற்றை
21 க இன்னா
22 ன் கெல்
23 கைக்கு
24 ள்ப்பட்ட
25 சகல ச
26 மதாய
27 த்துக்கும்
28 அகிதம்
29 பண்ணி
30 னவர்க

31	*ள் கெங்*	*38*	*யும் காராம்*
32	*கைக் கரை*	*39*	*பசுவை*
33	*யிலும் வே*	*40*	*யும் கொ*
34	*சதுக் கவை*	*41*	*ன்ற தோ*
35	*ரயிலும்*	*42*	*ஷத்திலே வே*
36	*மாதா*	*43*	*பாவாரா*
37	*பிதாவை*	*44*	*கவும்*

பறவைக் காவலர்

விலங்குகளையும், பறவைகளையும் காப்பாற்ற இன்று நாடு தழுவிய அளவில் பல அமைப்புகள் உள்ளன. இந்தக் கருணை யுணர்வும், காப்புச் சிந்தனையும் சங்ககாலத்தில் தனி மனிதர்களிடம் நிரம்பியிருந்ததை அகநானூற்றுப் பாடல்கள் நான்கு (142, 148, 181, 208) தெளிவாக்குகின்றன. வெளியன் வேண்மான் ஆய் எயினன் பறவைகளின் பாதுகாவலராக வாழ்ந்தவர். நன்னன் புன்னாட்டின் மீது படையெடுத்தபோது, 'அஞ்சலிர்' என்று அந்நாட்டவருக்குத் துணைநின்ற இவ்வேந்தர், பாழியில் நடந்த போரில் தம் சொல்லைக் காப்பாற்றி நன்னனுக்குத் துணைவந்த பெரும்படை மிஞிலியிடம் முருகனை யொப்பப் போரிட்டுத் தம் இன்னுயிரை இழந்தவர். நண்பகல் போரில் பொருது வீழ்ந்த பறவைக் காவலராம் எயினர் உடலை ஞாயிற்றின் கதிர்கள் சுடுதலை விரும்பாத புள்ளினங்கள், அவலப் பேரொலியுடன் வானில் ஒன்றிணைந்து பறந்தவாறு தம் சிறகுகளால் பந்தலிட்டு நிழல்தந்தன. பகலில் கண் தெரியாத காரணத்தால் இந்தத் திருப்பணியில் கலந்துகொள்ளமுடியாத ஆந்தையொன்று தன் ஆற்றாமைக்கு நாணுற்றுத் துன்புற்றது.

வெள்ளம் போல் படையுடைய அதிகன் பறவைக் காவலராக வாழ்ந்த மற்றொரு சங்க மனிதர். இவரையும் மிஞிலி போர்க்களத்தில் கொன்றொழித்தார். அதிகனும், எயினனும் இருவரல்லர் ஒருவரே எனுமாறு உரையாசிரியர்கள் எழுதுவது சரியல்ல எனத் தோன்றுகிறது. உண்மையை அய்யத்திற்கிடமின்றி அறிஞர்கள் விளக்கினால் வரலாறு வெளியிட்டு மகிழும்.

5. திருச்செந்தூர்க் கல்வெட்டு

எஸ். இராமச்சந்திரன், கொற்கை

இடம்: தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூரில் தெற்கு ரத வீதியிலுள்ள பன்னிரண்டாம் திருநாள் மண்டபம்.

செய்தி: திருச்செந்தூா முருகன் கோயிலில் நடைபெறும் மாசித் திருவிழாவில பன்னிரண்டாம் நாள் திருவிழா செங்குந்தர் குலத்தவரின் மண்டகப்படியாக நடைபெறுகிறது. இதற்குரிய கருங்கல் மண்டபம் கட்டுவதற்குச் சவராமங்கலம் வம்சத்தாராகிய பதினானகு நாட்டுச் செங்குந்த முதலியார் குலத்தவருள் எட்டையபுரம் நடுவபபட்டி பெரியமபலம் தலைமையில் பிற அமபலங்கள் கூடி, தறி ஒன்றுககுக குறிப்பிட்ட தொகை வசூல் செய்து, பிரமயம் (ஈரோடுக்கு அருகில உளள ஊா்) ஏகானந்த அடிகள் என்பவரது முயற்சியால் மண்டபம் கட்டிமுடித்துள்ளனர். இக்கல்வெட்டில் குறிபபிடப்படும் சபராமங்கலம் என்ற ஊா் முற்காலத்தில் துலைவில்லிமங்கலம் எனப்பட்டது. வில்லி என்பதைச் 'சபரா்' என மொழி பெயர்த்துச் சபரமங்கலம் என வழங்கியிருககலாம். தற்போது சிவராமமங்கலம் என வழங்கப்படும் இவ்வூர், திருவைகுண்டம் வட்டத்துப் பெருங்குளத்துக்கு அருகில் உள்ளது.

காலம்: கி.பி. 1935.

1 சிவமயம் முருகன் துணை
2 திருக்கயிலாய பரம்பரை தேவ
3 க்ஷத்ரிய வருணம் செங்குந்த குல
4 ம் நவ வீரர்கள புத்திரர்களாகிய மஞ்
5 சன் மாறிலான் வெற்றியான் பேறிலா
6 ன் சலிப்பிலான் என்னும் ஐம்பெருங்
7 கிளைஞர்களாகிய வல்லநாடு அம்பலம்
8 சங்கரலிங்க முதலியார் ஏரல் கீழவூர் அம்
9 பலம் அய்யம்பெருமாள் முதலியார் ஏரல்
10 மேலவூர் அம்பலம் வீ.தவசி முதலியார்
11 பொதியமுத்தூர் அம்பலம் ப.அருணாசல
12 முதலியார் நடுவப்பட்டி பெரியம்பலம

13 வே. அய்யம்பெருமாள் முதலியார் கடலை
14 யூர் அம்பலம் சிவனணைஞ்சா முதலியார்
15 அயன்பொம்மியாபுரம் அம்பலம் ஆ.பெரு
16 மான் முதலியார் நாகலாதபுரம் அம்பலம்
17 சண்முக முதலியார் விளாத்திகுளம் முத்து
18 முதலியார் அருப்புக்கோட்டை அம்பலம்
19 சூரியமுதலியார் முதலான சவராமங்கலம் வம்
20 மிசம் 14 நாட்டுச் செங்குந்த முதலிமார்
21 களுக்குப் பாத்தியப்பட்ட திருச்செந்தூர் 12
22 ந் திருநாள் மண்டபத்திற்கு அக்தார் எட்
23 டையாபுரம் நடுவப்பட்டி பெரியம்பலம் மு.
24 அ.வே. அய்யம்பெருமாள் முதலியார் முத
25 னமையால் அணியொட்டுக் கால் மண்டபம்
26 செய்வதற்கு [மேற்படி]யூர்களில் தரி 1க்கு ரூபா
27 28 ஆக வசூலித்து 1097 [வருடம்] தச்சுச் செய்து
28 1110 [வருடம்] ஆவணி [மாதம்] 24 உ ஞாயிற்றுக் கிழமை
29 உத்திர நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் கிரக
30 ப்பிரவேசம் நடைபெற்றது மேற்பார்த்து வந்த
31 வர்கள் பிரமயம் ஏகானந்த அடிகள் தளரா முயற்சியின்
32 தவப் பெருக்கால் நடந்தேறுவதேயாம்

குருவி வாழ்க்கை

வாடிய ஆம்பல் மலரைப் போன்ற குவிந்த சிறகுகள்; வீட்டிறப்பில் குடியிருபபு; முற்றத்தில் உலரும் தானியங்கள் உணவாகும்; பொதுவிடத்துள்ள எருவின் நுண்ணிய பொடியைக் குடைவதுவே விளையாட்டு, ஆணும் பெண்ணும் பிள்ளைகளுமாய் வாழ்க்கை; இதுதான் குறுந்தொகை (46) காட்டும் குருவி வாழ்க்கை. தமிழர்களின் நோக்கறிவிற்கு இது போதுமா? இன்னும் வேண்டுமா?

6. சக்கம்மாள்புரம் கல்வெட்டு

எஸ். இராமச்சந்திரன், கொற்கை

இடம்: தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி வட்டத்திலுள்ள புதுக்கோட்டை என்னும் ஊருக்குத் தெற்கே சக்கம்மாள்புரம் எனப்படும் ஊரின் எல்லையில் சாலையோரத்தில் நிறுத்தப்பட்டுள்ள கற்றூண்.

காலம்: கி.பி. 1903.

1 *1903 ம் வரு*

2 *ஷம் ஜனுவரி*

3 மாசம் 1 {தியதி} டில்

4 *லியில் நடந்த மாட்சி[மை]*

5 *ம தங்கிய 7வது யெ*

6 ட்வர்ட் சக்கரவர்த்தியவ

7 *ர்களுக்கு மகுடாபிஷே*

8 *சக உற்ஷவத்தின் ஞா*

9 *பக தோப்புக் காருகுரிச்*

10 *சி மிட்டா ஜமீன்*

11 *சேருஞ்வகாறன்*

12 *மடங்கிராமம் சக்*

13 *கம்மாள்புரம் மிரா*

14 *சு மாடசுவாமி நாடான்*

15 *வைத்[த*]து உ*

இவ்விதழில் வெளியாகியுள்ள கல்வெட்டுகள், கட்டுரைகள், கருத்துரைகள் ஆகியவற்றிற்கு அவற்றின் படைப்பாளர்களே பொறுப்பாவர்.

7. வெண்பாவூர்க் கல்வெட்டு

மு. நளினி

பெரம்பலூர் மாவட்டம் வெண்பாவூரிலுள்ள பெருமாள் கோயில் வாயிலருகே மண்ணில் புதைந்திருந்த இக்கல்வெட்டைக் கண்டறிய உதவியவர் வெண்பாவூர்த் தமிழாசிரியர் திரு.சுந்தரம். வெண்பாவூர்க் கோயில்களைக் காண வழிவகுத்தவர்கள் திரு.வைத்தியலிங்கம், திரு.சிவநாதன். இக்கல்வெட்டை வெளிக்கொணர உதவியவர்கள் பெருமாள் கோயில் அறங்காவலர் திரு.எஸ். வீரராகவன், சிவன் கோயில் அறங்காவலர் பி.செல்வராசு, ஊர்த்தலைவர் ஆர்.கதிர்வேல் ஆகியோர். இப்பெருமக்கள் அனைவர்க்கும் மையத்தின் நன்றி உரியது.

இடம்: வெண்பாவூர்ப் பெருமாள் கோயில் வாயிலில் உள்ள பலகைக் கல்.

செய்தி: தாயிலும் நல்ல பெருமாள் விண்ணகர் என்றழைக்கப்படும் பெருமாள் கோயிலைச் சித்திரமேழி மலை மண்டலத் தேசிகள் எடுப்பித்ததாகக் கொள்ளலாம்.

காலம்: கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ சித்தி

2 ரமேழி மலை மண்டல

3 த்தேசி விண்ணகர்

4 தாயிலுநல்ல பெ

5 ருமாள்

வல்லாரை வழிபட்டு . . .

கற்பார் எப்படியிருக்க வேண்டுமென்று பல இலக்கியங்கள், இலக்கணங்கள் தத்தமக்கே உரியவாறு வரையறை செய்துள்ளன. கலித்தொகையும் கற்கும் முறையொன்றை முன் வைக்கிறது. அறிவு வல்லாரை வழிபட்டுக் கற்பார் கற்க வேண்டுமாம் (47). 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்' என்ற சிந்தனை இதிலிருந்து பிறந்ததுதானோ?

2. பதிப்பிக்கப்படாத பாடங்கள்

திருக்கோளக்குடிக் கல்வெட்டுகள் - 3

அர. அகிலா, மு. நளினி

திருக்கோளக்குடிக் கோயில்களிலிருந்து படியெடுக்கப்பட்டுள்ள எண்பத்துமூன்று கல்வெட்டுகளில் முப்பத்தொரு கல்வெட்டுகளின் பாடங்கள் சென்ற இதழ்களில் இடம்பெற்றன. பத்துக் கல்வெட்டுகளின் பாடங்கள் இந்த இதழில் வெளியாகின்றன. இப்பணியை வாழ்த்தித் துணைநிற்கும் வணக்கத்திற்குரிய தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்கட்கும், கோயில் அலுவலர்கட்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி என்றும் உரியது.

32. க. எண்: 66 - 1916

இடம்: மகாமண்டபத் தெற்குச் சுவர்; உட்புறம்.

செய்தி: உய்யவந்தான் பாண்டியனான சுந்தர பாண்டிய நரசிங்க தேவர்க்கு இருநூற்றைம்பது ராசிப் பணத்திற்கு உழவுக் காணியாகக் கோயிலார் மூன்று குடிகாடுகள் விற்பனை. பயிர்களுக்கேற்பவும் நிலங்களுக்கேற்பவும் நிலவரி அமைந்தது. அக்காலத்துப் பயிர்களின் பட்டியல் கிடைப்பதுடன் ஆவணம் காணிப்பிடிபாடு என்றழைக்கப்பட்டமையும் தெரியவருகிறது.

காலம்: சடையவர்மர் சுந்தர பாண்டியர்; கி.பி. பதினான்காம் நூற்றாண்டு.

1 ஸ்ரீ மற்கீர்த்தி[க்கு மேல்] கோச்சடைபன்மரான த்ரிபு$_4$வனச் சக்ரவத்திகள் ஸ்ரீசுந்தர பாண்டிய தேவற்கு யாண்டு 19வது கற்கடக நாயிற்று

2 பூர்வ பக்ஷத் - - - - புதன் கிழமையும் பெற்ற அத்தத்து நாள் புறமலை நாட்டுத் திருக்கோளக்குடி உடையார் திருக்கோளக்குடி உடைய(ன்)

3 நாயனார் திரு - - - - ருத்திர ஸ்ரீமாஹேச்$_0$வரர் தேவர் கன்மிகளுக்கு இவ்வனைவோமும் மாடக்குளக் கீழ் மதுரை சூழ்ந்து சிற

4 - - - - ரரில் உய்யவந்தான் பாண்டியநான சுந்தர பாண்டிய நரசிங்கதேவற்கு காணிப்பிடிபாடு பண்ணிக்குடுத்த பரி

5 சாவது யின்னா - - - - த்துக் காணிப்பற்றில் உள்ளூர் குடிகாட்டுப் புர வயலும் இவயல் பந்தன் வயல் தட்டான் வயல் ஆக இவ்வயல் மூன்றும்

6 முன்னாள் நிலங் - - - - தமையனார் பாகமும் நாறும் பெருமாள் நரசிங்கதேவற்கு உழவு காணியாய் குடுத்த இவர் பக்கல் தவனை முதலாக

7 ப்பற்றி முன்னா - - - - ன்ற வயிராகியன் தந்த தவணை முதலுக்கு குடுப்பித்த இராசி பணம் 160ம் சாத்துப்படிச் சிலவுக்கு குடுப்பித்த இராசி பணம் 90ம்

8 ஆக இராசி பணம் [250 இப்ப]ணம் இருநூற்றைய்ம்பதுக்கும் உழவு காணியாகப் பற்றி அனுபவித்துப் போந்த யிது இச்சுந்தர பாண்டிய நரசிங்கதேவற்

9 க்கு இவற் குடுத்த - - - - [அநுப]வித்துப் போதிகிற இக்குடிக்காடு மூன்றுக்கும் பெருநான்கெல்லையாவது கீழ்பாற்கெல்லை கீரனூரெல்லைக்கு மேற்

10 க்கும் தெ[ன்*]பாற்கெல்லை கீழ் மேலாகப் போகிற வண்டிப் பெருவழிக்கு வடக்கும் இதந் மேற்கு நம்பன் குடிக்காட்டு மருவெல்லைக்கு வடக்கும்

11 தென்மேற்க்கு போற கோயில் நங்கை குடிக்காட்டு வடவெல்லைக் கோயிலுக்கு வடக்கும் மேபாற்கெல்லை குளப்பரிப்புக்குக் கிழ

12 க்கும் வடபாற்கெல்லை கீரனூரின்றும் வருகிற வழிச் செவ்வைக்குத் தெற்கும் ஆக இசைந்த பெருநான்கெல்லைக்கு உட்பட்ட நஞ்செ புன்

13 செயும் நத்தமும் ந[த்த*]ப்பாழும் குளமும் குள வாத்தலைகளும் கீேனாக்கிய கிணறும் மேனோக்கிய மரமும் மற்றும் எப்பேற்பட்ட ஸமஸ்த ப்ரா

14 ப்திகளும் பற்றி வதியமந்து கிடக்கிற குளங்களும் காடெழுந்து கிடக்கிற முது தறை விளைநிலங்களும் வெட்டித்திருத்திக்கொண்டு சந்

15 திராதித்தவற் காணியாகப் பற்றி அனுபோவிப்பாராக[வு*]ம் இப்படி அநுபவிக்கும் இப்பணம் இருநூற்றைம்பதுக்கும் இக்குடி

16 க்காடு மூன்றும் காணியாகப் பற்றி அநுபவிப்பதாக பிடிபாடு பண்ணிக் குடுத்தோம் சுந்தர பாண்டிய நரசிங்கதேவற்கு முன் சொல்லப்பட்ட அனை

17 வோமும் இப்படி அநுபவிக்குமிடத்து சீபண்டாரத்துக்கு மேல்வாரம் கண்காணித்துக் கொள்ளுமிடத்து கள நிலமிட்டு பரிமாறி முதலாந முதலு பணம்

18 கண்காணி பாசன [தடிக்] குறுணி பொதுவில்க் கழித்து பசாநம் மேல்வாரம் மூன்றிலொன்றும் தினை வரகு எள்ளுப் பயறு குறுவை கரும்பு கொழுந்து கருணை

19 மஞ்சள் இஞ்சி செங்கழுநீர் வாழை வழுதலை பூசணி உட்படப் பயிற் செயலுக்கும் மரப்ப[னை] நா[ர்*]த்தை எலுமிச்சை குளவிஞ்சி நெல்லி இலுப்பை உட்பட

20 மரத்துக்கு அஞ்சிலொன்றும் தெங்கு கமுகுக்கு ஏழிலொன்றும் புஞ்செ[ய் பற்றுத்] தலை பார்த்து ஏழிலொன்றும் காடுவெட்டி திருத்தின நிலத்துக்கு முதல்லா

21 ண்டைக்கு பத்திலொன்றும் இதன் பிற்றையாண்டைக்கு ஒன்பதிலொன்றும் இதன் பிற்றையாண்டு எட்டிலொன்றும் இதன் பிற்றையாண்டு ஏழிலொன்

22 றுங் கொண்டு ஆக இந்நாலாண்டும் கழிந்தால் நிலையடை மேல் வாரம் மூன்றிலொன்றும் ஆக இவ்வகுப்பின்படி கொள்ளக் கடவோமாகவும் இப்படி

23 க்கு இன்னாள் முதல் சந்திராதித்தவற் பற்றி அனுபவிப்பாராகவும் இப்பிடிபாட்டுக்கு ஓலைக்குற்றம் எழுத்துக்குற்றமென்று சொல்லக் கடவதல்லவா

24 கவும் இப்படிக்கு கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொண்டு அனுபவிப்பாராக இப்படி சம்மதித்து காணி பிடிபாடு பண்ணிக் குடுத்தோம் உய்யவந்தா

25 ன் பாண்டியனான சுந்தர பாண்டிய நரசிங்கதேவர்க்கு உடையார் திருக்கோளக்குடி உடைய நாயனார் திருக்கோயில் ஸ்ரீருத்ர ஸ்ரீமாஹேச்வர தே

26 வர் கன்மிகள் கோயில்க் கணக்கர் இவ்வனைவோமும் இப்படிக்கு எல்லாம் தலையான பாண்டியப் பிரமாதராயன் எழுத்து இப்படிக்கு வீரபா

27 ண்டிய பிரமாதராயன் எழுத்து இப்படிக்கு சொக்க பட்டன் ஸயிச்சினையுமிட்டு திருச்சிற்றம்பல ஆச்சாரியன் எழுத்து இப்படிக்குக் குலைசேகர ப

28 ட்டன் ஸயிச்சினைக்கு அத்தியான ஆளுடையார் எழுத்து இப்படிக்கு சந்திரசேகர பட்டன் எழுத்து இப்படிக்கு ஆலாலசுந்திர பட்டன் ஸயிச்சினைக்கு சந்திரசே

29 கர பட்டன் எழுத்து இப்படிக்கு மகாதே$_3$வ பட்டன் எழுத்து இப்படிக்கு பரமேச்$_0$வர பட்டன் எழுத்து திருநிலையழகியான் எழுத்து இப்படிக்கு பெரி

30 ய பட்டன் எழுத்து இக்கோயில் மாடாபத்தியம் உய்ய நெறிகாட்டினான் எழுத்து மாடாபத்தியம் செய்பித்தன் எழுத்து சீமாயேச்சுரக் கணக்கு திருமு

31 கை வேலழகியான் எழுத்து இப்படிக்கு இக்காணிப் பிடிபா டெழுதினேன் யிக்கோயில்க் கணக்குப் பாங்களுருடையான் திருஞானசம்பந்தனே

32 ன் என் எழுத்து

33. க. எண்: 67 - 1916

இடம்: மேலது.

செய்தி: உய்யவந்தானான பராக்கிரம பாண்டிய நரசிங்கதேவருக்குக் கோயிலார் எழுதிக்கொடுத்த காணிப்பிடிபாடு ஆவணம். வயல்களும், மனைகளும் அநுபோகத்திற்குத் தரப்பட்டன. நிலவரியினங்கள், கோயிற் செயற்பாடுகள் குறிக்கப்பட்டுள்ளன.

காலம்: சடையவர்மர் சுந்தர பாண்டியர்; கி.பி. பதினான்காம் நூற்றாண்டு.

1 உ ஸ்ரீமற்கீத்திக்கு மேல் ஸ்ரீகோச்சடைபன்மரான திருபு[வ*]னச் சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தர பாண்டிய தேவற்கு யாண்டு

2 10வது வ்ருச்$_0$சிக நாயற்று பூர்வ பக்ஷத்து சதுர்த$_3$சி$_0$யும் வியாழக் கிழமையும் பெற்ற அச்$_0$வதி நாள் புறமலை நாட்டுத் திரு

3 க்கோளக்குடி உடையார் திருக்கோளக்குடி உடைய னாயனார் திருக் கோயில் ஸ்ரீருத்திரர் ஸ்ரீமாஹேச்$_0$வரரும் தான

4 த்தோமும் உய்யவந்தாநான பராக்ரம பாண்டிய நரசிங்கதேவற்கு பிடிபாடு பண்ணிக்குடுத்த பரிசாவது இவ்வூர்

5 க் காணியாட்சி ஆண்டார்கள் அடைவு நாலிலொன்றும் பற்றி அனுபவித்து காணியாண்டு போவாறின்றி மூன்ற

6 டைவாகப் பற்றிக் காணியாண்டு போதுகையில் யின்னாலிலொன்றும் இன்னாள் முதல் காணியாகப் பற்றி அனு

7 பவிப்பாராகவும் இப்படிக் காணியாண்டு போதுமளவில் இன்னா[லத்தொ]ன்றுக்கும் காணியாண்டு ஓமறா[ய*] வயல்

8 பந்தன வயலும் இன்னாலிலொன்றால் வரும் மனைகளும் இன்னாள் முதல் பற்றி அனுபவித்து கோயில் சுவந்தி

9 ரத்தில் நாலிலொன்றுக்கு அடைப்பான நிமந்தங்களுக்கு(ம்) ஆளும் இட்டு இன்னிவந்தங்களுக்கு அடைப்பா

10 ன நெல் நிமந்தம் நில அடைப்பு கொற்றடைப்பும் மற்றும் எப் பேற்பட்ட சுவந்திரங்களும் பற்றி அனு

11 பவித்து திருவாசல்களையும் ஊர்க்காரியமாக எழுதியழிக்கும் காரியங்களுக்கு நாலிலொன்றுக்கு எழுத்து

12 ம்மிட்டு இத்திருவாசல் காரியமாக வரும் நிவந்தங்(கு)களும் எங்கள் மரிசாதி ஒக்கநின்று அனுபவித்து இன்னா

13 ள் முதல் காணியாண்டு போதுவாராகவும் இப்படி சம்மதித்து பிடிபாடு பண்ணிக்குடுத்தோம் பாரக்ரம பா

14 ண்டிய நரசிங்கதேவற்கு ஸ்ரீருத்ர ஸ்ரீமாஹேச்₀வரரும் தானத்தோமும் இப்படிக்கு எல்லா

15 ந் தலையான பாண்டியன் பிரமாதராயன் எழுத்து இப்படிக்கு வீரபாண்டிய பிரமாதராயன் எழுத்து

16 இப்படிக்கு இனக்க பட்டன் எழுத்து தேவபிள்ளை எழுத்து இப்படிக்கு குலைசேகர பட்டன் எழுத்து இப்படி

17 க்கு ஆலாலசுந்தர பட்டன் எழுத்து இப்படிக்கு சந்திரசேகர பட்டன் எழுத்து இப்படிக்கு மகாதேவ பட்டன் எழுத்து

18 இப்படிக்கு மாஹேச்₀வர பட்டன் எழுத்து திருநிலை அழகியான் எழுத்து இப்படிக்கு பட்டன் எழுத்து மா

19 டாபத்தியம் உய்யநெறி காட்டினான் எழுத்து இப்படிக்கு திருவேடமழகியான் எழுத்து அணுக்கமாந தொண்டன் எழுத்து

20 சிறுபத்தன் எழுத்து இப்படிக்கு திருஅண்ணாழிப்பிள்ளை எழுத்து இப்படிக்கு செய்ய

21 பெருமாள் எழுத்து இப்படிக்கு சொக்க நாயனார் எழுத்து இப்படி ஸ்ரீமாஹேச்₀வர கணக்கு திருக்கை வேலழ

22 கியான் எழுத்து இப்படிக்கு திருஞானசம்பந்த வேளான் எழுத்து

34. க. எண்: 68 - 1916

இடம்: சத்ரசபாபதிக் கோயில் நுழைவாயிலின் வலப்புறம்.

செய்தி: மக்கள் நாயனான கண்டிய தேவன் மன்னர் சுந்தர பாண்டியர் பெயரால் மணலூரில் அதன் பழம் பெயர் முதலானவை நீக்கிச் சதுர்வேதிமங்கலமொன்று அமைத்தார். இங்குக் குடியமர்ந்த இருபது சதுர்வேதி பட்டர்களுக்கும் ஆளுக்கு ஒரு பங்கென இருபது பங்கு நிலம் ஒதுக்கப்பட்டது. சுந்தர பாண்டிய ஈசுவரமுடையார் என்ற பெயரில் சிவலிங்கமும், குலசேகர விண்ணகர ஆழ்வார் என்ற பெயரில் விஷ்ணு சிலையும் நிறுவப்பட்டன. இவற்றிற்காக நான்கு பங்கு நிலம் தேவதானமாகத் தரப்பட்டது. கல்வெட்டின் இறுதிப் பகுதி கட்டடத்திற்குள் சிக்கியுள்ளது.

காலம்: கி.பி. பதினான்காம் நூற்றாண்டாகலாம்.

1 ஸ்வஸ்திஸ்ரீ பிரச$_0$ாதஞ் செய்தருளின

2 திருமுகப்படி திரிபுவனச் சக்கரவத்திகள்

3 கோனேரிமேல் கொண்டான் வே

4 த$_3$மு சா$_0$ஸ்த்ரமும் பொய்வ்யால்லாதா

5 த்தனாயிருக்கும் சதுர்வேதிபட்டக்கு

6 பேர் இருபதுக்கு பங்கு இருபதும் சிவலி

7 ங்க ப்ரதிஷ்டைக்குப் பங்கு இரண்டும் வி

8 ஷ்ணு ப்ரதிஷ்டைக்கு பங்கு இரண்டும்

9 ஆகப் பங்கு இருபத்து நாலுக்கும் புறமலை

10 நாட்டுப் பொன்னமார்பதிப் பற்றில் மே

11 ல்பால் நம்முழவான மணலூர்க்குத் தெ[ன்]

12 ன]ல்லை நெடு வயல் மேலெல்லைக்கு மேற்கு தெ

13 தன்னெல்லை திருவாண்டியேறி வடவெல்லைக்

14 கு வ[ட]க்கும் மேலெல்லை பூண்டி முசுக்குன்றத்து

15 க் கீழெல்லைக்கு [கிழக்கும்] வடவெல்லை கு

16 ளத்துத் தென்னெல்லைக்குத் தெற்கும் ஆக இன்னா

17 ன்கெல்லைக்குள்ப்பட்ட நீர்நிலமும் கருஞ்செய்

18 நன்செய்யும் நத்தமும் தோட்டமும் குளமும் குளப்பரிப்பு

19 ம் உள்பட்ட நீர்நிலத்திலப் பழந்தேவதானம் பள்ளிச்சந்

20 தம் நீக்கி நீக்கி உள்ள நிலமும் முன்னுடையாரும் பழம்பேர்

21 முதலில் தவித்து பங்கு மனையும் எழுதிக் குடியிருக்க

22 லாம் நத்தத்திலே மக்க[ள்*] னாயநான கண்டிய தேவன் சுந்தர
பாண்டிய சதுர்

23 வேதி₃மங்கலமென்னும் பேரில் ப்ரஹ்மதே₃யஞ் செய்யப்ப[ட்ட] சுந்த

24 ர பாண்டீச்₀வரமுடையார் என்னும் நாம[த்*]தால் சிவலிங்க [பிரதி]

25 ஷ்டை பண்ணவும் குலசேகர விண்ணகர ஆழ்வார் என்று நாம

26 த்தால் விஷ்ணு ப்ரதிஷ்டை பண்ணவும் மணலூர்க் கடமை அந்

27 தராயம் வினிஓகம் தருவதான அச்சுக் காரியவாராட்சிக்

28 கடமை அந்தராயமும் வினியோகமும் தருவதான - -

29 ரிய வாராய்ச்சியும் வெட்டிப் பாட்டமும் பஞ்சுபீலி - -

30 ப்பேறு வாசல்பேறு யிலாஞ்சினைப் பேறு - -

31 - - செக்கிறையும் தட்டொலிப் பாட்டமும் இடையர்வரி இன

32 வரியு மற்றும் எப்பேர்பட்டினவும் உள்பட்டனவும் [த*]

33 ன்மதான இறையிலியாக இவ்வூர் சபையார் இந்நா

34 ட்டு திருக்கோளக்குடி யாண்ட நாய(நாய)நாற்கு க

35 டமை யிறுத்து அநுபவிக்கவும் அநுபவித்துப் போந்த

36 இடத்து தேவதானப் பங்கு நாலும் நீக்கி நீக்கி நின்ற நி

37 லத்தில் நீர்நிலம் பயிர் பார்த்து சுந்தர பாண்டியன் [கோ]

38 லால் பயிற் கொண்ட நிலத்துக்கு மாத்தால் இன்னாட்டு

39 க் கடமை காலாலே கலனே தூணி நெல்லு இறுப்

40 பதாகவும் இடப்பெற வேணுமென்று காலிங்கராயன்

41 நமக்குச் சொன்னமையில் தங்களுக்குப் பங்கு இருப

42 தும் தேவதானப் பங்கு நாலும் ஆகப் பங்கு இருபத்து

43 நாலுக்கு இம்மணலூர் நான்கெல்லைக்குட்பட்ட நில

44 த்தில் தேவதானம் பள்ளிச்சந்தம் நீக்கி நீக்கி உள்

45 ள நிலமும் முன்னுடையாரும் பழ[ம்]பேரும் உழவும் முதலு

46 ந் தவிந்து பங்கும் மனையும் எழுதிக் குடியிருக்கலாம் நத்த
47 த்திலே இம்மக்கள் நாயனான கண்டிய தேவன் சுந்தர பா
48 ண்டியச் சதுர்வேதிமங்கலமென்னும் பேரால்

35. க. எண்: 69 - 1916

இடம்: மேலது, வலப்புறம்.

செய்தி: இத்திருக்கோயிலுக்கு உற்சவத் திருமேனியொன்று வழங்கி அதற்கென மண்டபம் கட்டித் தூண்களும் அமைத்துத் தந்தவர்க்குக் கோயில் மரியாதைகள் அளிக்கப்பட்டன. கல்வெட்டின் இறுதிப்பகுதி கட்டடத்திற்குள் சிக்கியுள்ளது.

காலம்: கி.பி. 1528.

1 சுபத்திசிறி சகாத்தம் 1450
2 இதன் மேற் செல்லா நின்ற ஆன
3 ந்த ஷு தை பு 12 உ புறமலை நாட்டு
4 திருக்கோளக்குடி யாண்ட நா
5 யனார் சிறிபண்டாரக் காரியத்துக்கு
6 கடவாரோம் ஒல்[லை]யூர் கூற்றத்து தென் கோனாட்
7 டு தேசியுகந்த பட்டணத்துச் சுந்தரசோழபுரத்துப்
8 . . . . . . பிடிபாடு பண்ணிக்[குடுத்த]
9 யின்னாயனார் திருக்கோயில் . . . . .
10 ா தன்மமான முதலியார் மண்டபமும்
11 சன்னதியில் இரண்டு தூணும்
12 கல்லும் மண்டபமும் முதலியார் புழுகு சா
13 த்துத் திருமேனியும் எழுந்தருளப் பண்ணி
14 யிறுத்தப் பெருந்திரு நாமுகங்கள் கி .
15 . பரிவட்டங் கட்டி தீர்த்தம் திருநீறும்
16 . . . . . திருமுன் மாலையும் . . . . .
17 - - கடவோமாக

36. க.எண்: 70 - 1916

இடம்: மேலது.

செய்தி: நடராசருக்கு அம்பலம் செய்தவர் அழகிய சேமன் அருள் மன்னன்.

காலம்: கி.பி. பதினான்காம் நூற்றாண்டு.

1	ஸ்வஸ்திஸ்ரீ	11	யின் கொம்பு
2	வம்பலர் கெ	12	டனாக நடநவி
3	ான்றையுந்	13	ல் கோளக்கு
4	திங்களுங் க	14	டி வானாற் கம்
5	ங்கையும் வ	15	பலஞ் செய்வி
6	ாளரவுந் தும்	16	த்தா னழகிய
7	பையுஞ் செ[ச]	17	சேமனருள் ம
8	ருனை வை	18	ன்னனேன்
9	த்துலகேழுந்	19	பன்மாஹேச்₀வர
10	தொழ வரை	20	ரக்ஷை

37, 38. க.எண்: 71,72 - 1916

இடம்: மேலது, கிழக்குச்சுவர். இரண்டு கல்வெட்டுகளுமே படிக்கவியலாத அளவிற்குச் சிதைந்துள்ளன. அதனால் கல்வெட்டறிக்கையில் வெளியாகியுள்ள அவ்விரு கல்வெட்டுகளின் சுருக்கங்கள் மட்டும் இங்குத் தரப்பட்டுள்ளன.

71. அகளங்க நாடாழ்வாரின் தம்பி சேமாண்டார் திருக்கோளக்குடி சிவதர்மீசுவரமுடைய நாயனார் திருக்கோயிலில் தாம் எழுந்தருளுவித்த கூத்தாடு தேவர்க்குப் படையலிட மஞ்சனேரி கிராமத்தை விலைக்கு வாங்கிக் கொடையளித்தார். காலிங்கராயர் பரிந்துரையால் அரசரின் பதினோராம் ஆட்சியாண்டில், அவர் கங்கைகொண்டபட்டணத்தில் முகாமிட்டிருந்தபோது மஞ்சனேரி இறையிலியாக்கப்பட்டது.

72. மேற்சொன்ன செய்தியே அரசாணையாக அமைந்துள்ளது.

39. க. எண்: 73-1916.

இடம்: மேலது.

செய்தி: மணலூரான சுந்தர பாண்டிய சதுர்வேதிமங்கலத்து சபையாருக்கு வரியினங்கள் குறித்த அரச ஆணை. கல்வெட்டு எண் 68ல் குலசேகர விண்ணகர ஆழ்வார் என்று குறிக்கப்படும் திருமேனி இக்கல்வெட்டில் கண்டியதேவர் விண்ணகர ஆழ்வார் என்று அழைக்கப்படுவது கவனிக்கத்தக்கது. இரண்டாம் பாண்டியப் பேரரசுக் காலத்தில் இருந்த வரியினங்கள் தெரியவருகின்றன.

காலம்: கி.பி. பதினான்காம் நூற்றாண்டு.

1 திரிபுவனச் சக்கரவத்திகள்

2 கோனேரின்மைய் கொண்டான் புறம

3 லை நாட்டுப் பொன்னமாா்பதிப் ப

4 ால் மண[லூரா][ன*] சுந்தர பாண்டிய

5 சதுர்வேதி$_3$மங்கலத்து ஸபை$_4$யார்

6 க்கு இவ்வூர் நான்கெல்லைக்கு உள்பட்

7 ட நீர்நிலமும் கருஞ்செய் புன்செ[ய்] நத்த

8 மும் நத்தப்பாழும் குளமும் குளப்பரிப்

9 பு[ம்] தோட்டக்கூறும் மற்று மெப்பேற்

10 ப்பட்டவை யிற்றிலும் உடையார் திரு

11 க்கொடுங்குன்றமுடைய நாயனாற்க்கு

12 த் தேவதானமாய்ப் போந்த பற்று நீக்கி

13 நீக்கியுள்ள சமஸ்த ப்ராப்திகளும் முன்னுடையா

14 ரும் பழம்பேரு முதலில் தவிந்து மக்கணாயனான்

15 கண்டியதேவர் நம் பேரால் வைத்த இவ்வகரத்தில்

16 வேதசாஸ்திரம் பொயவ்யாதாக்களாய் இருக்கும்

17 சதுர்வேதிபட்டர்கள் பேர் இருபதுக்கு பாகம் இருபதும்
இவ்வகரத்தில் உ

18 கந்தருளப் பண்ணுகிற சுந்தர பாண்டிய ஈசுவரமுடையா

19 ற்கு பாகம் இரண்டும் கண்டியதேவர் விண்ணகர ஆள்

20 வார்க்கு பாகம் இரண்டும் ஆக இருபத்து நாலு பாகமா
21 கக் கரையிட்டுக் கொள்ளவும் இவையிற்றால் உள்ள கடை
22 ம அந்தராயமும் தருவதான அச்சும் காரியவாராட்சியு
23 ம் வெட்டி பாட்டமும் பஞ்சுபீலி சந்துவிக்கிரகப்பேறும் வாசல்
24 ப்பேறும் யிலாஞ்சினைப்பேறும் தறியிறை செக்கிறை தட்
25 டொலிப்பாட்டமும் இடையர்வரியும் இனவரியும் பொன்வரியு
26 ம் [உ]ள்ப்பட மற்றும் எப்பேர்ப்பட்ட வரிகளும் அண்ணாள்விக்கு
27 பதினாலாவது முதல் தவிந்து தன்மதான இறையிலியா
28 க குடுத்தோம் இப்படிக்கு இவ்வோலை பிடிபாடாகக் கொ
29 ண்டு சந்திராதித்தவற் செல்வதாகக் கல்லிலுந் செம்பி
30 லும் வெட்டிக்கொள்க இப்படிக்கு இவை முத்தூற்றுக் கூ
31 ற்றத்து அனந்தனூர் சிறுகடம்பனூர் உடையான் வண்டு வரா
32 பதி - -

40. க.எண்: 74 - 1916

இடம்: மேலது, வடக்குச் சுவர்.

செய்தி: செவ்வூர் ஊராரும் முதலிகளும் திருக்கோளக்குடித் திருக்கோயிலில் உள்ள நடராசப் பெருமானுக்கு மாங்குடி கிராமத்தை விற்றுத்தந்தனர். திருக்கோளக்குடியில் மடம் இருந்தமையும் அங்குத் தவசியர் இருந்தமையும் தெரியவருகின்றன. நிலவரியினங்களின் பட்டியல் கிடைக்கிறது.

காலம்: வீரபாண்டிய தேவர்; கி.பி. பதினான்காம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவீரபாண்டிய தே₃வற்கு யாண்டு 3வது வ்ரு

2 ச்₂சிக நாயற்று பூர்வ பக்ஷத்து வியாழக்கிழமையும் த்ரியோதசி₂யும் பெற்ற திருவோணத்து நாள் புறமலை நா

3 ட்டு திருக்கோளக்குடி உடைய நாயனார் ஆதிசண்டேச்₂வர தேவர்க்கு இன்னாட்டு இச்செவ்வூர் ஊராயிசைந்த

4 முதலிகளும் இந்நாயனாற்கு நிலவிலை பிரமாணம் பண்ணிக்குடுத்த படியாவது எங்களாற்றாமையா லிவ்வூ ரெங்

5 கள் காணிபற்று மாங்குடியை விற்று பாணிசைந்து கொள்வீருளரோ எந்று ஒருகாலாவது இருகாலாவது முக்காலா

6 வது முற்கூற யிமொழி கேட்டுப் பிற்கூறிக் கொள்வே நெந்ற திருக்கோளக்குடி மடத்திலிருக்கும்(ந்) தபஸ்விகளில்

7 தே$_3$வர்கள்தே$_3$வர் இக்கோயிலில் அணியார் தில்லையம்பலத்து முந்நருள் பண்ணின அழக நட்டப் பெருமாளுக்கி

8 றையிலி [திருநாம]த்துக்காணியாக விற்கயிசைந்த மாங்குடிப் பெருநான்கெல்லையாவது கீழ்பாற்கெல்லை உடை

9 யார் திரு[க்கோளக்]குடி உடைய நாயநார் திருநாமத்துக்காணியான உ . த வாசகப் பேரையன் பக்கற் கொண்ட குடிக்காட்டு நீர்போகி

10 க்கு மேற்கும் [தென்பா]ற்கெல்லை வேலங்குடியார் வாரவாச்சி எல்லைக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை மாங்குடி யெல்லையார் கல்லூங்குழி

11 க்குக் கிழக்கும் வடபாற்கெல்லை செவூராழிக்கல்[லு*]க்குத் தெற்கும் ஆக இசைந்த பெருநான்கெல்லைக்குட்பட்ட உண்ணிலமொழிவின்றி எம்

12 மிலிசைந்த விலைப்பொருளுக்கு விலைக்குற விற்றும் பொருளறக் கைக்கொண்டு விற்று விலை ப்ரமாணம் பண்ணிக்குடுத்தோம் ஆதிசண்டே

13 ச்$_0$வரதே$_3$வற்க்கு செவூருராயிசைந்த ஊரும் முதலிகளு[ம்*] யிந்நிலத்தில் மேனோக்கின மரமுங் கீனோக்கின கிணறும் நத்தமுந் தோ

14 ட்டமுங் குளமுங் குளப்பரிப்பும் நன்செய் புன்செய் நான்கெல்லைக் குள்ப்பட்ட நீர்நிலமு மற்று மெப்பேற்பட்டனவும் எம்மி

15 லிசைந்த விலைப்பொருளுக்கும் விலைக்குற விற்று எம்மிலிசைந்த விலைப்பொருளெல்லாம் விலையாவண களத்தே காட்டி

16 [காட்*]டேற்றி கைச்செலவறக் கொண்டு விற்று விலை ப்ரமாணம் பண்ணிக்குடுத்தோம் ஆதிசண்டேச்$_0$வரதே$_3$வற்கு செவூர் ஊரு(ர)ல

17 முதலிகளும் இம்மாங்குடி வயலுக்குந் தறியிறை குடிமை ஆள்வரி முதலிப்பேறு நிலவரி பெருவரி வெட்டி முட்டாவாள் வேலிகா

18 லச்சுப் பொன்வரி எச்சோறு (செவ) மற்றும் எப்பேற்பட்டவை நாங்களே இறுப்போமாகவும் இப்படி சம்மதித்து இக்குடிக்க

19 ஈட்டுக்கு இதுவே வி[லை*]யாவதாகவு மிதுவே பொருள் மாவறுதிப் பொருட்ச்செலவோலையாவதாகவு மிதுவல்லது வேறு பொருட் மாவறு

20 திப் பொருட் செலவோலை காண[வும் கா]ட்டவும் கடவதல் லாதாகவும் எம்மிலிசைந்த விலைப்பொருள் விலையாவன களத்தே கா

21 [ட்]டேற்றிக் கைச்செலக் கைக்கொண்டு இம்மாங்குடிப் பெருநான் கெல்லையும் நடுவுந் திருச்சூலதேவரை ஸ்தாபித்து கல்

22 லிலுஞ் செம்பிலும் வெட்டிக்குடுத்தோம் செவூர் ஊருமி முதலிகளும் பாடிகாவல் மாத்தால்ப் பன்னிரண்டரையும் மாத்தால் தூணி நெ

23 ல்லும் குளத்தில் மீனும் பாடிகாவல் பெறுவோம் கேட்ட திறுப்போமாகவும் இப்படி சம்மதித்து இக்குடிக்காடு விற்று விலை

24 ப்ரமாணம் பண்ணிக்குடுத்தோம் அணியார் தில்லையழக நட்ட பெருமாள் ஆதிசண்டேச்ஂவரதேவர்க்கு செவூர் ஊராயிசைந்த ஊரோமும் முதலிகளும் (இப்படிக்கு)

25 இப்படிக்கு செவூருடையானெழுத்து இப்படிக்கு சோழக்கு மிண்டனெழுத்து இப்படிக்கு முதலிகள் தற்குறியுமிட்டு ஊரவர் சொல்படிக்கு

26 ம் முதலிகள் சொல்படிக்கு[ம்*] இவ்விலைப் பிரமாணம் பண்ணிநேன் நிலைமை அழகியவேளாநெழுத்து

27 இப்படிக்கு ஆளப்பிறந்தனாடாழ்வானெழுத்து இப்படிக்கு

28 இருங்கோளனெழுத்து இப்படிக்கு கண்ணுடை வீரப்பேரய

29 னெழுத்து இப்படிக்கு சுந்தர பாண்டிய கங்கனெழுத்து இப்படி

30 க்கு வைய்யகத்தரையனெழுத்து இப்படிக்கு நிதராயப் பேர

31 யனெழுத்து இப்படிக்கு சுரபினாட்டரையனெழுத்து

41. க.எண்: 75 - 1916

இடம்: மேலது, கிழக்குச் சுவர்.

செய்தி: பூங்குன்ற நாட்டு வேலங்குடி ஊரார் திருக்கோளக்குடித் திருக்கோயில் ஆதிசண்டேசுவரதேவர்க்கு திருநாமத்துக்காணியாக நிலக்கொடை. விற்கப்பட்ட நிலம் ஒருசொல் வாசகப் பேரையன் குடிக்காடு என்றழைக்கப்பட்டது. இக்கல்வெட்டு பல துணுக்குகளாகச் சிதறியுள்ளது.

காலம்: கி.பி. பதினான்காம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவத்தி

2 கள் ஸ்ரீவீரபாண்டிய தேவர்க்கு [யாண்டு*] 5

3 வது வைகாசி மாதம் புறமலை நா

4 ட்டு திருக்கோளகுடி உடையார் திரு

5 க்கோளக்குடி உடைய நாயனார் ஆதிசண்டே

6 ச்°வரதேவற்கு பூங்குன்ற நாட்டு வே

7 வலங்குடி ஊராகயிசைஞ்ச ஊரோ

8 ம் ஊற்கீழிறையிலி திருநாமத்துக்காணி

9 விலை பிரமாணம் பண்ணிக்குடுத்த பரி(ச்)சா

10 வது எங்கள் ஊற்ப் பற்[றான] ஒருசொல் வாசகப்

11 பேரையந் குடிக்காடு குளமும் உடைகுளப்பட்டு

12 வயலும் வரம்பழிந்த காடாயி[ரு*]க்க பக . . .

13 ல் இவயலுக்கு இறை பூண்டு இறுக்கப் போகல்லாத

14 படியாலே யிக்குடிக்காடு ஊரஞ்சாதி யிறையிலியா

15 க கொள்வாரோ கொள்வாரோவென்று பலகால் முற்

16 கூறப் பிற்கூறி கொள்வோமெ[ன்]று இந்நாயனார் ஆதிசண்

17 டேச்°வரதேவற்கு எம்மிலி(இ)சைஞ்ச விலைப்பொருளு

18 க்கு விற்பதா[க] இசைஞ்சு ஊரஞ்சாதி இறையிலி திருநா

19 மத்துக்காணியாக விலைக்குற விற்றுப் பொருளறக் கைக்

20 கொண்டு விற்று விலை பிரமாணம் பண்ணிக்குடுத்தோம் ஆதிசண்டேச்°வரதேவர்

21 கு வேலங்குடி ஊரா[யிசைஞ்ச*] ஊரோம் இப்படி விற்ற இக்குடி காட்டுக்கு பெருநான்கெ

22 கல்லையாவது கீழ்பாற்கெல்லை சோறுண்டைக் குளத்து கீழ்க்கரைக்கு மேற்கு

23 ம் தென்பாற்கெல்லை இக்குளத்துக்குள்ளு குளங்கோவை தென்வரம்புக்கு வட

24 க்கும் மேற்பார்க்கெல்லை - - பகுப்புக்கு கிழக்கும் வடபாற்கெல்லை முன்

25 - -

26 குட்பட்ட குளமும் நத்தமும் புஞ்செயும் - -

27 மற்றுமெப்பேர்ப்பட்டனவும் உள்பட இறையிலி திருநாமத்துக்காணியாக விற்று

28 விலைப் பிரமாணம் பண்ணிக்குடுத்தோம் உடையார் திருக்கோளக்குடி உடை

29 ய நாயனாா[ர்*] ஆதிசண்டேச்$_0$வரதேவர்க்கு வேலங்குடி ஊரா(க) யிசைந்த ஊரோம்

30 விற்ற இந்த ஒருசொல் வாசகப் பேரையன் குடிக்காட்டில் வயலுக்கு நீரேற்றி இ . .

31 . . . . . . காவை அறுதியாக - -

32 - -

33 தும் இதிலே பாயவும் இப்படி சம்மதித்து சந்திராதித்தவற் செல்வதாக கல்வெட்டிக் கொள்

34 வார்களாக விற்று ஊரஞ்சாதி இறையிலி திருநாமத்துக்காணியா[க*] விலை பிரமாணம் பண்ணி

35 குடுத்தோம் உடையார் திருக்கோளக்குடி உடைய நாயனார் ஆதிசண்டேச்$_0$வர தேவற்கு வேலங்

36 குடி ஊராயிசைஞ்ச ஊரோம் - -

37,38 - -

39 ரையான் எழுத்து நாட்டுப் பேரையன் எழுத்து அரச கோபால பேரையன் எ

40 ழுத்து அமணகங்கன் எழுத்து

3. ஆய்வுக் கட்டுரைகள்

1. கண்ணனூர் முருகன் கோயில்

ஸ்தபதி வே. இராமன்

அமைவிடம்

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம் ராங்கியம்-விராச்சிலை ஊர்களுக்கு இடையே அமைந்துள்ள சிற்றூரே கண்ணனூர். இவ்வூர் ஏரியின் கீழ்க்கரையில் கரும்பு, செந்நெல் வயல்களுக்கிடையே இயற்கையான சூழ்நிலையில் சிறப்பாகக் கட்டமைக்கப்பட்ட முற்சோழர் கால முருகன் திருக்கற்றளியைக் காணமுடிகிறது. முற்சோழர் கலைமுறையில் முருகனுக்காக எடுப்பிக்கப்பட்ட முதல் கற்றளி இதுவேயாகும்.

அமைப்பும், காலமும்

விமானம், முகமண்டபம், இடைநாழி, பெருமண்டபம், படிக்கட்டு மண்டபம், திருச்சுற்று, திருமதில், கோபுரம் என்றவாறு இத்திருக்கோயில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் கட்டட அமைப்பினைக் கொண்டு விமானமும், முகமண்டபமும் முதலாம் ஆதித்தன் காலத்தன எனவும், பிற அங்கங்கள் பின்னாளில் இணைத்து எழுப்பப்பட்டன எனவும் அறியமுடிகிறது. இதனை உறுதிசெய்யும் வகையில் முகமண்டப வாயிலில் காணும் கல்வெட்டுகளும், பெருமண்டபப் புறச்சுவர்ப் பகுதிகளில் காணும் கல்வெட்டுகளும் இடம்பெற்றுள்ளன.[2]

இங்கு முற்சோழர் கலைமுறையில் அமைந்த கட்டமைப்புகளின் கலைச்சிறப்பு சுருங்கத் தரப்படுகிறது.

விமானம்

கிழக்கு நோக்கியதாய் ஒருதளக் கட்டுமானத்துடன் அமையும் இக்கோயிலின் விமானம் சதுர வடிவினதாகும். சதுர வடிவினதாய் அமையும் விமானம் இறைவனின் முக்குணங்களில் ஒன்றான சாத்வீகக் குணத்தையுடையது என்பர் அறிஞர்.[3] விமானம் பாதச்சுவர்க்கட்டு, பாதச்சுவர், கூரை, கழுத்து, சிகரம், தூபி என்ற ஆறு ஆதார அங்கங்களை அளவோடு பெற்று கம்பீரமான தோற்றத்துடனும், எழிலுடனும் காட்சியளிக்கின்றது.

பாதச்சுவர்க்கட்டு

நிலமட்டத்தில் காணப்படும் கற்றளியின் முதல் அங்கமே பாதச்சுவர்க்கட்டு எனப்படும். இதனைத் தாங்குதளம் என்றும் கூறுவர். உபானம், ஜகதி, எண்பட்டைக் குமுதம், கீழும் மேலும் கம்பினைப் பெற்றுத் தூணடிகளைக் கொண்ட கண்டம், மேற்கம்பினைப் பெற்றமையும் பட்டிகை ஆகியனவற்றை உறுப்புகளாகக் கொண்டு பாதச்சுவர்க்கட்டு அமைக்கப்பட்டுள்ளது. இதனைப் பாதபந்தம் எனச் சிற்பநூல் அடையாளம் காட்டும்.[4]

எளிமையான வலுவான கட்டமைப்பைக் கொண்ட இப்பாதச்சுவர்க்கட்டு பல்லவர் காலப் பழமையது.[5] உபானம், ஜகதி, கண்டம் மற்றும் பட்டிகை மிக எளிமையாக அமைய, குமுதம் எண்பட்டை வடிவினதாக உருவாக்கப்பட்டுள்ளது. பாதச்சுவர் அமைப்பில் இடம்பெறும் தூண்களுக்கு நேர் கீழே கண்டப்பகுதியில் தூணின் தொடர்ச்சியாகத் தூணடிகள் காட்டப்பட்டுள்ளன.

வடதிசையில் கருவறை புறச்சுவரில் பட்டிகை மட்டத்தில் கோமுகை என்னும் நாளம் மையமாக, நீட்சியாக, எளிமையான வேலைப்பாடுகளைக் கொண்டதாய்க் காணப்படுகிறது. பாதச்சுவர்கட்டின் உயரம் 97 செ.மீ. ஆகும்.

பாதச்சுவர்

பட்டிகையின் மேல்மட்டத்திலிருந்து எழும்பும் பாதச்சுவரினை நான்முக வடிவிலான அரைத்தூண்களும், தேவகோட்டங்களும், தோரணங்களும் அலங்கரிக்கின்றன.

3.78 மீ. அளவினைப் பெற்ற பக்கச் சுவர் முகபத்ரம் ஏதுமின்றி ஒரே நேர்கோட்டில் அமைவதாய் உள்ளது. இருப்பினும் பக்கச் சுவர் மூன்று பத்தியமைப்பு முறையினைப் பின்பற்றிப் பக்கத்திற்கு நான்கு நான்முக அரைத்தூண்கள் பெற்றுள்ளது. தூண்பகுதி கீழிருந்து மேலாகப் பாதம், உடல், மாலைத்தொங்கல், மாலைக்கட்டு, தாமரைக்கட்டு, கலசம், குடம், பாலிகை, பலகை, வீரகண்டம், போதிகை என்னும் அலங்கார அணிகளைப் பெற்றுள்ளது. மாலைத்தொங்கல் மற்றும் மாலைக்கட்டுப்பகுதிகளில் உள்ள கருக்கணிகள் சில தூண்களில் முழுமையடையாமலும், சிலவற்றில் இடம்பெறாமலும் உள்ளன.

கலசம், குடம் மற்றும் பாலிகையில் இடம்பெறும் கருக்கணிகள் உறுப்புகளைச் சிறக்கச்செய்யும் வகையில் துல்லியமாகச் செதுக்கப்பட்டுள்ளன. போதிகை அமைப்பானது திருப்பங்களில் முத்தலைப் போதிகையாகவும், இடையில் இருதலைப் போதிகையாகவும் எளிமையான தோற்றத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. பாதச்சுவரின் உயரம் 173 செ.மீ. ஆகும்.

பாதச்சுவர்ப்பகுதியில் மையமாகத் தேவகோட்டம் இடம்பெறுகிறது. இத்தேவகோட்டத்தின் இருபுறங்களிலும் சட்டத்தலையுடன் கூடிய நான்முக அரைத்தூண்கள், சுவர்ப்பகுதியில் இடம்பெறும் தூண்கள் போல உறுப்புகள் கொண்டு பாதக்கட்டின் மேல்மட்டத்திலிருந்து எழுகின்றன. உயரம் சற்றுக் குறைவான இத்தேவகோட்டத் தூண்களில் போதிகைகள் இடம்பெறவில்லை. இத்தூண்களின் மேல்மட்டமான வீரகண்டத்தின் மேல், கோட்டத்தினை மூடும் வகையில் உத்திரம், வாஜனம், வலபி உள்ளன. கோட்டத்தின் மேலுள்ள தோரணம் சிறப்பப் பொலிவின்றிக் காணப்படுகிறது. கருவறைப் புறச்சுவர் தென்புறத் தேவகோட்டத்தில் ஆலமர் அண்ணல். பிற தேவகோட்டங்களில் சிற்பங்கள் ஏதுமில்லை. இத்தேவகோட்ட அளவு 45 x 20 x 109 செ.மீ. ஆகும்.

கூரை

கூரை உத்திரம், வாஜனம், வலபி, கபோதம், பூமிதேசம் ஆகியன கொண்டுள்ளது. உத்திரம் எளிமையாக அமைய, வாஜனம், வலபியுடன் கலந்து திருப்பங்களில் மட்டும் உத்திரத்தின் மேல் சிறிது நீட்சியாகச் செவ்வக வடிவில் அமைகிறது. வலபியில் பூதகணங்கள் நாற்புறமும் காணப்படுகின்றன. நாற்புறத் திருப்பங்களில் மட்டும் விலங்குகள், மனிதத்தலைகள் காட்டப்பட்டுள்ளன. பூதகணங்களில் சில மந்தி முகம் கொண்டுள்ளன. அபயம் காட்டும் நிலை, நடனமாடும் நிலை, தாளம் தட்டும் நிலை, கதை, சங்கு தாங்கி நிற்கும் நிலையிலான கணங்கள் முற்சோழர் காலத்திய சிற்பிகளின் கலைநுணுக்கத்தை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன.

பூதவரிக்கு மேலாகச் சிறிது நீட்சியோடு கவிழ்ந்த நிலையில் கபோதம் காட்டப்பட்டுள்ளது. கபோதத் தொங்கலில் சந்திரமண்டல அலங்கரிப்பு இடம்பெற்றுள்ளது. கபோதத் திருப்பங்களில் கொடிகளோடு கூடிய கருக்கணிகள் மேலிருந்து கீழே இறங்குவன போல் அமைந்து திருப்பங்களை அழகு செய்கின்றன. கபோதத்தில் சிரசகன்ற கூடுகள் வனப்புடன் பக்கத்திற்கு நான்கென அமைந்துள்ளன. இறுதியாக இடம்பெறும் பூமிதேசமான யாளிவரியில் யாளிகள் இணையாகவும், எதிரெதிராகவும், முன்செல்லும் யாளியின் பிருஷ்ட பாகத்தினைத் தொடர்ந்துவரும் பிறிதொரு யாளி தன் வலக்காலால் தொட்டநிலையிலும் உள்ளன. இவற்றில் யானை மற்றும் சிம்ம உருவங்களும் இடம்பெற்றுள்ளன. இவ்வுருவங்கள் இங்கு முழு உருவங்களாய்ச் சித்தரிக்கப்பட்டுள்ளன.

பூமிதேசத்தின் நாற்புறத் திருப்பங்களில் வழக்கமாக இடம்பெறும் மகரத்தலை இடம்பெறாமல் அவ்விடத்தில் செவ்வகக் கட்டை வடிவம் காணப்படுவதை ஆதித்தன் கலைமுறையில் ஒன்றெனக் கொள்ளலாம்.

பூமிதேச மேல்மட்டத்தில் நாற்புறங்களிலும் முருகனின் வாகனமான யானைகள் இடம்பெற்றுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

கழுத்து

பூமிதேச மேல்மட்டத்திலிருந்து சற்று உள்ளடங்கியவாறு, ஆதிதள அமைப்பினின்று மாறுபட்டு வட்டவடிவினதாக கழுத்து அமைந்துள்ளது. கழுத்தின் கீழே வேதிகைத் தொகுதியும், மேலே உத்திரம், வாஜனம், வலபி ஆகியனவும் காணப்படுகின்றன. வலபியில் அன்னங்கள் சுற்றிவருகின்றன. சில அன்னங்களின் தோகைகள் அழகுபட வடிக்கப்பட்டுள்ளன.[6] வேதிகைத் தொகுதியில் கண்டம், கம்பு, பத்மம், கம்பு என்னும் சிற்றுறுப்புகள் இடம்பெற்றுள்ளன.

கழுத்துப்பகுதியின் நாற்றிசைகளில் மையமாகச் சற்று முன் இழுப்பாகப் பெருநாசிகளின் கோட்டங்கள். இவற்றின் சதுரவடிவான கால்கள் உத்திரம் தொடுகின்றன. நாற்புறங்களிலும் இடம்பெறும் இக்கோட்டங்களில் முருகனின் சிற்பங்கள் சிற்பப் பொலிவின்றிக் காணப்படுகின்றன.[7]

சிகரம்

கழுத்துப்பகுதிக்கு மேல் இடம்பெறும் சிகரமும் வட்ட வடிவினதாகவே அமைந்துள்ளது. இதில் நாற்புறமும் இடம்பெறும் பெருநாசிகைகள் கழுத்துப்பகுதியில் இடம்பெறும் கோட்டங்களுக்கு மகுடம் போல் அமைந்துள்ளன. நீள்வட்ட வடிவில் அமைந்த பெருநாசிகைகளின் ஆழமான மையப்பகுதி வெறுமையாக விடப்பட்டுள்ளது. இதன் புறப்பக்க வளைவுகளில் இடம்பெறும் கருக்கணியின் கொடி, மேலிருந்து கீழே இறங்கி வளைந்தும், மடிந்தும், நெளிந்தும் வர, அக்கொடிகளைத் தழுவியவாறும், இடையிலும், சுடர் போலவும், சுருள் போலவும் அடைப்பாக அழகுபடக் கருக்கணிகள் செதுக்கப்பட்டுள்ளன. சிகரத்தின் தலைப்பகுதியில் இடம்பெறும் பெருந்தாமரை, முனைகள் வெட்டப்பட்டு உயர்ந்தும், தாழ்ந்தும் அன்றலர்ந்த தாமரை மலர் விரிந்தாற் போல் உள்ளது. இதனடியில் வரும் கட்டுமாலையில் வரிசையாகவும், சீராகவும் சுடர்க் கருக்கணிகள் சுற்றிவருவனவாய் அமைந்து, சிகரப்பகுதியின் எழிலை உயர்த்திச் சிறப்பித்துக் காட்டுகின்றன.

தூபி

விமானத்தின் இறுதியில் இடம்பெறும் தூபியும் வட்டவடிவில் அமைந்துள்ளது. பருத்தும், சிறுத்தும் முடிவில் தாமரைமொட்டுப் போன்றும்

வடிவமைக்கப்பட்டுள்ள தூபியினைச் சிறு தாமரைகள் மிகவும் அழகுபடச் சித்தரிக்கின்றன. இவ்வடிவ தூபி வேறு எங்கும் காண இயலாத அரியதொரு கலைப்படைப்பாகும்.

முருகனின் திருவுருவ அமைதி

பாதம் முதல் சிரசுவரை 92செ.மீ. உயரமுடைய முருகன் நான்கு கரங்களுடன் சமபாத நிலையில் காட்சிதருகின்றார். மேல் வலக்கை வஜ்ரமும், மேல் இடக்கை அக்கமாலையையும் தாங்க, வல முன்கரம் அபயம் காட்ட இடது கரத்தைத் தொடையில் வைத்தவாறு கம்பீரமாக வடிக்கப்பட்டுள்ளார். சிரசின் மேல் பத்ரபூரிமத்துடன் கூடிய கரண்டமகுடமும், செவிகளில் பத்ரகுண்டலமும், கழுத்தில் கண்டிகை, சரப்பளி ஆகிய அணிகளும், மார்பில் குறுக்காக வீரனாகிய முருகனுக்கு உகந்த அணியான வீரச்சங்கிலியும் வனப்புடன் அமைய, வயிற்றின் மேல் உதரபந்தம் எழில்படக் காட்டப்பட்டுள்ளது.

இடையணியாக இடைக்கச்சையும், பட்டையான அரைப்பட்டிகையும் காட்டப்பட்டுள்ளன. பக்கங்களில் இடம்பெறும் கவர்ச்சிகரமான முடிச்சும், அம்முடிச்சினின்று சரிந்துதொங்கும் ஆடைமடிப்புகளும் மிகவும் கலைநயத்துடன் செதுக்கப்பட்டுள்ளன.

அமைதியான உருவ அமைப்பு, திரட்சியான உடல்வாகு, கரண்டமகுடம், நீள்சதுர முகம், அழகிய புருவம், அருள்பார்வை கொண்ட மலர்ந்த கண்கள், எடுப்பான நாசி, குவிந்த உதடுகள், அணிகள் அணிந்த உடல், எளிமையான ஆடை ஆகியன முருகனின் உருவத்தை அழகுபடுத்துகின்றன. ஆதித்தன் காலச் சிற்பக்கலைக்கு அடையாளமாக இம்முருகனின் திருவுருவம் அருள் உணர்வோடு திருவுண்ணாழியில் இடம்பெற்றுள்ளது.

உண்ணாழியின் உட்புற மேல்தள அமைப்பு நம்மை வியக்கச் செய்கின்றது. உண்ணாழிச் சுவர் மீது அமையும் தளத்தின் அடிப்பகுதி விரிவடைந்து அதன்மேல் இடம்பெறும் ஒவ்வோர் அடுக்கும் படிப்படியாகச் சுருங்கி சிகரத்தின் தலைப்பாகத்தோடு இணையும்படி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பே தஞ்சைப் பெரியகோயில் கட்டட உள் அமைப்பு அமைய முன்னோடி எனலாம். இதனைக் 'கதலிகாகரணம்' என்பர்.[8] உண்ணாழியின் அளவு 227 செ.மீ. ஆகும்.

முகமண்டபம்

விமான அடித்தளம் போன்றே கட்டமைப்புக் கொண்டுள்ள முகமண்டபம் கருவறைச் சுவரிலிருந்து சற்று உள்ளடங்கிச் செல்கிறது. இம்முகமண்டபமும்

மூன்று பத்தியமைப்பு முறையினையே கொண்டு பக்கத்திற்கு நான்கு தூண்களைப் பெற்றுள்ளது. வடக்கிலும், தெற்கிலும் கோட்டங்கள் இல்லை. முகமண்டபத்தின் உட்பகுதியில் இரு முழுத்தூண்கள் உத்திரம் தாங்குகின்றன. இத்தூணமைப்பு சதுரம், பட்டை, நீள்சதுரம் என முற்சோழர் கலைமுறையில் எளிமையாய் உருவாக்கம் பெற்றுள்ளது.

பெருமண்டபம்

முகமண்டபத்தைத் தொடர்ந்தமையும் இடைநாழியின் தென்புறத்தில் வாயில். இதனையடுத்துப் பெருமண்டபம், நான்கு முழுத்தூண்களையும் நான்கு அரைத்தூண்களையும் பெற்றமைந்துள்ளது. தென்புறம் வனப்பு மிக்க நுழைவாயிலும் இவ்வாயிலுக்கு முன்பாக மண்டபமும் உள்ளன. இம்மண்டபத்திற்குக் கிழக்கிலும், மேற்கிலும் படிகள். கிழக்குப் பக்கச் சுவரின் மையத்தில் கருக்கணிச் சட்டங்களுடன் சாளரம் அமைந்துள்ளது.

திருமதில்

சிதைந்த நிலையில் முற்றுப்பெறாத, உயரம் குறைந்த அளவிலான திருமதில். இத்திருமதிலோடு இணைந்த இரு எளிய திருநிலைக் கால்கள் கோபுர அமைப்பை நினைவுபடுத்துவனவாக நிற்கின்றன.

மரபுச்சின்னம்

சுமார் 1100 ஆண்டுகளுக்கு முன்னர் ஊர் மக்களால் வணங்கிப் போற்றப்பட்ட இத்திருக்கோயில் இன்று மரபுச்சின்னமாக மாறி ஊர் மக்கள் பார்வையிலிருந்து ஒதுங்கியுள்ளது. இருந்தபோதிலும் தன் பழைய நிலை மாறாது நிற்பது நம் நெஞ்சை நிறைப்பதாகும்.[9]

ஆய்வின் முடிவுகள்

ஆதித்தன் காலக் கோயில்கள் பல கற்றளிகளாகவே கட்டமைக்கப்பட்டுள்ளன. முருக வழிபாடு அக்காலகட்டத்தில் சிறப்புற்று இருந்தமைக்கு இக்கற்றளி சான்றாக உள்ளது.

உண்ணாழியில் இடம்பெற்றுள்ள முருகனின் எழில்மிகு தோற்றம் ஆதித்தன் காலச் சிற்பக்கலைக்குச் சான்றாக அமைகிறது.

விமானப் பாதச்சுவர்க்கட்டு எளிமையான பாதபந்தம் என்னும் கட்டமைப்பைப் பெற்றிருப்பது பல்லவர் காலத் தொடர்ச்சியே.

கற்றளி அளவில் சிறியதாக இருந்தபோதிலும் சிற்பநூல் மரபுப்படியே ஆறு ஆதார அங்கங்களைப் பெற்றமைந்துள்ளது.

விமான அமைப்பில் பத்திப்பிரிப்பு முறை பின்பற்றப்பட்டுள்ளது.

விமானத்தின் சீரான அமைப்பு, சீரிய கற்பனை வளம், எளிமையான நுணுக்கமான கலைத்திறன், கட்டடக்கலையோடு சிற்பக்கலையினை இணைத்துள்ள கலைமுறை ஆதித்தன் காலத்துச் சிற்பியர் திறமையை எடுத்துக்காட்டுவனவாக உள்ளன.

முகமண்டப வாயிலில் வாயிற்காவலர் கோட்டங்கள் இல்லாதிருப்பதை ஒரு மாற்றமாகக் கொள்ளலாம்.

கிரீவ கோட்டங்களில் இடம்பெற்றுள்ள முருகனின் சிற்பங்கள் அக்காலத்தில் முருக வழிபாடு சிறப்பாகப் போற்றப்பட்டுள்ளமையைத் தெளிவாக்கும்.

அடிக்குறிப்புகள்

1. பல்லவர் காலப் படைப்புகளான மாமல்லபுரம் மும்மூர்த்திக் குகை, தர்மராஜ ரதம், அர்சுனன் ரதம் ஆகியவற்றிலும் எழில்மிகு முருகனின் சிற்பங்களைக் காணமுடிகிறது. திருச்சிராப்பள்ளிக் கீழ்க் குடைவரையிலும் முருகனின் சிற்பம் இடம்பெற்றுள்ளது. இருப்பினும் சில்ப, ஆகம முறையில் முருகனுக்காகத் தனி ஆலயமாக அடி முதல் உச்சிவரை கல்லால் கட்டுவிக்கப்பட்ட முதல் கற்றளி இதுவேயாகும்.
2. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம். சோழர் கலைப்பாணி, பாரிநிலையம், சென்னை, 1966, பக். 50-51.
3. வாஸ்த்து சாஸ்த்திரம். டாக்டர் வை.கணபதி ஸ்தபதி.
4. காசியபம்-சிற்பநூல்-தஞ்சை சரசுவதிமகால் நூலக வெளியீடு, பக். 72-75.
5. மாமண்டூர்க் குடைவரையிலும், மாமல்லபுரம் கொற்றவைத் தளியிலும் இவ்வகை கட்டமைப்பு இடம்பெற்றுள்ளது.
6. இக்கலைமுறை முற்சோழா காலத்துக் கோயிலான கீழையூர் அவனிகந்தர்ப்ப ஈசுவரகிருக வளாகத்தில் அமைந்துள்ள தென்வாயில் ஸ்ரீகோயிலிலும், சுந்தரசோழர் காலத்துக் கோயிலான பெருங்குடி பெருமுடியீசுவரர் கோயிலிலும் இடம்பெற்றுள்ளது. ஸ்தபதி வே. இராமன், 'கண்ணொளி வழங்கிய பெருங்குடி அகத்தீசுவரர்கோயில்', கோபுரதரிசனம் - தீபாவளி மலர், 1997.
7. பொதுவாகச் சிவாலயங்களில் கிரீவ கோட்டங்களில் கிழக்கே இந்திரன், தெற்கே ஆலமர் அண்ணல், வடக்கே பிரம்மா, மேற்கே பெருமாள் இடம்பெறுவர். ஆனால் இங்கு நாற்புறங்களிலும் முருகன் உருவங்கள் உள்ளன.
8. ஸ்தபதி வே. இராமன், 'சோழமாதேவி திருக்கைலாயமுடையார் கோயில் அமைப்புமுறை', கல்வெட்டு இதழ், 38, பக். 30-36.
9. மத்திய அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் பாதுகாக்கப்படும் மரபுச் சின்னமாகும்.

2. மண்டகப்பட்டுக் குடைவரை

அர. அகிலா, செ. வாணி, இரா. கலைக்கோவன்

விழுப்புரம் செஞ்சி சாலையில், விழுப்புரத்திலிருந்து இருபதாவது கிலோமீட்டரில் வலப்புறம் பிரியும் மண்சாலை வழியே ஏறத்தாழ ஒரு கிலோமீட்டர் சென்றால் மண்டகப்பட்டுக் குடைவரைப்பகுதியை அடையலாம். மண்சாலையிலிருந்து வலப்புறம் திரும்புமாறு அறிவுறுத்தும் அறிவிப்புப் பலகையின் வழிகாட்டலையேற்று நீட்டிக்கொண்டிருக்கும் பாறைகள், சுடும் பாதை இவற்றைப் பொருட்படுத்தாது நடப்பவரைக் குடைவரை வளாகத்தைச் சுற்றி இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறை அமைத்திருக்கும் முட்கம்பி வேலியும், எப்போதும் திறந்திருக்கும் அதன் கதவும் அன்போடு வரவேற்கின்றன. குடைவரை வெட்டப்பட்டிருக்கும் பெரும்பாறையின் முன்னுள்ள தரைப்பகுதியில் கருங்கற்கள் பாவியுள்ளனர். இரு வேறு உயரங்களில் அமைக்கப்பட்டுள்ள இத்தரையின் முதற்பகுதியைவிட இரண்டாம்பகுதி சற்று உயரமாக உள்ளது. இவ்விரண்டாம் பகுதியில் வேப்பமரத்தடியில் பின்னாளில் ஊர்மக்கள் எழுப்பியிருக்கும் காரைக் கட்டட அமைப்பிலான கோயிலொன்று கருவறையும், சிறிய முகமண்டபமும் கொண்டமைந்துள்ளது.

குடைவரை அமைந்துள்ள பாறையின் முன்னோக்கிய சரிவு கீழே போகப் போகச் சற்று உள்வாங்கியமைந்துள்ளது. செவல்பட்டிக் குடைவரைக் குன்றின் சரிவு போல, மேலிருந்து கீழ்வரையிலான உள்வாங்கல் இங்கு இல்லையெனினும், பாறையின் கீழ்ப்பகுதியில் இவ்வுள்வாங்கலை நன்கு காணமுடிகிறது.

கீழுள்ள கல் பாவிய தரையிலிருந்து 1.91மீ. உயரத்தில் இப்பாறை குடையப்பட்டுள்ளது. இதை அடையக் குடைவரையின் மேற்குப்பகுதியில் பின்னாளில் படிக்கட்டுகள் அமைத்துள்ளனர். சரிவின் காரணமாக அகலமான முன்தரையும், பக்கச்சுவர்களும் குடைவரைக்குக் கிடைத்துள்ளன. வடக்கு நோக்கி அமைந்துள்ள இக்குடைவரையின் முன் தரை கிழக்கு மேற்காக 9.90மீ. நீளமும், தென்வடலாக குறுகலான இடத்தில் 98செ.மீ. அகலமும், பரவலான இடத்தில் 1.47மீ. அகலமும் கொண்டமைந்துள்ளது.

முன் தரையிலிருந்து 5செ.மீ. உயரத்தில் முகப்புத் தரை காட்டப்பட்டுள்ளது. 6.09மீ. நீளமும், 67செ.மீ. அகலமும் கொண்டமைந்துள்ள

நன்றி : துகில் ஸ்டைல்ஸ், திருமதி. கண்ணம்மாள் இராசமாணிக்கனார், வாழ்வியல் எழுத்தாளர் திரு. மு. முத்துக்காளத்தி, மரு. சு. பழனியாண்டி, மரு. கோ.நா. மோகனவேலு, மரு. இரா. குணசேகரன் அறக்கட்டளைகள்

இம்முகப்பில் இரண்டு முழுத்தூண்களும் இரண்டு அரைத்தூண்களும் உள்ளன. இவை முகப்புத் தரை விளிம்பிலிருந்து சற்று உள்தள்ளி எழுகின்றன. சதுரம், கட்டு, சதுரம் என்ற அமைப்பிலுள்ள இத்தூண்களின் கீழ்ச்சதுரங்கள் மேற்சதுரங்களைவிடப் பத்து செ.மீ. உயரம் கொண்டுள்ளன.' கீழ்ச் சதுரங்களின் கீழ்ப்பகுதிகள் மேற்பகுதிகளைவிடச் சற்று அகலக் கூடுதலாக வெட்டப்பட்டுள்ளன. மேற்கு அரைத்தூணின் மேற்சதுர வடமுகத்தில்தான் முதலாம் மகேந்திரவர்மரின் புகழ்பெற்ற ஏதக் அனிஷ்டகக் கல்வெட்டு மிகச் சிதைந்த நிலையில் காணப்படுகிறது.

மண்டகப்பட்டுக் குடைவரை

மேற்சதுரங்களின் மேலமைந்துள்ள போதிகைகளின் கைகள் வளைந்து மேல் திரும்பி உத்திரம் தாங்குகின்றன. இவற்றின் மேற்கைகளை விட கீழ்க்கைகள் நீளமாக உள்ளன. உத்திரம் போதிகையின் கனத்தில் மூன்றிலொரு பங்கே உள்ளது. உத்திரத்தின் மேல், பிதுக்கத்துடன் வாஜனம் காட்டப் பட்டுள்ளது. வாஜனத்தின் மேற்பரப்பையொட்டி நீளும் அரைநிலா வடிவிலான கூரையின் முன்னிழுப்பு வடிவமைக்கப்படாத கபோதமாக்கப்பட்டுள்ளது. நன்கு சமன் செய்யப்பட்டுள்ள இதன் அடிப்பரப்பின் விளிம்பு சற்று இறங்கலாகக் காட்டப்பட்டிருப்பதும் அந்த இறங்கல் பகுதி பட்டை தட்டப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கக் கூறுகளாகும்.

முகப்பு அரைத்தூண்களையொட்டி இருபுறத்தும் பெருங்கோட்டங்கள்[2] அகழப்பட்டுள்ளன. இவற்றின் வெளிப்புற அணைவாய்ப் பக்கத்திற்கொன்றாக இரு நான்முக அரைத்தூண்கள். இவ்வரைத்தூண்களின் ஒரு பக்கப் போதிகைகள் முகப்பு அரைத்தூண்களின் போதிகைகள் போலவே வளைந்த கைகளால் உத்திரம் தாங்குகின்றன. இவ்வுத்திரமும், இதையொட்டிய வாஜனமும், கபோதமும் தொடர்புடைய முகப்பு உறுப்புகளின் தொடர்ச்சிகளாக அமைந்துள்ளன.

கிழக்குக் கோட்டம் 1.09மீ. அகலமும், 2.17மீ. உயரமும் கொண்டிருக்க, மேற்குக் கோட்டம் 1.14மீ. அகலமும், 2.08மீ. உயரமும் கொண்டமைந்துள்ளது. இரு கோட்டங்களின் கீழும் தள அமைப்புகள் உள்ளன. கிழக்குத்தளம் 10செ.மீ. உயரத்தில் அமைந்திருக்க, மேற்குத்தளம் 25செ.மீ. உயரம் கொண்டுள்ளது. இக்கோட்டங்களின் வெளியணைவாக நிற்கும் நான்முக அரைத்தூண்களுள், மேற்கிலுள்ளது, மேலிருந்து கீழாக அகலக் குறுக்கமடைவதுடன், கீழ்ப்பகுதி சிதைவுற்றும் காணப்படுகிறது. இவ்வரைத் தூண்களையொட்டி விரியும் பக்கச் சுவர்களுள் கிழக்குச் சுவர், முதற் பாதி வரை மேலிருந்து கீழாகப் படிப்படியாக அகலமாகி, இரண்டாம் பாதி முழுவதும் ஒரே அளவில் அமைந்துள்ளது. இதன் உச்ச அகலம் 1.20மீ. மேலிருந்து கீழாக அகலப்படும் மேற்குச்சுவரின் உச்ச அகலம் 1மீ.

முகப்பையடுத்துள்ள மண்டபம் மற்றொரு வரிசைத் தூண்களாலும், உயர்த்தப்பட்ட தரையமைப்பாலும் முகமண்டபம், அர்த்தமண்டபம் என இரு பகுதிகளாக்கப்பட்டுள்ளது. கிழக்கு மேற்காக 6.53மீ. நீளமும் தென்வடலாக 1.50மீ. அகலமும் கொண்டமைந்துள்ள முகமண்டபத்தின் தரையும் கூரையும் நன்கு சமன் செய்யப்பட்டுள்ளன. இதன் கிழக்கு, மேற்குச் சுவர்களின் மேற்பகுதியில் காணப்படும் உத்திரம் முகப்பு உத்திரத்தைவிட அகலமாக உள்ளது. வாஜனம், முகப்புப் பகுதியின் தென்புற வாஜனத்தின் தொடர்ச்சியாக அமைந்துள்ளது. முகமண்டபத்தின் நாற்புறமும் உத்திரத்தையடுத்து வாஜனம் காட்டப்பட்டுள்ளது.

முகமண்டபத்திலிருந்து ஏறத்தாழ 11 அல்லது 12செ.மீ. உயரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் அர்த்தமண்டபம் கிழக்கு மேற்காக 6.68மீ. நீளமும், தென்வடலாக 2.58மீ. அகலமும் கொண்டமைந்துள்ளது. இம்மண்டபத் தரையின் முன்பகுதியில், முகப்புத்தூண்களுக்கு நேராக அமையுமாறு இரண்டு முழுத்தூண்களும் இரண்டு அரைத்தூண்களும் அமைக்கப்பட்டுள்ளன. தரை விளிம்பிலிருந்து சற்று உள்தள்ளி எழும் இத்தூண்களுள், முழுத்தூண்கள் இரண்டும் சதுரம், கட்டு, சதுரமென அமைய, அரைத்தூண்கள் நான்முக அமைப்பிலுள்ளன. இங்கும் முழுத்தூண்களின் மேற்சதுரங்களைவிடக் கீழ்ச்சதுரங்கள் ஏறத்தாழ 10செ.மீ. கூடுதல் உயரம் கொண்டுள்ளன. அர்த்த மண்டபத் தரையின் விளிம்பு கிழக்குக் கோடி தவிர ஏனைய இடங்களில் பெருமளவாய்ச் சிதைக்கப்பட்டுள்ளது.

அர்த்தமண்டபத் தூண்களின் போதிகைகள் முகப்புப் போதிகைகள் போலவே வளைந்த கைகளால் உத்திரம் தாங்குகின்றன. இவற்றின் கீழ்க் கைகள் முகப்பிலுள்ளாற் போலவே மேற்கைகளினும் நீளமாக உள்ளன. இவற்றுள் மேற்கு முழுத்தூண் போதிகையின் கிழக்குக்கை மட்டும் சிதைவுற்றுள்ளது. அர்த்தமண்டபத் தூண்களின் மேற்சதுரத்திற்கும் போதிகைக்கும் இடையே பலகை காட்டப்பட்டுள்ளது. இது கிழக்கு அரைத்தூணின் வடமுகத்திலும், முழுத்தூண்களின் வடமுகங்களிலும், தாமரையிதழ் போன்ற வடிப்பணைவுடன் கூடிய பலகையாகக் காட்டப்பட்டுள்ளது. மேற்கு அரைத்தூணில் இவ்வடிப்பு ஒரு விளிம்பு போல அமைந்துள்ளது.[3] முழுத்தூண்களின் கிழக்கு மேற்குப் பக்கங்களில் இப்பலகை ஒரு சதுரப்பட்டியாக அமைக்கப்பட்டுள்ளது. உத்திரம், முகப்பு உத்திரத்தை விடச் சற்றுக் கூடுதல் கனத்துடன் காட்டப்பட்டுள்ளது. உத்திரத்தையொட்டிப் பிதுக்கமாக அமைந்துள்ள வாஜனம், கிழக்கு மேற்காக உத்திரத்தின் இருபுறத்தும் அதாவது வடக்கிலும் தெற்கிலும் நெடுக ஓடுகிறது. இதனால் முகமண்டபக் கூரை தென்புறத்திலும் வாஜனம் பெற்றுள்ளது.

நன்கு சமன் செய்யப்பட்டுள்ள அர்த்தமண்டபத்தின் தரை, தூண்கள் அமர்ந்துள்ள பகுதியிலிருந்து 4செ.மீ. தாழ உள்ளது. இத்தாழ்வு மேற்குப்பகுதியில் தவிர ஏனைய பகுதிகளில் சிதைந்துள்ளது. இதனால் இரண்டாம் வரிசைத் தூண்கள் அமர்ந்துள்ள பகுதி மற்றொரு முகப்புப் போலத் தனித்துத் தோன்றுகின்றது. அர்த்தமண்டபத்தின் கிழக்கு மேற்குச் சுவர்களின் மேற்பகுதியில் உத்திரமும் அதையடுத்துக் கூரையை ஒட்டியதாய் வாஜனமும் காட்டப்பட்டுள்ளன. இவை முகமண்டபத் தூண்களின் போதிகைகள் தாங்கும் உத்திரம், வாஜனம் இவற்றின் தொடர்ச்சியாக உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றுள் உத்திரம், மேற்குப் பகுதியில் அர்த்த மண்டப வாயில் உத்திரத்தைவிட சற்று அகலக் கூடுதலாகவும், கிழக்குப் பகுதியில் ஏறத்தாழ அதே அளவுள்ளதாகவும் அமைந்துள்ளது. கூரை நன்கு சமன் செய்யப்பட்டுள்ளது.

அர்த்தமண்டபப் பின்சுவரில் நான்கு அரைத்தூண்கள் வெட்டப்பட்டுள்ளன. இவற்றுள் நடுவிலுள்ள இரண்டும் சதுரம், கட்டு, சதுரமென அமைய, ஓர இரண்டும் நான்முக அரைத்தூண்களாய் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றின் மீதமர்ந்துள்ள போதிகைகளின் வளைந்த கைகள் தாங்கும் உத்திரத்திற்கு மேல் பிதுக்கமாய் வாஜனம் பின்சுவர் முழுவதற்குமாய் கூரையையொட்டி ஓடுகிறது. நடு அரைத்தூண்களின் போதிகைகள் அவை அமர்ந்துள்ள மேற்சதுரங்களினின்றும் சற்று வெளித்தள்ளினாற் போல் காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் மேற்கு அரைத்தூண் போதிகையின் மேற்குக் கை சிதைந்துள்ளது.

அரைத்தூண்களுக்கு இடைப்பட்ட சுவர்ப்பகுதிகளில் கருவறைகள் அகழப்பட்டுள்ளன. இச்சுவர்ப்பகுதிகள் கிழக்கிலிருந்து 1.67மீ., 1.57மீ., 1.63மீ., அகலம் கொண்டுள்ளன.

கருவறை	வாயிலின் அகலம்	வாயிலின் உயரம்
முதல் கருவறை (கிழக்கிலிருந்து)	91செ.மீ.	1.81மீ.
இரண்டாம் கருவறை	90செ.மீ.	1.80மீ.
மூன்றாம் கருவறை	97செ.மீ.	1.78½மீ.

கருவறை	உட்புற உயரம்	தென் வடல் அளவு		கிழக்கு மேற்கு அளவு
		வலச்சுவர்	இடச்சுவர்	
முதல் கருவறை	1.89மீ.	71செ.மீ.	70½செ.மீ.	99½செ.மீ.
இரண்டாம் கருவறை	1.88மீ.	76செ.மீ.	80½மீ.	1.15½மீ.
மூன்றாம் கருவறை	1.85மீ.	67½செ.மீ.	70செ.மீ.	1.11½மீ.

கருவறைகளின் உட்புறத்தே அவற்றின் பக்கச் சுவர்கள் வாயில் விளிம்புகளிலிருந்து சற்று உள்வாங்கிக் குடையப்பட்டிருப்பதால், இவ்விடங்களில் வாயிலமைப்புகள் நிலைக்கால்களைக் கொண்டன போலக் காட்சிதருகின்றன. கருவறைக் கூரைகள் வாயிலின் மேல் திறப்பினின்றும் உயரமாகக் குடையப்பட்டிருப்பதால் இம்மேல் திறப்புகள் மேல்நிலைகளெனக் கருதுமாறு போல அமைந்துள்ளன.

அர்த்தமண்டபப் பின்சுவரின் கீழ்ப்பகுதியில் கிழக்கு மேற்காக 6.72மீ. நீளத்திற்கு உபானமொன்று 8செ.மீ. உயரத்திற்குக் காட்டப்பட்டுள்ளது. இதன் மேற்பரப்பும் கருவறைகளின் தரைப்பகுதியும் ஒரே நிலையில் உள்ளன. பின்சுவரின் நடு அரைத்தூண்கள் இந்த உபானத்தினின்று சற்று உட்தள்ளி எழ, ஓர அரைத்தூண்கள் இவற்றிலிருந்தே எழுமாறு போல விளிம்பொட்டி வெட்டப்பட்டுள்ளன. கருவறைகளின் சுவர்களும் கூரையும் வெறுமையாக இருந்தாலும் குடைவரையின் பல பகுதிகளிலும் காணப்படும் சுண்ணப்பூச்சின் எச்சங்களை இங்கும் காணமுடிகிறது.

கருவறைகளின் பின்சுவரையொட்டிய தரைப்பகுதிகளின் நடுவில் குழிகள் வெட்டப்பட்டுள்ளன. இவை இறைத் திருமேனிகளின் கீழே காட்டப்படும்

கூம்பு வடிவப் பிடிமானங்களைப் பொருத்துவதற்காகப் பின்னாளில் உருவாக்கப்பட்டிருக்கலாம் என்று திரு. கூ.ரா. சீனிவாசன் கருதுகிறார்.



அர்த்தமண்டபப் பின்சுவரும் கருவறையும்

கருவறை	குழியின் அகலம்	நீளம்	ஆழம்
முதல் கருவறை	27½செ.மீ.	31செ.மீ.	7செ.மீ.
இரண்டாம் கருவறை	28செ.மீ.	31செ.மீ.	9செ.மீ.
மூன்றாம் கருவறை	26செ.மீ.	39செ.மீ.	8செ.மீ.

சிற்பங்கள்

வாயிற்காவலர்கள்

இருபுற வாயிற்காவலர்களுமே பேரளவினராய்க் கோட்டங்களை நிறைத்தபடி நிற்கின்றனர். இவர்தம் மகுடங்கள் கோட்ட அணைவுத் தூண்களின் போதிகைக் கைகளுக்கு இடைப்பட்ட பகுதிகளில் நீள, திருவடிகள் தளங்களின் மேல். இருவருமே தொடைவரையிலும் சுருக்கிக் கட்டப்பெற்ற அரையாடையை மரமேறிகள் போல் கீழ்ப் பாய்ச்சிப் பின்புறத்தே முடிந்துள்ளனர். இதன்மீது கட்டப்பெற்றுள்ள இடைக்கட்டின் பக்க முடிச்சுகள் மேற்குப்புறத்தாரின் இருபுறத்தும் நன்கு காட்டப்பட்டுள்ளன. கிழக்கருக்கு இவை வடிவம் பெறாது செங்கோடுகளாய் நிற்கின்றன. இருவருமே செவிகளில் பெரிய அளவிலான பனையோலைக் குண்டலங்கள் அணிந்துள்ளனர். கிழக்கர் முன் கைகளில் மூன்று வளைகள் அணிந்திருக்க, மேற்கர் இரு வளைகளுடன் காட்சிதருகிறார். இவ்வளைகள் சிறுசிறு சதுரக் கற்களை மணிகளால் இணைத்தது போல வடிவமைக்கப்பட்டுள்ளன. மேற்கைகளில் கங்கணங்கள். கிழக்கரின் வலக்கை மேற்பகுதி சிதைந்துள்ளதால் அதில் கங்கணத்தைக் காணக்கூடவில்லை. இருவருக்குமே கோரைப்பற்கள் காட்டப்பட்டிருந்தாலும் கிழக்கரின் வலக்கோரை உடைந்துள்ளது. உதரபந்தம் இருவருக்கும் ஒன்றுபோல அமைந்துள்ளது.

மேற்கர் நேர்நோக்கிய கோலத்தில் இடப்பாதத்தைப் பார்சுவத்தில் அமைத்துக் காட்சிதருகிறார். இவரது வலப்பாதம் உருப்பெறவில்லை. இடுப்பை வலப்புறம் உயர்த்தியிருப்பதால் மார்பு இடப்புறம் சாய்ந்திருக்க, முகம் சற்றே வலப்புறத் திருப்பமாய் உள்ளது. இடையாடையின் மேலுள்ள அரைப்பட்டிகை பதக்கத்துடன் அமைய, அதனின்று வெளிப்படும் பட்டிகைப் பிரிவுகள் இருபுறமும் மடிப்புகளாய் நெகிழ்கின்றன. கீழே கடிபந்தம் மணியலங்காரங்களுடன் காட்டப்பட்டுள்ளது. வலக்கை இடுப்பில் கடி அஸ்தமாயிருக்க இடக்கையை முழங்கையளவில் மடக்கி உருள் பெருந்தடியின்மீது தாங்கலாய் அமருமாறு நீட்டியுள்ளார். இடத்தோளிலிருந்து மார்பில் குறுக்காய் ஓடும் முப்புரிநூல் வலமுழங்கைப் பகுதியின் மீதேறிப் பின்செல்கிறது. இதன் பிரம்ம முடிச்சு இடத்தோளினருகே மார்புப்பகுதியில் காட்டப்பட்டுள்ளது.[4]

விழிகள் பிதுக்கமாக இருந்தாலும் பார்வையில் அருள் சுரக்கிறது. புருவங்கள் நெற்றிப்பரப்பிலும் பரவி வளைவதால் நெறித்த புருவங்களெனத் தோற்றம்தருகின்றன. மூக்கு சிதைந்துள்ளது. திரண்ட சடைக்கற்றைகள் பக்கத்திற்கொன்றாக இருபுறமும் தொங்க, தலையில் மகுடம். இதன் பக்க முகப்புகள் அணிசெய்யப்பட்டுள்ளன. முன்புறம் கரண்டமகுட அடுக்குகள்

போல இரண்டடுக்குகள் அமைய அதன்மீது மேல்முகப்பு நீளுகிறது. கரண்டமகுடமா, சடைகளால் முடியப்பட்டு முகப்புகள் அணியப்பெற்ற சடைமகுடமா என்று உறுதிசெய்ய முடியாதபடி அமைந்துள்ள இம்மகுடத்தின் மேற்புறமிருந்து கீழிறங்கும் கூந்தல் ஒன்றுபோலமைந்த மூன்று அழகணிகளால் கட்டப்பட்டுள்ளது. இவ்வழகணிகள், நடுவில் இரு வளையங்களையும், முனைகளில் திரித்திரியாக விரல்களென விரியும் அமைப்பையும் பெற்றுள்ளன.

தலையின் பின்புறமிருந்து இடப்புறமாய் நெளியும் பாம்பின் தலை மேல் நோக்கியவாறுள்ளது.[5] இப்பாம்பிற்குச் சற்றுக் கீழே மேற்கரின் இடக்கையையொட்டித் துணி மடிப்பொன்று பறக்குமாறு காட்டப்பட்டுள்ளது. கழுத்தணி கொண்டுள்ள மேற்கரின் கைக் கீழிருக்கும் உருள்பெருந்தடியைச் சுற்றியுள்ள பாம்பின் தலையும் மேல் நோக்கியவாறு உள்ளது. உருள் பெருந்தடியின் கீழ்ப்பகுதியில் பட்டைகள் வெட்டத் திட்டமிட்டுச் செங்கோடுகள் வரையப்பெற்றுள்ளன. ஆனால் செதுக்கப்படவில்லை.

கிழக்கர் வலக்காலைத் தளத்தின் மீதிருத்திக் குடைவரை முகப்பு நோக்கித் திரும்பியுள்ளார். முழங்காலளவில் மடக்கப்பட்டு வலக்காலின் பின்னே நீட்டப்பெற்றிருக்கும் இடக்காலின் பாதம் வடிவம் பெறவில்லை. கிழக்கரின் அரைப்பட்டிகை சிம்மமுகப் பதக்கத்துடன் எழிலுற அமைந்துள்ளது. சிம்மத்தின் வாயிலிருந்து வெளிப்படுமாறு போலப் பட்டிகையின் இருபுறத் தொங்கல்களும் காட்டப்பட்டுள்ளன. இடத்தோளிலிருந்து இறங்கி மார்பில் தவழ்ந்து வலப்புறம் மறையும் துணியும் முதுகிலிறங்கி வலப்புறம் வந்து சேரும் துணியும் இணைந்து முப்புரிநூலாக அமைந்துள்ளன. இவ்விணைவுகள் இடத்தோளருகும், வயிற்றின் வலப்புறமும் நூலிழைகளுடன் காட்டப்பட்டுள்ளன.

கிழக்கரின் வலக்கை உருள்பெருந்தடியைப் பிடித்திருக்க, இடக்கை அதன்மீது இருத்திய நிலையில் தாழவிடப்பட்டுள்ளது.[6] இவர் வைத்திருக்கும் உருள்பெருந்தடியின் கீழ்ப்பகுதி உருவாக்கம் பெறாத நிலையிலிருக்க. மேற்பகுதியின் பரப்பில் பட்டைகளும், மணிகளும் செங்கோட்டு வரைவுகளாகவே விடப்பட்டுள்ளன. முகப்புகளுடன் கூடிய சடைமகுடத்தின் உச்சியிலிருந்து இருபெரும் சடைப்புரிகள் முதுகின் வலப்புறமாய் நெகிழ, கனமான சடைக்கற்றைகள் இரண்டு, தலையின் கீழ்ப்பகுதியிலிருந்து இருபுறமும் நீளுமாறு காட்டப்பட்டுள்ளன. மகுட முகப்புகளுள் வலமுகப்பு சிறந்த வேலைப்பாடுகளுடன் திகழ, இடமுகப்பு வெற்றாய் உள்ளது. புடைத்த விழிகளும் நெற்றி மேலிணையும் புருவங்களின் நெறிப்பும் இருந்தபோதும் இவர் பார்வை அச்சுறுத்துவதாய் இல்லை. இதழ்களின் இளக்கம் மென்சிரிப்பு காட்டப் பார்வையில் கனிவு தெரிகிறது. இவரது இதழ்களின் வலப்புறம் சிதைந்திருப்பதால் வலக்கோரைப் பல்லைக் காணமுடியவில்லை.

கல்வெட்டு

முகப்பு மேற்கு அரைத்தூணின் மேற்சதுர வடமுகத்தில் பல்லவ கிரந்தத்தில் வெட்டப்பட்டுள்ள வடமொழிக் கல்வெட்டு[7] இக்குடைவரையை 'லக்ஷிதாயதனம்' என்று பெயரிடுகிறது. லக்ஷிதன், முதலாம் மகேந்திரரின் விருதுப் பெயர்களுள் ஒன்றாகும். செங்கல், மரம், உலோகம், சுதை போன்ற வழக்கமான கட்டுமானப் பொருட்கள் இல்லாமல், நான்முகன், சிவன், திருமால் ஆகிய மூன்று தெய்வங்கட்கும் விசித்திரசித்தன் என்னும் அரசரால் எடுக்கப்பட்ட லக்ஷிதக் கோயிலென்று இதைச் சுட்டும் இக்கல்வெட்டு, கோயிற் கட்டடக்கலை வரலாற்றில் புதியதோர் பகுதியைத் தொடங்கிவைப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அடிக்குறிப்புகள்

1. இவ்வுயரத்திற்குக் காரணம் இச்சதுரங்களின் கீழமைந்துள்ள ஓமம் என்கிறார் கூ.ரா. சீனிவாசன். Cave-Temples of the Pallavas, Archaeological Survey of India, 1964, p. 49. ஆனால் ஓமம் என்றழைக்கத்தக்க நிலையில் இச்சதுரங்களின் கீழ்த் தளப்பகுதி ஏதும் காட்டப்படவில்லை.

2. இவற்றைக் கோட்டங்கள் இல்லையென்கிறார் கூ.ரா. சீனிவாசன். மேற்படி, பக். 49. இவற்றைத் தொடக்க நிலைக் கோட்டங்களாகக் கொள்வதே சால்புடையது. பின்னாளைய அளவுகோல்கள் கொண்டு, தொடக்கநிலை உறுப்புகளை வரையறுப்பது சரியன்று என்பது கட்டுரையாளர்களின் கருத்து.

3. அரைத்தூண்களின் வடமுகத்தில் பலகை வடிப்புக் காணப்படுவதாகக் கூ.ரா. சீனிவாசன் குறிப்பிடுகிறார். மேற்படி, பக். 49.

4. இதை வஸ்திர முப்புரிநூல் என்கிறார் கூ.ரா. சீனிவாசன். மேற்படி, பக். 51.

5. மகுடத்தின் மேலிருந்து மாலை போல் பாம்பொன்று இறங்குவதாகக் கூ.ரா. சீனிவாசன் கூறியிருப்பது சரியன்று. மேற்படி, பக். 50. பாம்பு காவலர் தலைக்குப் பின்னிருந்து வருகிறது. அதற்கும் மகுடத்திலிருந்து தொங்கும் அழகணிகளுக்கும் தொடர்பில்லை. இவற்றை வேறுபடுத்த இவற்றுக்கிடையே குழிவொன்று காட்டியுள்ளமை கவனிக்கத்தக்கது.

6. கிழக்கரின் இடக்கைக் குழிவில் தடியின் பிடி அடைக்கலம் புகுந்திருப்பதாகக் கூ.ரா. சீனிவாசன் கூறுகிறார். மேற்படி, பக். 50. ஆனால் சிற்பத்தில் பிடியை வலக்கை பிடித்திருக்க, அதன் மீதுதான் இடக்கை தாழ்ந்துள்ளது. இப்பகுதி குறித்த வர்ணனையில் கூ.ரா. சீனிவாசனின் சொற்றொடர்கள் தமக்குத் தாமே முரண்படுகின்றன.

7. E.I. XVII, pp. 14-17.

3. உறையூர் முத்திரை ஓலைகள்

செ. இராசு

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கல்வெட்டியல் துறை கல்வெட்டு, செப்பேடுகளைத் தொகுப்பதுடன் ஓலையில் எழுதப்பட்டுள்ள வரலாற்று ஆவணங்கள் பலவற்றையும் தொகுத்துவருகிறது. அவற்றுள் முத்திரை ஓலை என்பது ஒரு வகை ஆவணமாகும்.

கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சி நிறுவப்பட்ட பிறகு, காகிதம் புழக்கத்துக்கு வந்த பின்னரும் கூட பத்திரப் பதிவுகளுக்கு ஓலைகளைப் பயன்படுத்தியுள்ளனர். இவை முத்திரை ஓலைகள் எனப்படும்.

தமிழ், ஆங்கிலம், உருது, தெலுங்கு மொழிகளில் வட்ட வடிவமான முத்திரை பக்கத்துக்கு ஒன்றாக ஓலையின் இரு ஓரங்களிலும் பொறிக்கப்பட்டிருக்கும். ஒரு புறம் இந்நான்கு மொழிகளில் ஓலையின் விலைமதிப்புப் பொறிக்கப்பட்டிருக்கும். மறுபுறம் பொக்கிஷம் (தமிழ், தெலுங்கு) TREASURY (ஆங்கிலம்), கஜானா (உருது) என்ற தொடர்கள் முத்திரையாகப் பொறிக்கப்பட்டிருக்கும். முத்திரை எழுத்துக்கள் புடைப்பு முறையிலிருக்கும்.

ஓலை விற்கப்பட்ட ஆண்டும், ஓலையின் தொடர் எண்ணும் எந்த ஊரைச் சேர்ந்த யாருக்கு, எதன் பொருட்டு இந்த ஓலை எவ்வளவுக்கு விற்கப்பட்டது என்று தெளிவாக விற்கும் முன்னரே எழுதுவார்கள். ஓலை விற்ற நாளும் அங்குக் குறிக்கப்படும். ஓலை விற்ற ஸ்டாம்பு தரகர் கையொப்பமும் இறுதியில் இருக்கும். பொக்கிஷ அதிகாரி கையொப்பமும் ஓரத்தில் இடப்பட்டிருக்கும். இவை யாவும் பொக்கிஷ முத்திரை உள்ள ஒரு பக்கம் முழுவதும் காணப்படும்.

19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து சுமார் 50 ஆண்டுகள் ஓலைகள் இவ்வாறு பத்திரப் பதிவுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அக்காலத்தில் இவ்வகை முத்திரை ஓலைகள் கிடைப்பது மிகவும் அரிதாக இருந்துள்ளது. அதனால் 'முத்திரை ஓலை கிடைக்காமையால் வெத்தோலையில் எழுதலாச்சுது. முத்திரை ஓலை கிடைக்கும்போது பெற்று எழுதித் தருவேனாகவும்' என்று ஓர் ஓலையில் எழுதப்பட்டுள்ளது.

இப்போது முத்திரைத் தாள் கிரையம் வாங்குவோரால் விலைக்கு வாங்கப்படுகிறது. இம்முத்திரை ஓலைகளின் மூலம் விற்பவரே இவைகளை விலைக்கு வாங்கியுள்ளனர் என்று தெரிகிறது. 100 ரூபாய் வரை ¼ ரூபாய், 101 முதல் 200 வரை ½ ரூபாய், 201 முதல் 300 வரை ¾ ரூபாய், 301க்கு

மேல் ஒரு ரூபாய் மதிப்புள்ள முத்திரை ஓலைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. உறையூரில் கிடைத்த நான்கு முத்திரை ஓலைகள் இங்குத் தரப்பட்டுள்ளன. தஞ்சை வழக்கறிஞர் திரு.சுந்தரராசன் அவர்களால் அளிக்கப்பெற்ற இவை 53 செ.மீ. நீளமும் 3.5 செ.மீ. அகலமும் உடையவை. இவை எழுதப்பட்ட ஆண்டுகள் கீழ்வருமாறு

1. 6.9.1842 சுபகிறுது ஆவணி 23 செவ்வாய்க்கிழமை
2. 7.10.1843 சோபகிறுது புரட்டாசி 23 சனிக்கிழமை
3. 29.8.1847 பிலவங்க ஆவணி 15 ஞாயிற்றுக்கிழமை
4. 9.12.1848 கீலக கார்த்திகை 26 சனிக்கிழமை

உறையூர் கோனாடு தாலுகாவில் உள்ளதெனக் குறிக்கப்பட்டுள்ளது. கோனாடு சங்க காலத்திலிருந்து தொடர்ந்துவரும் வரலாற்றுப் பெயர். உறையூர்க் கூற்றம் முதல் ஒலியூர்க் கூற்றம் வரை கோனாடு என்பர். சில காலம் உறையூர் அதன் தலைநகராக இருந்துள்ளது. உறையூர், ஒரையூர், ஒறையூர் என்றும் எழுதப்பட்டுள்ளது.

இந்த ஓலைகள் நிலம், வீடு, கடை இவைகளின் சுத்தக் கிரையமாகவும் திரவியப் பற்றுச் சீட்டாகவும் எழுதித்தரப்பட்டுள்ளன.

உறையூரின் பகுதிகளாகச் சந்தைப்பேட்டை, புதுப்பேட்டை, கோட்டை முதலியன குறிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள வெள்ளாளத் தெரு, நல்லபிறமன் சேருவைகாரன் தெரு, வழிநடைப் பாதை, வழிநடைச் சந்து ஆகியனவும் குறிக்கப்பட்டுள்ளன. விற்போர் சம்மதி என்றும், சாட்சிகள் அறிவேன் என்றும் கையெழுத்துக்குப் பின்னர் எழுதியுள்ளனர். கையெழுத்துத் தெரியாதோர் பெயர் முன் கீறல் இடப்பெற்றுள்ளது. வருடம், மாதம், தேதி, மேற்படி என்பன யாவும் குறியீட்டில் குறிக்கப்பட்டுள்ளன. ஓலை, பத்திரம் எனக் குறிக்கப்பட்டுள்ளது. கும்பினி ரூபாய் புழக்கத்தில் இருந்துள்ளது.

கடை வைத்திருந்த ஆறுமுகப்பிள்ளை, சாப்பு (shop) ஆறுமுகம்பிள்ளை என அழைக்கப்பட்டுள்ளார். உறையூரில் குருக்கள், ஓதுவார், பிள்ளை, செட்டி, கோனார், ஆசாரி, சேருவைகாரர் ஆகியோர் இருந்துள்ளனர். ஒரே பெயர் வைத்தியலிங்கம், வயித்திலிங்கம் என இரு வகையாக எழுதப்பட்டுள்ளது. சாம்பசிவம்பிள்ளை எனக் குறிக்கப்பட்டவர் கையெழுத்துப் போடும்போது சாதிப் பெயரை நீக்கிச் சாம்பசிவம் என்று கையெழுத்துப்போட்டுள்ளார்.

கோவை மாவட்டத்திலிருந்து பனிரண்டாம் செட்டியார் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் விசையாபுரம், பொன்னுக்காளிபாளையம், அமராபதிபாளையம்,

நாகமநாயக்கன்பட்டி, அக்கரைப்பாளையம், உத்தமர்பாளையம் ஆகிய ஊர்களிலிருந்து உறையூரில் குடியேறியுள்ளனர். அவர்கள் தங்களுக்கென்று வெள்ளாளத் தெருவில் மடம் ஒன்று அமைத்துக்கொண்டிருந்தனர்.

விற்கப்படும் நிலத்தின் நீள, அகலங்கள் காலடிகளால் கணக்கிடப்பட்டது. 1842ஆம் ஆண்டு காலடியில் சந்தேகம் வரவே 'சாதியடிக் கோலால்' அளக்கப்பட்டது. இரண்டிற்கும் சிறு அளவில் வேறுபாடு ஏற்பட்டதையும் காண்கிறோம்.

ஓலையில் எழுதும் முறை நெட்டெழுத்து என்று அழைக்கப்பட்டுள்ளது. குப்பமுத்து உபாத்தியாயன், சங்கரநமசிவாயம்பிள்ளை ஆகியோர் இந்த ஓலைகளை எழுதியுள்ளனர்.

உறையூர் முத்திரை ஓலை - 1

1842 வருஷத்திய நெம்பர் 298. கோனாட்டுத் தாலுகா சந்தப்பேட்டையிலிருக்கும் வயித்திலிங்க ஓதுவார் பெண்சாதி சிவகாமி மேற்படியாள் குமாரன் முத்துக்குமாரு ஓதுவார் இவர்களுக்கு காலிமனை ரூ.200க்கு சுத்தக்கிரைய சாசனத்துக்கு அறை ரூபாய் விலையுள்ள ஓலை விற்கலாச்சுது. 1842 வருஷம் செப்டம்பர் மாதம் 5 தேதி வீராசாமிமுதலி ஸ்டாம்பு தாறொகர்.

1842 வருஷம் செப்டம்பர் மாதம் 6 தேதிக்கு தமிள் சுபகிறுது வருஷம் ஆவணி மாதம் 23 தேதி கோயம்புத்தூர் சில்லா விசையாபுரத்திலிருக்குஞ் சிதம்பரஞ்செட்டியார் சின்னத்தம்பிசெட்டியார் பொன்னுக்காளி பாளைய சுப்பிசெட்டியார் அமராபதிபாளையம் குட்டிசெட்டியார் நாகம நாயக்கன்பட்டி முத்துக்கருப்பசெட்டியார் அக்கரைப்பாளையம் ஆண்டியப்பசெட்டியார் யிவர்களுக்கு மிவர்கள் உறைவின் முறையோர் அனவோர்களுக்கும் திருச்சினாப்பள்ளி சுபா கோனாட்டுத் தாலுகா ஒறையூர் சந்தைப்பேட்டை வெள்ளாளத் தெருவிலிருக்கும் வயித்திலிங்க ஓதுவார் பெண்சாதி சிவகாமி அம்மாளும் மேற்படியாள் குமாரன் முத்துக்குமாரு ஓதுவார் நாங்களிருபேரும் யெழுதிக்குடுத்த மனை சுத்தக்கிறைய சாசனம் சுத்தக்கிறைய சாசனமாவது மேற்படி தெருவில் மேல்ச்சிரகில் கந்தப்பக் குருக்கள் வீட்டுக்கு கிளக்கு தென்மடலான மேற்படி வீதிக்கு மேற்கு தாண்டவராயபிள்ளை மஞ்சியாபிள்ளை வீட்டுகளுக்கடுத்த வழிநடைச் சந்துக்கு தெற்கு சாப்பூ ஆறுமுகம்பிள்ளை கடைகளுக்கு வடக்கு யென்னாங்கெல்லைக்குள் யெங்கள் சொந்தமாகிய கீள்மேலடி 51 தென்மடலடி 44 யுள்ள கூறைக்கட்டுக்கோப்பு மனையில் மேல்புறம் நாங்கள் குடியிருக்கிற கீள்மேலடி 17 தென்மடலடி 44

யுள்ள மனையுமதின் கூறைக்கட்டுக்கோப்பு குடியிருப்பு வீடும் தவிர மைய்த்த கீள்மேலடி 34 தென்மடலடி 44 யுள்ள மனையை யெங்களுடைய அவசர நிமித்தியமாக ரூ.200க்கு தங்கள் பேறகளுக்கு நாங்கள் யிந்த சுத்தக்கிறைய சாசனம் பண்ணிகுடுத்து மேற்படி சாசனத்துகை யெற்நூறும் தங்களிடத்தில் நாங்கள் றொக்கம் பத்திக்கொண்டபடியினாலே மேற்படி மனையில் எவ்விதமான கட்டுக்கோப்பு கட்டிக்கொண்டு மேற்படி மனையிலுள்ள நிதி நீட்சேப சல தரு பாசாணம் சீனியகாமிய சித்தி சாத்தியமென்ன அஷ்ட்டபோக தேச சுவாமியங்களுடனே ஆசந்திரார்க்க ஸ்தாயியாய் புத்திர பவுத்திர பாரம்பரையாய் தனாதி வினிமெய விக்கிறையங்களுக்கும் யோக்கியமாய் ஆண்டனுபவித்துக்கொண்டு சுகத்திலேயிருப்பீர்களாகவும் யிந்தப்படிக்கு யெங்கள் மனோறாசியில் யெழுதிக் குடுத்த மனை சுத்தக்கிறைய சாசனம் யாதாஸ்து மேல் குறித்த நான்கெல்கைக்குள் கண்டிருக்கிற ஆள்க் காலடிகளின் பேரில் சந்தேகப்பட்டு சாதியடிக்கோலாலளந்து கண்டது கீள்மேல் சாதியடி 41¼ தென்மடல் சாதியடி 36¼ நாங்கள் குடியிருக்கிற கீள்மேல் சாதியடி 13¾ந் தென்மடல் சாதியடி 36 தவிர தங்களுக்கு மேற்படி துகைக்கு கிறையமானது கீள்மேல் சாதியடி 26½க்கு தென்மடல் சாதியடி 36

யிந்த ———— கீறல் சிவகாமியம்மாள் சம்மதி முத்துக்குமார ஓதுவார் சம்மதி

சாட்சியள் கந்தப்ப குருக்கள் குமாரன் சீகாளி குருக்கள் அறிவேன் யிந்த ———— கீறல் மஞ்சியாபிள்ளை அரிவேன் வீரப்பிள்ளை அறிவேன் சின்னய்யன் செட்டி குமாரன் முத்துசுவாமிசெட்டி அறிவேன் சபாபதிசெட்டி அறிவேன் மருதப்பசெட்டி அறிவேன் தாண்டவராயபிள்ளை அறிவேன் இந்தக் ———— கீறல் றாக்க கோணான் அறிவேன்.

யிந்தச் சுத்தக்கிறைய சாசனம் யெழுதினது சங்கரநமசிவாயம்பிள்ளை.

உறையூர் முத்திரை ஓலை - 2

1843 வருஷத்திய நம்பர் 133, கோனாட்டு தாலுகா ஒறையூரிலிருக்கும் முத்தியபிள்ளை குமாரன் ஆறுமுகம்பிள்ளைக்கு கெட்டிமச்சு ஓட்டுவில்லைக் கடைமனை ரூ.336க்கு சுத்தக்கிறைய சாசனத்துக்கு ஒரு ரூபாய் விலையுள்ள ஓலை விற்கலாச்சுது. 1843 வருஷம் அக்டோபர் மாதம் 4 தேதி வீராசாமி முதலி ஸ்டாம்பு தாறொகர்.

1843 வருஷம் அக்டோபர் மாதம் 7 தேதி சோபகிறது வருஷம் பிறட்டாசி மாதம் 23 தேதி ஒறையூர் சந்தபேட்டையிலிருக்கும் மஞ்சியாபிள்ளை குமாரன்

திருவேங்கிடம் பிள்ளைக்குமவர் உள்ளுத்தாருக்கும் மேற்படி ஒறையூர் நல்லபிறமன் சேருவைகாரன் தெருவிலிருக்கும் முத்தியபிள்ளை குமாரன் ஆருமுகம்பிள்ளையாகிய அருணாசலம்பிள்ளை யென்னுள்ளுத்தா ரணுமதியின் பேரில் யேகமனதர்ய் யெளுதிக்குடுத்த மனைக்கடைகள் சுத்தக்கிறைய சாசனம் சுத்தகிரைய சாசனமானது மேற்படி ஒறையூர் சந்தபேட்டையைச் சேற்ந்த புதுப்பேட்டைக்கி மேல்புரம் கீள்மேல் வழிநடைக்கி வடக்கு பனிரண்டாஞ்செட்டிகளும் வயித்திலிங்க ஓதுவார் பெண்சாதி சிவகாமியம்மாளும் பொதுப்பட்டுட்டியிருந்து வருகிற மேற்படி செட்டிகள் மடத்துக்கு தெற்கு சீமைக்காரத்தெரு வெள்ளார் தென்வடல் வீதிக்கும் மேற்கு காலி நிலத்துக்கு கிளக்கு யினான்கு யெல்கைக்குள்பட்ட யென் சொந்தமாகிய மனையுள்படக் கட்டுக்கோப்பு தெற்குப் பாற்த்த 5 கடைகளில் நாளது தேதியில் பிச்சன்செட்டி மகன் வீரபத்திரசெட்டிக்கு நான் பண்ணிக் குடுத்திருக்குர சுத்தக்கிறைய சாசனத்தில் கண்ட யிரண்டு கடைகளுக்கு கிளக்கு அருணாசலம்பிள்ளை குமாரன் சிதம்பரம்பிள்ளை பேறால் பண்ணிக்குடுத்திருக்குற கிறைய சாசனத்தில் கண்ட ஒரு கடைக்கு மேற்கு மேலெழுதிய கீள்மேல் வழிநடை பாதைக்கு வடக்கு மேற்படி செட்டிகள் ஓதுவார் சிவகாமி குடியிருப்புக்கு தெற்கு யினான்கு யெல்கைக்குள் கீள்மேல் சாதியடி 22½ தென்வடலடி 31½யுள்ள மனையு மதின் பேரில் இருக்குற ஓட்டுவில்லை உள்க்கொட்டடி யுள்பட மின்பத்திலா கட தட்டிக் கடைகளிரண்டையும் ரூபாய் 336க்கு யிந்த சாசனம் நான் பண்ணிக்குடுத்து மேற்படி ரூபாய் முன்னூத்தி முப்பத்தாறும் தம்மிடத்தில் நான் ரொக்கம் பத்திக்கொண்டபடியினாலே மேற்படி மனைகளுட்படக் கடைகளிரண்டுமதிலுள்ள நிதி நிட்சேப சல தொரு பாஷாண சீனியங்காமிய சித்தி சாஷ்த்திரிய சாஷ்திரியென்னப்பட்ட அஷ்ட்ட போகங்களும் தாம் புத்திர பவுத்திர பாரம்பரயாயி தானாதி வினிமய விக்கிரயங்களுக்கு யோக்கியமாய் ஆண்டனுபவித்துக்கொண்டு சுகத்திலிருப்பாராகவும் யிந்தப்படிக்கி யேகமனதாய் யெழுதிக்குடுத்த மனை கடைகள் சுத்தக்கிறைய சாசனம்.

ஆறுமுகம்பிள்ளை ஆகிய அருணாசலம்பிள்ளை சம்மதி பெரியசாமி சமதி

சாட்சியள் தாண்டவராயபிள்ளை அரிவேன் கந்தப்ப குருக்கள் அரிவேன் மேற்படி அச்சர மஞ்சியாபிள்ளை அறிவேன் கணக்கு குருநாதபிள்ளை குமாரன் மதுரைனாயகம்பிள்ளை அரிவேன் கோட்டையிலிருக்கும் றாமசுவாமிபிள்ளை அரிவேன் வீரபத்திரன்செட்டி அரிவேன் சின்னமஞ்சியாபிள்ளை அரிவேன் யிவர்களறிய இந்த பத்திரம் யெளுதினவர் வீரப்பிள்ளை.

உறையூர் முத்திரை ஓலை - 3

1847 வருஷத்திய நம்பர் 1329. கோநாட்டுத் தாலுகா ஒரையூற் சந்தைப்பேட்டையிலிருக்கும் வைத்தியலிங்க ஓதுவார் பெண்சாதி சிவகாமி அம்மாள் மேற்படியார் குமாரன் சாம்பசிவம்பிள்ளை இவர்களுக்கு காலிமனை நிலம் ரூபாய் 50க்கு சுத்தக்கிரைய சாசனத்துக்கு மேற்படி சாம்பசிவம்பிள்ளை வசம் கால் ரூபாய் விலையுள்ள ஓலை விற்கலாச்சுது. 1847 வருஷம் ஆகஸ்டு மாதம் 28 தேதி வீராசாமி முதலி ஸ்டாம்பு தாறொகர்.

1847 வருஷம் ஆகஸ்டு மாதம் 29 தேதிக்குச் சரியான தமிழ் பிலவங்க வருஷம் ஆவணி மாதம் 15 தேதி கோனாட்டுத் தாலுகா ஒறையூர் சந்தைப்பேட்டை வெள்ளான் தெருவிலிருக்கும் நல்லாப்பிள்ளை குமாரன் தாண்டவராயபிள்ளைக்கி மேற்படி தெருவிலிருக்கும் வயித்தியலிங்க ஓதுவார் பெண்சாதி சிவகாமியம்மாள் நானும் யென் குமாரனாகிய சாம்பசிவம்பிள்ளை நாங்களிருபேரும் காலிமனை நிலஞ் சுத்தக்கிறைய சாசனஞ் செயிது கொடுத்தபடி யென்னமென்றால் தங்களுக்கு மஞ்சியாபிள்ளை வீட்டிற்கும் கந்தப்ப குருக்கள் வீட்டிற்கும் பொது வழிநடைச் சந்துக்கும் தெற்கு வீரபத்திரசெட்டி திருவேங்கடம்பிள்ளை அருணாசலம்பிள்ளை குமாரன் சிதம்பரம்பிள்ளை யிவர்கள் ஓட்டுவில்லைக் கடைகளுக்கு வடக்கு மேற்படி கந்தப்ப குருக்கள் வீட்டிற்கு கிழக்கு தென்மலோடிய வழிநடைப் பாதைக்கு மேற்கு இந்நான்கெல்லைக்குள்பட்ட கீழ்மேல் சாதியடி 42 தென்மடல் சாதியடி 39 யுள்ள என் சொந்தமான நிலத்தை கோயமுத்தூர் ஜில்லா உத்தமர்பாளையத்தைச் சேர்ந்த பணிரெண்டாஞ்செட்டி வகையறாப் பேர்களுக்கு கீழ்புரம் ரெண்டு பங்குக்குள்ள கீழ்மேல் சாதியடி 28 தென்மடல் சாதியடி 39 அடியுள்ளதை நாங்கள் சுத்தக்கிறையஞ் செயிது கொடுத்திருக்கிறது நீங்கலாக மைத்த மேல்புரம் கீழ்மேல் சாதியடி 14 தென்மடல் சாதியடி 39 உள்ள யென் சொந்தமான காலிமனை நிலத்தை தங்களுக்கு சுத்தக்கிறையஞ் செய்து கொடுத்தது ரூபாய் 50 இந்த ரூபாய் அன்பதும் நாங்கள் றொக்கம் பத்திக்கொண்டபடியினாலே இதுவே சுத்தக்கிறைய சாசனமாகவும் திரவியப் பத்துச்சீட்டாகவும் சல துறு பாஷாண நிதி நிச்செயங்களுக்குத் தாங்களே பாத்தியமாகவும் தானாதி வினிமய விக்கிறையங்களுக்கு யோக்கியமாகவும் புத்திர பவுத்திர பாரம்பரியமாய் தாங்களே ஆண்டனுபவித்துக்கொண்டு சுகத்திலே யிருப்பார்களாகவும் இந்த __________ கீறல் சிவகாமியம்மாள் சம்மதி சாம்பசிவம்பிள்ளை சம்மதி இதற்கு சாட்சிகள் அற்த்தனாதசெட்டி அரிவேன் அய்யாச்சாமிசெட்டி அறிவேன் சின்னமஞ்சியாபிள்ளை அரிவேன் சின்னியபிள்ளை குமாரன் சபாபதிபிள்ளை அரிவேன் ஆறுமுகம்பிள்ளை குமாரன் வெங்கிடாசலம்பிள்ளை அறிவேன் அய்யம்பெருமாள்செட்டி அறிவேன் இந்த ____________ கீரல் திருவேங்கிடம்பிள்ளை அறிவேன் வயித்தி

லிங்கம்செட்டி அறிவேன் நெட்டெழுத்து குப்பமுத்து உபாத்தியாயன் சங்கரநமசிவாயம்பிள்ளை அறிவேன்.

உறையூர் முத்திரை ஓலை – 4

1848 வருஷத்திய நம்பர் 668 கோனாட்டு தாலுகா ஒரையூர் சந்தப்பேட்டையிலிருக்கும் வயித்திலிங்க ஓதுவார் பெண்சாதி சிவகாமியம்மாள் மேற்படியாள் குமாரன் சாம்பசிவம்பிள்ளை இவர்களுக்கு கூரைகட்டு வீடு மனை ரூபாய் 200க்கு சுத்தக்கிறைய சாசனத்துக்கு மேற்படி சாம்பசிவம்பிள்ளை வசம் அரை ரூபாய் விலையுள்ள ஓலை விற்கலாச்சுது. 1848 வருஷம் டிசம்பர் மாதம் 9 தேதி வீராசாமி முதலி ஸ்டாம்பு தாறொகர்.

1848 வருஷம் டிசம்பர் மாதம் 9 தேதிக்கி தமிழ் கீலக வருஷம் கார்த்திகை மாதம் 26 தேதி கோணாடு தாலுகா உறையூர் சந்தப்பேட்டை வெள்ளாளத் தெருவிலிருக்கும் நல்லாபிள்ளை குமாறன் தாண்டவராயபிள்ளைக்கி மேற்படி தெருவிலிருக்கிற வயித்திலிங்க ஓதுவார் பெண்சாதி சிவகாமியம்மாள் நானும் யென் குமாரனாகிய சாம்பசிவம்பிள்ளை நாங்களிருபேரும் கூரைக்கட்டுக்கோப்பு மனை நிலஞ் சுத்தக்கிறைய சாசனம் செயிதுக் கொடுத்தபடி யென்னவென்றால் மேற்படி தெருவில் மேல் சிறகில் கந்தப்பக் குருக்கள் வீட்டிற்கு கிழக்கு தென்மடலான மேற்படி வீதிக்கு மேற்கு தாண்டவராயபிள்ளை வீட்டிற்கு மஞ்சியாபிள்ளை வீட்டிற்கு அடுத்த வழி நடைச் சந்துக்குந் தெற்கு வீரபத்திரசெட்டி திருவேங்கடம்பிள்ளை அருணாசலம்பிள்ளை குமாரன் சிதம்பரம்பிள்ளை யிவர்கள் கடைக்கும் வடக்கு இந்நான்கெல்கைக்குள்பட்ட கீழ்மேல் சாதியடி 41¼ தென்வடல் சாதியடி 36¼ இதைச் சேர்ந்த தென்புறம் கீழ்புரத்தில் சூனி கீழ்மேல் சாதியடி 6 தென்மடல் சாதியடி 13 அடியுள்ள கூறைக்கட்டுக்கோப்பு மனையை சம்மதியில் தங்களுக்கு சுத்தக்கிறையஞ் செயிதுக் கொடுத்துக் கும்பினி ரூ.200 இந்த ரூபாய் இறுநூறும் நாங்கள் றொக்கம் பத்திக்கொண்டபடியினாலே இதுவே சுத்தக்கிறைய சாசனமாகவும் திறவியப் பத்துச்சீட்டாகவும் சல துறு பாஷாண நிதி நிச்செயங்களுக்கு தாங்களே பாத்தியமாகவும் தானாதி வினிய விற்கிறயங்களுக்கு யோக்கியமாகவும் புத்திர பவுத்திர பாரம்பறையாய் தாங்களே யாண்டனுபவித்துக் கொண்டு சுகத்திலிருப்பீராகவும் இந்தப்படிக்கித் தாண்டவராயபிள்ளைக்கு சிவகாமியம்மாளும் யென் குமாறனாகிய சாம்பசிவம்பிள்ளை நாங்களிருபேரும் யெழுதிக்கொடுத்த கூறைக்கட்டுகோப்பு மனை நில சுத்தக்கிறைய சாசனம் யாதாஸ்து 1842 வருஷம் சம்படம்பர் மாதம் 6 தேதி கோயம்புத்தூர் ஜில்லா விசையபுரத்திலிருக்கும் சிதம்பரஞ்செட்டி

வகையறா பேர்களுக்கு ரூபாய் 200 நில சுத்தக்கிறையஞ் செயிது கொடுத்து அவாள் வேண்டாமென்று கொடுத்த மூலாதரவையுந் தங்களுக்குக் கொடுத்துவிட்டேன் இந்தக் ________ கீறல் சிவகாமியம்மாள் சம்மதி சாம்பசிவம் சம்மதி

இதற்கு சாட்சிகள் கந்தப்ப குருக்கள் அறிவேன் வீரப்பத்திரஞ்செட்டி அரிவேன் சின்னமஞ்சியாபிள்ளை அரிவேன் இந்தக் ________ கீறல் திருவேங்கடம்பிள்ளை அரிவேன் றாமலிங்க ஆசாரி அரிவேன்

கூடப்பள்ளியிலிருக்கும் முத்தியபிள்ளை குமாறன் வீறப்பபிள்ளை அறிவேன் நாகவணாக்கண்பட்டி பழனிசெட்டி மகன் அற்த்தனாதசெட்டி அறிவேன்

நெட்டெழுத்து குப்பமுத்து உபாத்தியாயன்.

உறையூர்க் குதிரைகள்

தித்தனின் நல்லாட்சியில் திளைத்திருந்த உறையூரைச் சுற்றி வேலியிட்டாற் போல் மதில் சூழ்ந்திருந்தது. மதிலுக்கு வெளியே கற்கள் நிறைந்த காவற் புறங்காடு இருந்தது. தித்தனின் குதிரைப்படை பாய்ந்து செல்லும் நேரோட்டம் (ஆதிகதி) உடையது; படைக்குதிரைகளின் கால்களில் பரல்கள் இணைத்த சதங்கைகள் அணிவிக்கப் பட்டிருந்ததால், ஓட்டத்தின்போது இன்னிசைநாதம் எங்கும் எழுந்தது. அகம் (122) தரும் இந்தச் செய்தியால் சங்ககாலத்திலேயே விலங்குகளும் அணிமணிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தமையை அறியமுடிகிறது. இராஜராஜீசுவரத்து சுந்தரர் ஓவியக்காட்சியில் காணப்படும் சேரமானின் குதிரைக்குச் செய்யப்பட்டிருக்கும் அலங்காரங்கள் இங்குக் கருதத்தக்கன. பல்லவர் காலச் சிற்பங்களில் இடம்பெற்றுள்ள பல விலங்குகள் இது போல அலங்கரிப்புகளைக் கொண்டிருப்பதும் ஒப்புநோக்கத்தக்கது. இத்தகு அழகூட்டல்கள் பாசத்தின் விளைவா அல்லது பெருந்தன வெளிப்பாடா?

4. பொலன்னறுவையின் வானவன் மாதேவி ஈசுவரம்

தேவமணி ரஃபேல்

ஓர் அதிகாலை வேளையில், நாம், கொழும்பிலிருந்து பொலன்னறுவைக்குக் கோவில் உலா புறப்பட்டபோது, "நீங்கள் மனம் நொந்து திரும்பிவரப்போகிறீர்கள்", என்று ஓர் அன்பர் எச்சரிக்கை விடுத்தார். "நீங்கள் பார்த்த கோவில்களைப் போன்று அல்லாமல் வெறும் இடிபாடுகளைச் சந்திக்கப்போகிறீர்கள்" என்றார் அவர். கவலையாக இருந்தது. ஆனாலும், நாம் தமிழ்நாட்டில் காணாத இடிபாடுகளா என்று நினைத்துக்கொண்டாலும் கூட, வானம் பொத்துக்கொண்டதோ என்று அய்யுறுவண்ணம் அந்த அதிகாலை வேளையிலும் கொட்டிய மழை எம்மை அச்சுறுத்தவே செய்தது.

நாம் நண்பகல் வேளையில் பொலன்னறுவையில் இறங்கியபோது, நல்ல வெய்யில் எம்மை வரவேற்றது. முன்தினம் பெய்த மழையில், தூசும் தும்பும் நீங்கிய நிலையில், ஒளிப்படம் எடுப்பதற்குத் தகுதியான கதிரவனின் ஒளிவெள்ளத்தில் அந்தப் பகுதியே பளபளத்தது. அந்த ஊரில், குரங்குகளைப் பாதுகாக்கும் ஓர் இயக்கத்தில் பணிபுரியும் அன்பர் ஒருவர் எமக்கு அறிமுகம் ஆனார். இவர் அகழ்வாய்வில் ஆர்வமுடையவராய், அதையே பல்கலைக்கழகத்தில் ஒரு பாடமாகவும் கற்றவராம். "இங்கே 34 இந்துக் கோவில்கள் உள்ளன! நீங்கள் எதைப் பார்க்கவேண்டும்?" கேட்டார் அவர். "எல்லாவற்றையும்தான். ஆனால் குறிப்பாகச் சிவன் கோவில் எண் இரண்டு!" என்றோம். "ஏதோ ஒரு மாதேவி ஈசுவரம் என்பார்களே அந்தக் கோவிலா?" கேட்டார் அவர். "அதேதான். அதன் சரியான பெயர் வானவன் மாதேவி ஈசுவரம்" என்றோம். "வாருங்கள் போகலாம்" என்ற அவரைப் படபடக்கும் மனதுடன் தொடர்ந்துசென்றோம்.

அழகிய உயர்ந்த மரங்கள் சூழ்ந்த ஒரு புல்வெளியில் திடீரென முளைத்தது போன்று கருங்கல் அடுக்கில் நின்றது கோவில். "இதுதான் நீங்கள் தேடிவந்த சிவன் கோவில் எண் இரண்டு" என்றார் நண்பர். ஒரு கணம் எமக்குக் கனவு போல் இருந்தது. அருகில் சென்று கோவிலைத் தொட்டுத் தடவிப்பார்த்தோம். தமிழ்நாட்டில் உள்ள பழம் பெருமை மிக்க சில கற்றளிகள் போன்று அல்லாது இந்தக் கருங்கல் தளி, ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் இவ்வளவு நல்ல நிலையில் நிற்பதைக் கண்டபோது எம் கண்கள் பனித்தன. கோவிலைச் சுற்றிச்சுற்றி வந்தோம். "உள்ளே போகலாம். வழிபாடு செய்துவிட்டு இப்போதுதான் பூசாரி போனார்" என்றார் எமது வழிகாட்டி. நாம் கோவிலின் இப்போதைய வாயிலில் ஒரு கணம் தயங்கி நின்றோம்.

வானவன் மாதேவி ஈசுவரம்

கம்போடியா வரை சென்று தன் ஆளுமையையும் வீரத்தையும் நிலைநாட்டி, உலக அளவில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்திய பேரரசர் இராசேந்திர சோழ தேவரின் கால்பட்ட கோவில் இது. அவர் உருவாக்கிய கோவில்கள் பலவற்றை நாம் வணங்கியிருக்கிறோம். "இந்த இடத்தில்தான் மன்னர் நின்றாராம்" என்று கூறப்பட்ட இடங்களையும் பார்த்திருக்கிறோம். ஆனால் பொலன்னறுவையின் இந்தக் கோவில் அவருடைய எல்லாக் கோவில்களிலும் மாறுபட்டது. இது அவருடைய வீரம் விளைந்த மண். இக்கோவில் அவருடைய வெற்றியின் ஒரு சின்னம்.

எத்தனை முறை இந்தக் கோவிலுக்கு வந்திருந்து, அந்தத் தமிழ் மன்னர் வணங்கி நின்றாரோ என்று எண்ணினோம். எம் உடலின் மயிர்க்கால்கள் அனைத்தும் சிலிர்த்தன. கீழே குனிந்து கோவிலின் தரையை, இராசேந்திர சோழதேவரின் கால்பட்ட தரையைக் கைகளால் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டோம். பிறகு நாம் கோவிலுக்குள் நுழைவதற்கு முற்பட்டோம்.

சோழரின் படையெடுப்புகள்

ஈழத்தின் மீது முதற் பராந்தகர் காலம் முதலே (கி.பி. 907 - 955) சோழப் படையெடுப்புகள் நடந்துள்ளதையும், இதற்குக் காரணம் முதற் பராந்தகர் காலத்தில் பாண்டியர், சேரர், சிங்களர் ஆகிய மூவரும் ஓர் அணியில் சோழருக்கு எதிராக திரண்டிருந்ததுவே என்பதையும் நாம் அறிவோம். இந்தக் கூட்டணியை முறியடிக்கவேண்டிய கட்டாயம் எல்லாச் சோழ அரசர்களுக்குமே இருந்தது. கி.பி. 985க்கும் 988க்கும் இடையில் முதல் இராசராசர் இலங்கையின் மீது படையெடுத்துச்சென்றார். ஐந்தாம் மகிந்தன் என்பார் அப்போது அங்கு ஆட்சியிலிருந்தார். பேரரசர் இராசராசரின் படைகள் ஈழத்தை அடைந்ததும் அந்த அரசர் தன் தலைநகரை விட்டு வெளியேறி மலைநாட்டில் ஒளிந்துகொண்டார்.[1] அதுவரை தலைநகராக இருந்த அநுராதபுரி அழிக்கப்பட்டுப் பொலன்னறுவை புதிய தலைநகராக மாற்றப்பட்டது. பொலன்னறுவைக்குப் பல பெயர்கள் இருந்தன. புலஸ்திபுரம், விஜயராஜபுரம் என்றெல்லாம் சிங்கள அரசர்கள் பெயரிட்டு மகிழ்ந்திருந்தார்கள். இது அவர்களுக்கு ஓர் இராணுவ மையமாகவும் "கணவருநுவர" என்ற பெயரில் இயங்கிவந்திருக்கிறது.[2]

கோதாவரிக்கரை நாடுகளிலிருந்து ஈழம் வரை முதல் இராசராசரின் பேரரசு விரிவடைந்தபோது பொலன்னறுவை ஜனநாதமங்கலம் என்றும், ஜனநாதபுரம் என்றும் பெயரிடப்பட்டு நிகரிலி சோழமண்டலம் என்ற சோழப் பேரரசின் ஒரு பகுதியில் இணைக்கப்பட்டது. முதல் இராசராசரின் சேனை மிகவும் பெரியதாக, பத்து லட்சத்திற்கும் அதிகமான வீரர்களைக் கொண்டதாக இருந்தது என்று கணக்கிடப்பட்டுள்ளது.[3] தாம் அடிப்படுத்திய நாடுகளில் எல்லாம் முக்கிய மையங்களில் அமைதி காக்கும் படைகளை நிலைநிறுத்தும் இராசராசரின் வழக்கத்திற்கியைய, ஈழத்திலும், 90,000 எண்ணிக்கையில் வேளைக்காரர் படைப்பிரிவு ஒன்று நிறுத்தப்பட்டது.[4]

தற்கால கமாண்டோ வீரர்களுக்கு இணையான இந்த வேளைக்காரப் படையினரைப் பற்றிக் குறிப்பிடும் மகாவம்சம் என்ற ஈழத்தின் வரலாற்று நூல், இவர்கள் யானைகள் போன்று வலிமையானவர்கள் என்று சொல்கிறது.[5]

ஈழம் அடிப்படுத்தப்பட்டுப் பொலன்னறுவை தலைநகராக மாற்றப்பட்டபோது இங்கு ஆளுநராகப் பணிபுரிந்தவர் முதல் இராசேந்திரர். அவ்வேளை அவர் பொலன்னறுவையில் எழுப்பிய சிவன் கோவிலுக்குத் தம் அன்னையைப் போற்றும் வண்ணம், வானவன் மாதேவி ஈசுவரம் என்று பெயரிட்டுப் பெருமைகொண்டார்.

கல்வெட்டுகள்

ஈழத்தின் வடமத்திய பகுதியில் உள்ள அபரணை என்ற ஊரிலிருந்து பொலன்னறுவை செல்லும் நெடுஞ்சாலையில், பொலன்னறுவை நகரை நெருங்குவதற்குச் சற்று முன்னதாகவே, மரங்கள் அடர்ந்த ஒரு பகுதியில், பொலன்னறுவையின் பழம் பெருமை மிக்க சின்னங்கள், இலங்கை அரசால் மிகவும் சிரத்தையுடன் பாதுகாக்கப்பட்டு இருக்கின்றன. இந்தப் பகுதியின் கிழக்கில் பராக்கிரமவாகு மன்னர் வாழ்ந்த அரண்மனையின் எஞ்சிய பகுதிகளும், வடக்கில் கல் விகாரை எனப்படும் பௌத்த விகாரையும் உள்ளன. இவை இரண்டுக்கும் இடைப்பட்ட பகுதியில் பல சிவ, வைணவக் கோவில்கள் இருந்ததற்கு அடையாளங்கள் காணப்படுகின்றன. இவற்றுள், நாம் 'சிவன் கோவில் எண் இரண்டு' என்ற கோவிலை மாத்திரமே பார்வைக்கு எடுத்துக்கொண்டுள்ளோம்.

இக்கோவில் முதல் இராசேந்திரரால் எழுப்பப்பட்டதற்குச் சான்றுகள் கோவிலின் சுவர்களிலேயே உள்ளன. கோவிலின் தெற்குச் சுவரிலும், பட்டிகையிலும் மூன்று கல்வெட்டுகளும், இரண்டு கல்வெட்டுத் துணுக்குகளும் காணப்படுகின்றன. இவற்றுள் முதல் கல்வெட்டில் சில பகுதிகளே உள்ளன. "திருமன்னிவளர" என்ற முதல் இராசேந்திரரின் மெய்க்கீர்த்தியோடு இது தொடங்குவதால், இது அவருடைய காலத்தில் எழுதப்பட்ட கல்வெட்டு என்பது உறுதியாகிறது.

1 திருமன்னி
2 வளர இருநில
3 மடந்தையும்
4 போர்ச் செய
5 ப் பாவையுஞ்
6 சீர்த்தனிச் செல்வி
7 யுந் தன் பெருந்தே
8 வியராகி இன்புற
9 நெடுதிய . . . . .
10 யுள் . . . . . .
11 ன வேலிப் படர் வ

இதுவே இப்போது எஞ்சியுள்ள பகுதி.

மற்ற கல்வெட்டுகளில், இரண்டு, முதல் இராசேந்திரரின் பேரன் அதி ராசேந்திரரின் காலத்தில் எழுதப்பட்டவை. மூன்று ஆண்டுகள் மாத்திரமே ஆட்சியிலிருந்த இவருடைய இறுதி ஆண்டின் போது இந்த இரண்டு கல்வெட்டுகளும் எழுதப்பட்டுள்ளன. 'திங்களேர் மலர்ந்து' எனத் தொடங்கும் ஒரு கல்வெட்டு தெற்குப்புறப் பட்டிகையில் காணப்படுகிறது. இது இந்த மன்னரின் காலத்தில் - கோவில் எழுப்பப்பட்டு 80 ஆண்டுகளுக்குப் பின்னர் - கோவிலுக்கு ஒரு தரா நிலை விளக்கு அளிக்கப்பட்டதைக் கூறுகின்றது. இதே மன்னரின் அடுத்த கல்வெட்டு மிகவும் பெரியது. கோவிலின் அர்த்த மண்டபத்தின் புறச்சுவர் முழுவதும் எழுதப்பட்டுள்ள இந்தக் கல்வெட்டு, சோழமண்டலத்து விற்பேட்டு நாட்டின், மங்கலப்பாடியைச் சேர்ந்த சீராளன் என்ற சோழப் பல்லவரையன் ஒரு நந்தாவிளக்கு எரிக்க ஐந்து காசுகள் கொடுத்த தகவலைத் தருகிறது. 23 வரிகள் கொண்ட இந்தக் கல்வெட்டு, கோவிலை "ராஜராஜேந்திர சோழ வளநாட்டு, ஜனநாதபுரத்து உடையார் வானவன் மாதேவி ஈஸ்வரமுடையார்" என்று அழைத்து மகிழ்கிறது. இந்தக் கொடையை நிருவகிக்கக் கோவிலின் தேவகன்மிகளை நியமிக்கும் இந்தக் கல்வெட்டு, அப்போது கோவிலில் பணிபுரிந்தவர்களைப் பட்டியலிடுகிறது. இதன்படி, பஞ்சாசாரிய தேவர்கன்மி, கோமடத்து பிராமணன் கிரமவித்தன், சிவபிராமணன் தில்லைநாயக பட்டன், உவச்சன் அரையன், கோயிலின் பந்மாகேசுவரர், கண்காணிப்பாளன் குடிதாங்கியான சண்டேசுவரராசன், திருவியான கங்கை கொண்ட சோழ மாணிக்கம், காமற் திருவியான கோதுகுல மாணிக்கம், கூத்தன் ராஜேந்திரவிடங்க மாணிக்கம், கோவிந்தன் ஆடவல்லான், தேவகன்மியான ராஜேந்திர சோழ மாணிக்கம், உய்யவந்தான் முடிகொண்ட சோழ மாணிக்கம் ஆகியோர் கோவிலின் பாதுகாவலர்களாக இருந்ததாகப் பட்டியலிடப்படுகிறார்கள். இத்தனை பேர் இங்குப் பணியிலிருந்ததால் இக்கோவில் ஒரு பெரிய மையமாக விளங்கியிருக்கவேண்டும்.

விளக்கு அறக்கட்டளைக்கு இத்தனை பாதுகாவலர்களை நியமிக்கும் இக்கல்வெட்டு "சந்திராதித்தவல்" இந்த விளக்கு எரிக்கப்படவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறது.

பொலன்னறுவையின் வானவன் மாதேவி ஈசுவரம் கோவிலின் தெற்குச் சுவரில் உள்ள கல்வெட்டுத்துணுக்கு, "வானவன் மாதேவி ஈசுவரமுடையார் கோயிலிற் பள்ளிகொண்டாரையும் . . .," என்றும், மற்றுமொரு துணுக்கு, "அழகிய மணவாளரை எழுந்தருளுவித்து . . .," என்றும் சொல்கின்றன. இதிலிருந்து பள்ளிகொண்டார், அழகிய மணவாளர், ஆகியோரின் திருமுன்கள் இக்கோவிலின் ஒரு பகுதியில் முன்பு இருந்திருக்க வேண்டும் என்று

தோன்றுகிறது. அவை இப்போது இல்லை. கோவிலுக்குச் சற்று தொலைவில் சில வைணவக் கோவில்களின் இடிபாடுகள் உள்ளன.

கருங்கல் தளி

பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்ற ஒரு புல்வெளியைக் கிழித்துக் கொண்டு எழும்பியது போன்று கருங்கல் தளியாக நிற்கிறது வானவன் மாதேவி ஈசுவரம். கோவிலைச் சுற்றி ஒரு மதில் இருந்ததற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. மதில் இருந்திருந்தால் வாயிலும், அதன்மீது குறைந்த அளவில், மூன்று நிலைகளில் ஒரு கோபுரமும் இருந்திருக்கவேண்டும். அவையெல்லாம் இப்போது இல்லை. மையக் கோவில் மாத்திரம் புறச்சுவர்களில் சிற்பங்கள் ஏதுமின்றி, பச்சை வெளியில் ஒரு கருங்கற் காவியமாக நின்றுகொண்டிருக்கிறது. மிகவும் எளிமையான தோற்றம். இதுவே இக்கோயிலுக்கு ஓர் அழகைத் தருகிறது.

நார்த்தாமலை விசயாலய சோழீசுவரத்தின் கட்டட அமைப்பை ஒத்திருக்கும் இக்கோயில் கிழக்குப் பார்வையாக உள்ளது. 32 அடி உயரத்தில் நிற்கும் விமானம், இரண்டு அடுக்குகள் கொண்டு திராவிட பாணியில் உருவாகி உள்ளது. ஜகதி, முப்பட்டைக் குமுதம், கண்டம், பட்டிகை ஆகிய உறுப்புகளுடன் மேலே வேதிகையும், அரைத்தூண்களோடு கூடிய சுவரும் உள்ளன. கூரையின் நீட்சியான கொடுங்கையில் கூடுகளும் கூரையின் மீது நான்கு புறமும் சாலைகளும் கர்ணகூடுகளும் வைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் தளத்தின் மேல் கோவிலின் தலை எண்பட்டை வடிவில் உள்ளது. அதன் மேல் தாமரை அமைப்பு காணப்படுகிறது. குடம் இல்லை. இது அநேகமாக தங்கத்தால் வைக்கப்பட்டிருந்திருக்கவேண்டும். இந்தக் குடம் இத்தனை காலத்திற்குப் பின்னரும் பளபளத்துக்கொண்டிருக்கும் என்று எதிர்பார்ப்பதே தவறு. விமானப் பகுதியில் இப்போது சிற்பங்கள் இல்லை. இரண்டாவது தளத்தின் மேல் நான்கு மூலைகளிலும் நான்கு நந்தி இருக்கைகள் மாத்திரம் உள்ளன.

விமானமும் அர்த்த மண்டபமும் மாத்திரமே இப்போது கோவிலின் பகுதிகளாக எஞ்சியுள்ளன. தரைமட்டத்திலிருந்து ஐந்து அடி உயரத்தில் கோவிலின் அடித்தளம் இருப்பதால் படிகள் வழியே ஏறி உள்ளே செல்லவேண்டும். ஏறுவதற்கு சிமெந்துப் படிகள் உள்ளன. இவை அண்மைக் காலத்தில் அமைக்கப்பட்டுள்ளதால், மையக் கோவிலின் தொடர்ச்சியாக அந்தராளம், மகாமண்டபம், முன் மண்டபம் ஆகியவை இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.

வானவன் மாதேவி ஈசுவரம் - வடக்குப்புறத் தோற்றம்

அர்த்த மண்டபத்திற்குக் கூரை இல்லை. கருவறையில், வானவன் மாதேவி ஈசுவரத்து உடையார் என்று, இக்கோவிலை உருவாக்கியவரால் பெயரிடப்பட்டு வணங்கப்பட்ட சிவபெருமான் லிங்கத் திருமேனியராய் எழுந்தருளி உள்ளார். உட்சுவர்கள் சிற்பங்கள் ஏதுமின்றி வெறுமையாக இருக்கின்றன. ஆவுடையாரோடு மூன்று அடி உயரமுள்ள இந்தக் கருங்கல் லிங்கத்திற்கு நாள்தோறும் ஒரு சிங்களப் பூசாரி வழிபாடுகள் செய்கிறார். இந்த இறைவன் மிகவும் அருளுடையவர் என்கிறார்கள். பிள்ளைப் பேறு அற்றவர்கள் இங்கு வந்து இறைஞ்சினால் பிள்ளைவரம் கிட்டும் என்கிறார்கள் கோவிலுக்கு அருகே இருந்தவர்கள். மூலவரின் மீது சிவப்புப் பட்டு சாத்தியிருந்தார்கள். அன்று காலையில்தான் ஒரு தம்பதியர் தமக்கு இந்த வகையில் அருள் கிடைத்ததற்கு நன்றிக்கடனாக சாத்திவிட்டுச் சென்றார்கள் என்றார் அங்கு நின்றுகொண்டிருந்த ஒரு சிங்களப் பெண்மணி. கோவிலை நோக்கியபடி ஒரு நந்தி, இரண்டரை அடி உயரக் கருங்கல் மேடையில் அமர்ந்திருக்கிறது. ஒரே கல்லாலான இந்தச் சோழர் பாணி நந்தியின் தலை துண்டிக்கப்பட்டுள்ளது. கோவிலுக்கும் நந்திக்கும் இடையே உள்ள 25 அடி இடைவெளியில் சுவர்கள் இருந்ததன் அடையாளங்கள் காணப்படுகின்றன. இதே அளவில் மற்றுமொரு நந்தி, முதல் நந்தியின் நேர்க்கோட்டில், தெற்குப்புறம் அமர்ந்திருக்கிறது. இந்த நந்திக்கும் தலை இல்லை. இதுவும் சோழர் பாணி சிற்பமே. இது இரண்டரை அடி உயர ஒற்றைக்கல் மேடையில் உள்ளது. இந்த இரு நந்திகளுக்குமிடையே ஒரு சுவரின் அடித்தளம் தென்படுகிறது.

கோவிலின் சூழல்

இரண்டாவது நந்திக்கு எதிரே வானவன் மாதேவி ஈசுவரத்தை ஒட்டினாற் போல் மற்றுமொரு சிவன் கோவில் இருந்திருக்கவேண்டும். தொல்லியல் அறிஞர் எஸ். ஆர். பாலசுப்ரமணியம், பல ஆண்டுகளுக்கு முன் இக்கோவிலைப் பார்வையிட்டபோது வானவன் மாதேவி ஈசுவரம் கோவிலை அடுத்துச் சில தூண்களையும், அவற்றில், சிதம்பரத்தையும், திருவாரூரையும் சேர்ந்த பெருங்குடியினராகிய சிலர் அத்தூண்களைக் கொடையாக அளித்த செய்தியைக் கூறும் கல்வெட்டுகளையும் பார்த்ததாகக் கூறுகிறார். இத்தூண்கள் இப்போது இல்லை. இந்தத் தூண்கள் ஒரு சிவன் கோவிலின் பகுதிகளைத் தாங்கிக் கொண்டிருந்திருக்கலாம்.

வானவன் மாதேவி ஈசுவரத்து உடையார் கோவில் தான் உருவாகி 1000 ஆண்டுகள் ஆகியும் இன்றும் வழிபாட்டில் இருந்துகொண்டு தனக்கென அடியார்களைக் கொண்டிருப்பது இதன் சிறப்புகளில் ஒன்று. தமிழ்நாட்டில், இந்தக் காலகட்டத்தில் உருவாகிய பல கலைக்கோவில்கள் கண்ணீர்க் காவியங்களாக நின்றுகொண்டிருக்கும் வேளையில், அன்னிய மண்ணில் நிறுவப்பட்ட இக்கோயில் இத்தனை சிறப்புடன் பேணப்பட்டு வருவது கலை ஆர்வலர்களுக்கு மனநிறைவைத் தருகிறது.

இலங்கை சிலகாலம் சோழர் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது என்ற வரலாற்று உண்மைக்குச் சான்றாக நிற்கும் இந்த அழகிய சிறிய கோவில், தமிழ்நாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட சிற்ப ஆசிரியர்களைக் கொண்டு கலை அழகுமிக்கதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மையக்கோவிலே இத்தனை அழகுடையதாக இருக்கும்போது, முழுக் கோவிலும் (மதில் சுவர், மண்டபங்கள், கோபுரம் ஆகியவற்றுடன்) இருந்திருந்தால் மிகவும் எழுச்சி மிக்க தோற்றத்தைக் கொண்டு, இவ்வழியில் செல்வோரின் கவனத்தை ஈர்க்கும் தன்மையுடன் இருந்திருக்கும்.

தாம் சென்ற நாடுகளுக்கெல்லாம் தம்முடைய கலைகளையும், பண்பாட்டையும் சோழர்கள் கொண்டுசென்றார்கள் என்பதற்குக் கிழைத் தேய நாடுகளில் உள்ள பல கோவில்கள் சான்றுகளாக நிற்கின்றன. இத்தகைய அற்புதமான கோவில்களில் பொலன்னறுவையின் வானவன் மாதேவி ஈசுவரமும் ஒன்று. இதை உருவாக்கிய பேரரசர் இராசேந்திர சோழ தேவர் உலகம் சந்தித்த சிறப்புமிக்க அரசர்களில் ஒருவர்.

அடிக்குறிப்புகள்

1. தென்னிந்திய வரலாறு, நீலகண்ட சாஸ்திரி, பக்கம் 180.
2. இராசேந்திர சோழன், ஸ்ரீவத்சவ, பக்கம் 28.
3. ராஜராஜேஸ்வரம், பி. வெங்கட்ராமன், பக்கம் 52.
4. – அதே –
5. மகாவம்சம், ஆங்கில மொழிபெயர்ப்பு, பக்கம் 110.
6. நடுக்காலச் சோழரின் கோவில்கள், எஸ். ஆர். பாலசுப்ரமணியன், பக்கம் 216.

5. சேதுபதி மன்னர்களின் தமிழ்க்காசுகள்

ஆறுமுக சீதாராமன்

அ. தளவாய் சேதுபதி காசு (சடைக்கன் சேதுபதி)

சேதுபதி மன்னர்களால் வெளியிடப்பட்ட 'செதுபதி' என்ற தமிழ்ப் பொறிப்புள்ள பலவகையான காசுகள் கிடைத்திருக்கும் நேரத்தில், மன்னர் பெயர் பொறித்த காசுகள் பரமக்குடியில் கிடைத்தன. ஒரு காசின் முன் பக்கத்தில் நிற்கும் மயிலின் உருவம் காணப்படுகிறது. பின்பக்கம் மூன்று வரிகளில் 'ரா தளவாய்' எனும் சொல் தமிழில் எழுதப்பட்டுள்ளது. ராசராச என்று எழுதுவதற்குப் பதிலாக சுருக்கமாக 'ரா' என்று பொறித்துள்ளனர் போலும். இதுவே பிற்காலச் சேதுபதிக் காசுகளில் மன்னர் பெயரோடு கிடைத்த முதல் காசாகும். இந்தக் காசு தளவாய் சேதுபதி ஆட்சியில் இருந்தபோது (கி.பி. 1635-46) வெளியிடப்பட்ட காசாகும். பொதுவாக எந்தப் பாளையக்காரரும் போர் முகத்துக்கு நேரில் வந்ததில்லை. ஆனால் தளவாய் சேதுபதி மட்டும் எப்போதும் போரில் நேரடியாக ஈடுபட்டவர். அதன் காரணமாகவே அவருக்குத் 'தளவாய் சேதுபதி' என்ற பெயர் ஏற்பட்டது.



முன்பக்கம்

பின்பக்கம்

ஆ. ஸ்ரீஉடையதேவர் காசு (விஜயரகுநாத சேதுபதி)

திருஉடையதேவர் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1711-1725) அச்சிடப்பட்ட காசுகளில் முன்பக்கத்தில் வலமுகமாக நிற்கும் காளையும், காளையின் மேலே ஒரு லிங்கமும், லிங்கத்தின் மேலே மாலையும் லிங்கத்தின் வலப்பக்கத்தில் சூரியன், பிறை ஆகியனவும் காணப்படுகின்றன. பின்பக்கத்தில் 'ஸ்ரீஉடைய' என்று தமிழில் இரண்டு வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. சில காசுகளில் ஸ்ரீஉடைய தெ, ஸ்ரீஉடையதெவ என்றும் பொறிக்கப்பட்டுள்ளன. திருஉடையதேவர் சிவபக்தி நிறைந்தவர்; தர்மசீலர்; இராமேசுவர ஆலயத்திற்கு நிறைய மானியங்களை அளித்து ஒவ்வொரு

நாளும் மாலை பூசையின்போது தாமே நேரில் ஆலயத்துக்கு வந்து வழிபட்டும், கண்காணித்தும் வந்தவர்.

முன்பக்கம்

பின்பக்கம்

இராவணன் பாடு!

சிவபெருமானின் திருத்தோற்றச் சிற்பங்களுள் இராவணனுக்கு அருள் செய்த கோலம் சிறப்பானதாகும். இந்த அருளிச்செயலைத் தேவார ஆசிரியர்கள் அனைவருமே பாடியிருப்பினும், அப்பருக்கு மட்டும் இதில் தனி ஈடுபாடு உண்டு. பதிகத்திற்குப் பதிகம் அந்தப் பத்துத் தலையானின் துன்பமும் தவிப்பும் காட்டி, அவை தீர்ந்த போக்கும் காட்டி மகிழ்வதில் அவருக்கு இணை அவர்தான். அப்பரின் இந்த இராவணப் பதிகங்களை மட்டும் தொகுத்து ஆராயின், அவர் ஏன் இச்செயலுக்கு இத்தனை முதன்மை அளித்துள்ளார் என்பது விளங்குவதுடன், அப்பரின் 'இராவண உளவியலும்' புரியக்கூடும்.

இராவணனுக்கு இறைவன் அருளிய இத்திருச்செயல் காட்டும் திருத்தோற்றங்கள் தமிழ்நாட்டில் பல்லவர் காலத்திலேயே வழக்கிற்கு வந்துவிட்டன. இந்த அருளிச்செயலை விளக்கும் பாடலோ சங்க காலத்தின் பிற்பகுதியிலேயே தோன்றிவிட்டது. சங்க இலக்கியங்களுள் ஒன்றாகக் கொள்ளப்படும் கலித்தொகையின் குறிஞ்சிப்பகுதிப் பாடலொன்று இராவணன் பட்ட பாடுகளை ஐந்து அடிகளில் அழகாய்ப் படம்பிடித்துள்ளது.

இப்பாடல் அடிகளுள் முதலடி, சைவம் சார்ந்த மேலும் இரு தொன்மங்களுக்குச் சங்க வயதைத் தந்து மகிழ்கிறது. 'இமையவில் வாங்கிய' என்ற சொற்றொடர், முப்புரம் எரிப்பதற்காக இறைவன் இமயத்தை வில்லாக்கிய போர்நிலைக்கும், 'ஈர்ஞ்சடை அந்தணன்' என்னும் சொல்லாட்சி, வானின்று வீழ்ந்த கங்கையை இறைவன் ஏற்றுத் தாங்கிய அருள்நிலைக்கும் சங்கச் சான்றுகளாய்ச் சிறக்கின்றன.

6. சிலட்டூர்ப் பொன்னம்பலநாதசுவாமி திருக்கோயில்

கி. ஸ்ரீதரன்

அசையாதேவன்

புதுக்கோட்டை மாவட்டத்தில் சுமார் 30கி.மீ. தொலைவில் அறந்தாங்கி அருகே சிலட்டூர் என்ற ஊரில் பொன்னம்பலநாதசுவாமி கோயில் அமைந்துள்ளது. புதுக்கோட்டை - அறந்தாங்கிச் சாலையில் எரிச்சி என்ற ஊரிலிருந்து வடக்கே 3 கி.மீ. தொலைவு சென்றால் இவ்வூரை அடையலாம்.

கோயில் அமைப்பு

கிழக்கு நோக்கிய திருக்கோயில். திருச்சுற்றில் விநாயகர், முருகன், அம்பாள், பைரவர், நவகோள் சன்னதிகள் உள்ளன.

இக்கோயில் கருவறை, முகமண்டபம், மகாமண்டபம் என்ற அமைப்புகளை உடையதாக விளங்குகிறது. அம்பாள் சன்னதியையும், இறைவன் கோயில் மகாமண்டபத்தையும் இணைத்துப் பிற்காலத்தில் மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இதில் இரண்டு தூண்களில் கைகளைக் கூப்பிய நிலையில் அரச உருவங்கள் காணப்படுகின்றன. ஒரு சிற்ப உருவத்தின் பீடத்தில் அசையாதேவன் என்ற கல்வெட்டு பொறிக்கப்

பட்டுள்ளது. அறந்தாங்கியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட தொண்டைமான் மன்னர்கள் பற்றிய குறிப்பு கி.பி. 1426ஆம் ஆண்டு முதல் கிடைக்கிறது.[1] திருப்பெருந்துறை ஆவுடையார் இவர்களது குலதெய்வமாக விளங்கினார். செப்பேடுகளில் இவர்கள் 'அறந்தாங்கி அரசர்' எனக் குறிக்கப்படுகின்றனர். அறந்தாங்கி மன்னர்களில் ஒருவரே இம்மண்டபத்தைக் கட்டியிருக்கக்கூடும் என இங்குக் காணப்படும் சிற்பத்தினால் அறிகிறோம்.

கருவறை அமைப்பு

இக்கோயிலின் விமானம், முகமண்டபம் மட்டுமே தொன்மையான அமைப்புடன் விளங்குகின்றன. இறைவன் எழுந்தருளியிருக்கும் விமானத்தின் ஆதிதளம், அரைவட்ட வடிவில் அமைந்துள்ளது. அரைவட்ட வடிவமுடைய கருவறை அமைப்பினை கஜபிருஷ்டம் அல்லது தூங்கானை மாடம் எனக் குறிப்பிடுவர்.

விமானம், முகமண்டபம், மகாமண்டபம்

கருவறையின் தாங்குதளம் உபானம், பத்மம், கம்பு, ஜகதி, பத்மம், கம்பு, பத்மம், விருத்த குமுதம், பத்மம், கண்டம், கம்பு, பத்மம், பட்டிகை, பத்மம், கம்பு என்ற உறுப்புகளுடன் பாதபந்தத் தாங்குதளமாக அமைந்துள்ளது.

விருத்த குமுதத்திற்கு மேல் கண்ட மட்டத்தில் அபிடேக நீர்வழி அமைக்கப்பட்டுள்ளது. சிம்ம முகத்திலிருந்து வெளிவரும் பாங்கில் அழகிய வேலைப்பாடுடன் அது விளங்குகிறது.

விமானம், முகமண்டபம்

வேதிகைப்பகுதி கண்டம், கம்பு, பத்மம், கபோதம், யாளிவரி ஆகிய சிற்றுறுப்புகளுடன் காணப்படுகிறது.

வேதிகையின் மேல் எழும் பாதச்சுவர் தூண் எட்டுப் பட்டைகளுடன் ஓமம், நாகபந்தம், தொங்குமாலை (முத்துக்களைக் கோத்து அமைத்தது போன்ற அலங்காரத்துடன்), மாலைக்கட்டு, பத்மகட்டு, கலசம் (பூரிமம் போன்ற கருக்கணியுடன்), குடம், பத்மம், பலகை, வீரகண்டம், பூப்போதிகை ஆகிய உறுப்புகள் கொண்டு விளங்குகிறது. பத்மம், முனைகள் கூர்மையாக வெட்டப்பட்டுத் தாமரை மலர் விரிந்தது போல அழகாக அமைக்கப்பட்டுள்ளது. பூப்போதிகையில் முகப்பில் மட்டும் வட்ட வடிவமான தாமரை மலர் செதுக்கப்பட்டுள்ளது.[2]

தேவகோட்டங்கள்

கருவறைச் சுவரில் மூன்று தேவகோட்டங்கள் உள்ளன. மூன்று தேவகோட்டங்களிலும் சிற்பங்கள் ஏதுமில்லை. தெற்குத் தேவகோட்டத்தில்

இருபுறத்தும் முனிவர் வடிவங்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. தேவகோட்டங்களின் கால்கள் சட்டத்தலையுடன் கூடிய வட்டத் தூண்களாக விளங்குகின்றன. தேவகோட்டங்களுக்கு மேல் மகர தோரணம் இல்லை. தூண்கள் தாங்கும் உத்திரம், கூரையின் வெளிநீட்டலான கபோதம், வியாழவரி, கிரீவம், சாலை சிகரம் என இவ்வமைப்பு உள்ளது. கபோதத்தில் கூடு அமைப்புகள் உள்ளன. கிரீவப் பகுதியில் இருபுறத்தும் சிறிய கர்ணகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன (தற்பொழுது ஒன்று மட்டும் உள்ளது). இந்த அமைப்பு வடக்குத் தேவகோட்டத்தில் மட்டுமே காணப்படுகிறது. சிகரத்தின் நடுவில் மகாநாசி சோழர் கலைப்பாணியுடன் விளங்குகிறது. ஆதிதளக்கூரை உத்திரம், வாஜனம், பத்மவலபி, கபோதம் கொண்டு விளங்குகிறது.

முகமண்டபத்தின் தாங்குதள அமைப்பு ஆதிதளத்தை ஒத்துள்ளது. வேதிகை, விமான ஆதிதள வேதிகை அமைப்பினின்றும் மாறுபட்டுக் கண்டம், கம்பு, விருத்த கம்பு, வேதிகை பத்மம், மேல் பத்மம், விருத்த கம்பு, கம்பு என்ற உறுப்புகளை உடையதாக விளங்குகிறது. இம்மாற்றத்தினை உறுப்பு மாற்றம் (வர்க்க பேதம்) எனக் கூறுவர்.

முகமண்டபத்துச் சுவரில் பாத அமைப்பு ஆதிதளச் சுவரை ஒத்துள்ளது. முகமண்டபத்தில் தெற்கிலும், வடக்கிலும் திசைக்கொரு தேவகோட்டம் அமைந்துள்ளது. தெற்கில் பிள்ளையார் வடிவம் இடம்பெற்றிருக்கவேண்டும். வடக்கில் எருமைத் தலை மட்டும் உள்ளது. இதில் துர்க்கை இருந்திருக்க வேண்டும். தற்பொழுது தேவகோட்டங்களில் சிற்பங்கள் ஏதுமில்லை. முகமண்டபத் தேவகோட்டங்கள் எளிமையாக அமைந்துள்ளன.

விமானம் முன்பு ஏகதளமாய் விளங்கியிருக்கிறது. தற்பொழுது இருதள விமானமாக மாற்றித் திருப்பணி செய்துள்ளனர். ஆதிதளத்திற்கும் முகமண்டபத்திற்கும் இடைப்பட்ட ஒடுக்கத்தில் கும்பப் பஞ்சரங்கள் காணப்படுகின்றன.

கல்வெட்டுகள்

இக்கோயிலில் நான்கு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கோயில் ஆய்வின்போது சுவரில் உத்திரத்தில் கல்வெட்டு ஒன்று இருப்பது பார்க்கப்பட்டது.[3]

முகமண்டபத்துத் தென்சுவரில் காணப்படும் பாண்டிய மன்னர் வீரபாண்டியன் கல்வெட்டே காலத்தால் பழமையானதாக விளங்குவதால் இக்கோயில் அம்மன்னன் காலத்தில் கட்டப்பட்டிருக்கவேண்டும் எனக்

கருதலாம். மெய்க்கீர்த்தியில், "ஈழமும், கொங்கும் சோணாடுங் கொண்டு வெல்லானை வென்று தில்லை மாநகரில் வீற்றிருந்து வீராபிஷேகமும் விஜயாபிஷேகமும் பண்ணியருளிய ஸ்ரீவீரபாண்டிய தேவர்" என வருவதால், இம்மன்னன் முதலாம் சடையவர்மன் வீரபாண்டியன் (1253-1283) என ஆய்வறிஞர் திரு. என். சேதுராமன் கருதுகிறார்.[4] "மிழலைக் கூற்றத்து மேல்கூற்று மீபாம்பாற்று நாட்டுத் திருக்கூறுங்களூர்த் திருமிழலை நாட்டீச்சுரமுடைய நாயனார்" என இக்கோயில் இறைவன் குறிக்கப்படுகிறார். சுந்தரத்தோளுடையான் பட்டாலகன் என்பவர் இக்கோயிலில் விளக்கு எரிக்க திருவிளக்குப்புறமாக நிலம் விட்ட செய்தி கல்வெட்டில் குறிக்கப்படுகிறது.



வீரபாண்டியரின் கல்வெட்டு

சகாப்தம் 1414ல் (கி.பி. 1492) வெளியிடப்பட்ட மற்றொரு கல்வெட்டில் சிலட்டூர் உடையார் அழகிய பொன்னம்பலநாதர் என்று இறைவன் பெயர் குறிக்கப்படுவதுடன், திருநாமத்துக்காணியாக நிலம் அளிக்கப்பட்ட செய்தியும் கூறப்படுகிறது. மற்றொரு கல்வெட்டில் சகாப்தம் 1606ல் (கி.பி. 1684) இக்கோயில் குருக்களுக்கு நிலமளிக்கப்பட்ட குறிப்பு காணப்படுகிறது. இக்கோயில் ஆய்வின்போது முகமண்டபச் சுவரின் உத்திரப்பகுதியில் 'ஆரைந்தா நாடும் அருள் சென்னிலத்தூர் நாடும் வீறு பயில' எனப் பொறிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.[5]

ஊர்ப் பெயர்மாற்றம்

இவ்வூர் பாண்டியர் காலத்தில் கூறுங்களூர் என்று அழைக்கப்பட்டுப் பின்னர் சென்னிலத்தூர் என அழைக்கப்பட்டு, இறுதியாகச் சிலட்டூர் என்று குறிக்கப்படுவதைக் காணமுடிகிறது. இன்று இவ்வூர் சிலட்டூர் என்றே அழைக்கப்படுகிறது.

இறைவன் பெயர் திருமிழலை நாட்டீசுரமுடைய நாயனார் என அழைக்கப்பட்டுப் பிற்காலத்தில் அழகிய பொன்னம்பலநாதர் என அழைக்கப்படுவதையும் கல்வெட்டுகளில் காண்கிறோம்.

இக்கோயில் 13ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதைக் கல்வெட்டுகளினால் அறியமுடிகிறது. தொண்டை நாட்டுக்கே உரிய சிறப்பான தூங்கானை மாட வடிவில் இக்கோனாட்டுக் கோயில் விளங்குவது குறிப்பிடத்தக்கது. பாண்டிய மன்னரால் கட்டப்பட்டாலும், சோழர் கலைப்பாணியுடன் இக்கோயில் காணப்படுவது சிறப்பாகும்.

கல்வெட்டுப் பாடங்கள்

முதற் கல்வெட்டு

இடம்: பொன்னம்பலநாதசுவாமி கோயில் முகமண்டபம்.

காலம்: முதல் சடையவர்மன் வீரபாண்டியரின் பதினாறாம் ஆட்சியாண்டு; கி.பி. 1269.

1 ஸ்வஸ்திஶ்ரீ கோச்சடையபந்மரான திரிபு$_4$வனச் சக்கரவத்திகள்

2 ஈழமுங் கொங்குஞ் சோணாடுங் கொண்டு வெல்லானை வென்

3 று தில்லை ம[ா]னகரில் வீற்றிருந்து வீராப்பிஷேகமும் விஜை

4 யாப்பிஷேகமும் பண்ணியருளிய ஶ்ரீவீரபாண்டிய தேவற்

5 கு யாண்டு 16வது மிழலைக் கூற்றத்து மேல்க்கூற்று மீபா

6 ம்பாற்று நாட்டுத் திருக்கூறுங்களூர்த் திருமிழலை நாட்டீச்சுரமுடைய நாய

7 னாற்கு அகம்பேரூர் கூற்றத்துப் புலக்குடி வெளியாற்றூருடையா

8 ன் சுந்தரத்தோளுடையான் பட்டாலகன் வைத்த சந்

9 தியா தீபந் திருவிளக்கு ஒன்[று*]க்கு இந்நாயனார் தேவராயந் தேவர் வ

10 யலான நாட்[டரை]யன்நல்லூரில் நாங்கள் இவற்கு தண்டேசுரப்

11 பெருவிலை விற்று இவர் கொண்டு விட்ட கார[ண்]கிழமை நாற்பத்தெ

12 ண்ணாயிர வயக்கல் நான்கெல்லைக்குள் பட்ட நிலம் அரை

13 மா[வு]ம் ஆடிமாதம் முதல் திருவிளக்குப்புறமாக நீர்வார்த்த

14 மையில் இந்நிலம் அரைமாவுங் கொண்டு இவர் வைத்த

15 திருவிளக்கு ஒன்றும்ச் சந்திராதிதவற் எறிக்க கடவதாகவும் இந்நிலம்க்கு கடைமை

16 இறையின்றியிலே தடி முற்றும் பாய்வதாகவும் இப்படிச் சம்மதித்

17 து சண்டேசுரவிலை ப்ரமானதின்படி[யே] கல்வெட்டிக் குடுத்தோ

18 ம் சுந்தரத்தோளுடையான் பட்டாலகனுக்கு தானத்தோம்

19 இப்படிக்கு தானத்தார் சொற்படிக்கு ந[ா]ற்பத்தெண்ணாயிர வேளான் எழுத்து

இரண்டாம் கல்வெட்டு

இடம்: மேற்படி.

காலம்: கி.பி. 1492.

1 சு$_0$பமஸ்து ச$_0$காப்த

2 ம் 1414ல் மே[ல்]

3 செல்லா நின்ற பரிதா[பி]

4 வருஷம் ரிஷப$_4$ நா[யற்]

5 று பூர்வ பக்ஷத்து ப்ர

6 தமையும் ரோஹணி[யு]

7 ம் பெற்ற சுக்ர வாரம் நா

8 ள் அறந்தாங்கி அரசு அச்சு . . . யா

9 த பெருமாள் அலைவிலஞ்சாத பெரு

10 மாள் முகிலின் கீழ்த்திரியும் இ . . . ன்

11 னியர் மீசுரகண்டன் எழு . . . . . .

12 ஈழங்கொண்டான் கருகும் அரசாக ரே

13 மல் சந்திறன் ஏகப்பெருமாள் தொண்ை[டமா]

14 னார் சிலட்டூர் உடையார் அழகிய பொன்[ன]

15 ம்பலநாதற்கு திருநாமத்துக்காணியாக விட்ட

16 நம்முடைய சீர்மையான மிழலைக் கூற்றத்து

17 மேல் கூற்றத்து மீபாம்பாற்று நாட்டு . . . நா

18 லு கோட்டைப் பற்று வாளையமாணிக்கம் பு

19 ரவில் தேவங்காடி நான்கெல்லைக் குட்ப

20 ட்ட நன்செய் புஞ்சை நத்தம் கீணோக்கிய கி

21 ணறும் மேனோக்கிய மரமும் குளமும் குளவா

22 ய்த்தலையும் மற்றும் எற்பயப்பட்ட சகல சமு

23 தாய ப்ராத்திகளும் இன்[னயினாற்கு] சந்திரா

24 தித்தியவற் செல்ல ஸர்வமான்னியமாக

25 அனுபவித்துக் கொள்ளக் கடவதாக இன்

26 னயினார் திருக்கை மலரிலே உத$_3$கம் பண்

27 ணிக்குடுத்த படியாலே சந்திறாதித்தவ

28 ல் திருநாமத்துக்காணியாக அனுபவி

29 ப்பாராகவும் உ [சுப$_4$ம்] இப்படிக்கு கலியுக

30 மெய்யன் காலிங்கராயன் எழுத்து

மூன்றாம் கல்வெட்டு

இடம்: மேற்படி, கருவறை.

காலம்: கி.பி. 1684; கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.

1 ஸ்வஸ்திஶ்ரீ ச$_0$க$_2$ாப்$_3$த$_3$ம் 1606 மேல் செல்லா நின்ற ரத்தாட்சி [வருடம்] ஆவணி மா . . . . . . நட்சத்திரமும் ஆயுமஷ்மாந் நாம யோக$_3$மும் ப$_4$த்ரவாகரணமும் பெற்ற சுபதினத்திலே

2 சிலட்டூருடைய னாயனார் அ[ழ]கிய பொன்னம்பலனாதற்கு அஷ்டப$_3$ந்த$_2$ந கும் . . . . . . ராயில் [வய]வெள்ளாறான் சுந்தரபாண்டிய வளனாடு இளங்கோனாட்டு அறந்தாங்கியிலிரு[க்*]கும்

3 சிவப்பிராமிணரில் ஶ்ரீரங்க குருக்கள் புத்ரந் சிதம்பரேசுர குருக்களுக்கு இவ்வூர் . . . . குருக்களுக்கு பூமிதாநம் மேல்

வயலில் குழி [440] இன்பன் வயக்கல் ஒரு மா நிலமும் சிலாசாதனம் பண்ணிக் குடு

நான்காம் கல்வெட்டு

இடம்: கபோதத்திற்குக் கீழ்.

1 ஆரைந்தா நாடும் அருள் சென்னிலத்தூர் நாடும் வீறு பயில்

ஐந்தாம் கல்வெட்டு

இடம்: முகமண்டபத் தூண் சிற்பத்தின் பீடம்.

1 அசையா 2 தேவன்

அடிக்குறிப்புகள்

1. புதுக்கோட்டை மாவட்ட வரலாறு - ஜெ. இராஜாமுகமது.
2. கோயிலின் கட்டடக்கலைச் சிறப்பினை அறிய ஆய்வுக்கு உதவியவர் தொல்லியல் துறை ஸ்தபதி வே. இராமன், திருச்சிராப்பள்ளி.
3. கோயில் ஆய்வுக்கு உதவியவர் அறங்காவலர் திரு. சோ.வீர. சின்னுசேர்வை.
4. பாண்டியர் வரலாறு, என். சேதுராமன், பக்கம் 131-132; ARE. 212 to 215 of 1942.
5. கல்வெட்டுகளைப் படியெடுக்க உதவியவர் திருச்சிராப்பள்ளித் தொல்லியல் துறை இளநிலை உதவியாளர் திரு. சு. நடராசன்.

குழல் வழி நின்றது யாழே

இளங்கோவடிகள் தம் ஒப்பற்ற காவியமான சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றுக்காதையில் இசை ஒருங்கிணைப்பை விளக்குமிடத்து, 'குழல் வழி நின்றது யாழே; யாழ் வழித் தண்ணுமை நின்றது தகவே; தண்ணுமைப் பின்வழி நின்றது குழலே; முழவொடு கூடி நின்றிசைத்தது ஆமந்திரிகை' என்பார். இப்படி இசைக்கருவிகள் ஒன்றையொன்று தழுவியொலிப்பது இசைநயம் கூட்டுமென்பதைச் சங்கக் கலைஞர்களும் நன்கறிந்திருந்தனர் என்பதை அகப்பாடலொன்றால் (214) தெளிய முடிகிறது. 'கோவலர் ஆம்பலொடு அளைஇ பையுள் நல்யாழ் செவ்வழி வகுப்ப ஆர் உயிர் அணங்கும் தென்னிசை' என்னும் பாடலடி, கோவலர்தம் புல்லாங்குழலுடன் பொருந்த நல்ல யாழின் கண் மீட்டப்பெற்ற செவ்வழிப்பண் தெள்ளிய இசையாக அமைந்ததைப் புலப்படுத்தும்.

7. சில அரிய தட்சிணாமூர்த்தி வடிவங்கள்

த. சந்திரகுமார்

குரு வடிவம் தாங்கி சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் போன்ற சனகாதி முனிவர்களுக்கு மட்டுமின்றி பிரம்மாவுக்கும் வேதத்தின் உட்பொருளை உபதேசித்து ஞானத்தை அளிக்கும் தெய்வமாகப் போற்றப்படுபவர் ஆலமர் செல்வன் என்றழைக்கப்படும் தட்சிணாமூர்த்தி ஆவார். இவ்வடிவம் பல்லவர் காலத்தில் இருந்தே காணப்படுகிறது. மகாபலிபுரத்தில் நரசிம்மவர்மப் பல்லவர் காலத்தைச் சார்ந்த தர்மராச ரதத்தில் மூன்றாவது தளத்தின் தென்முகத்தில் இவ்வடிவைக் காணலாம்.[1] இராசசிம்மர் (700-730 கி.பி.) காலத்தில் கட்டப்பட்ட காஞ்சி கைலாசநாதர் கோயில், ஐராவதேசுவரர் கோயில், மகாபலிபுரம் ஒலக்கனேசுவரர் கோயில் போன்ற இடங்களில் இவ்வடிவத்தைத் தென்முகத்தில் காட்டியுள்ளனர். பிற்காலப் பல்லவர் காலத்தைச் சார்ந்த முக்தேசுவரர் கோயிலிலும் (இரண்டாம் நந்திவர்மன் 732-96), காஞ்சியிலுள்ள இறவாதானீசுவரர், பிறவாதானீசுவரர், திரிபுராந்தகேசுவரர், திருத்தணியிலுள்ள வீரட்டானேசுவரர் (அபராஜிதவர்மன் 885-903) கோயில்களிலும், பாண்டியர்களுடைய ஒருகல் கோயிலான வெட்டுவான் கோயிலிலும் (கழுகுமலை) தட்சிணாமூர்த்தியின் சிற்பங்கள் கருவறையின் தென்புறத்தில் இடம்பெறலாயிற்று. இம்மரபு சோழர் காலத்தில் கட்டப்பட்ட கோயில்களிலும் பின்பற்றப்பட்டது. தட்சிணாமூர்த்தி வடிவம் கருவறைத் தென்தேவகோட்டத்திலும், அதற்கு மேலமைந்த தளப் பகுதிகளிலும் சிற்பங்களாகத் தொடர்ந்து வடிவமைக்கப்பட்டது.[2] இவருக்கென்று தனிக் கோயில் கோவிந்தவாடி (காஞ்சிபுரம்-அரக்கோணம் செல்லும் பாதை)யிலும்[3], திருவண்ணாமலை (ரமணாஸ்ரமம் செல்லும் வழி), கேரள மாநிலத்தில் சுகபுரம் போன்ற இடங்களிலும் உள்ளன.

தட்சிணாமூர்த்தி வடிவங்களை ஞான, யோக, வியாக்யாந, கான தட்சிணாமூர்த்தி என்று நான்கு பொதுப் பிரிவுகளாகப் பிரிப்பதுண்டு. வீணையைக் கையில் தாங்கித் தும்புரு, சுகர், நாரதர் முதலிய முனிவர்களுக்கு சாமவேதத்தைப் பாடி அருளியவராக வீணாதர தட்சிணாமூர்த்தி கருதப்படுகிறார். மிருதங்கத்தைக் கையில் கொண்டிருப்பதினால் மிருதங்க தட்சிணாமூர்த்தி என்றும் இவரைக் கூறுவர். மேலே குறிப்பிடப்பட்ட நான்கு பொதுவான வகைகள் மட்டுமல்லாமல் வேறு சில படிமங்கள் பற்றியும் அவற்றின் கோட்பாடுகள் பற்றியும் நாம் அறிந்துகொள்வது இன்றியமையாத ஒன்றாகும்.

தேவியுடன் அமர்ந்து ஞானத்தை உணர்த்தும் சும்பா தட்சிணாமூர்த்தி அல்லது சக்தி தட்சிணாமூர்த்தி அல்லது தாம்பத்ய தட்சிணாமூர்த்தி படிமங்கள்

காணற்கரியன.[4] 14ஆம் நூற்றாண்டைச் சார்ந்த (ARE 378 of 1928, புக்கராயர் காலம், 1352) சுதைச் சிற்பம் ஒன்று சித்தூர் மாவட்டத்திலுள்ள சுருட்டப்பள்ளியிலுள்ள சயன சிவன் கோயிலில் மூலவராக சயனகோலத்தில் உள்ளதைக் காணலாம். வாணியம்பாடியில் உள்ள உலோகச் சிற்பமும் இப்படியே உள்ளது.

தேவியுடன் காட்சியளிக்கும் தட்சிணாமூர்த்தி பற்றி 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சம்பந்தர் தமது தேவாரப் பதிகத்தில்



சுருட்டப்பள்ளி தட்சிணாமூர்த்தி

"மங்கையோடு வடபால் இருந்து
மறையோதும் எங்கள் பரமன்" (தேவாரம் 2:221:4)

என்றும்,

"கல்லால் நிழற்கீழ் வாடாமுலை மங்கையுந்
தானும் மகிழ்ந்து ...." (தேவாரம் 1:32:1)

என்றும் பாடுகிறார். இவரின் கருத்தே சிற்பவடிவம் பெற்றுத் திகழ்வதை இங்கே பார்க்கலாம். தேவாரக் காலக் கருத்துக்கள் தொடர்ந்து பிற்காலத்தில் பின்பற்றப்பட்டுவந்துள்ளதையும் பார்க்கலாம். மராட்டியர் காலச் சிற்பம் ஒன்றைத் தஞ்சையிலுள்ள பாலதண்டாயுதபாணி கோயிலில் காணலாம்.[5] மிலட்டூர் உன்னதபுரீசுவரர் கோயில் விமானத்தின் தென்முகத்தில் சுதைவடிவில் சக்தி தட்சிணாமூர்த்தி வடிவம் அமைக்கப்பட்டுள்ளது. இது மராட்டியர்

திருப்புவனம் தட்சிணாமூர்த்தி

காலத்தைச் சார்ந்த சுதை வேலைப்பாடாகும். இவ்வகை தட்சிணாமூர்த்தி படிமங்கள் அரிதாகக் காணப்படுவனவாகும்.

யோக தட்சிணாமூர்த்தியின் அரிய சிற்பம் ஒன்றை மதுரைக்கு அருகிலுள்ள திருப்புவனத்தில் காணலாம். இச்சிற்பத்தின் வடிவமைப்பைக் கொண்டு இது 14ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம் என்று கருதலாம். இவர் தாமரைப் பீடம் போன்ற பீடத்தில் அமர்ந்து, போதிக்கும் பாங்கான சின்முத்திரையை முன் வலது கையால் காட்டுகின்றார். இடக்கை வேதாகம புத்தகத்தைப் பெற்றிருக்கிறது. பின் கைகளில் மானும் மழுவும் அமைந்துள்ளன. இப்படிமத்தில் இவரின் போதனைகளைச் செவியுற்று அமர்ந்த வண்ணமுள்ள சனகாதி முனிவர்கள் காண்பிக்கப்படவில்லை. மேலும் மற்ற படிமங்களில் காணப்படும் யோகப்பட்டமும், குந்தி அமர்ந்த நிலையும் (உத்குடிகாசனம்) காட்டப்படவில்லை. இது திருவொற்றியூரில் உள்ள யோக தட்சிணாமூர்த்தி (கௌளீசுவரர்) படிமம் போன்று காணப்படுகிறது. எனினும் அங்குக் காட்டப்பட்டுள்ள ஸ்வஸ்திக யோகாசனம் போன்ற அமைப்பினை நாம் இங்குக் காணமுடியாது. யோக தட்சிணாமூர்த்தி படிமங்களில் ஒரு சிறிய மாற்றத்துடன் இச்சிற்பம் காணப்படுகிறது என்று கொள்ளலாம். எல்லோராவில் (குகை-16) உள்ள சிற்பமொன்று சிவனை மகாயோகியாகக் காட்டுவதைப் பார்க்கலாம்.[6]

நாயக்கர் காலத்தைச் சார்ந்த (16-17ஆம் நூற்றாண்டு) புடைப்புச் சிற்பம் ஒன்றைத் திருவில்லிபுத்தூர் வடபத்திரசாமி கோயில் முன்மண்டபத் தூண் ஒன்றில் காணலாம். இங்கே வீணையைக் கையில் தாங்கி வாசிக்கும் வீணாதரரைக் காணலாம். ஜடாமுடி அமைப்பு சிவனின் கபார்தின் வடிவத்தை நினைவூட்டுவதாக உள்ளது. மார்பில் ருத்திராட்சமாலை, ஆரங்களின் அமைப்பு மிகவும் அழகாகக் காட்டப்பட்டுள்ளது. இங்கே "நீள் நிமிர்சடை முதுமுதல்வன்" என்ற புறநானூற்றின் (166) வரிகள் நினைவிற்கொள்ளத்தக்கன. இவர் வலது காலை மடக்கியும், இடது காலை ஊன்றியும் உள்ள அமைப்பினைப் பார்க்கும்போது கணபதி வடிவங்களில் காணப்படும் லலிதாசனம் வகையைச் சார்ந்த கோலம் போன்று உள்ளது. பொதுவாகப் பல இடங்களில் நின்ற நிலையில் வீணையை வாசிக்கும் பாங்கினைக் காணலாம். ஆனால் இங்கு இச்சிற்பத்தில் லலிதாசனம் போன்று வீற்றிருந்து வீணையை வாசிக்கும் நிலையைக் காட்டியுள்ளனர்.

அவருக்கு அருகில் ஒரு பெண்ணின் ஆடை இடையினின்று நழுவி விழுவது போன்று காட்டப்பட்டுள்ளது. அவள் நடந்து முன்செல்வது போன்றும், செல்லும் வேகத்தில் பின்புறம் திரும்பிப்பார்ப்பது போன்றும் அமைக்கப்பட்டிருப்பது அழகாக உள்ளது. இவள் வீணை நாதத்தின்பால்

ஈர்க்கப்பட்டிருக்கும் நிலை சொல்லப்பட்டிருப்பது புலப்படுகிறது. இசை காமத்தைத் தூண்டவல்லது என்பதை எடுத்துக்காட்டும் வண்ணம் உள்ளது எனலாம். காமத்தைத் தூண்டும் வீணையின் நாதத்தை "வீணைச்செல்வம்" என்று குறிப்பிடுகின்றார் சீவகசிந்தாமணி ஆசிரியர் திருத்தக்கதேவர் (9ஆம் நூற்றாண்டு). உரையாசிரியர் நச்சினார்க்கினியரும் (15ஆம் நூற்றாண்டு) இசை, நாடகம் (இசையும் நாடகமும்) காமத்தை விளைத்தலின் அவற்றால் பிறக்கும் காமத்தை வீணைச்செல்வம் என்றார். அதாவது வீணைச்செல்வம் என்பது காமம். காமத்தையே, வீணைச்செல்வம் என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார் சீவகசிந்தாமணி ஆசிரியர். இங்கே சமண சமயக்கருத்து உட்புகுத்தப்பட்டுள்ள சிற்ப அமைதியைக் காணலாம். திருத்தக்கதேவர் சமண சமயத்தைச் சார்ந்தவர் என்பது யாவரும் அறிந்த ஒன்றாகும். மேலும் இசை காமத்தைத் தூண்டவல்லது என்பது சமணர்களின் கருத்தாகும்.[7]



வடபத்திரசாமி கோயில் தட்சிணாமூர்த்தி

இது தொடர்பாக வேறொரு புராணக்கதையையும் நாம் நோக்கவேண்டும். தாருகாவனத்தில் பூதகணங்கள் புடைசூழ பிச்சாண்டவர் அல்லது பிச்சைத்தேவர் என்றழைக்கப்படும் சிவன் சென்றார் என்பது புராணங்கள் கூறும் செய்தியாகும் (இலிங்கபுராணம், கூர்மபுராணம்).[8] அங்கே வாழ்ந்த முனிகளின் மனைவிமார்கள் சிவனின் எழிலான தோற்றத்தினால் ஈர்க்கப்பட்டு மயங்கி மையலுற்றுத் தங்கள் ஆடைகள் இடையினின்று நழுவியதைக்கூட பொருட்படுத்தவில்லை. ஆனால் இக்கதையில் சிறு மாற்றத்தை அப்பர் பெருமானார் திருவலம்புரம் பதிகத்தில் புகுத்துகின்றார். வீணையேந்தி இசைபாடிச் சிவன் சென்றார் என்று அப்பர் பெருமானார் கூறுகின்றார் (தேவாரம் 272:6).

"கறுத்ததொரு கண்டத்தர் காலன் வீழக்
காலினாற் காய்ந்துகந்த காபா லியார்
முறித்ததொரு தோலுடுத்து முண்டஞ் சாத்தி
முனிகணங்கள் புடைசூழ முற்றந் தோறும்
தெறித்ததொரு வீணையராய்ச் செல்வார் தம்வாய்ச்
சிறுமுறுவல் வந்தெனது சிந்தை வெளவ
மறித்தொருகா னோக்காதே மாயம் பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே.

இக்கருத்தை வலியுறுத்தும் வகையில் வடிக்கப்பட்டிருப்பது 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மேலப்பெரும்பள்ளம் கோயிலில் உள்ள வீணையேந்தி செல்லும் பாங்கில் அமைக்கப்பட்ட அழகான உலோகச் சிற்பமாகும்.[9] பிச்சைத்தேவரின் அழகில் மையல் கொண்டவர்கள் தாருகாவனத்து முனிவர்களின் மனைவிமார்கள் என்பது நாம் அறிந்ததே. வீணையின் நாதத்தாலும் ஈர்க்கப்பட்டனர் என்னும் அப்பர் சுவாமிகளின் கருத்து புராணக்கதையினின்று முற்றிலும் வேறுபட்டதாக உள்ளது.

ஆனால் இங்கே காணப்படும் இச்சிற்பத்தில் வீணைவாசிக்கும் பாங்கில் அமைந்துள்ள வீணாதரர் எழுப்பிய இன்னிசையில் பெண் ஒருத்தி ஈர்க்கப்பட்டிருக்கும் நிலையைக் காட்டியிருப்பது வியப்படையவைக்கிறது.

வீணையை வாசித்துத் தாருகாவனத்து வீதியில் பிச்சைத்தேவர் சென்றார் என்ற புதிய புராணக்கதையை இங்கே உட்புகுத்தியுள்ளனர். ஆனால் புராணங்களில் எவ்விடத்திலும் "நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்" (அகம்.181) ஆன தட்சிணாமூர்த்தி இசையால் பெண்களைக் கவர்ந்தார் என்ற கோட்பாட்டினைக் காணஇயலவில்லை. இதனடிப்படையில் பார்க்கும்போது இச்சிற்ப வடிவம் ஓர் அரிய படிம வகையைச் சார்ந்தது என்று கூறலாம்.

அடிக்குறிப்புகள்

1 K.R. Srinivasan, The Dharmaraja Ratha And Its Sculptures Mahabalipuram, p.36, Figure 28.

2 K.R. Srinivasan, Some Aspects of Religion as Revealed by Early Monuments and Literature of the South, Journal of the Madras University, vol. XXXII, p.186.

3 கோவிந்தவாடியில் தட்சிணாமூர்த்திக்கென்று ஒரு கோயில் கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலில் ஐந்து கல்வெட்டுக்கள் உள்ளன. இக்கோயிலுக்குச் செல்ல அகரம் என்ற இடத்தில் இறங்கி இரண்டு கிலோமீட்டர் மேற்காகச் செல்ல் வேண்டும். இக்கோயிலில் முதலாம் இராசேந்திரசோழரின் கல்வெட்டு ஒன்று உள்ளது; ARE 37 of 1923. இவ்வாலயத்திற்கு யோகச்சாரியார் தளி என்று பெயருண்டு. மற்றொரு கல்வெட்டு யோகாநந்த தீர்த்த தட்சிணாமூர்த்தி சுவாமிகள் பக்தி பூண்டிருந்ததைக் கூறுகிறது; ARE 38 of 1923. இவருடைய சிற்பம் கருவறை மேற்குச் சுவர்க் கோட்டத்தில் உள்ளது (வெ. நாராயணசுவாமி, சிறப்புமிக்கக் கோயில்கள், சென்னை, 1991, பக்.106). மற்றொரு கல்வெட்டு 'தட்சிணாமூர்த்தி ஈஸ்வரர்' என்று குறிப்பிடுகிறது; ARE 39 of 1923. யோகாநந்த தீர்த்த சுவாமிகள் நிலங்களைத் தானமாக அளித்த செய்தியும் கிடைக்கிறது. அகரம் என்ற இடத்திலேயே தனிக்கோயில் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் கட்டுரை ஒன்று கலா என்ற இந்தியக் கலை வரலாற்று இதழில் வெளியிடப்பட்டிருக்கிறது (தொகுதி-2, பக். 138-141). இது தவறான செய்தியாகும். அகரத்தில் உள்ளது கைலாசநாதர் கோயிலாகும்.

4 கிர்வனேந்திர சரசுவதியின் பிரபஞ்ச சார சங்கிரகம் இவ்வடிவத்தைக் குறிப்பிடும் போது பார்வதி சிவனின் இடது தொடையில் அமர்ந்த வண்ணம் இருக்கவேண்டும் என்கிறது. இந்திரா, கலை மற்றும் சமயத்தில் தட்சிணாமூர்த்தி, எம்.லிட். ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1960, பக்.59; Kala, The Journal of Indian Art History Congress, Vol. 1, p. 108.

5 T.A. Gopinatha Rao, Elements of Hindu Iconography, Vol. II, part I, pp.285-286.

6 எல்லோரா சிற்பம், மேலைச் சாளுக்கியர் பாணி, ஏழாம் நூற்றாண்டாகும்.

7 காஞ்சிபுரம் விநாயக முதலியார் தெரிவித்த கருத்து (19.12.99 கல்கி) இதற்கு மேலும் வலுவூட்டுவதாக அமைந்துள்ளது.

8 T.A. Gopinatha Rao, Vol.II, part I, pp.295-309.

9 இரா. நாகசாமி, ஓவியப்பாவை, தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை, 1979, பக்.74. இக்கருத்தினைத் தழுவி மீண்டும் ஒரு கட்டுரை East and West Vol.IV, No.2-4, 1992 என்ற ஆய்வேட்டில் வெளியிடப்பட்டிருக்கிறது.

8. திருப்பராய்த்துறைத் தாருகாவனேசுவரர் கோயில்

மு. நளினி, இரா. கலைக்கோவன்

அப்பராலும் சம்பந்தராலும் பாடப்பெற்ற பராய்த்துறைத் தாருகாவனேசுவரர் கோயில், சிராப்பள்ளிக் குழித்தலைச் சாலையில், சிராப்பள்ளியிலிருந்து பத்தொன்பது கிலோமீட்டர் தொலைவில் தார்ச்சாலையின் வலப்புறம், காவிரியின் தென்கரைத் தலமாய் அமைந்துள்ளது. எளிய நுழைவாயில் வளைவு கோயில் வளாகத்திற்கு வழிகாட்டுகிறது. இவ்வாயிலுக்கும், ஏழு தளங்களுடன் பாதபந்தத் தாங்குதளத்தின் மீது செம்மாந்து எழுந்து நிற்கும் முதற் கோபுரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் விவேகானந்தர் பெயரிலமைந்த தொடக்கப்பள்ளியொன்று பல வகுப்பறைகளுடன் நடந்துவருகிறது. முதற் கோபுரத்திற்கும், ஐந்து நிலைகள் கொண்ட இரண்டாம் கோபுரத்திற்கும் இடைப்பட்ட திருச்சுற்றின் கிழக்குப்பகுதியில், இரண்டாம் கோபுர நுழைவாயிலை நோக்கியவாறு கட்டப்பட்டுள்ள சிறு மண்டபமொன்றில் பலித்தளம், கொடிமரம், நந்தி அமைந்துள்ளன. இம்மண்டபத்தின் தூண்களில் சம்பந்தர், அப்பரடிகள், மாணிக்கவாசகருடன் இக்கோயிலை 3.2.1904 இல் திருப்பணி செய்து இதன் தொல்வடிவமும் இங்குள்ள கல்வெட்டுகளும் மறைந்தொழியக் காரணமாக இருந்த கானாடுகாத்தான் வெ.வீரநாகப்பச் செட்டியாரின் திருவுருவமும் இடம்பெற்றுள்ளது.

உள்திருச்சுற்று மாளிகையின் தென்புறத்தே பிள்ளையார், இந்திராணி தவிர்த்த பிற ஆறு அன்னையர், வீரபத்திரர் சிற்பங்களும், நாயன்மார்களின் சிறிய திருவுருவங்களும் இருத்தப்பட்டுள்ளன. குன்றொன்றின் மீதமர்ந்த முனிவர் ஒருவரும் இங்கு இடம்பெற்றுள்ளார். மேற்கில் விமான ஆதிதளத் தென்கோட்டத்திருந்த பழைய ஆலமர் அண்ணலும், பிள்ளையாரும் உள்ளனர். வலப்புறம் இரண்டும், இடப்புறம் இரண்டுமாய் நான்கு திருமுன்கள் இடம்பெற்றுள்ள இம்மேற்குப் பகுதியில், இவற்றுக்கிடையே முருகன், வள்ளி தெய்வானையுடன் திருமுன்னின்றிக் காட்சிதருகிறார். வலத் திருமுன்கள் முறையே சோமாஸ்கந்தருக்கும், பிள்ளையாருக்கும் அமைய, இடத் திருமுன்கள் யானைத்திருமகளுக்கும் ஆறுமுகனுக்குமாய் ஒதுக்கப்பட்டுள்ளன. வடபுற மாளிகையில் வாகனங்கள்.

விமானமும், அதன் முன் அமைந்துள்ள உள், பெரு மண்டபங்களும் உயர்த்திக் கட்டப்பெற்ற மேடையொன்றின் மீதமர்ந்துள்ளன. இம்மேடை நாற்புறமும் நன்கு விரிந்து, காலார நடப்பதற்கும், நடந்தபடியே விமான, மண்டப அமைப்புகளைக் காண்பதற்கும் வாய்ப்பளிக்கிறது. முத்தள வேசர விமானமாக அமைந்திருக்கும் இறைவன் தளி இருபதாம் நூற்றாண்டின்

தொடக்கக் காலக் கலைமுறையை உட்கொண்டிருக்கிறது. முன் தள்ளிய சாலைப்பத்தியும் ஒடுங்கிய கர்ணபத்திகளுமாய் அமைந்திருக்கும் ஆதிதளத்தின் கர்ணபத்திகள், துணை உபானங்களின் மீது, பத்ம உபானம், ஜகதி, பதினாறு பட்டைக் குமுதம், கண்டத்தொகுதி, பட்டிகை எனும் பேருறுப்புகளும், பத்மவரிகள், கம்புகள் ஆகிய சிற்றுறுப்புகளும் கலந்தமைந்த தாங்குதளத்தின் மீது எழுகின்றன. சாலைப்பத்தியின் தாங்குதளம், கர்ணபத்தித் தாங்குதள அமைப்பிலிருந்து மாறுபட்டு வர்க்க பேதமாக, உபானங்கள் மீதமைந்த பெருந்தாமரை, சிலம்புவரிக் குமுதம், கண்டத்தொகுதி, கபோதம், கண்டம் பட்டிகை, மேற்கம்பு எனும் உறுப்புகள் கொண்டு கபோதபந்தமாக அமைந்துள்ளது. சுவர், கர்ணபத்திப்பகுதிகளில் எண்முக அரைத்தூண்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. பக்கத்திற்கொன்றென இரு பன்முக அரைத்தூண்களால் அணைக்கப்பட்டுள்ள சாலைப்பத்திச் சுவரின் நடுவிலுள்ள கோட்டம், ருத்ரகாந்த அரைத்தூண்களால் அணைவுசெய்யப்பட்டுள்ளது. தேவகோட்டங்களில் திருப்பணிக் காலத் தோன்றல்களாகத் தென்புறம் ஆலமர் அண்ணலும், மேற்கில் அம்மையப்பரும், வடக்கில் நான்முகனும் உள்ளனர். கபோதத்துடன் கூடிய மூவடுக்குத் தளத்தின் மேல், நாகபந்தத்துடன் கூடிய சதுரபாதங் கொண்டு எழும் சுவர் அரைத்தூண்கள் பூப்போதிகையும், மதலையுமாய் உத்திரம் தாங்குகின்றன. கர்ணபகுதி வலபியில் தாமரையிதழ்கள். சாலை வலபியில் நீலோத்பல வரி. மேலே கபோதம் சிற்பக் கூடுகளுடன்.

சாலையின் இருபுறத்தும் கோட்டப் பஞ்சரங்களும், ஆதிதளத்திற்கும், உள்மண்டபத்திற்கும் இடைப்பட்ட ஒடுக்கத்தில் தெற்கிலொன்றும் வடக்கிலொன்றுமாய்க் குடப்பஞ்சரங்களும் உள்ளன. உள்மண்டபம் கட்டமைப்பில் விமான ஆதிதளத்தையொத்துள்ளது. இதன் இடைப்பத்தியின் இருபுறத்தும் ஒற்றைக்கால் பஞ்சரங்கள். பெருமண்டபம், பாதபந்தத் தாங்குதளத்துடன் விரிந்து பரந்துள்ளது. பெருமண்டப, உள்மண்டப நுழைவாயில்கள் மேல் யானைத்திருமகளின் சிற்பம். உள்மண்டப வாயிலின் இருபுறத்தும் முற்சோழர் கால வாயிற்காவலர்கள். கருவறையில், பராய்த்துறை நாதர் சிறிய லிங்கத் திருமேனியராய் சுகாதாரமான சூழலில் மகிழ்வோடிருக்கிறார்.

முத்தள வேசர விமானமும் உள்மண்டபமுமாய் அம்மன் திருமுன். பசும்பொன் மயிலாம்பாள் என்ற திருப்பெயருடன் இலங்கும் இவ்வம்மையின் திருமுன்னும் இருபதாம் நூற்றாண்டுத் திருப்பணி.

நன்றி : **சாஸ்தா ஃபார்மா,**
C 42, எட்டாம் குறுக்கு, மேற்குத் தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி - 620 018.

சிற்பங்கள்

இக்கோயிலிலுள்ள சிற்பங்களுள் வாயிற்காவலர் சிற்பங்களும், இந்திராணியற்ற அன்னையர் தொகுதியும் குறிப்பிடத்தக்கன. வாயிற்காவலர் சிற்பங்கள் முற்சோழர் காலத்தன. அன்னையர் தொகுதியைப் பல்லவர் காலத்ததாகக் கருதலாம். மேற்கு மாளிகையிலிருக்கும் கொற்றவையும் பழமையானவரே.

i) வாயிற்காவலர்

வாயிற்காவலர் இருவருமே சடைமகுடர்களாய் விளங்கியபோதும், தென்புறத்தாரின் மகுட முகப்புகளும், உச்சியிலிருந்து தொங்கும் அவரது அலங்கரிக்கப்பட்ட சடைத்தொங்கலும் அவருக்குத் தனித்துவம் சேர்க்கின்றன. இருவர் செவிகளிலும் பனையோலைக் குண்டலங்கள்; மார்பில் பூப்பதக்க அலங்கரிப்புடன் கூடிய முப்புரிநூல். கைகளின் மேற்பகுதியில் கங்கணங்கள்; மணிக்கட்டருகே ருத்திராக்க வளைகள்; விரல்களில் மோதிரங்கள். தென்புறத்தாரின் கங்கணம் சிம்ம முகப்புடன் உள்ளது. உதரபந்தம் அணிந்துள்ள இருவரின் கழுத்திலும் அழகிய ஆரம், சரப்பளி. இருவர் ஆரமும் அமைப்பில் மாறுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. சுருக்கிய சிற்றாடையை இடுப்பில் இருத்த அரைக்கச்சு. தென்புறத்தாரின் அரைக்கச்சில் சிம்ம முகப் பதக்கம்; தாள்களில் அழகிய செறிகள். இடைக்கட்டின் வளைவுத் தொங்கல் தென்புறத்தாருக்குக் கனமாகவும் சற்று உருளையாகவும் இருக்க, வடபுறத்தாருக்குப் பட்டையாக உள்ளது. இரு கையினராய் விளங்கும் இருவருமே ஒரு கையைத் தங்களையொட்டி நிறுத்தியிருக்கும் பெரு மழுவின்மீது தாங்கலாய் இருத்தியுள்ளனர். மற்றொரு கை வியப்பு முத்திரையில் விரிந்துள்ளது.

தென்புறத்தார் வலக் காலை நன்கு ஊன்றிப் பாதத்தைச் சமத்திலிருத்தி இடக் காலை முழங்காலளவில் மடக்கி இடக் கணுக்கால் வலப் பாதம் மீது இருக்குமாறு நிற்க, வடபுறத்தார் இடக் காலை நன்கு ஊன்றிப் பாதத்தைச் சமத்திலிருத்தி வலக் காலை முழங்காலளவில் மடித்துப் பாதத்தைத் திரயச்ரத்திலிருத்தி நிற்கிறார். இருவருக்குமே கோரைப்பற்கள் காட்டப்பட்டிருந்தாலும் அதற்கான கொடூரம் முகத்தோற்றத்தில் காட்டப்படாமை சோழச் சிற்பிகளின் திறம் காட்டுகிறது.

நன்றி : **டைமண்ட் ஆட்டிகல்ஸ்,**
2A, ஈ.வே.ரா. சாலை, புத்தூர், திருச்சிராப்பள்ளி - 620 003.
தொலைபேசி : 760 090



வலப்புற வாயிற்காவலர்

ii) அன்னையர் தொகுதி

பொதுவாக அன்னையர் தொகுதியில் மகேசுவரி, பிராம்மி, வராகி, வைணவி, இந்திராணி, கௌமாரி, சாமுண்டி ஆகிய எழுவரும், முன் பின்னாக வீரபத்திரரையும், பிள்ளையாரையும் கொண்டமைவது வழக்கம். தாருகாவனேசுவரர் கோயிலில், பிள்ளையார், இத்தொகுதியின் தொடக்க நாயகராய் வீற்றிருக்க, வீரபத்திரர் இறுதியில் அமர்ந்துள்ளார். இடையில்

பிராம்மி, மகேசுவரி, சாமுண்டி, வைணவி, வராகி, கௌமாரி ஆகியோர் சுகாசனத்தில். நான்கு கைகளுடன் காட்சிதரும் அனைவரது கீழிறங்கிய கால்களும் கல் தளமொன்றில் இருத்தப்பட்டாற் போல் காட்டப்பட்டுள்ளன. கர்த்தரி முத்திரையிலுள்ள அனைவரின் பின் கைகளும் கருவிகளின்றி உள்ளன. அனைவருமே மார்புக் கச்சையும், சுருக்கிய அரையாடையும் அணிந்துள்ளனர்.

வராகி

சாமுண்டி தவிர ஏனையர் அனைவரும் தம் வல முன் கையை அபயத்தில் இருத்தி, இட முன் கையைத் தொடைமீது வைத்துள்ளனர்.

கைகளில் கங்கணமும், வளைகளும் கழுத்தில் கண்டிகையும் அனைவர்க்கும் உள்ளன. மூன்று முகங்களுடன் சடை மகுடராய்

மகரகுண்டலங்கள் அணிந்து காட்சிதரும் பிராம்மிக்கு முப்புரிநூல் உள்ளது. சாமுண்டி மண்டையோட்டு மாலையையே முப்புரிநூலாக அணிந்துள்ளார். இம்மாலை சாமுண்டியின் வலக்கை மீதேறிப் பின் செல்கிறது. இவர் கைகளில்

சாமுண்டி

நாக கங்கணங்கள். வலச் செவியில் பிணக் குண்டலம்; இடச் செவியில் பனையோலைக் குண்டலம். வலக் கையைத் தொடைமீதும், இடக் கையை வயிற்றருகும் கொண்டுள்ள இவ்வம்மையின் மார்புக் கச்சையை மீறி மார்பகங்கள் கீழிறங்கியுள்ளன.

கிரீட மகுடத்துடன் காட்சிதரும் வைணவியின் கைகளில் பட்டை வளைகள்; செவிகளில் குண்டலங்கள். வராகி கரண்ட மகுடம் அணிந்துள்ளார். கௌமாரியை அடையாளம் காணச் சென்னி உதவுகிறது. இவரது செவிகளைப் பனையோலைக் குண்டலங்கள் அழகுசெய்கின்றன.

தொகுதியின் முன்னவரான பிள்ளையார் தமது வழக்கமான லலிதாசனத்தில் இருந்தபோதும், அவரது இடத் திருப்பம் அந்த அமர்வுக்கே ஒரு புதுப் பார்வை தருகிறது. சுருக்கிய அரையாடையும், சிறியதொரு கரண்ட மகுடமும், முப்புரிநூலும் அணிந்துள்ள இவ்வலம்புரியாரின் கழுத்தில் கண்டிகை. மேற்கைகளில் கங்கணம்; கைகளில் வளைகள். இவரது முன் கைகளில் வலக்கை மோதகத்தைக் கொண்டுள்ளது. வரத முத்திரையில் உள்ள இடக் கையிலும் மோதகம். பின்கைகளில் வலப்புறம் கருவியில்லை. இடக்கைக் கருவியை அடையாளம் காணக்கூடவில்லை. தொகுதியின் கடைசியரான வீரபத்திரர் யோக அமர்விலுள்ளார். வல முன்கை சின் முத்திரை காட்ட இட முன்கை தொடை மேல் இருத்தப்பட்டுள்ளது. கழுத்தில் கனத்த கண்டிகையும், செவிகளில் குண்டலங்களும், சடை முகப்பில் மண்டையோடும் கொண்டு மலர்ந்த முகத்தினராய்த் திகழும் இவருக்கும் பிள்ளையாரைப் போலவே முப்புரிநூல் தரப்பட்டுள்ளது.

iii) கொற்றவை

கரண்ட மகுடமும், குண்டலங்களும் அணிந்து, வலக் காலை உயர்த்தித் தளமொன்றின் மீது இருத்தி, இடப் பாதத்தைச் சமமாகத் தரையில் ஊன்றிக் காட்சிதரும் எண் கைக் கொற்றவை சற்று வித்தியாசமான தோற்றமாகும். இவரது வல முன் கை இடுப்பருகே கடகமாகத் திகழ, இட முன் கை கடியவலம்பிதமாக உள்ளது. ஆறு பின் கைகளில் இரண்டில் சங்கும் சக்கரமும். பிற கைகளில் உள்ள கருவிகளை இனம்காணக்கூடவில்லை. அன்னையர் தொகுதி போல் அழகில்லையென்றாலும், பழமையான சிற்பமென்பதில் ஐயமில்லை.

கல்வெட்டுகள்

'கோயில்களைத் திருப்பணி செய்கிறேன் சாமி', என்று கங்கணம் கட்டிக் கொண்டு களத்திலிறங்கும் வரலாற்று உணர்வற்ற பக்திமான்களின் முறையற்ற

நன்றி : **டைமண்ட் ஆப்டிகல்ஸ்,**
2A, ஈ.வே.ரா. சாலை, புத்தூர், திருச்சிராப்பள்ளி - 620 003.
தொலைபேசி : 760 090

கணபதி

செயல்களாலும், அதற்கு வரப்பு கட்டாது அறியாமையின் காரணமாய் அவர்தம் முறையற்ற திருப்பணிகளுக்கும் பொறுப்பற்றுத் துணை போகும் கோயில் நிர்வாகத்தாலும் தமிழ்நாட்டு வரலாறு இழந்த எத்தனையோ உன்னதமான அடிப்படைச் சான்றுகளுள் பராய்த்துறைத் தாருகாவனேசுவரர் திருக்கோயிலின்

தொல்வடிவமும் ஒன்று. நல்லவேளையாகக் கோயில் திருப்பணிக்கு முன்னரே இங்குள்ள கல்வெட்டுகளை அந்நாளைய ஆங்கிலேய அரசாங்கக் கல்வெட்டுத் துறையினர் படியெடுத்துக் காப்பாற்றியுள்ளனர். ஐம்பத்தைந்து முழுக் கல்வெட்டுகளும், இரண்டு துண்டுக் கல்வெட்டுகளும் இக்கோயிலிலிருந்து படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளாகத் தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி எட்டில் பாடங்களுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளன.[1] இவற்றுள் முப்பத்தேழு கல்வெட்டுகள் சோழர்களுடையவை. இரண்டாம் பாண்டியப் பேரரசர் காலத்து வெட்டப்பட்டவை ஐந்து. விஜயநகர, நாயக்கர் காலக் கல்வெட்டுகள் ஐந்து. எக்காலத்தன என அறியவியலாதவாறு சிதைந்துள்ளவை எட்டு.

சோழர் கல்வெட்டுகள் - 37

முதற் பராந்தகர்	-	4
முதல் இராஜராஜர்	-	5
முதல் இராஜேந்திரர்	-	2
முதற் குலோத்துங்கர்	-	1
மூன்றாம் குலோத்துங்கர்	-	3
இராஜகேசரிவர்மர்	-	6
பரகேசரிவர்மர்	-	15
கேசரிவர்மர்	-	1

பிற்பாண்டியர் கல்வெட்டுகள் - 5

மாறவர்மர் சுந்தரபாண்டியர்	-	1
பராக்கிரம பாண்டியர்	-	1
சடையவர்மர் சுந்தரபாண்டியர்	-	2
மாறவர்மர் குலசேகரபாண்டியர்	-	1

விஜயநகர, நாயக்கர் கல்வெட்டுகள் - 5

வீரகம்பணர்	-	1
கிருஷ்ணதேவராயர்	-	1

நன்றி : **டைமண்ட் ஆப்டிகல்ஸ்,**
2A, ஈ.வே.ரா. சாலை, புத்தூர், திருச்சிராப்பள்ளி - 620 003.
தொலைபேசி : 760 090

திருமலைநாயக்கர்	-	1
நாயக்கர் (பெயரில்லை)	-	2

இக்கல்வெட்டுகள் அனைத்தையும் முழுமையாக ஆய்வுசெய்தபோது பெற்ற தரவுகள், பராய்த்துறைப் பகுதியின் ஒன்பது நூற்றாண்டுக் கால வரலாற்றை உள்ளுறையாகக் கொண்டிருப்பதை அறியமுடிந்தது. அரசு, சமுதாயம், கோயில் எனும் முத்தலைப்புகளின் கீழ் அவ்வரவுகள் பதிவு செய்யப்பெற்றுள்ளன.

i) அரசு

பேரரசர்கள், சிற்றரசர்கள், அவர்தம் கீழிருந்த அரசமைப்புகள், நாட்டுப் பிரிவுகள், அவற்றை நிர்வகித்தவர்கள், ஊர்கள், ஊராட்சியமைப்புகள் என அரசு பல்முனை நிர்வாகத்தில் இயங்கியது. பராய்த்துறை உள்ளிட்ட நாட்டுப்பகுதி முதலில் சோழப் பேரரசர்களின் கீழும், பின் இரண்டாம் பாண்டியப் பேரரசர்களின் கீழும் அடங்கியிருந்தது. தொடர்ந்து விஜயநகர, நாயக்க அரசர்களின் ஆட்சி இங்கிருந்தமைக்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. கொடும்பாளூர் வேளிர்குலச் சிற்றரசர்கள் சிராப்பள்ளிக் குழித்தலைச் சாலையிலமைந்துள்ள காவிரியின் தென்கரைத் தலங்கள் பலவற்றிற்கு அளித்துள்ள இறையிலி நிலக்கொடைகளும், இங்கிருந்த ஊரமைப்புகளுக்கு அவர்கள் அனுப்பியிருக்கும் திருமுகங்களும் இப்பகுதி அவர்தம் மேலாண்மைக்கு உட்பட்டிருந்ததோ எனக் கருதத் தூண்டுகின்றன.

பராய்த்துறை

ஆதித்த சோழரின் இருபத்து நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் நாட்டுப் பெயரின்றி வெறும் பராய்த்துறை என்று குறிக்கப்படும் இவ்வூர், முதற் பராந்தகரின் இருபத்திரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் உறையூர்க் கூற்றத்தின் கீழ் இணைக்கப்பட்டிருந்த ஊராகச் சுட்டப்படுகிறது.[2] இதே அரசரின் இருபத்தெட்டாம் ஆட்சியாண்டில் ஈசானமங்கலத்துப் பராய்த்துறை என்று இவ்வூர் குறிக்கப்படுவதால்,[3] அக்காலகட்டத்தில் இவ்வூர் ஈசானமங்கலத்து மேலாண்மையின் கீழ் இருந்ததாகக் கொள்ளலாம். முதற் பராந்தகரின் முப்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இவ்வூரை மீண்டும் உறையூர்க் கூற்றத்துப் பராய்த்துறையாகக் குறிப்பிடுவதால்[4] மிகக் குறுகிய

நன்றி : **சாஸ்தா ஃபார்மா,**
C 42, எட்டாம் குறுக்கு, மேற்குத் தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி - 620 018.

காலமே ஈசானமங்கலத்தின் ஆளுகையில் இவ்வூர் இருந்ததாகக் கருதவேண்டியுள்ளது.

முதல் இராஜராஜரின் ஆட்சிக்காலத்தே சோழமண்டலம் பல வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டபோது உறையூர், கேரளாந்தக வளநாட்டின் கீழடங்கிய நாட்டுப் பிரிவானது.[5] மூன்றாம் குலோத்துங்கரின் ஆட்சிக்காலத்தில் கேரளாந்தக வளநாடு ராஜகம்பீர வளநாடென்று அழைக்கப்பட்டது.[6] காவிரியின் தென்கரை நாடுகளுள் பல இவ்வளநாட்டுப் பிரிவின் கீழ் இணைக்கப்பட்டிருந்தன. இரண்டாம் பாண்டியப் பேரரசுக் காலம் வரை இவ்வமைப்பு முறை வழக்கிலிருந்தது. விஜயநகர, நாயக்கர் காலத்தில், காவிரியாற்றுக்குத் தெற்கே திருச்சிராப்பள்ளி உசாவடி ராஜகம்பீர வள நாட்டு மழநாட்டுத் தென்கரை உறையூர்க் கூற்றம் என இந்நாட்டுப் பிரிவு குறிப்பிடப்படுகிறது.[7]

உறையூர்க் கூற்றம்

பராய்த்துறையை உள்ளடக்கியிருந்த உறையூர்க் கூற்றத்தின் கீழிருந்த பிற ஊர்களாகத் தாருகாவனேசுவரர் கோயிற் கல்வெட்டுகள், நாவலூர், அல்லூர், கொடியாலம், தலைவாய்ப்பாடி, ஈசானமங்கலம், விசையாங்குரச் சதுர்வேதிமங்கலம், நன்னலூர், கருப்பூர், பருத்திக்குடியான தம்பிக்கினியான் நல்லூர் ஆகிய ஒன்பது ஊர்களைக் குறிக்கின்றன. இவை தவிர தாருகாவனேசுவரர் கோயிற் கல்வெட்டுகள் குறிக்கும் வயலூர், முள்ளிக் குறும்பூர், தச்சக்குடி, பெருகருணைப்புறம், புலிவலம், திருக்குளிர்மணியான ஜயங்கொண்ட சோழநல்லூர், கங்கை கொண்ட சோழநல்லூரான செம்பியன் கிளிஞல்லூர், கலியுகரம்பைநல்லூர், கொங்கு கொண்ட சோழநல்லூர், நாட்டார்மங்கலம், அரிஞ்சிகைச் சதுர்வேதிமங்கலம், ஜகதேகவீரச் சதுர்வேதிமங்கலம் ஆகிய பன்னிரண்டு ஊர்களும் உறையூர்க் கூற்றத்தின் கீழ் இணைக்கப்பட்டிருந்தமையைப் பிற ஊர்க் கல்வெட்டுகளால் அறியமுடிகிறது.[8]

இவ்வூர்களுள் ஜகதேகவீரச் சதுர்வேதிமங்கலம் சிராப்பள்ளியை அடுத்துள்ள பெருங்குடிக்கருகிலும், அரிஞ்சிகைச் சதுர்வேதிமங்கலம் இன்றைய நங்கவரத்திற்கருகிலும் இருந்தன. பராய்த்துறைக்குக் கிழக்கிலுள்ள திருச்செந்துறைக் கோயிற் கல்வெட்டுகள் பெரும்பாலானவற்றுள் இடம்பெற்றுள்ள ஈசானமங்கலமே தற்போதைய ஜீயபுரமாக

நன்றி : **டைமண்ட் ஆப்டிகல்ஸ்,**
2A, ஈ.வே.ரா. சாலை, புத்தூர், திருச்சிராப்பள்ளி - 620 003.
தொலைபேசி : 760 090

உருமாறியுள்ளது. பெருமுடியீசுவரர் திருக்கோயில், உய்யக்கொண்டான் திருமலை உஜ்ஜீவநாதர் திருக்கோயிற் கல்வெட்டுகளில் குறிக்கப்பெறும் விசையாங்குரச் சதுர்வேதிமங்கலமும், குளிர்மணிக் கோயிற் கல்வெட்டுகளில் இடம்பெறும் நாட்டார்மங்கலமும் எங்கிருந்தன என அறியக்கூடவில்லை. அந்தணர் குடியிருப்புகளாய் அமைந்த இவ்வைந்துந் தவிர்ந்த பிற ஊர்களை வெள்ளான் வகை ஊர்களாகக் கருதலாம்.

பிற நாடுகள்

உறையூர்க் கூற்றத்துப் பராய்த்துறையில் அமைந்திருந்த கோயிலுடன் ஏதாவது ஒரு வகையில் தொடர்புகொண்டிருந்த பிற நாடுகளாகக் கிழார்க் கூற்றம், பட்டினக் கூற்றம், சூரலூர்க் கூற்றம், மிழலைக் கூற்றம், விளா நாடு, வடசிறுவாயில் நாடு, வண்ணாடு ஆகியன கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றன. இவற்றுள் சூரலூர்க் கூற்றம் (குழித்தலை வட்டம்) காவிரியின் தென்கரையிலும், விளா நாடு (திருச்சிராப்பள்ளி வட்டம்) காவிரியின் வடகரையிலும் அமைந்திருந்தன. தாருகாவனேசுவரர் கோயிற் கல்வெட்டுகளில் குறிக்கப்படும் சூரலூர், மூலங்குடி, பேரூர், பெரிய வெண்மணி, திருவரங்கநல்லூர், கீழாரைவயல் ஆகிய ஊர்கள் சூரலூர்க் கூற்றத்தின் கீழிருந்தன. திருவானைக்காவும் முருக்கூரும் விளா நாட்டில் இணைக்கப்பெற்றிருந்தன. வன்னாடு, இன்றைய பெரம்பலூர் மாவட்டப் பகுதியிலுள்ள வாலிகண்டபுரத்தையும் அதனைச் சுற்றியமைந்திருந்த ஊர்களையும் உள்ளடக்கிய நாட்டுப் பிரிவாகும் கிழார்க் கூற்றம் பாபநாசம், தஞ்சாவூர் வட்டங்களில் பரவியிருந்தது. கிளிநல்லூர், மாத்தூர் ஆகிய இரு ஊர்களும் இக்கூற்றத்தின் கீழிருந்தன. பட்டனக் கூற்றம் என்றும் அறியப்பட்ட பட்டினக் கூற்றம் நாகபட்டின வட்டத்திலிருந்தது. கடம்பனூர் எனும் பிரமதேயம் இக்கூற்றத்திற்குள் இணைக்கப்பட்டிருந்தது. மிழலைக் கூற்றம் கும்பகோணம் வட்டத்தில் அமைந்திருந்தது. பராக்கிரம பாண்டியநல்லூரென்று பின்னாளில் பெயரேற்ற செய்யானம் இக்கூற்றத்திற்குட்பட்ட ஊராக விளங்கியது. விரைக்குடியை உள்ளடக்கியிருந்த வடசிறுவாயில் நாடு புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் வட்டத்தின் ஒரு பகுதியாக விளங்கியது.

பட்டினக் கூற்றம் சத்திரிய சிகாமணி வளநாட்டிலும், கிழார்க் கூற்றம் நித்தவிநோத வளநாட்டிலும், வடசிறுவாயில் நாடு பாண்டி குலாசனி வள நாட்டிலும், சூரலூர்க் கூற்றம் தொடக்கத்தில் கேரளாந்தக வளநாட்டிலும்

நன்றி : *சாஸ்தா ஃபார்மா,*
C 42, எட்டாம் குறுக்கு, மேற்குத் தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி - 620 018.

பின்னர் வளநாட்டின் பெயர் மாறிய நிலையில் ராஜகம்பீர வளநாட்டிலும் இணைக்கப்பட்டிருந்தன.

கிருஷ்ணதேவராயர் காலத்தில் சீர்மை என்ற பெயரில் வருவாய்ப் பகுதிகள் அமைந்திருந்தன. தஞ்சாவூர்ச் சீர்மை, பொன்கிரிப்பட்டணத்துச் சீர்மை, தாராசுரத்துச் சீர்மை ஆகியன குறிப்பிடத்தக்கன.

ஊர்கள்

பராய்த்துறை தவிர ஐம்பத்தேழு ஊர்ப் பெயர்கள் கிடைத்துள்ளன. இவற்றுள் மங்கலம், சதுர்வேதிமங்கலம், ஊர், குடி, நல்லூர் எனும் பின்னொட்டுக்களோடு அமைந்தவை நாற்பது.

ஊர்

1. அள்ளூர்
2. அல்லூர்
3. கிளிஞலூர்
4. சூரலூர்
5. நள்ளலூர்
6. முருக்கூர்
7. நாவலூர்
8. பேரூர்
9. வயலூர்
10. மாத்தூர்
11. பெரும்பன்றூர்
12. எழுமுள்ளூர்
13. துறையூர்
14. நன்னலூர்
15. களத்தூர்
16. கருப்பூர்
17. மருதூர்
18. மாங்களூர்
19. முள்ளிக்குறும்பூர்
20. கொடும்பாளூர்
21. கடம்பனூர்

குடி

1. வேம்பற்றான்குடி
2. மாறன்குடி
3. மூலன்குடி
4. தச்சக்குடி
5. விரைக்குடி
6. சேனைக்குடி
7. பெழாகுடி
8. பருத்திக்குடி

நன்றி : **டைமண்ட் ஆப்டிகல்ஸ்,**
2A, ஈ.வே.ரா. சாலை, புத்தூர், திருச்சிராப்பள்ளி - 620 003.
தொலைபேசி : 760 090

நல்லூர்

1. கங்கை கொண்ட சோழநல்லூரான செம்பியன் கிளிநல்லூர்
2. கலியுகரம்பைநல்லூர்
3. கொங்கு கொண்ட சோழநல்லூர்
4. மன்றச்சநல்லூர்
5. திருவரங்கநல்லூர்

மங்கலம்

1. விசையாங்குரச் சதுர்வேதிமங்கலம்
2. நாட்டார்மங்கலம்
3. ராசமங்கலம்
4. ஈசானமங்கலம்
5. அரிஞ்சிகைச் சதுர்வேதிமங்கலம்
6. ஜகதேகவீரச் சதுர்வேதிமங்கலம்

இவ்வூர்களுள் அள்ளூர் மட்டுமே பாண்டிய நாட்டு ஊராகக் குறிக்கப்படுகிறது. ஏனையன சோழ நாட்டு ஊர்களாகலாம். இவற்றுள் மங்கலம், சதுர்வேதிமங்கலம் எனும் பின்னொட்டுகளோடு அமைந்த ஆறு ஊர்களும் கடம்பனூரும் அந்தணர் குடியிருப்புகளாக விளங்கின. ஏனைய முப்பத்திரண்டு ஊர்களும் வெள்ளான் வகை ஊர்களாக இருந்தன. இவற்றுள் கொங்கு கொண்ட சோழநல்லூர் வணிகர் குடியிருப்பாக ஏற்படுத்தப்பட்டது. பருத்திக்குடி பின்னாளில் தம்பிக்கினியான்நல்லூரென்றும் அறியப்பட்டது. நன்னலூர், நங்கை பிரமதேயமான அரிஞ்சிகைச் சதுர்வேதிமங்கலத்துப் பிடாகையாக இருந்தது. அல்லூர், வயலூர், துறையூர், கருப்பூர், முள்ளிக்குறும்பூர், பேரூர், முருக்கூர், கொடும்பாளூர், விரைக்குடி, மூலன்குடி ஆகிய ஊர்கள் அதே பெயர்களுடன் அமைந்துள்ளன. மன்றச்சநல்லூர் மண்ணச்சநல்லூராகத் திரிந்துள்ளது.

பல்வேறு பின்னொட்டுக்களோடு அமைந்த பெயர்களாகப் பதினேழு ஊர்களின் பெயர்கள் கிடைத்துள்ளன.

நன்றி : **சாஸ்தா ஃபார்மா,**
C 42, எட்டாம் குறுக்கு, மேற்குத் தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி - 620 018.

1	பெருகருணைப்புறம்	10	திருவக்கீசுவரம்
2	புலிவலம்	11	நங்கைபுரம்
3	மாயிலங்கால்	12	திருநியமம்
4	கொடியாலம்	13	திருவானைக்கா
5	திருவாலந்துறை	14	திருச்சிராப்பள்ளி
6	தலைவாய்ப்பாடி	15	அங்காரை
7	கொம்மைப்பாக்கம்	16	செய்யானமான பராக்கிரம பாண்டியநல்லூர்
8	திருக்குளிர்மணி		
9	பெரிய வெண்மணி	17	கீழாரைவயல்

பின்னாளில் ஐயங்கொண்ட சோழநல்லூரென்றும் அறியப்பட்ட திருக்குளிர்மணி தற்போது குழுமணியாகியுள்ளது. புலிவலம், கொடியாலம், திருநியமம், திருவானைக்கா, திருச்சிராப்பள்ளி ஆகிய ஊர்கள் இன்றளவும் அதே பெயர்களைக் கொண்டுள்ளன. நங்கைபுரம் தற்போது நங்கவரமென்றும், பெரிய வெண்மணி பெருகமணியென்றும் அழைக்கப்படுகின்றன. பிற ஊர்களை அடையாளம் காணக்கூடவில்லை. பின்னொட்டு கொண்டு நங்கைபுரத்தை வணிகக் குடியிருப்பாகக் கருதலாம்.

நிர்வாக அமைப்புகள்

கல்வெட்டுகளில் ஊரோம், சபை, நாட்டார் எனும் அமைப்புகள் ஊர், நாடு சார்ந்த நிர்வாக அமைப்புகளாகச் சுட்டப்படுகின்றன. மகாசபை, பெருங்குறி மகாசபை என்றெல்லாமும் குறிப்பிடப்படும் சபைகள் அந்தணர் குடியிருப்புகளான பிரமதேயங்களில் நிர்வாகஞ்செய்தன. வெள்ளான் வகை ஊர்கள், 'ஊரோம்' என்றழைக்கப்படும் ஊர் உறுப்பினர்களின் நிர்வாகத்தில் அமைந்தன. கூற்றங்களும், நாட்டுப் பிரிவுகளும் 'நாட்டார்' எனும் அமைப்பின் கீழ் இயங்கின. ஈசானமங்கலத்திலிருந்த சபை குறித்துப் பராய்த்துறைக் கல்வெட்டுகள் ஏதும் குறிப்பிடவில்லையெனினும், திருச்செந்துறைக் கல்வெட்டுகள் அச்சபை பற்றிய தகவல்களைத் தருகின்றன.[9] தேவதான பிரமதேயமாக அறியப்படும் நங்கை பிரமதேயமான அரிஞ்சிகைச் சதுர்வேதி மங்கலத்தில் சபையிருந்தது. இச்சபையார் திருப்பராய்த்துறைக் கோயிலாரிடம்

நன்றி : **டைமண்ட் ஆப்டிகல்ஸ்,**
2A, ஈ.வே.ரா. சாலை, புத்தூர், திருச்சிராப்பள்ளி - 620 003.
தொலைபேசி : 760 090

ஐம்பது கழஞ்சு பொன் கடன்பட்டிருந்தனர். விசையாங்குரச் சதுர்வேதிமங்கலத்து சபையார் பராய்த்துறைக் கோயில் ஸ்ரீகாரியம் ஆராய்ந்தாருடன் இணைந்து கோயிற் செயற்பாடுகளில் மிகுந்த ஆர்வம் காட்டினர். பராய்த்துறைக் கோயிற் சார்ந்த நிவந்தங்கள் சில அவர்களால் உருவாக்கப்பட்டன. பிறரால் உருவாக்கப்பட்ட நிவந்தங்கள் சில அவர்தம் காப்புக்குட்படுத்தப்பட்டிருந்தன. இச்சபையார் கோயிலுக்கென நிலம் விற்றுத் தந்ததையும் அறியமுடிகிறது.

அல்லூர், நள்ளலூர், நாவலூர், நன்னலூர், கொடியாலம், புலிவலம் ஆகிய ஆறு ஊர்களின் ஊரார், கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளனர். ஊரவையின் கடமைகள், அதிகாரங்கள் குறித்துத் தெளிவான சுட்டல்கள் இல்லையென்றாலும், கோயிலுக்காக நிலம் விற்பனைசெய்த விற்பனையாளர்களாக இவ்வூரார் அடையாளப்படுகின்றனர். இவர்கள் தங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'ஊராயிசைந்த கொடியாலத்து ஊரோம்', 'நன்னலூர் ஊராவிசைந்த ஊரோம்', 'நாவலூர் ஊரோம்' என்று பல்விதமாய்ச் சுட்டுகிறார்கள். ஊரோம் என்பது, 'ஊரைச் சார்ந்த அனைவரும் பங்குகொண்ட' எனும் பொருளில் அமைந்திருப்பதாகக் கருதலாம். பிரமதேய நிர்வாகம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சபையால் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் ஊர் நிர்வாகம் ஊராரின் ஒருமித்த கண்காணிப்பில், ஊர் சார்ந்த ஒவ்வொருவருக்கும் பங்களிப்பு இருக்குமாறு நிகழ்ந்தது எனக் கொண்டால் அது தவறாகாது.

பல ஊர்களின் தொகுதியாக விளங்கிய நாடு அல்லது கூற்றம் நாட்டாரின் நிர்வாகத்தில் இருந்தது. சடையவர்மர் சுந்தர பாண்டியருக்குரிய ஒன்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று அவர் காலத்தே ராஜகம்பீர வளநாட்டில் இணைக்கப்பெற்றிருந்த அகர பிரமதேயங்கள், நாடுகள் ஆகியவற்றின் நிர்வாக அமைப்புகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிலரின் பெயர்களைத் தருகிறது.

காரம்பிச்செட்டு நம்பிப்பிரான்பட்டன், ஸ்ரீதரபட்டன், காரம்பிச்செட்டு நாராயணபட்டன், நம்பூரி தாமோதரபட்டன், காரம்பிச்செட்டு செல்வ நம்பி, அழகிய மணவாள நம்பி, அழகிய சோழ பிரமாதிராயன், நாராயணபட்டன், அழகிய சோழ பிரும்மாராயன், இராசேந்திரசோழ பிரும்மாராயன், ஆட்கொளிபட்டன், ஆவிடையான்பட்டன், மதுசூதனபட்டன், திருவரங்க நாராயணபட்டன், மாங்களூர்பட்டன் ஆகிய பதினைந்து பேர் ராஜகம்பீர

நன்றி : **சாஸ்தா ஃபார்மா,**
C 42, எட்டாம் குறுக்கு, மேற்குத் தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி - 620 018.

வளநாட்டின் அகர பிரமதேய மகாசபைகளின் சார்பாக ஆவணமொன்றில் கையெழுத்திட்டுள்ளனர். மூன்று பெயர்கள் கல்வெட்டில் சிதைந்துள்ளன.

நாட்டார் அமைப்பின் உறுப்பினர்களாக முள்ளிக்குறும்பூரைச் சேர்ந்த இராஜராஜ கனகபுரிவேளான், அற்றவன் தில்லையுள் ஆடுவான், வயலூரைச் சேர்ந்த கிழவன் இலங்கேசுவரன், சோழங்கப் பல்லவரையன், விழித்துறங்கும் பெருமாளான சத்தி அரையன், கிழவன் ஆகிய அறுவர் இதே ஆவணத்தில் கையெழுத்திட்டுள்ளனர். ராஜகம்பீர வளநாட்டின் கீழ்ப் பலநாடுகள் இருந்தபோதும் உறையூர்க் கூற்றத்தைச் சேர்ந்த இரண்டு ஊர்களின் பிரதிநிதிகள் மட்டுமே இவ்ஆவணத்தில் கையெழுத்திட்டிருப்பதன் பின்புலத்தை ஆராயவேண்டியுள்ளது.

சிற்றரசர்கள்

தாருகாவனேசுவரர் கோயிற் கல்வெட்டுகள் கொடும்பாளூர் வேளிர் குலச் சிற்றரசர்கள் மூவர் பெயர்களைத் தருகின்றன. சூரலூர்க் கூற்றம் கீழாரைவயல் நிலத்தைப் பராய்த்துறைக் கோயிலின் பல்வேறு செயற்பாடுகளுக்காகக் கொடையளித்த தென்னவன் இளங்கோவேளான மறவன்பூதி, சோழ மன்னரான அரிஞ்சயருக்கு மகட்கொடை தந்தவர். இவர் மகள் பூதி ஆதித்தபிடாரி பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகச் சிறந்த பெண்ணரசிகளுள் ஒருவர். பராய்த்துறைக்குக் கிழக்கிலுள்ள செந்துறையில் சிவபெருமானுக்காகச் சிற்பச் சிறப்புடைய கற்றளியொன்றை நிறுவிய இவ்வம்மையின் அருட்கொடைகள் செந்துறைக் கோயிலில் பதின்மூன்று கல்வெட்டுகளாக இடம்பெற்றுள்ளன.[10]

இளங்கோவேள் பெயரும், முன்னொட்டு சிதைந்த மற்றோர் இளங்கோவேள் பெயரும் பராய்த்துறையோடு தொடர்பு கொண்டிருந்த வேளிர் குலச் சிற்றரசர்களாக அறியப்படுகின்றன. கல்வெட்டுச் சிதைவுகளால் இவர்தம் தொடர்பின் சிறப்பை அறியக்கூடவில்லை.

அரசு அலுவலர்கள்

மூன்றாம் குலோத்துங்கரின் திருமந்திர ஓலை அலுவலர்களாக இராஜநாராயண மூவேந்த வேளான், நெறியுடைச் சோழ மூவேந்த வேளான் ஆகியோரும், உயர் அலுவலர்களாக வில்லவராயன், விழிஞத்தரையன், சிங்களராயன், தொண்டைமான், கனகராயன், காடவராயன், அங்கராயன்,

நன்றி : **டைமண்ட் ஆப்டிகல்ஸ்,**
2A, ா.வே.ரா. சாலை, புத்தூர், திருச்சிராப்பள்ளி - 620 003.
தொலைபேசி : 760 090

சேதிகுலராயன், மூவேந்தரையன், நீலகங்கராயன், சோழகோன், விசையதரையன் ஆகியோரும் பணியாற்றினர். முக்கிய அலுவலர்கள் அரச ஆணைகளில் கையொப்பமிடும் பொறுப்பிலிருந்தனர். பெரும்பாலான ஆணைகள் இம்முக்கிய அலுவலர்களின் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே பிறப்பிக்கப்பட்டன. பராய்த்துறை இறைவனின் திருநாமத்துக்காணி நிலத்தில் இருபது வேலியை இறையிலித் தேவதானமாக அறிவிக்கும் அரச ஆணை உயர் அலுவலர்களால் கையெழுத்திடப்பட்டிருந்தாலும் இதற்கு யாரும் பரிந்துரைக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. இதே போன்ற மற்றோர் ஆணை உயர் அலுவலர்களுள் ஒருவரான சோழகோனின் பரிந்துரையேற்று பிறப்பிக்கப்பட்டது. தொண்டைமான் எனும் உயர் அலுவலரின் பரிந்துரைப்படி பிறப்பிக்கப்பட்ட அரச ஆணை கொங்கு கொண்ட சோழநல்லூர் எனும் புதிய ஊர் உருவாகக் காரணமாய் அமைந்தது.

முதல் இராஜேந்திரரின் காலத்தில் உறையூர்க் கூற்றத்தின் நாடு வகை செய்யும் அலுவலராகக் காரிக்குடையான் வீரசோழன் பிரளய சிந்தாமணி விளங்கினார். இன்னாரென்று அடையாளப்படுத்தமுடியாத கோப்பரகேசரிவர்மரின் ஆட்சிக்காலத்தில் உறையூர்க் கூற்றத்தில் வானவன் பிரும்மாதராயர் இப்பொறுப்பிலிருந்தார். வருவாய்த்துறைப் பிரிவில் வரிக்கூறு செய்யும் அலுவலர்கள் இருந்தனர். அரச ஆணைகளால் இறையிலியாக்கப்பட்ட நிலங்களைப் பற்றிய தகவல்கள் தவறாது வரிக்கூறு செய்பவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டன. இவ்வரி விலக்கங்களைக் கணக்கிலிட்டுக்கொள்வது அவர்தம் கடமையாக இருந்தது.

இரண்டாம் பாண்டியப் பேரரசுக் காலத்தில் சுந்தர பாண்டியரின் மண்டல முதலிகளில் ஒருவராகக் காலடி சங்கரன் அழகப் பெருமாளான மழவராயர் விளங்கினார்.

வரிகள்

இறை, எச்சோறு, வெட்டி, செந்நீர்ப் பொதுவினை, குடிமை, பணி, கடமை முதலிய வரிகள் சோழர் காலத்தில் ஆட்சியாளரால் உழைப்பவரிடமிருந்து பெறப்பட்டன. இவற்றுள் இறை, எச்சோறு, குடிமை, கடமை, பணி ஆகியன நிலத்தோடு தொடர்புடைய வரிகளாகத் தண்டப் பெற்றன. இவற்றுள் இறை பல்லவர் காலத்திலிருந்து வழக்கிலிருந்து வரும் வரியினமாகும். எச்சோறு அலுவல் காரணமாக ஊருக்கு வரும் அரசுப்

நன்றி : சாஸ்தா ஃபார்மா,
C 42, எட்டாம் குறுக்கு, மேற்குத் தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி - 620 018.

பணியாளருக்குச் சோறளிக்கக் கொள்ளப்பட்ட வரியினமாகக் கருதப்படுகிறது.[11] கடமை, குடிமை இரண்டுமே நிலவரிகளாக அமைந்தாலும், கடமை பல்வேறு முன்னொட்டுகளையேற்றுப் பிற வரிகளைக் குறிப்பதுமுண்டு. ஆனால் தாருகாவனேசுவரர் கல்வெட்டுகளில் இப்புறஞ்சுட்டல் இல்லை. இப்பகுதியிலுள்ள பிற கல்வெட்டுகளில் இடம்பெறாத 'பணி'யும் நிலவரியினமாகவே அறிமுகம் பெறுகிறது. வெட்டி, செந்நீர்ப் பொதுவினை எனும் இவ்விரண்டும் நிலமுடைய மக்கள் ஆற்றக் கடமைப்பட்டிருந்த கிராமப் பொதுப்பணிகளாக அமைந்தனவென்று அறிஞர்கள் கருதுகின்றனர்.[12] ஊதியம் பெறாது வழங்கப்பட்ட இவ்வுழைப்பும் அரசு வருவாயில் ஒரு வகையே என்பார் ப.சண்முகம்.[13]

செக்கு ஆட்டுபவர்களிடமிருந்து பெறப்பட்ட வரி செக்காயம் எனப்பட்டது. சோழர் காலத்திலிருந்தே பெறப்பட்ட இவ்வரி இரண்டாம் பாண்டியப் பேரரசுக் காலத்தும் தொடர்ந்தது. கிருஷ்ணதேவராயர் விலக்கிய வரிகளாகக் குறிப்பிடப்படும் ஜோடி, சூலவரி, நிலவழி, அரசுப்பேறு என்பன விஜயநகர காலத்தில் மக்களிடமிருந்து தண்டப்பெற்ற வரியினங்களாகும்.

மூன்றாம் குலோத்துங்கர் காலக் கல்வெட்டொன்று இப்பகுதியில் விளைநிலத்திற்கு நெல்லும், புன்பயிருக்கும் மனையிறைக்குமாகக் காசும் வரியாகத் தண்டப்பெற்ற தகவலைத் தருகிறது. திருமலைநாயக்கர் காலத்து நிலவரிகளாக உதையம், பாளையப்பகுதி என்பன வசூலிக்கப்பட்டன.

ஊராக்கம்

சோழராட்சிக் காலத்தில் தேவைக்கேற்ப புதிய ஊர்கள் பல உருவாக்கப்பட்டன. இவ்வுருவாக்கங்கள் அரசாணை பெற்றே அமைந்தன. கி.பி. 1202இல் பெரும்பன்றூர்க் கிழவன் குலோத்துங்க சோழ விசையபாலன் ஊறையூர்க் கூற்றத்தைச் சேர்ந்த திருக்குளிர்மணியான ஜயங்கொண்ட சோழநல்லூர், கங்கை கொண்ட சோழநல்லூரான செம்பியன் கிளிநல்லூர், கலியுகரம்பைநல்லூர், தச்சக்குடி, பேரூர் ஆகிய ஐந்து கிராமங்களின் நில உடமையாளர்களிடமிருந்து நூற்றுத் தொண்ணூற்றேழே முக்காலே மாகாணிக் கீழ் அரையே மும்மாவரையே அரைக்காணி முந்திரிகை நிலம் விலைக்குப் பெற்று, அரசாணை வழி அந்நிலப்பகுதியைக் கொங்கு கொண்ட சோழ நல்லூரென்னும் புதிய ஊராக உருவாக்கினார். வணிகர்களுக்கான காணியாகவும், குடியிருப்புப் பகுதியாகவும் அமைந்த இப்புதிய ஊரில்

நன்றி : **டைமண்ட் ஆப்டிகல்ஸ்,**
2A, ஈ.வே.ரா. சாலை, புத்தூர், திருச்சிராப்பள்ளி - 620 003.
தொலைபேசி : 760 090

இருபத்தைந்தரையே அரைக்காணி முந்திரிகைக் கீழ் அரை அளவு நிலம் இவ்வூரை உருவாக்கிய குலோத்துங்க சோழ விசையபாலனுக்குக் காணியாக்கப்பட்டது. திருக்குளிர்மணி மகாதேவர் கோயில், திருக்கோடீசுவரமுடையார் கோயில், திருமேற்கோயில், உலகமுண்ட ஆழ்வார் கோயில் ஆகிய நான்கு கோயில்களுக்கும் தேவதான இறையிலியாக இவ்வூர்ப் பகுதியின் ஏழுவேலி நிலம் முறையே ஐந்து வேலி, ஒருவேலி, அரைவேலி என்ற அளவில் ஒதுக்கப்பட்டுள்ளது. புதிய ஊரின் விளைநிலங்கள், புன்பயிர், மனை ஆகியவற்றிலிருந்து பெறவேண்டிய வரியினமான கடமையின் அளவு ஆணை வழி ஊரார்க்கும், வருவாய்த்துறை அலுவலர்க்கும் அறிவிக்கப்பெற்றது.

குற்றவியல்

தவறு செய்தவர்கள் அரசு அலுவலர்களாக இருந்தாலும் தண்டனைக்குள்ளாயினர். இத்தண்டனைகள் பல்வேறு விதமானவையாய் இருந்தன. உறையூர்க் கூற்றம் கருப்பூரைச் சேர்ந்த அரையன் ஆளியாரான கேரளாந்தக விழுப்பரையன் அரசுக்குச் செலுத்தவேண்டிய நிலவரியான கடமையைப் பாண்டிய வேந்தர் சுந்தர பாண்டிய தேவரின் எட்டாம் ஆட்சியாண்டுவரை தரவில்லை. காவிரியாற்றின் தென்கரையில் இவர்க்கிட்ட அரைக்கோல் பகுதிக்கு ஆள் ஏற்றாக் குற்றத்திற்குத் தண்டமாக விதிக்கப்பட்ட பொன்னைக் கட்டவில்லை. திருவானைக்காவுடையார் தேவதானம் தொடர்பாகத் தரவேண்டிய பணமும் தரப்படாது நின்றது. இம்மூன்று முறை கேடுகளுக்காகவும் அரையன் ஆளியாரின் மருமக்களில் கிளிஞலூர்க் கிழவன் வானவன் விழித்துறங்கும் பெருமாளான வானவிழுப்பரையரையும், அவர் தம்பி காக்கு நாயகரான மழவதரையரையும் ஜகதேகவீரச் சதுர்வேதிமங்கலத்துப் படைப்பள்ளி நாலாயிர விழுப்பரையன் சிறையிலிட, அவர்கள் கல்தளை முறித்துத் தப்பியோடிவிட்டனர்.

இந்நிலையில் அரையன் ஆளியார் செலுத்தவேண்டிய கடமையை அவருக்குக் காணியான ஊர்களிலுள்ள விளைநிலம், நத்தம், ஆய்குடி உள்ளிட்ட பகுதிகளை விற்றுச் செலுத்துமாறு ராஜகம்பீர வளநாட்டைச் சேர்ந்த நாட்டவர்க்கும், அகர பிரமதேயங்களார்க்கும் அரசாணை அனுப்பப்பெற்றது. அதன்படி பருத்திக்குடியான தம்பிக்கினியான்நல்லூரில் இருந்த அரையன் ஆளியாரின் உடமைகள் தாருகாவனேசுவரர் கோயிலுக்கு அறவிலைக்கு விற்கப்பட்டன.

நன்றி : **சாஸ்தா ஃபார்மா,**
C 42, எட்டாம் குறுக்கு, மேற்குத் தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி - 620 018.

கிருஷ்ணதேவராயரின் வெற்றியுலா

கிருஷ்ணதேவராயரின் வெற்றியுலா தாருகாவனேசுவரர் கோயிற் கல்வெட்டொன்றில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. விஜயநகரப் பட்டணத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட பூர்வ திக்கு விஜய யாத்திரையாகக் குறிக்கப்படும் இவ்வுலாவில் பல நாடுகள் கைப்பற்றப்பட்டன; பல பேரரசர்கள் தோற்கடிக்கப்பட்டுச் சிறைப்படுத்தப்பட்டனர். உதையகிரி, வினிக்கொண்டை, நாகார்ஜுன கொண்டை, வெல்லம் கொண்டை, கொண்டவீடு, கொண்டபள்ளி, ராஜமகேந்திரபுரம் முதலிய துர்க்கங்கள் பிடிபட்டன. திருமலைராய ராகுத்தர் பிடிபட்டார். பிரதாபருத்ர கஜபதி கொல்லப்பட்டு, அவர் மகன் வீரபத்ரசேனன், கஜபதி பிரதானிகளான பூபதி பரகாலகன், சிரஸ்சந்திரன், மல்லூக்கானன், உத்தண்டகானன் ஆகியோர் சிறைப்பிடிக்கப்பட்டனர். இவ்வெற்றி களையடைந்த ராயர் சிம்ஹாத்ரைக்கு எழுந்தருளிப் பொட்டனூரில் வெற்றித்தம்பம் நாட்டினார். அதுபோழ்து திருச்சிராப்பள்ளி உசவாடித் தென்கரை ராஜகம்பீர வளநாட்டுத் திருப்பராய்த்துறை முதலிய சோழமண்டலத்து ஊர்கள், பொன்கிரிப் பட்டணத்துச் சீர்மை, தாராசுரத்துச் சீர்மை, தஞ்சாவூர்ச் சீர்மை ஆகியவற்றில் அடங்கிய சிவ, விஷ்ணு தலங்களுக்கான பதினாயிரம் வராகன் மதிப்புள்ள ஜோடி, சூலவரி மற்றும் பல புறவரிகளும் அரசரால் சர்வமான்யமாக அந்தந்தத் திருத்தலங்களுக்கே உரிமையாக்கப்பட்டன.

ii) சமுதாயம்

மக்கள்

தாருகாவனேசுவரர் கோயிலுக்குக் கொடையளித்த பெருமக்களாகக் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளவர்களுள் ஒருவர்கூட பராய்த்துறையைச் சேர்ந்தவர் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. மக்கட் பிரிவுகளுள் அந்தணர், வேளாளர், செட்டிமார், வேட்கோவர், இடையர் ஆகியோர் சோழர் காலக் கல்வெட்டுகளிலும், பள்ளியர், நாயக்கர் ஆகியோர் சோழர்க்குப் பிற்பட்ட கல்வெட்டுகளிலும் இடம்பெற்றுள்ளனர். அந்தணர்களின் பல்வேறு உட்பிரிவுகள் பிரமதேயங்களில் பரவலாகக் குடியிருந்ததை அறியமுடிகிறது. மூன்றாம் குலோத்துங்கர் காலத்தில் வணிகர்களுக்கென புதிதாக ஓர் ஊரே, கொங்கு கொண்ட சோழநல்லூரென்னும் பெயரால் உருவாக்கப்பட்டது.

பாசனத்திற்கான நீர்ப்பகுதிகளின் மதகுகளை இயக்கியவர்கள் ஒரு குழுவாக வாழ்ந்ததுடன், தங்களைத் தலைவாய்ச் சன்றோர் என அழைத்துக் கொண்டனர். உறையூர்க் கூற்றத்தைச் சேர்ந்த தலைவாய்ப்பாடியில் மாறன்குடியைச் சேர்ந்த பதினெழுவர் இப்பொறுப்பிலிருந்தனர். இவர்கள் நில உரிமையாளர்களாக விளங்கினர்.

விஜயநகர வேந்தர்களின் ஆட்சிக்காலத்தில் சூரலூர்க் கூற்றத்துப் பெரிய வெண்மணியில் பரதேசிகள் பலராய் வாழ்ந்தனர். காவிரியின் வடகரையிலிருந்த மன்றச்சநல்லூரில் மலையாளர் குடும்பங்கள் இருந்தன. இக்குடும்பங்களுள் ஒன்றைச் சேர்ந்த அண்ணாவுடையார் வடுகப் பிள்ளையாரின் பெயர்த்தி பிறையாள், சூரலூர்க் கூற்றத்துப் பெரிய வெண்மணி களத்தூருடையார் திருவக்கீசுவரமுடையார் மழவரையருக்கு, பிரீதி தானம் பெறுமளவுக்கு நெருக்கமாக இருந்தார்.[14]

மக்கள் பெயர்களுள் வளவன், சிங்கன், பாழிநக்கன், இளங்கோவேள், கொற்றன், வில்லவன், விழித்துறங்கும் பெருமாள், அழகப்பெருமாள், உய்யவந்தானான திருச்சிற்றம்பலப் பல்லவரையன், உய்யக்கொண்டான் திருச்சிற்றம்பலமுடையார், நங்கை கற்றளி, நங்கை அல்லி அரசியார், பிறையாள், அரையன் ஆளி, அழகிய மணவாள நம்பி, சேந்தன் எனும் பெயர்களே வடமொழி கலவாத் தமிழ்ப் பெயர்களாக உள்ளன.

கல்வி

பிரமதேய ஊர்களின் நிர்வாக சபை உறுப்பினராவதற்கான தகுதிகளில் ஒன்றாக வேத அறிவு குறிப்பிடப்படுவதால் அந்நாளில் வேதக்கல்வி சிறப்புற்று விளங்கியதாகக் கருதலாம். கோயிலுக்கு வரும் சிவயோகியருள்ளும் வேதம் வல்ல சிவயோகியருக்குத் தனிச் சிறப்பிருந்தது. அவர்கட்குத் திருக்கோயிலில் உணவு பரிமாறக் கொடைகள் தரப்பட்டிருந்தன. விலையாவணங்கள் எழுதப்பட்டுள்ள நேர்த்தியும், அவற்றில் காணப்படும் சொல்லாட்சிகளும், கணக்கியல் கூறுகளும் அக்கால மக்களின் சட்ட, கணித அறிவுக்குச் சான்றுகளாகின்றன.

அரச ஆணைகள் திருமுகங்களாகி, உரியவர்களால் நிறைவேற்றப்பட்ட பாங்கும், வருவாய்த்துறை செயற்பட்ட முறையும், அங்கிருந்த பதிவேடுகளும் அக்கால மக்களின் நிர்வாக அறிவு பற்றிய தெளிவிற்கு வித்திடுகின்றன.

வேளாண்மை

அரசு மற்றும் நிர்வாக அமைப்புகளுக்கான வருவாய் வழங்கும் முதன்மைத் தொழிலாக வேளாண்மை அமைந்தது. நிலங்கள், அவற்றின் பாசன வசதி கொண்டு நன்செய், புன்செய், நீர்நிலம் என்று வகைப்படுத்தப்பட்டிருந்தன. நிலத்தின் விளைதிறன் கொண்டு அவை தரமிடப்பட்டிருந்தன. பயிர் செய்ய வாகாய் இருந்த நிலம் விளைநிலம் என்றும், பயிர் செய்ய வகையின்றிக் கிடந்த நிலம் களர், தரிசு, திடல், பாழ் என்றும் அழைக்கப்பெற்றன. விளைந்தறியா நிலங்கள் பண்படுத்தப்பட்டு, நீர்வரத்துக்கு உட்படுத்தப்பட்டு விளைச்சலுக்குக் கொணரப்பட்டமையை

வயக்கல், மயக்கல் என்ற சொற்கள் குறிக்கின்றன. இத்தகு நிலங்கள் வயக்கல் நிலம் என்றும் விளாகம் என்றும் பெயர்பெற்றன. 'கல்லி வசக்கித் திருத்திய நிலம்' என்று கல்வெட்டுச் சொல்லாட்சி இப்பண்படுத்தலைச் சுட்டுகிறது. இத்தகு முயற்சிகளால் விளைநிலங்களின் பரப்பு அதிகப்பட்டது. சோழராட்சியின் கீழ் இச்செயற்பாடு பல ஊர்களில் மேற்கொள்ளப்பட்டமைக்குக் கல்வெட்டுச் சான்றுகள் நிறைய உள்ளன.

சிவன் வசக்கல், தூறாடி வயக்கல், சோலை நக்கன் வயக்கல், நம்பி வயக்கல், பெருமாள் வயக்கல், ஐந்தளி வயக்கல், வளையன் வயக்கல், மாயிலங்கால் கிழவன் சிங்கன் வயக்கல், உமை வசக்கல், கோனடி வயக்கல், அருமொழி தேவ வயக்கல், சிவபத்தர் வயக்கல், கணபதி வயக்கல், விஷ்ணு விளாகம் எனவும், நக்கன் எறனான அப்பப் பிச்சன் மயக்கின நிலம், கல்லிறை பட்டன் மகன் பட்டன் கண்டர் கண்டன் திருப்பராய்த்துறைப் பாழில் கல்லி வயக்குவித்த நிலம், மயங்கும் பெருமாள் வயக்கின நிலம் எனவும் பெயரேற்றிருந்த இந்நிலப்பகுதிகளுள் பெரும்பான்மையன கோயிலுக்குக் கொடையளிக்கப்படுவதற்காகவே விலைக்குப் பெறப்பட்டுப் பண்படுத்தப்பட்டன.

பிரமதேய ஊர்களிலிருந்த திடல்களின் சில பகுதிகளும் தனியரால் விலைக்குப் பெறப்பட்டு, விளைச்சலுக்கு ஏற்றாற் போல் திருத்தியமைக்கப்பட்டுத் தாருகாவனேசுவரர் கோயிலுக்குக் கொடையளிக்கப்பட்டன. இத்திடல்கள் 'சபைப் பொதுவாக' இருந்தன. இதுபோலவே வெள்ளான் வகை ஊர்களில் ஊர்ப் பொதுவாக இருந்த நிலங்களை ஊரார் கோயிலுக்கு விற்றுள்ளனர்.

பெரும்பாலான நிலங்கள் புலிவலம் கிழவன் காவனப்பன் நிலம், வத்தராயர் நிலம், அடிங்கலிக் கொற்றன் நிலம், வீதிவிடங்கன் நிலம், கருநாலையன் நிலம், பழுப்பிலி நிலம், கூத்தன் செய், அணிலைக் கண்டன் செய், வண்ணான் குண்டு, கண்டர் கண்டன் தடி, பிராட்டி தடி என்று அவற்றின் உரிமையாளர் பெயரால் அறியப்பட்டன. புன்னைச்செய், பொரோசஞ்செய், ஆலஞ்செய், புளியஞ்செய், இலந்தை அடி, நாற்றங்கால் தடி, நாற்றங்கால் குண்டு, பனங்காட்டு நிலம் என விளையும் பொருளுக்கேற்பவும் நிலங்கள் பெயரிடப்பட்டிருந்தன. திருஅமிர்துபுறம், திருமுளைப்புழுதிச்செய், அப்பச்செய் என்று கோயிலின் எந்தச் செயற்பாட்டிற்காகக் கொடையளிக்கப்பட்டனவோ, அச்செயற்பாட்டையே பெயராகக் கொண்ட நிலப்பகுதிகளும் இருந்தன. புறச்சமய நிறுவனங்களுக்குக் கொடையளிக்கப்பட்டிருந்த நிலங்கள் பள்ளிச்சந்தமென்றும், கோயில்களுக்குத் தரப்பட்ட நிலங்கள் தேவதானங்களென்றும் அறியப்பட்டன. தேவதானங்களும் பெயர் பெற்றிருந்ததை நிறைமதி உணர்த்துகிறது.

எருமைச்செய், கிழுது, பிண்டிக் காறாயில், முட்டை, நெடுங்கண், மீமுடிச்செய் எனும் பெயர்களிலும் நிலப்பகுதிகள் அமைந்திருந்தன. இராசேந்திர சோழன் குண்டு, முடிச்சோழன் தடி என்பன மன்னர் பெயரேற்றிருந்த நிலப்பகுதிகளாகும், குண்டு, தடி எனும் பின்னொட்டுக்கள் நிலங்களின் அளவுகளைக் குறித்தன. நீர்க்கால்களின் தலைவாய்ப் புறத்திருந்த நிலப்பகுதி தலைமலைப்புறமெனச் சுட்டப்பட்டது.[15]

நிலங்களின் விளைதிறனுக்கும், பாசன வாய்ப்புகளுக்கும் ஏற்ப ஒருபோகம், இருபோகமெனச் சாகுபடி செய்யப்பட்டது. இவ்விளைநிலங்கள் ஒரு பூ நிலம், இரு பூ நிலம் என்று பாகுபடுத்தப்பட்டன. விளைச்சல் கார், பசானம் என இரு காலங்களில் அமைந்ததால் வரியினங்களும் அதற்கேற்பத் தண்டப்பெற்றன. கார்மறு என்றும் இருபோக நிலங்கள் குறிக்கப்பெற்றன.

நீர்ப்பாசனம்

காவிரியின் தென்கரையில் அமைந்திருந்ததால் பராய்த்துறை நிலங்கள் நதி நீர்ப்பாசனத்தில் செழித்திருந்தன. வெள்ளம் ஏற்பட்டபோது இப்பகுதி நிலங்கள் பாதிக்கப்பட்டதுமுண்டு. பராய்த்துறைக்குக் கிழக்கிலுள்ள அல்லூர்ப் பசுபதீசுவரத்துக் கோயிற் கல்வெட்டுகள் இவ்வெள்ளப் பாதிப்புகள் பற்றி விரிவாகச் சுட்டுகின்றன.[16] காவிரியிலிருந்து வெட்டப்பட்ட வாய்க்கால்கள், பராய்த்துறைக்கும், அதைச் சுற்றியமைந்திருந்த பல ஊர்களுக்கும் நீர்ப்பாசன வசதியளித்தன. ஸ்ரீபூதி வாய்க்கால் விசையாங்குரச் சதுர்வேதிமங்கலத்தை வளமாக்கியது. நீர் நிரம்பிய குளமும் இவ்வூரில் இருந்தது. கொடியாலம் திருநாராயண வாய்க்காலால் வளம்பெற்றது. இவ்வாய்க்காலிலிருந்து பிரிந்த கண்ணாறுகள் கொடியாலத்தின் பல்வேறு நிலப் பகுதிகளுக்கும் பாசனமளித்தன. வடவாய் ஆறு, பெயரற்ற வாய்க்கால் இவற்றுடன் கொடியாலத்து அணையும் இவ்வூர் நிலங்களின் விளைச்சலுக்கு உறுதுணையாயின. புலிவலம், நாவலூர் நிலங்களுக்கு நீரளித்த வாய்க்கால்கள் முறையே தெற்கிலும், கிழக்கிலும் ஓடின. நாவலூரிலிருந்த நீர்த்திறப்பு மதகு மங்கலத்தான் வாய் என்றழைக்கப்பெற்றது. பேரூர் நிலங்களுக்குப் பாசனமளித்த வாய்க்கால், அவ்வூரின் கிழக்கிலோடிப் பக்கத்து ஊருக்குப் பாய்ந்தது. நன்னலூர் வாய்க்காலாக நந்திகால் குறிக்கப்படுகிறது.

சூரலூர்க் கூற்றத்துக் கீழாரைவயலுக்கு வாய்க்கால் பாசனம் இருந்தது. இவ்வாய்க்காலிலிருந்து பிரிந்த கண்ணாறுகளுள் ஒன்று இருக்கெனப் பேரரையர் கண்ணாறு என்றழைக்கப்பட்டது. இவ்வூரின் தெற்கிலோடிய பிலாறு அப்பகுதி நிலங்களை வளமாக்கியது. தலைவாய்ப்பாடி ஊரின் வாய்க்கால் கிழக்கு நோக்கி ஓடி நீரளித்தது. திருவரங்கநல்லூரில் வார வாய்க்கால், உட்சிறு வாய்க்கால், நாற்றங்கால் வாய்க்கால் எனப் பல வாய்க்கால்கள்

பாசன வசதியளித்தன. அவற்றுள் உட்சிறு வாய்க்கால், திருவரங்கநல்லூரின் உள்ளிருந்த நிலப்பகுதிகட்குப் பாசனமளித்த சிறு காலாகலாம். கி.பி.1374ஐச் சேர்ந்த கல்வெட்டொன்றில் உய்யக்கொண்டான் கரை குறிக்கப்படுவதால் அக்கரைக்குள்ளிருந்த நீர்நிலையின் பங்களிப்பும் திருவரங்கநல்லூர் வளத்திற்கு வழியமைத்ததாகக் கொள்ளலாம். கொங்கு கொண்ட சோழநல்லூரில் ஊருணிக் குளம் இருந்தது.

'காவிரிக் குலை' என்றழைக்கப்பெற்ற காவிரியாற்றின் கரையை ஒட்டியிருந்த நிலப்பகுதிகள் காவிரி குலையடைத்த நிலமாகச் சுட்டப்பெற்றன.

பயிர்வகைகள்

நெல் முக்கியமான பயிராக இருந்தது. கரும்புக் கொல்லைகள் பரவலாக அமைந்திருந்தன. இவை கரும்புக் கால்கள் என்றழைக்கப்பட்டன. இறைவனுக்குப் படைக்கப்படும் பொருட்களுள் வாழைப்பழம் முக்கிய இடம் வகித்தது. 'பலகாயம்', 'கறியமுது' எனும் சொல்லாட்சிகள் வழி காய்கறித் தோட்டங்கள் பற்றி அறியமுடிகிறது. சில பருப்பு வகைகளும் பயிரிடப்பட்டன. புளி, புன்னை, ஆல், பாக்கு, தென்னை, இலந்தை, பனை முதலிய மரங்கள் போற்றி வளர்க்கப்பட்டன. வெற்றிலைக் கொடிக்கால்கள் பரவலாக இருந்தன.

பூந்தோட்டங்களில் பலவகைப் பூச்செடிகள் வளர்க்கப்பட்டன. சில குளங்கள் தாமரைப்பூக்கள் பெறுவதற்காகப் பூக்குளங்களாக ஒதுக்கப்பட்டிருந்தன.

மகளிர்

ஏறத்தாழ ஆறில் ஒருபங்கு கல்வெட்டுகள் தாருகாவனேசுவரம் கோயிலோடு ஏதேனும் ஒருவகையில் தொடர்பு கொண்டிருந்த பெண்களைச் சுட்டுகின்றன. இப்பெண்களுள் அரசமரபினர், உயர் மற்றும் வணிகக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், பரதேசிகள், வெள்ளாட்டிகள், புலையடியார் ஆகியோர் அடக்கம்.

தென்னவன் இளங்கோவேளான மறவன் பூதியார் தேவியார் நங்கை கற்றளிப் பிராட்டியார், இளங்கோவேளார் தேவியார் குணபெருமானார், நங்கை பூதி மாதேவடிகள் ஆகிய மூவரும் தாருகாவனேசுவரர் கோயிலில் பல்வேறு அறக்கட்டளைகளை அமைத்த வேளிர் குல அரசிகள் ஆவர். காவிரியின் தென்கரையில் அமைந்துள்ள இப்பகுதிக் கோயில்கள் பலவற்றில் கொடும்பாளூர் வேளிர் குலத்தாரின பதிவுகள் காணப்படுகின்றன. பரிவோடும், ஈடுபாட்டோடும் கோயிற் பணிகளில் ஈடுபட்ட சோழர் காலச் சிற்றரசப் பெருமக்களுள் இவ்வேளிர் குலத்தவர் குறிப்பிடத்தக்கவர்கள். கற்றளிப்

பிராட்டியின் பெயரால் கொடும்பாளூரில் ஒரு கோயில் அமைக்கப்பட்டமை இங்கு நினைவுகூரத்தக்கது.

அரச மகளிரைப் போலவே சமுதாயத்தின் மேல்தட்டுப் பெண்களும் சொத்துரிமை பெற்றிருந்தனர். அந்தச் சொத்தை அவர்கள் விருப்பம் போல் செலவழிக்கும் வாய்ப்பும் இருந்தது. புறத்து வேளாரின் மனையாள் நங்கை அல்லி அரசியார் பராய்த்துறைக் கோயிலில் விளக்கொன்றெரிக்கும் பொறுப்பைக் கோயில் சிவஅந்தணர்களிடம் ஒப்புவித்து, அதை நிறைவேற்றுவதற்குப் பொற்கொடையளித்தார். வளவனின் உடன் பிறந்தாரான உமையாள் எனும் அறிஞ்சிகை ஆதித்தனும் இக்கோயிலில் விளக்கொன்று எரிப்பதற்காக இருபது கழஞ்சு பொன் தந்தார்.

ஆரியத்தேவியும், இரவிசெட்டியின் மனைவியும், அரியாச்சி அம்மனும் பராய்த்துறைக் கோயில் இறைவனின் வழிபாட்டு வகைகளுக்காக நிலக்கொடையளித்தனர். மலையாளத்தைச் சேர்ந்த பெண்கள் சிலர் பரதேசிகளாகச் சூரலூர்க் கூற்றத்துப் பெரிய வெண்மணியில் வாழ்ந்தமையை வீர கம்பணர் காலத்துக் கல்வெட்டு வழி அறியமுடிகிறது. அவர்களுள் ஒருவரான மன்றச்சநல்லூர் மாதேவர் நாச்சியார் மகள் பிறையாள், களத்தூருடையான் திருவக்கீசுவரமுடையான் மழவதரையனின் பிரியத்துக்கு உகந்தவராக வாழ்ந்து, சொக்கநாயனார் என்ற பெயரில் ஆண்மகவொன்றைப் பெற்றெடுத்தார். மழவதரையர் பிறையாளுக்கும் சொக்கநாயனாருக்கும் அவருடைய காணியாட்சியாகப் பெரிய வெண்மணியிலிருந்த நன்செய் நிலத்தில் குறிப்பிட்ட சில பகுதிகள், சொக்கநாயனார் பிறந்த மனையான வடக்குத் தெரு நடுவுடைய மனை ஆகியவற்றைப் பிரீதி தானமாகத் தந்தார். அத்துடன் தம்முடைய பணிமக்களில் வெள்ளான் அடியாராக இருந்த தவஞ்செய்தாள் மகள் செங்கழுநீர்ப்பிள்ளை, நல்லாம்பிள்ளை மகன் தாயிலும் நல்லான், வெள்ளாட்டி சிவந்தாள் ஆகியோரையும், புலையடியாராக இருந்த பள்ளன் பிறவி, அவன் பள்ளி அழகியாள், அவன் மகள் நம்பாள், அவள் தம்பி வளத்தான், அவன் தம்பி தாழி, அவன் தம்பி வளத்தான், அவன் தம்பி ஆண்டு ஆகிய எழுவரையும் நிலம், வீடு போல பிறையாளுக்குப் பிரீதி தானமாகத் தந்தார். இவர் தானமாகத் தந்த புலையடியார், நங்கைபுரத்தில் பாட்டத்தில் நின்றவர்கள். கம்பண உடையாரின் காரியப்பேர் சந்தரசர் விற்க விலையாவணஞ் செய்து மழவதரையரால் அடிமைகளாக வாங்கப்பட்டவர்கள்.

பிரீதி தானத்தில் தாம் தானமாகத் தந்தவற்றைக் குறிப்பிடும்போது, 'இந்த வகைப்படி நிலமும் மனையும் சிறுப் பல வெள்ளாட்டிகளும் புலை அடியாரையும் பிரீதியாகக் குடுத்து' என்று மழவதரையர் குறிப்பிடுவதிலிருந்தே, இவ்வெள்ளான் அடியாரும், புலையடியாரும் சமுதாயத்தில் எத்தகு இடத்தைப் பெற்றிருந்தனர் என்பதை ஊகிப்பது எளிதாகும்.

பெண்களுக்கெனத் தனிக் கோயில் இருந்ததையும், அதற்கென நில ஒதுக்கீடுகள் செய்யப்பட்டதையும் திருமலை நாயக்கர் காலக் கல்வெட்டொன்று உணர்த்துகிறது.

அளவைகள்

முந்திரிகை, குழி, காணி, மா, வேலி, மெழுக்கு, தடி எனும் அளவுகளில் நிலப்பரப்பு கணக்கிடப்பட்டது. இருபது மா நிலம் ஒரு வேலியாகக் கொள்ளப்பட்டது. பரகேசரிவர்மரின் எட்டாம் ஆட்சியாண்டில் ஆறு மா நிலம் ஒரு தடியாக இருந்தது. நிலங்களை அளக்க நீட்டலளவைகள் பயன்பாட்டிலிருந்தன. விஜயநகர அரசர் கம்பணர் காலத்தில் கண்டர் கண்டன் கோலும், நாயக்க அரசர் ஆட்சியின் கீழ் ராஜவிபாடன் கோலும் நிலமளக்கப் பயன்பட்டன. ஒரு வேலி நிலத்திலிருந்து நூறு கலம் நெல் பெறப்பட்டதைச் சோழர் கல்வெட்டொன்று உறுதிப்படுத்துகின்றது.

மரக்கால், கலம், குறுணி, தூணி, பதக்கு, ஆழாக்கு, உழக்கு, நாழி, உரி என்பன முகத்தலளவைகளாகப் பயன்பட்டன. நெல், வரகு போன்ற தானியங்களை அளக்கக் குறுணி, பதக்கு, ஆழாக்கு, உழக்கு, மரக்கால் கலம் ஆகிய முகத்தலளவைகளும், எண்ணெய், நெய் போன்றவற்றை அளக்க உரி, நாழி ஆகிய முகத்தலளவைகளும் பயன்படுத்தப்பட்டன. நாழி நெல்லளக்கவும் பயன்பட்டதைப் பரகேசரிவர்மரின் கல்வெட்டொன்றால் அறிய முடிகிறது. தகுதி நிர்ணயிக்கப்பட்ட அளவைகளுக்குச் சூலநாழி, சூலக்கால், சூலஉழக்கு, சூரப் பொற்கால் எனப் பெயர்கள் தரப்பட்டிருந்தன.

நிறுத்தலளவைகளாகப் பலம், மஞ்சாடி, கழஞ்சு என்பன வழக்கிலிருந்தன. 'பலம்' எனும் அளவை சர்க்கரை போன்ற பண்டங்களை அளவிட உதவியது. மஞ்சாடியும், கழஞ்சும் பொன்னை நிறுக்கப் பயன்படுத்தப்பட்டன. துளைப்பொன் என்ற சொல்லாட்சி உயர்தரப் பொன்னைக் குறிப்பதாகக் கொள்ளலாம். பொன்னையளக்க விடேல்விடுகு கல் என்ற தரநிர்ணயம் செய்யப்பட்ட அளவையும் வழக்கிலிருந்தது.

காசுகள்

பொருட்களை வாங்கவும் விற்கவும் தங்கமும், காசுகளும் பயன்பட்டன. சோழர் காலத்தில் வழக்கிலிருந்த இக்காசு வகைகளின் மதிப்பை நிர்ணயம் செய்யக்கூடவில்லை. அறக்கட்டளைகள் சிலவற்றிற்குக் காசுகளே வைப்பு நிதியாகத் தரப்பட்டுள்ளன. இவற்றின் வட்டி கொண்டு அறக்கட்டளைகள் நிறைவேற்றப்பட்டன. இவ்வட்டி விகிதங்கள் காசுகளின் மதிப்பிற்கேற்ப இடத்திற்கிடம் வேறுபட்டிருந்தன. முதற் குலோத்துங்கரின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டில் உய்யக்கொண்டாரான திருச்சிற்றம்பலப் பல்லவரையர்

கோயிலில் நந்தாவிளக்கொன்றெரிக்கப் பன்னிரண்டு காசுகள் கொடையளித்தார். இக்காசுகளை வைப்புநிதியாகப் பெற்றுக்கொண்ட கோயில் சிவாச்சாரியார்கள், அதன் வட்டியிலிருந்து நாளும் உழக்கு எண்ணெய் கொண்டு ஒரு நந்தாவிளக்கெரிக்க ஒப்புக்கொண்டனர்.

மூன்றாம் குலோத்துங்கர் காலக் கல்வெட்டொன்று ஆண்டார் நியமதனப் பிச்சரிடமிருந்து கோயில் சிவாச்சாரியார்கள் நூறு காசுகளை வைப்புநிதியாகப் பெற்றுக்கொண்ட தகவலைத் தருகிறது. கல்வெட்டு சிதைந்திருப்பதால் காசுகள் தரப்பட்டதன் நோக்கம், வட்டி விகிதம் ஆகியவற்றை அறியக்கூடவில்லை.

வரியாகவும் காசுகள் பெறப்பட்டதை மூன்றாம் குலோத்துங்கர் 'காலக் கல்வெட்டொன்று உணர்த்துகின்றது.

உணவு

அரிசிச் சோறு முதன்மை உணவாக இருந்தது. தேங்காய் சமையலுக்குப் பயன்படுத்தப்பட்டது. பல்வேறு காய்களைப் பொரித்தும், அவித்தும் சோற்றுடன் சேர்த்துக்கொண்டனர். பால், தயிர், நெய் போன்ற பால்பொருட்கள் கொள்ளப்பட்டன. உணவுக்குப் பிறகு வெற்றிலை பாக்குப் போட்டுக் கொள்ளும் பழக்கம் பரவலாக இருந்தது.

சிற்றுண்டி வகைகளுள் அப்பம் சிறப்பிடம் பெற்றது. இது அரிசி, சர்க்கரை, நெய் கொண்டு தயாரிக்கப்பட்டது. பயற்றுப் போனகம் விருப்பத்திற்குரியதாக விளங்கியது. பழங்களுள் இலந்தையும், வாழையும் பரவலாகக் கொள்ளப்பட்டன.

iii) கோயில்

இறைவன் திருப்பெயர்

தற்போது தாருகாவனேசுவரர் என்றறியப்படும் பராய்த்துறைக் கோயில் இறைவன் சோழர் காலத்தே பராய்த்துறைத் தேவர், பெருமானடிகள், மகாதேவர், செல்வர், பரமேசுவரர், பரமேசுவர பட்டாரர், ஸ்ரீ மூலஸ்தானத்துப் படாரர் எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டார். முதல் இராஜேந்திரர் காலத்தில், 'பராய்த்துறை சுகாசனம் இனிதெழுந்தருளிய திரிபுவனி அதிபதி' என்ற சிறப்பழைப்பும் பெற்றிருந்தார். இரண்டாம் பாண்டியப் பேரரசுக் காலத்தில் பராய்த்துறை உடைய நாயனார், பராய்த்துறை உடையார் என் றறியப்பட்ட இறைவன், நாயக்கர் காலத்தில் உருவாக்கப்பட்ட தலபுராணக் கதைக்கேற்பச் சோழன் குமாரத்திக்கு நரிமுகம் தீர்த்த தம்பிரானார், சோழன் குமாரத்திக்கு நரிமுகம் தீர்த்த தேவர்கள் செல்வர் தம்பிரானார், ஆதி நாயனார் எனும் பெயர்களைப் பெற்றார். இக்கோயில் இறைவி நாயக்கர் கல்வெட்டுகளில்

பசும்பொன் அம்மை என்றழைக்கப்படுகிறார். நாயக்கர் காலத்திற்கு முற்பட்ட கல்வெட்டுகள் எதிலும் அம்மன் குறிக்கப்படாமையின், இறைவியின் திருமுன் நாயக்கர் காலத்தில் தோற்றம் கொண்டதாகக் கருதலாம்.

சுற்றாலைத் திருமுன்கள்

ஆதித்த சோழரின் இருபத்தேழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, 'பரிவாரம்' என்ற பெயரில் பராய்த்துறைக் கோயிலிலிருந்த சுற்றாலைத் திருமுன்களை வெளிச்சத்திற்குக் கொணர்கிறது. எழுவர் அன்னையர், கணபதி, சுப்பிரமணியர், சேட்டைத்தேவி, திருவடி, துர்க்கை, சூரியன், நமனார் எனும் எண்பரிவாரத் தெய்வத் திருமுன்களிலும் படையலிடப்பட்டது. எழுவர் அன்னையர்க்கு அமுது படைக்க பதினொரு நாழி ஓர் உழக்கு நெல் பயன்படுத்தப்பட்டது. பிற தெய்வங்கட்கு இரு நாழி நெல் அமுதுக்கென ஒதுக்கப்பட்டது.

பொதுவாகச் சோழர் கோயில்களில் சூரியன், எழுவர் அன்னையர், கணபதி, சுப்பிரமணியர், சேட்டைத்தேவி, சந்திரன், பைரவர், சண்டேசுவரர் ஆகிய தெய்வங்களே எண்பரிவாரமாக இடம்பெறும். பராய்த்துறைக் கல்வெட்டில் இவ்வெட்டனுள் ஐந்து குறிக்கப்படுகின்றன. எஞ்சிய மூன்றாகச் சுட்டப்படும் துர்க்கை, நமனார், திருவடி என்பனவற்றுள், துர்க்கை பொதுவாக உள்மண்டப வடபுறக் கோட்டத் தெய்வமாகவே அமைக்கப்பெறும். 'நமனார்' இயமனைக் குறிக்கும் சொல். எண்திசைக் காவலர்களுள் ஒருவரான இவர் பரிவாரத் தெய்வமாக மாறியிருப்பது பராய்த்துறைக் கோயிலில்தான்.

அநுமாரையும், கருடனையும் குறிக்கவே திருவடி என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. பராய்த்துறைத் தாருகாவனேசுவரர் கோயில் சைவக் கோயிலென்பதால் இதன் பரிவாரத் தெய்வங்களுள் ஒன்றாக அநுமாரோ, கருடனோ இடம்பெற்றிருக்க முடியாது. அதனால் எண்பரிவாரத்துள் ஒன்றான சண்டேசுவரரையே இத்திருவடி எனும் சொல் குறிப்பதாகக் கொள்ளலாம். வைணவத் திருவடிகள் போல சைவத் திருவடியாகச் சண்டேசுவரர் கருதப்பட்டார் போலும். இக்கோயிலிலுள்ள முதல் இராஜேந்திர சோழரின் கல்வெட்டு இவரைச் 'சுகாசனத்தில் இனிதெழுந்தருளிய திரிபுவன அதிபதியின் மூலபிருத்தியன்' என்று சிறப்புத் தந்து அழைப்பது நோக்க, சண்டேசுவரரையே ஆதித்த சோழரின் கல்வெட்டு திருவடி எனச் சுட்டியிருக்கலாம் எனும் எண்ணம் வலிமை பெறுகிறது.

கோயிலாட்சி

சோழர் காலத்தில் திருக்கோயில் நிர்வாகத்தைத் தேவகன்மிகளும், ஸ்ரீகார்யமும், மாகேசுவரக் கண்காணிகளும் கவனித்துவந்தனர். மாகேசுவரக்

கண்காணிகள், காணியுடைய சிவபிராமணர் என்றும், பட்டுடையாரென்றும், கோயில் திருப்படி கடந்து முறை செய்வாரென்றும் அழைக்கப்பட்டனர். இவர்களுடன் கோயிற் பணி செய்யும் மாணிகள், கோயிற் கணக்கு, தச்சர், குயவர், தட்டார், கொல்லர், வண்ணார், இடையர் முதலிய கோயிலோடு தொடர்புடைய தொழிலாளிகளும் கோயில் நிர்வாகம் மற்றும் செயற்பாடுகளில் துணைநின்றனர். இவர்கள் தவிர ஆராதிப்பார், கும்பிட்டிருக்கும் ஆண்டார்கள் எனவிருந்தோர் கோயில் வழிபாட்டுடன் தொடர்புடையவர்களாகக் கொள்ளத்தக்கவராவர். ஆதித்த சோழருடையதாகக் கருதத்தக்க உயர் ஆட்சியாண்டுடைய இராஜகேசரிக் கல்வெட்டொன்று பராய்த்துறைக் கோயிலில் அக்காலத்திருந்த ஸ்ரீகார்யமாக வேம்பற்றான்குடியைச் சேர்ந்த பட்டநம்பியைச் சுட்டுகிறது. இவர் விசையாங்குரச் சதுர்வேதிமங்கலத்து சபையாருடன் இணைந்து கோயிலுக்காகத் தென்னந்தோப்பொன்று அமைத்தார்; கல் அம்பலமொன்று எடுப்பித்தார். அதுவரை கோயிலில் இல்லாமலிருந்த நிவந்தமொன்றையும் எண்பது கலம் நெல்லை முதலீடாகக் கொண்டு தொடங்கிவைத்தார். இந்நெல் பலரிடமிருந்து கோயிலின் பெயரால் கொடையாகப் பெறப்பட்டதாகும். இந்நிவந்தம் இறைவனுக்கு அப்ப அமுது தருவதற்காக உருவாக்கப்பட்டது. இன்னாரென்று அடையாளம் காணமுடியாத சோழவேந்தரின் உயராட்சியாண்டுக் கல்வெட்டொன்று அக்காலத்தே ஸ்ரீகார்யமாக இருந்து கோயில் நிர்வாகத்தைக் கவனித்துக்கொண்டவராக ஆதித்தபடாரரை அறிமுகம் செய்கிறது. இவர் தம்முடைய நிர்வாகக் காலத்தில் கோயில் பண்டாரத்துப் பொருள் கொண்டு, கோயிலுக்கெனப் பத்துக் குத்துவிளக்குகள் வாங்கிக் கோயிலில் எரியுமாறு செய்தார்.

உத்தமசோழருடையதாகக் கொள்ளத்தக்கக் கல்வெட்டு சைவன் காசியபன் சுப்ரமணியன் நக்கன் திருப்பராய் என்பாரைக் கோயில் பட்டுடையாராக அடையாளப்படுத்துகிறது. முதல் இராசராசர் காலத்தில் தேவகன்மிகள் மகாதேவர் கன்மிகள் என்றும் அறியப்பட்டனர்.

நம்பி தோழன் திருத்தளியான நாற்பத்தெண்ணாயிரபட்டன், கவுசியன் உய்யக்கொண்டான் திருச்சிற்றம்பலமுடையானான சண்டேசுவரபட்டன் ஆகிய இருவரும் முதற் குலோத்துங்கர் காலத்தில் பராய்த்துறைக் கோயில் சிவபிராமணர்களாக விளங்கினர். மூன்றாம் குலோத்துங்கர் காலத்தில் சிறிய சோமபட்டன், உறையூர் நாட்டு பட்டன், பட்டன், நாற்பத்தெண்ணாயிரபட்டன் ஆகியோர் இக்கோயிலில் காணியுடைய சிவபிராமணர்களாகப் பணிமேற்கொண்டிருந்தனர். பல்வேறு கொடையாளர்கள் கோயிலுக்கென்று அளித்த கொடைகளை வைப்புநிதியாகக் கொண்டு, அக்கொடையாளர்கள் விரும்பியமைத்த அறக்கட்டளைகளை நிறைவேற்றும் பொறுப்பேற்றிருந்த இப்பெருமக்கள் அச்செயற்பாடுகளை, நிலவும் கதிரும் உள்ளவரை தொடர்ந்து

நடத்தித்தருவதாக உறுதியளித்தனர். சுந்தர பாண்டியர் காலத்தில் தேவகன்மியாக தேவர்கள் செல்வபட்டன் இருந்தார்.

வீரகம்பணர் காலத்தில் பராய்த்துறைக் கோயில் நிர்வாகிகள் தானத்தாரென்றும், கைக்கோள முதலிகளென்றும் அழைக்கப்பெற்றனர். கோயிற் கணக்கு, ஸ்ரீமாகேசுவரக் கணக்கு என இருவகைக் கணக்காளர்கள் கோயிலின் வரவு செலவினங்களைப் பதிவுசெய்தனர். கிளியூருடையான் தேவர்கள் செல்வன் ஸ்ரீமாகேசுவரக் கணக்காகப் பணியாற்றினார். கோயிலில் பணியாற்றிய கொல்லராகத் தேவர்கள் செல்வனும், தச்சராகப் பெரியவனும், தட்டாராக மற்றொரு தேவர்கள் செல்வனும் இருந்தனர். நாயக்கர் ஆட்சிக் காலத்தே இக்கோயில் நிர்வாகிகள் ஆதிசண்டேசுவர கோயில் பண்டாரத்தார் என்றழைக்கப்பெற்றனர்.

இக்கோயிலில் இசைக் கலைஞர்களோ, ஆடற் கலைஞர்களோ பணியாற்றியதற்கான கல்வெட்டுச் சான்றுகள் இல்லையெனினும், மதுரை கொண்ட கோப்பரகேசரிவர்மரின் காலத்தே இக்கோயிலுக்குக் கொடையளிக்கப் பெற்ற வெண்கலக் காளாஞ்சி, அதை இசைப்பதற்கான கலைஞர்கள் இங்கிருந்ததைத் தெரிவிக்கிறது. சமகாலக் கோயில்களில் கிடைக்கும் கல்வெட்டுகள் கொண்டு நோக்கும்போது இங்கும் இசை, ஆடல் பயின்ற கலைஞர்கள் இருந்து பணியாற்றியிருக்கவேண்டுமெனக் கருதமுடியும்.

வழிபாடு - படையல்

பிற திருக்கோயில்கள் போலவே பராய்த்துறைக் கோயிலிலும் முறையான வழிபாடு நிகழ்த்தப்பெற்றது. கோயிற் சிவபிராமணர்களும், மாணிகளும் இதன் பொறுப்பேற்றிருந்தனர். வழிபாட்டிற்கான படையல்களைத் தயாரிக்க மடைப்பள்ளி இருந்தது. இதன் நிர்வாகத்தை மடைப்பள்ளிப் பணியாளர்கள் மேற்கொண்டிருந்தனர். நாளின் பல்வேறு போதுகளில் நடத்தப்பெறும் வழிபாடுகளுக்கேற்ப உணவு தயாரித்துப் படைக்கப்பெற்றது. இதற்காகும் செலவினங்களுக்காக அறச்சிந்தனையாளர் பலர் கொடையளித்து மகிழ்ந்தனர். சங்கிராந்தி, விஷு போன்ற சிறப்பு நாட்களிலும், விழாக்காலங்களிலும் சிறப்புப் படையல்கள் தயாரித்தளிக்கப்பெற்றன. தேவைக்கேற்பச் சிறப்புணவுகள் தயாரிப்பார் தற்காலிகமாய்ப் பணியமர்த்தப்பட்டனர்.

பயற்றுப் போனகம், வெண்சோறு, நெய்ச்சோறு, காய்கறி, பருப்பு எனப் பல உணவுவகைகள் வழிபாட்டின்போது இறைவனுக்குப் படையலிடப்பட்டன. தயிர், வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு என்பனவும் உடன்வைக்கப்பட்டன. இவற்றை நாளும் அளிக்க, நல்லுள்ளம் படைத்த, பத்திமையுணர்வு கொண்ட பெருமக்கள் பொன், பொருள், நிலம் கொடையளித்து உதவினர்.

தென்னவன் இளங்கோவேளான மறவன் பூதியாரின் தேவி நங்கை கற்றளிப் பிராட்டி, பராய்த்துறை இறைவனுக்கு திருவமுது படைக்கத் தந்த நெல்லைச் சூரப் பொற்காலால் அளந்து பெற்ற இக்கோயிலார், தேவியின் விருப்பப்படி நாளும் ஐந்து நாழி அமுது சமைத்துப் படைத்தனர். இதற்காகப் பன்னிரு நாழி ஓர் உரி நெல் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவ்வுணவுடன் உழக்கு நெய், பருப்பு ஓர் உழக்கு, கறியமுது, பலகாயம், அடைக்காயமுது என்பனவும் படைக்கப்பட்டன. இவற்றுள் பருப்பு, கறியமுது, பலகாயம், அடைக்காயமுது ஆகியவற்றிற்கு ஆறு நாழி நெல் ஒதுக்கப்பட்டது. நெய், குறுணி நெல் தந்து பெறப்பட்டது.

தென்னவன் இளங்கோவேளான மறவன் பூதி சூரலூர்க் கூற்றத்துக் கீழாரைவயலில் பல துண்டு நிலங்கள் இணைந்த ஒரு வேலியளவு நிலம் கொடையளித்துக் கோயிலுக்கான வழிபாட்டுப் படையல்களுக்கு ஏற்பாடு செய்தார். இந்நில வருவாயான நூற்றுக் கலம் நெல் சூரக்காலால் அளக்கப்பெற்று, இறைவனுக்கு நாள்தோறும் திருவமுது, பருப்பமுது, கறியமுது, வாழைப்பழம், தயிர், வெற்றிலை, பாக்கு ஆகியன படைக்க ஒப்புக்கொள்ளப்பட்டது. இக்கோயில் சுற்றாலைத் தெய்வங்களுக்கும் இந்நெல் வருவாய் கொண்டு நாளும் படையலிடப்பட்டது. இப்படையலில் நெய்யமுது இடம்பெற்றது.

இறைவனுக்கு நாள்தோறும் பயற்றுப் போனகமும், சங்கிராந்தியன்று திருவமுதும் வழங்குவதற்காகக் கொடியாலத்தைச் சேர்ந்த ஒருவர் நிலக்கொடையளித்தார். இந்நிலப்பகுதிகள் கொடியாலத்திலும், நாட்டார் மங்கலத்திலுமாய் அமைந்தன. இவற்றின் வருவாய் கொண்டு, சூலநாழியால் அளக்கப்பட்ட முந்நாழி பழவரிசி, ஒரு நாழியும் உரியுமான பருப்பு, நெய் ஆகியவற்றால் ஆன திருவமுதும் வாழைப்பழமும் இறைத்திரு முன்னால் சங்கிராந்தி நாள் வழிபாட்டின்போது இடப்பெற்றன. இக்கொடையளித்த பெருமகனாரின் பெயர் கல்வெட்டில் சிதைந்துள்ளது. மற்றொரு சிதைந்த கல்வெட்டின் வழி இறைவனுக்கு அர்ச்சனா போகமாக ஆரியத்தேவி என்பார் நிலக்கொடையளித்ததை அறியமுடிகிறது.

சங்கிராந்தியின் போதும், இரண்டு விஷுக்களின் போதும் இறைவனுக்குச் சூலநாழியால் பன்னிரண்டு நாழி நெய்யமுது படையலிட நெற்கொடையளிக்கப்பட்டது. இக்கல்வெட்டிலும் கொடையாளியின் பெயர் அழிந்துள்ளது. இறைவனுக்குப் பெருந்திருவமுது செய்ய நிலக் கொடையளிக்கப்பெற்ற தகவலை மற்றொரு துண்டுக் கல்வெட்டால் அறியமுடிகிறது.

இராக் காலப் பூசைக்கு முன்பாக இறைவனுக்கு முப்பது அப்பம் படையலிடப்பட்டது. இப்படையலுக்கான நிவந்தம் ஸ்ரீகார்யம் வேம்பற்றான்குடி பட்டநம்பியால் எண்பது கலம் நெல் முதலீடாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. அப்பம் சுடுவதற்காக ஒரு பெண்மணி பணியமர்த்தப்பட்டார். அவருக்கு ஊதியமாக நெல் தரப்பட்டது. அப்பம் செய்வதற்கான அரிசி, சர்க்கரை, நெய் ஆகியன நெல்லுக்கு ஈடாகப் பெறப்பட்டன. சர்க்கரையில் முப்பலம் மாவில் குழைக்கவும், ஒருபலம் பாகிற்கும் பயன்படுத்தப்பட்டது.

துன்முகி ஆண்டு கார்த்திகைத் திங்கள் இருபத்தொன்பதாம் நாள் அய்யன் அடப்பத்து எல்லப்ப நாயக்கர் தர்மமாகச் சாமுண்டித் தேவர் ஒரு மாவரை நிலம் கோயிலுக்கு நீர்வார்த்துத் தந்தார். இந்நில வருவாயிலிருந்து நாளும் குறுணியளவு சோறு இறைவனுக்குப் படையலிட ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனந்த வருடம் புரட்டாசித் திங்கள் பதினைந்தாம் நாள் வெங்கடப்பையர் தாம் திருத்திப் பயிர் விளையுமாறு செய்த நிலத்தைக் கோயில் பெரியநயினார் பண்டாரம் என்பாரிடம் ஒப்புவித்து அதன் வருவாயிலிருந்து நாளும் குறுணியளவு திருவமுது இறைவனுக்குப் படையலிடுமாறு கட்டளையமைத்தார். இக்கல்வெட்டில் பட்டயமளித்தவர்களுள் ஒருவராக ராமப்ப நாயக்கரய்யனும் இடம்பெறுகிறார். பட்டயம் சண்டேசுவரப் பட்டயம் என்று குறிக்கப்படுகிறது.

திருமுழுக்காட்டு - படையல்

இறைத்திருமேனியை நாளும் முழுக்காட்டிப் படையலிட்டு வழிபாடு செய்வது மரபாகும். விஷு, சங்கிராந்தி போன்ற சமயங்களில் சிறப்பு முழுக்காட்டுகளும் நிகழும். இம்முழுக்காட்டல்களைச் செம்மையாக நிறைவேற்றிடக் கொடைகள் வழங்கப்பட்டன. கவையன் அப்பி என்பார் இரண்டு விஷு நாட்களிலும், இரண்டு சங்கிராந்திப் போதுகளிலும் இறைவனை நெய்யால் முழுக்காட்டுவதற்காகப் புலிவலத்து ஊராரிடமிருந்தும், விசையாங்குரச் சதுர்வேதிமங்கலத்து சந்திரசேகரனிடமிருந்தும் நிலம் விலைக்குப் பெற்றுக் கோயிலுக்களித்தார். ஒவ்வொரு முழுக்காட்டிற்கும் அறுநாழி நெய் எனத் திட்டமிடப்பட்டது. திருமுழுக்காட்டு முடிந்ததும் இறைவனுக்குத் திருவமுது படையலிடப்பட்டது.

திங்கள் தோறும், சங்கிராந்தி தோறும் இறைவனுக்கு நெய் முழுக்காட்டு நிகழ்த்தக் கிழார்க் கூற்றத்துக் கிளிஞலூர்க் கிழவன் மகன் சர்வதேவனான செம்பியன் கீழூர் நாட்டுக்கோன் கோயிலுக்குப் பாற்பசு பதினான்கு பெறும்/ வகையில் ஆறு கழஞ்சு பொன் தந்தார். தென்னவன் இளங்கோவேளான மறவன் பூதி இக்கோயில் இறைவனை நெய் முழுக்காட்ட வாய்ப்பாக நிலக் கொடையளித்தார்.

சங்கிராந்தியன்றும், திங்கள் தோறும் கார்த்திகை நட்சத்திரம் வரும் நாட்களிலும் சூலநாழியால் நாழி நெய் கொண்டு இறைவனுக்குத் திருமுழுக்காட்டு நிகழ்த்த நான்குமா நிலம் ஒதுக்கப்பட்டது. இதில் மூன்று மா சங்கிராந்தி நிலமென்று அழைக்கப்பட்டது.[17] ஆதித்த சோழரின் இருபத்துநான்காம் ஆட்சியாண்டில் நூற்றுப்பிரானான நியாமமனன் பிறந்தநாளான அவிட்டத்தின்போது இறைவனை நெய் முழுக்காட்டித் திருவமுது படைக்க நிலம் தரப்பட்டது. நங்கை கற்றளிப் பிராட்டியார் திங்கள் தோறும் இறைவனை நெய் முழுக்காட்ட நெல் அளித்தார். முதல் இராஜேந்திரரின் ஐந்தாம் ஆட்சியாண்டில் நாடு வகை செய்வாரான காரிக்குடையான் வீரசோழன் பிரளய சிந்தாமணி, அவ்வாண்டு சதயத்திருநாள் முதல், உச்சம்போதில் பராய்த்துறை இறைவனைச் சூலநாழியால் அறுநாழி நெய் கொண்டு திருமுழுக்காட்ட வகைசெய்தார்.

உத்தமசோழரின் பதின்மூன்றாம் ஆட்சியாண்டில் விசையாங்குரச் சதுர்வேதிமங்கலத்தில் நிலம் விலைக்குப் பெற்ற விரைக்குடான் கல்லிறைபட்டன் அய்ப்பசி, சித்திரை விஷுக்களில் இறைவனுக்குத் திருமுழுக்காட்டவும் அதுபோழ்து அமுது படைக்கவும் இரு கழஞ்சரைப் பொன்னுக்கு நிலம் வாங்கிக் கோயிலுக்குக் கொடையளித்தார்.

விளக்கேற்றல்

சங்ககாலந்தொட்டே விளக்கேற்றலைப் புனிதமான செயலாகத் தமிழர் கருதினர்.[18] இறையடி அடைவதற்கான எளிய வழிகளுள் ஒன்றாய் விளக்கேற்றலைக் குறிக்கிறார் அப்பர் பெருமான்.[19] தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் காணப்படும் கல்வெட்டுகளில் பெரும்பான்மையன அவ்வக் கோயில்களில் திருவிளக்கேற்ற மக்கள் அமைத்த அறக்கட்டளை ஆவணங்களாகவே காட்சியளிக்கின்றன. பராய்த்துறைத் தாருகாவனேசுவரர் கோயிலிலிருந்து படியெடுக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளில் நான்கில் ஒரு பங்கு கல்வெட்டுகள் அக்கோயிலில் விளக்கெரிக்கக் கொடையளித்த பெருமக்களின் அருள் உள்ளத்தைத் திறந்துகாட்டுகின்றன. அரசமரபினர், அரசு அலுவலர்கள், சமுதாயத்தின் மேல், கீழ்த்தட்டு மக்கள் என இன, நிலை பாகுபாடின்றிப் பராய்த்துறைக் கோயிலில் விளக்கெரிப்பதில் மக்கள் ஆர்வம் காட்டியுள்ளனர்.

கொடும்பாளூர் அரசமரபைச் சேர்ந்த நங்கை பூதிமாதேவடிகள் உழக்கு நெய் கொண்டு ஒரு நந்தாவிளக்கெரிக்க வாய்ப்பாகத் தொண்ணூறு ஆடுகள் கொடையளித்தார். அதே அரசமரபைச் சேர்ந்த இளங்கோவேளின் தேவியார் குணபெருமானார் நந்தாவிளக்கொன்று எரிக்கப் பதினைந்து கழஞ்சு பொற்கொடையளித்தார். இப்பொன் கொண்டு விலைக்குப் பெறப்பட்ட நிலத்தின் வருவாய் விளக்கெரிக்க உதவியது. கொடும்பாளூரையாண்ட தென்னவன்

இளங்கோவேளான மறவன் பூதியின் தேவியார் நங்கை கற்றளிப் பிராட்டி இக்கோயிலில் நித்தமும் இரண்டு நந்தாவிளக்குகள் எரிக்க வாய்ப்பாக நெற்கொடையளித்தார். இவ்விளக்குகள் ஒவ்வொன்றும் நாளும் நாழி நெய் கொண்டு எரிக்கப்பட்டன. இதற்காக ஒவ்வொரு விளக்கிற்கும் தூணி நெல் ஒதுக்கப்பெற்றது. தம் துணைவியைப் போலவே மறவன் பூதியும் இக்கோயிலின்பால் அளவற்ற ஈடுபாடு கொண்டிருந்தார். விளக்கிற்கு நாழி நெய் இட்டு இக்கோயிலில் மூன்று திருவிளக்குகள் எரிக்க வாய்ப்பாக நிலம் கொடையளித்தார் இக்கொடும்பாளூர் வேந்தர்.

நக்கன் அரிஞ்சிகையான மாராயப் பல்லவரையன் நாளும் ஓர் உரி நெய் கொண்டு நந்தாவிளக்கொன்று எரிக்க வாய்ப்பாக முப்பது கழஞ்சு பொற்கொடையளித்தார். புறத்து வேளார் மணவாட்டியான நங்கை அல்லி அரசியார் உழக்கு நெய்யிட்டு நந்தாவிளக்கொன்று எரிப்பதற்காக முப்பது கழஞ்சு பொற்கொடையளித்தார். இப்பொன்னைப் பெற்ற கோயில் பட்டுடையாரான சைவன் காசியபன் சுப்ரமண்யன் நக்கன் திருப்பராயும், அவர் தம்பியர் தாயநியமதனன், நக்கன் வடுகன் ஆகியோரும் அதைத் தங்களுக்கிடையே முறையே பதினைந்து கழஞ்சு, ஐந்து கழஞ்சு, பத்துக் கழஞ்சு எனப் பகிர்ந்து கொண்டு திங்கள் தோறும் சூலநாழியால் ஏழு நாடுரி நெய்யிட்டு முட்டாது விளக்கெரிப்பதாக உறுதியளித்தனர்.

கொடும்பாளூர்ச் சிற்றரசரான வீரசோழ இளங்கோவேளாரிடம் இறையிலி பிரமதேயமாகத் தாம் பெற்ற நிலத்தைக் கோயிலுக்களித்த நக்கன் கண்டன், அந்நில வருவாய் கொண்டு நாளும் உரி நெய்யிட்டு இரண்டு நந்தாவிளக்குகள் எரிக்க ஏற்பாடுசெய்தார். இவ்விளக்கெரிக்கப் பயன்படுத்தும் திரி, 'மஞ்சாடிக்குப் பதின்பலம் போகிய நூலாக' இருக்கவேண்டுமென்பது கண்டனின் நிபந்தனையாக ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ளது. இவ்விளக்கைத் தவறாது எரிக்கும் பொறுப்பு விசையாங்குரச் சதுர்வேதிமங்கலத்திடம் ஒப்புவிக்கப்பெற்றது. வளவன் தமக்கை உமையாளான அரிஞ்சிகை ஆதித்தனின் இருபது கழஞ்சு பொற்கொடை இக்கோயிலில் ஒரு நந்தா விளக்கெரிக்க வழிவகுத்தது. விளக்கையெரிக்க உமையாள் நிலை விளக்கொன்றும் தந்தார்.

பாண்டிய நாட்டு அள்ளூரைச் சேர்ந்த கவயனப்பி முப்பது கழஞ்சு பொன்னளித்து இரண்டு நந்தாவிளக்குகள் எரிக்குமாறு செய்தார். இப்பொன் கோயிலாரிடம் ஒப்புவிக்கப்பெற்றது போலும். திருப்பூதீசுவரத்துப் பெருமானடி திருப்பராய்த்துறைக் கோயிலில் நந்தாவிளக்கொன்றெரிக்கத் தேவதானமான ஈசானமங்கலத்துத் திடலில் விலை கொடுத்து ஒரு தடி ஆறு மா நிலம் பெற்று அதைப் பயிரிடுமளவு வளமாக்கித் தந்தார். மாத்தூரைச் சேர்ந்த வேளான் உய்யவந்தானான திருச்சிற்றம்பலப் பல்லவராயன் இக்கோயிலில்

நந்தாவிளக்கொன்று எரிப்பதற்காகக் கோயில் சிவபிராமணர்களான நம்பி தோழன் திருத்தளியான நாற்பத்தெண்ணாயிரபட்டன், கவுசியன் உய்யக்கொண்டான் திருச்சிற்றம்பலமுடையானான சண்டேசுவர பட்டன் ஆகியோரிடம் பன்னிரண்டு காசுகள் தந்தார். இக்காசுகள் கொண்டு நித்தம் உழக்கெண்ணையிட்டு நந்தாவிளக்கெரிப்பதாகவும், அப்பணியைக் கோயில் திருப்படி கடந்து முறைசெய்வார் நிறைவேற்றுவர் என்றும் சிவபிராமணர்கள் ஒப்பந்தமிட்டனர்.

அரசர் சுந்தர பாண்டிய தேவரின் திருமேனிக்கு நன்றாக வேண்டுமென்ற நோக்கோடு செய்யானமான பராக்கிரம பாண்டியநல்லூரைச் சேர்ந்த ஒருவர் இக்கோயிலில் நந்தாவிளக்கொன்று எரிக்கக் கொடையளித்தார். உலகுடைய பெருமாளென்று பெருமையோடு அழைக்கப்பெற்ற அரசர் குலசேகர பாண்டியரின் திருமேனிக்கு நன்றாக வேண்டுமென்று கருதி, ஆயத்துக்குக் கடவ அடையானம் அழகியார் இக்கோயிலில் நந்தாவிளக்கொன்று எரிப்பதற்காகச் சில வரியினங்களைக் கொடையளித்தார். அவற்றுள் செக்காயம் ஒன்று. கல்வெட்டுச் சிதைவால் பிற வரியினங்களை அறியக்கூடவில்லை. இடையர் சேந்தன் சாத்தனிடம் பசுக்கள் பன்னிரண்டளித்து முதல் இராஜராஜர் காலத்தில் இக்கோயிலில் சந்தி விளக்கொன்று எரிக்கப்பட்டது. முருக்கூரைச் சேர்ந்த செதிரஞ்சேந்தன், நாட்டார்மங்கலத்துத் திடலில் அரை வேலி இரண்டு மா பகுதியை விலைக்குப் பெற்று, அதைப் பயிரிட ஏற்புடையதாக்கி நாளும் உரி நெய் கொண்டு நந்தாவிளக்கொன்றெரிக்கக் கோயிலுக்களித்தார்.

இத்தகு அறச்சிந்தனையாளர்களின் உளமார்ந்த கொடைகளால் பராய்த்துறைக் கோயில் இரவும் பகலும் வெளிச்சத்தில் வாழ்ந்ததை நன்குணரலாம்.

பிறகொடைகள்

கோயிலுக்குள் விளக்கெரிப்பதற்கும், அங்குள்ள இறைத் திருமேனிகளுக்குப் படையலிடுவதற்கும் கொடையளித்தாற் போலவே கோயிலுக்குத் தேவையான பரிகலங்கள், இறைத்திருமேனிகளுக்கான நகைகள் ஆகியவற்றையும் அறச்சிந்தனையாளர்கள் அன்போடு அளித்துள்ளனர். வழிபாட்டின்போது பயன்படுத்தப்படும் பொருட்களுக்காகச் சிலர் கொடையளித்துள்ளனர். வேறு சிலர் திருக்கோயிலில் வந்து வழிபடுவார்க்கும், சிவயோகியர்க்கும், அந்தணர்க்கும் உணவிட வாய்ப்பாக நிலம், நெல், பொன் தந்துள்ளனர். சிலர் இறைவனுக்காகுமாறு நந்தவனம் அமைத்து மகிழ்ந்தனர். இப்பெருமக்களின் இறையன்பும், பத்திமையும் பொதுநல நோக்கும் அந்நாளில் கோயில்கள் வளமாக வாழவும், அவற்றால் பலர் பணிபெற்று உய்யவும் வழிவகுத்தன.

பராய்த்துறைக் கோயிலுக்கு வெண்கலக் காளாஞ்சி தந்து மகிழ்ந்தவர் வளவன் தமக்கையான உமையாள். செம்பியன் அழுவரையரான பாழிநக்கன் பள்ளக்குழித்தட்டு அளித்தார். முப்பத்தொரு கழஞ்சு ஒரு மஞ்சாடி நிறையுள்ள பொன்னாலான திருமேகலையொன்றை இறைவனுக்குத் தந்து களித்தவர் பேரரசர் சுந்தர பாண்டியரின் மண்டல முதலிகளில் ஒருவரான காலடி சங்கரன் அழகப் பெருமாளான மழவராயர். வழிபாட்டின்போது சிதாரி புகைக்க ஒருவரும், குங்குலியம் பயன்படுத்த நங்கை கற்றளிப் பிராட்டியும் உதவினர். இதே அம்மை வேதம் வல்ல சிவயோகிகள் எண்மர் கோயிலில் உணவருந்த வகை செய்தார். அந்தணர் உணவருந்த வாய்ப்பாக நிலக்கொடையளித்தவர் பெயர் கல்வெட்டில் சிதைந்துள்ளது.

இறைவனுக்கு அணிவிப்பதற்காகத் தாமரைப்பூ மாலை தயாரிக்கப்பட்டது. சந்திதோறும் இருபது பூக்களால் மாலையென மூன்று சந்திக்கும் மூன்று மாலைகள் தொடுக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டன. இப்பூக்களைப் பறித்துவருவதற்கு ஆள் அமர்த்தப்பட்டு அவருக்கு நாள்தோறும் சூலக்காலால் பத்து நாழி நெல் ஊதியமாகத் தரப்பட்டது. பாரதாயன் கண்டன் ஆச்சனான பூழியன் பிருமமாராயன் கோயிலின் கிழக்கிலிருந்த நந்தவனப் பகுதியில் தென்னந்தோப்பு அமைத்தளித்தார். இத்தோப்பின் ஐம்பது தெங்குகளை விசத்திடைக்கும், பிற தெங்குகளைத் திருமெய்ப்பூச்சுக்கும், இறைவனின் பிற தேவைகளுக்குமென வகைசெய்த பூழியன் ஈசானமங்கலத்தைச் சேர்ந்தவர்.

பராய்த்துறைத் திருக்கோயில் நித்த நிவந்தங்களுக்காக நங்கை பிரமதேயமான அரிஞ்சிகைச் சதுர்வேதிமங்கலத்துப் பிடாகையான நன்னலூரில் தேவதான இறையிலியாக இருபது வேலி நிலம் மூன்றாம் குலோத்துங்கரால் தரப்பட்டது. இந்தக் கொடைக்குப் பரிந்துரைத்தவர் தொண்டைமான் எனும் அரசு உயர் அலுவலர். கோயிலில் கும்பிட்டிருந்த ஆண்டார்களில் நியமதனப் பிச்சர், கோயில் சிவஅந்தணர்கள் நால்வரிடம் நூறு காசு கொடையளித்து அறக்கட்டளையொன்றையமைத்தார். கல்வெட்டு சிதைந்துள்ளதால் அறக்கட்டளை எதற்கென்பதை அறியக்கூடவில்லை.

கி.பி. 1642, சித்திரபானு ஆண்டு, பங்குனித்திங்கள் பதின்மூன்றாம் நாள் அரியாச்சியம்மன் மகன் அல்லுண்டு பெற்று நாயக்கரும், கோயில் பண்டாரத்தாரும் இணைந்து விசுவநாத நாயக்கர் வழியாக திருமலை நாயக்கருக்குப் புண்ணியமாகப் பராய்த்துறைக் கோயிலில் அபிஷேகக் கட்டளையொன்றை அமைத்தனர். இதை நிறைவேற்றும் பொறுப்பு கோயிலில் இருந்த பெரியநாயனார் பண்டாரத்திடம் ஒப்புவிக்கப்பெற்றது. இக்கட்டளைக்காக ஆனந்த ஆண்டு புரட்டாசி முதல் நிலச்சேர்ப்பு நிகழ்ந்தது.

தண்டோபளப்பய்யன் உள்கடையில் சீரங்கம் ஏகாங்கி சடைகோபய்யனிடம் பெற்ற நிலம், அல்லூர் பிராமணரிடம் பெற்ற நிலம், அரியாச்சியம்மன் மேலை உள்கிடை பண்ணை நிலம், உள்ளூரில் ஞாநியாயி திருத்திக் கூடின நிலம், குருவப்பய்யன் குமாரன் சிதம்பரேசுவர அய்யன் பாளையம் திருத்திக் கூடின நிலம், சீரங்கம் சடைகோபய்யனிடம் பெற்ற நிலம் ஒன்றே முக்கால் வேலியில் முதலியப்பப் பிள்ளை கொண்டுவிட்ட நிலம் என இக்கட்டளைக்கான நஞ்சை நில வரவு அமைந்தது. கருணாலயம் குழி ஆயிரம், பெண்கள் கோயில் குழி ஆயிரம், பிடாரித் தோப்புக் குழி இருநூறு, ஓதையாவடித் தோப்புக் குழி இருநூறு, மாற்றறியும் பெருமாள் தோப்புக் குழி நூறு எனப் புஞ்சை நிலச்சேர்ப்பு அமைந்தது. இவ்விருவகை நிலங்களாலும் வந்த உதையமும், பாளையப்பகுதியும் கொண்டு கோயிலில் விளக்கேற்றி இறைவன், இறைவிக்கு அபிஷேகம், நைவேத்தியம் செய்து திங்கள்தோறும் முழுநிலா நாளில் தேர்வலமிட அபிஷேகம் பெரிய நாயனார் பண்டாரத்திற்கு, பெற்று நாயக்கரும் கோயில் பண்டாரத்தாரும் இணைந்தளித்த சண்டேசுவரர் பட்டயம் உரிமையளித்தது.

அம்பலம்

அந்நாளில் பல ஊர்களில் அம்பலங்கள் அமைக்கப்பெற்றிருந்தன. அருள் உள்ளம் கொண்ட சான்றோர்கள் இத்தகு அம்பலங்களை எடுப்பித்து உதவினார்கள். இவ்வம்பலங்கள் கல்லாலும், மரத்தாலும் கட்டப்பட்டன. உணவிடவும், ஊர் கூடவும், நிகழ்ச்சிகள் அமைக்கவும் இவ்வம்பலங்களைப் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. பராய்த்துறையில் இராஜகேசரிவர்மரான சுந்தரசோழரின் பதினான்காம் ஆட்சியாண்டில் அம்பலமொன்று அமைக்கப்பட்டது. விசையாங்குரச் சதுர்வேதிமங்கலத்து சபையாரும், கோயில் ஸ்ரீகார்யமாக இருந்த வேம்பற்றான்குடி பட்டநம்பியும் இணைந்து உருவாக்கிய இவ்வம்பலத்தை நிர்வகிக்க வாய்ப்பாக முதல் இராஜராஜர் காலத்தில் முக்கால் வேலி நிலம் தரப்பட்டது. இந்நிலத்தின் ஆண்டு வருவாயான எழுபத்தைந்து கலம் நெல் கொண்டு அம்பலம் பராமரிக்கப்பட்டதுடன் அங்கு வந்த அந்தணர்கட்கு உணவிடப்பட்டது. அம்பலத்தின் முன் தண்ணீர்ப் பந்தலொன்றும் வைக்கப்பட்டது. இரவு, பகல் எந்நேரமும் அம்பலத்தில் விளக்கெரிக்க எண்ணெய்ச் செலவுக்காக நான்கு நாழி நெல்லும், அம்பலத்தை மெழுகுவாருக்கு நான்கு நாழி நெல்லும், அம்பலத்திற்குத் தேவைப்படும் நீர் கொணர்பவருக்குக் குறுணி நெல்லும் ஒதுக்கப்பெற்றன. அம்பலத்தில் உணவளிக்கக் கலசங்களைக் குயவரிடமிருந்து பெற்றனர். அம்பலத்தைச் சீர்மையுடன் பராமரித்திடத் தச்சருக்கு நான்கு கலம் நெல்லும், கொல்லருக்கு இரண்டு கலம் நெல்லும் ஊதியமாகத் தரப்பட்டன.

திருவிழாக்கள்

பராய்த்துறைத் தாருகாவனேசுவரர் கோயிலில் நடந்த விழாக்களில் மாசிமகத் திருவிழாவே உவப்பிற்குரிய விழாவாகக் கொண்டாடப்பட்டது போலும். ஒன்பது நாட்கள் கொண்டாடப்பட்ட இவ்விழாவிற்கு வருகைதந்த இறையடியார்களான சிவயோகிகளுக்கும், வெள்ளாளத் தவசியருக்கும் இவ்வொன்பது நாளிலும் உணவிட வாய்ப்பாக முதல் இராஜேந்திர சோழர் காலத்தில் நிலம் தரப்பட்டது. இத்திருவிழாவின் நான்காம் நாள் நாற்கல அரிசியிட்டுப் பெருந்திருவமுது சமைத்து இறைவனுக்குப் படையலிட்டனர். மாசிமகத்தின்போது இறைவனுக்குச் சூலக்காலால் இருகல அரிசி கொண்டு பெருந்திருவமுது செய்தளிக்க வாய்ப்பாக ஒரு மாவரை நிலம் விரைக்குடான் கல்லிறை பட்டனாலும், அவர் மகன் பட்டன் கண்டர் கண்டனாலும் கொடையளிக்கப்பட்டது. இதிலிருந்து வந்த எழு கலனே தூணிப்பதக்கு நெல், பெருந்திருவமுது படைத்தளிக்க வகைசெய்தது.

மாசிமகத் திருவிழா தவிர சங்கிராந்தி, விஷு போன்ற விசேஷ நாட்களில் இறைவனுக்குச் சிறப்பு வழிபாடுகளும் படையல்களும் அமைக்கக் கொடைகள் வழங்கப்பட்டன. மாதத் திருவிழாக்களும் நிகழ்த்தப்பட்டன. இவ்விழாக்களின்போது இறைவன் தீர்த்தமாடித் திருவமுது கொள்ள நிவந்தங்கள் அமைக்கப்பட்டன.

சிறப்புத் தரவுகள்

பரகேசரிவர்மரின் ஐந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் குறிக்கப்படும் கொடியாலம் அணை சோழர் காலத்தில் அணைகள் கட்டப்பட்டமைக்குச் சான்றாகிறது. இக்கல்வெட்டு இன்று கோயிலில் இல்லாமையால் இப்பரகேசரிவர்மரை இன்னாரென்று அடையாளம் காணமுடியவில்லை கல்வெட்டு மெய்க்கீர்த்தியின்றியிருப்பதால் இதில் கூறப்பட்டுள்ள மன்னரை முதல் இராஜராஜருக்கு முற்பட்ட பரகேசரிவர்மராகக் கொள்ளமுடியும். இதனடிப்படையில் கி.பி.985க்கு முற்பட்ட தமிழகத்தில் அணை இருந்ததாகக் கூறினால் அது பிழையாகாது.

பராய்த்துறைக் கோயிற் கல்வெட்டுகள் வாயிலாக அந்நாளில் இருந்து சுவடழிந்து போன சில கோயில்களை அறிந்துகொள்ளமுடிகிறது. புலிவலத்தில் பள்ளிச்சந்தமாக நிலப்பகுதியொன்று சுட்டப்படுவதால் இங்குச் சமண அல்லது பௌத்தப்பள்ளியொன்று இருந்ததாகக் கருதலாம்.

பயிர் விளையுமாறு திருத்தி இறைக்கோயிலுக்களிக்கப்பட்ட நாட்டார் மங்கலத்து நிலப்பகுதிகளுள் ஒன்று ஐந்தளி வயக்கல் என்றழைக்கப்பட்டது. இப்பெயரிலுள்ள 'ஐந்தளி', நாட்டார் மங்கலத்துக்கருகே இருந்த

கோயிலொன்றைச் சுட்டுமாறு அமைந்தது போலும். ஐந்து தளிகள் ஒரே கட்டமைப்பில் எடுக்கப்பெற்றால் அக்கோயில் ஐந்தளி எனப்படும். வடமொழியில் இதை பஞ்சாயதனம் என்பர். இக்கட்டுமான முறை தமிழ்நாட்டில் மிக அருகியே பயன்பாட்டில் இருந்தது. கொடும்பாளூரில் கிடைத்திருக்கும் கோயில் அடித்தளமொன்றை அதன் அமைப்பு கொண்டு ஐந்தளியாகக் கருதுவார் எஸ்.ஆர். பாலசுப்ரமணியம்.[20] கொடும்பாளூர் வேளிர் குலச் சிற்றரசர்களின் கைவண்ணத்திலெழுந்த கோயில்கள் சில பராய்த்துறைக்கருகிலுள்ள ஊர்களில் காணப்படுவதாலும், கொடும்பாளூரில் ஐந்தளியமைப்பின் அடித்தளமொன்று இருப்பதாலும் நாட்டார் மங்கலத்திற்கருகே இருந்தழிந்த இவ்வைந்தளியும் அவ்வரசப் பெருமக்களாலேயே எடுக்கப்பட்டதாகக் கொள்ளலாம்.

எழுமுள்ளூரில் விஷ்ணுவிற்கான கோயிலொன்று இருந்தது. இக்கோயிலுக்குப் பயிர் விளையுமாறு திருத்தப்பட்ட நிலமொன்று விஷ்ணு விளாகம் என்ற பெயரில் கொடையளிக்கப்பட்டது.[21] பராய்த்துறைக்கருகிலிருந்த ஊரொன்றில் திருவாலந்துறை உடைய நாயினார் திருக்கோயில் இருந்தது. இக்கோயிலின் திருமடைவிளாகம் கோயிலைச் சுற்றி நான்கு தெருக்களிலும் அமைந்திருந்தது. இவ்வூரில் பராக்கிரம பாண்டியர் ஆட்சிக்காலத்தே வாழ்ந்த மக்கள் இனங்களுள் கைக்கோளமுதலிகள் குறிப்பிடத்தக்கவர்களாய் அமைந்தனர். ஏகாங்கியின் திருவீதி எனும் பெயரில் இவ்வூரில் ஒரு தெரு அமைந்திருந்தது.

கி.பி. 1642 இல் வெட்டப்பட்ட கல்வெட்டொன்று பல அரிய தரவுகளை முன்வைக்கிறது.[23] அவற்றுள் பராய்த்துறைக்கருகே அமைந்திருந்த பெண்கள் கோயில் ஒன்று. பெண்கள் கோயில் என்று தனிச் சிறப்புத் தந்து அழைக்கப் பெற்ற இக்கோயிலின் தன்மை, கட்டுமானம், இறைவடிவங்கள் ஆகியன குறித்து ஏதும் அறியக்கூடவில்லை. இக்கோயிலுக்கு ஆயிரம் குழி நிலம் இருந்தது மட்டுமே தெரியவருகிறது. இப்பகுதியில் பிடாரி கோயிலொன்று இருந்ததும் இக்கல்வெட்டால் தெரியவருகின்றது. பாச்சிலாச்சிராமம் என்று கல்வெட்டுகளிலும், பதிகத்திலும் அழைக்கப்படும் இன்றைய திருவாசியிலிருக்கும் மாற்றறியும் பெருமாள் கோயிலுக்கு நூறு குழி தோப்பு பராய்த்துறைப் பகுதியில் அந்நாளில் இருந்தது. பராய்த்துறையில் கி.பி. 1642லேயே திங்கள் தோறும் முழுநிலவு நன்னாளில் இறைவன் இறைவி திருமேனிகளை வைத்துத் திருத்தேர் இழுக்கப்பட்டமையும் இக்கல்வெட்டால் அறியப்படும் அரிய தரவாகும்.

மூன்றாம் குலோத்துங்கர் காலத்ததாகக் கொள்ளத்தக்கக் கல்வெட்டொன்றில் நான்கு பழங்கோயில்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் திருச்சோமீசுவரமுடையார் கோயில், திருமேற்கோயில், உலகமுண்டார்

கோயில் ஆகியன இன்று காணுமாறு இல்லை. திருக்குளிர்மணி மகாதேவர் கோயில், குழுமணிச் சிவன் கோயிலாய்ப் பெயர்மாற்றம் பெற்றுள்ளது. முதற் குலோத்துங்கரின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு மன்னரைத் திருப்பேரம்பலம் பொன் மேய்ந்தவராகக் குறிக்கிறது.[24] இத்திருப்பேரம்பலம் தில்லைத் திருக்கோயிலின் நடராசர் திருமுன்னையே குறிக்கிறதெனலாம்.

பொதுவாகக் கல்வெட்டுகளில் இறைவன், இறைவியின் பெயர்கள் குறிக்கப்பட்டிருக்குமே தவிர, அவர்தம் அமர்வுநிலை இடம்பெற்றிருக்காது. விதிவிலக்காகப் பராய்த்துறையிலுள்ள முதல் இராஜேந்திரரின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, இக்கோயில் இறைவனை, 'உறையூர்க் கூற்றத்தில் திருப்பராய்த்துறை சுகாசனம் இனிதெழுந்தருளிய திரிபுவன அதிபதி' என்று அமர்வுநிலை கூறி அறிமுகப்படுத்துவதுடன், இறைவனது மூலபிருத்தியனாக சண்டேசுவரரைக் குறிக்கிறது.[25] சுகாசனத்தில் எழுந்தருளியிருந்த அத்திருமேனி கோயிலில் இன்று காணுமாறு இல்லை. பராய்த்துறைக் கோயில் சோமாஸ்கந்தர் திருமுன்னின் கிழக்குச் சுவரிலிருந்து படியெடுக்கப்பட்ட கல்வெட்டு அத்திரு முன்னைத் திருமண்டபம் என்று குறிப்பதுடன் அதை எடுப்பித்தவராகச் சிறை மீட்டான் திருவேங்கடமுடையானை அறிமுகப்படுத்துகிறது. முதல் திருச்சுற்றுக் கோபுர வாயிலின் இடப்புறமிருந்து படியெடுக்கப்பட்டிருக்கும் கல்வெட்டு வயலூருடையான் திருச்சிற்றம்பலமுடையானான சத்தியரையன் கட்டிய மாளிகையொன்றைச் சுட்டுகிறது. இம்மாளிகை இன்று காணுமாறு இல்லை. முதல் இராஜேந்திரரின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் மாசிமகத் திருவிழாவில் உணவளிக்க வாய்ப்பாகக் கொடையளிக்கப்பட்ட நிலமொன்றின் எல்லையாகவும் மாளிகையொன்று சுட்டப்படுகிறது. இம்மாளிகை நிலத்தின் வடபகுதியில் இருந்ததாகத் தெரிகிறது.

இரண்டு கல்வெட்டுகள் அக்கால விளைச்சல் மற்றும் விலை விவரங்கள் தருகின்றன. முதல் இராஜராஜரின் இருபத்து நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு அரை வேலி நிலத்திலிருந்து அறுபது கலம் நெல் விளைந்ததைத் தெரிவிக்கிறது.[26] இந்நிலப்பகுதி காவேரிக் கரையருகே இருந்த கோனடி வயக்கலாகும். முதல் இராஜராஜரின் இருபத்தொன்பதாம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டுள்ள தஞ்சாவூர் இராஜராஜீசுவரத்துத் தளிச்சேரிக் கல்வெட்டு ஒரு வேலி நிலத்திலிருந்து நூறு கலம் நெல் கிடைத்ததாகத் தெரிவிப்பது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.[27] முதற் பராந்தகரின் பதினேழாம் ஆட்சியாண்டின்போதும் அல்லூர், நள்ளலூர், விசையாங்குரச் சதுர்வேதி மங்கலம் ஆகிய ஊர்களிலுள்ள நிலங்களில் வேலிக்கு நூறு கலம் நெல்லே கிடைத்ததாக அறியமுடிகிறது.[28] இதே மன்னரின் முப்பதாம் ஆட்சியாண்டின் போது பதினான்கு பசுக்களின் விலை ஆறு கழஞ்சுப் பொன்னாக இருந்தது.[29]

முடிவுரை

பராய்த்துறைத் தாருகாவனேசுவரர் கோயிலில் வெட்டப்பட்டு, இன்று சென்ற இடம் தெரியாமல் தொலைந்துபோயிருக்கும் சோழ, பாண்டிய, விஜயநகர, நாயக்கர் கால ஆவணப் பதிவுகள் வழி ஏறத்தாழ எழுநூற்றைம்பது ஆண்டுகள் இத்திருக்கோயில் வாழ்ந்த வாழ்க்கையையும், இக்கோயிலோடு தொடர்புடைய மக்கள் சூழலையும் ஓரளவிற்கு அறிந்துகொள்ளமுடிகிறது. வரலாறு எழுதுவதற்கு முதன்மையான மூலங்களாக விளங்கும் இத்தகு கல்வெட்டுகளைக் காப்பாற்றிப் போற்றும் உணர்வு என்று நமக்கு ஏற்படுகிறதோ அன்றுதான் இந்தத் தேசம் உருப்படும்; தலை நிமிரும்.

அடிக்குறிப்புகள்

1. *இவற்றுள் ஒரு கல்வெட்டு கூட இன்று கோயிலில் காணுமாறு இல்லை. திருப்பணிக் கைகள் இவற்றை முற்றிலுமாய் அழித்துவிட்டன. இது போல் மற்றொரு திருப்பணிப் பசிக்கு நூறு கல்வெட்டுகளைப் பறிகொடுத்த கோயில் திருவிசநல்லூரில் இருக்கிறது. நல்ல வேளையாக இக்கோயிற் கல்வெட்டுகளும் ஆங்கில அரசால் படியெடுக்கப்பட்டு உயிர்தப்பின. ஆங்கில அரசுக்கு நம் வரலாற்றைக் காப்பாற்றுவதில் இருந்த அக்கறையில் ஒரு விழுக்காடு கூட நம் அரசாங்கங்களுக்கோ, மக்களுக்கோ இல்லையென்பதுதான் இருபதாம் நூற்றாண்டின் மிகப் பெரிய துயரம். விடுதலை பெற்ற இந்த நாட்டின் சாபக்கேடும் அதுதான்.*
2. SII 8 : 570.
3. SII 8 : 566.
4. SII 8 : 546.
5. SII 8 : 584.
6. SII 8 : 578; *இராஜகம்பீரன் இரண்டாம் இராஜராஜரின் விருதுப் பெயர்களுள் ஒன்றாகும். தாராசுரத்திலுள்ள இரண்டாம் இராஜராஜரின் இராஜராஜேசுவரம் கோயிலின் முன் மண்டபம், ராஜகம்பீரன் மண்டபம் என்று கல்வெட்டுப் பொறிப்புப் பெற்றுள்ளமை இங்கு நினைவுகூரத்தக்கது.*
7. SII 8 : 599.
8. M. Nalini, Historical and Cultural Geography of the Tiruchirappalli District, Tamilnadu from the 6th Century to the 17th Century with Special Reference to Mala Nadu and Valluvappadi Nadu, Unpublished Thesis, Appendix I, p. XVIII - XX.
9. SII 8 : 607, 616.
10. *இரா. கலைக்கோவன், காவிரிக் கரையிலோர் காவியக் கற்றளி. செந்தமிழ்ச்செல்வி, நவம்பர், 1990, பக். 94-95.*
11. P. Shanmugam, The Revenue System of the Cholas 850 - 1279, Madras, New Era Publications, 1987, p. 49.

12. Ibid., pp. 50-51.
13. Ibid., p. 50.
14. SII 8 : 590.
15. SII 8 : 582; தலைமடைப்புறமே தலைமலைப்புறமாக இடம்பெற்றுள்ளது போலும்.
16. SII 8 : 689, 699.
17. SII 8 : 565.
18. பட்டினப்பாலை, 246 - 248.
19. ஐந்தாம் திருமுறை, தருமபுர ஆதீனப் பதிப்பு, 1961, பதிகம் - 92.
20. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், சென்னை, தமிழ் வெளியீட்டுக் கழகம், 1966, பக். 12-13.
21. SII 8 : 584.
22. SII 8 : 569.
23. SII 8 : 599.
24. SII 8 : 575.
25. SII 8 : 559.
26. SII 8 : 571.
27. SII 2 : 66.
28. SII 8 : 550.
29. SII 8 : 546.

ஊர்ப்புலத்தி

இன்று அழுக்குத் துணிகளைச் சலவைசெய்யப் பல வழிகள் உள்ளன. சலவைப்பொறி கூட வந்துவிட்ட காலமிது. அந்நாளில் எவ்வாறு சலவைசெய்தனர்? அவரவர் வீடுகளிலேயே தோய்த்துக்கொண்டனரா? அல்லது ஊருக்கு ஊர் தோய்ப்பவர் இருந்தனரா? கலித்தொகை (72), ஊரவர் ஆடை கொண்டு ஒலிக்கும் புலத்தியை அடையாளம் காட்டுவதால், தோய்க்குந் தொழில் செய்வார் இருந்ததையும் அவர்கள் புலத்தியரென்று அழைக்கப்பட்டதையும் அறியமுடிகிறது. இவர்கள் அடித்துத் தோய்த்தே அழுக்கு நீக்கியதையும் பாடலடி விளக்குகிறது. இப்புலத்தியர் பற்றிய குறிப்புகள் பிற சங்க இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. வீட்டிலேயே தோய்த்து உலர்த்தியமைக்குப் பாடலுள்ளதா? அறிஞர்கள் தகவல் தரலாம்.

9. இசுரேலில் தமிழ்

தேவமணி ரஃபேல்

கடந்த திங்களின் இறுதியில் இசுரேல் செல்லும் வாய்ப்பு எமக்கு ஏற்பட்டது. அவ்வேளை, இயேசுபிரான் பிறந்த, வளர்ந்த, அறிவுரை வழங்கிய, விந்தைகள் புரிந்த, பாடுகள் பட்ட, இறந்து போன, மீண்டும் உயிர்த்தெழுந்த இடங்களைத் தரிசித்து மகிழ்ந்தோம்.

இயேசு வாழ்ந்தது ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால். எனின், எப்படி இந்த இடங்களை அவ்வளவு துல்லியமாகக் குறிப்பிடுகிறீர்கள் என்று கேட்டோம். விவிலியம் நூலும், மரபுவழியும் தரும் செய்திகளைத் தொல்லியல் ஆய்வுக்கு உட்படுத்தி இந்த இடங்களை நிர்ணயம்செய்கிறோம் என்றார்கள். சில இடங்களில் இப்படி அறிக்கைகளும் எழுதிவைத்திருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக இயேசு பிறந்த இடத்தைச் சொல்லலாம். அது பெத்லகேம் என்ற ஊரில், ஒரு மாட்டுக் கொட்டிலாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு குகை என்பதை நாம் அறிவோம். அவர் பிறந்ததும் அவரை ஒரு துணியில் சுற்றி மாடுகள் உணவு உண்ணப் பயன்படுத்திய ஒரு பாறை மீது மரியன்னை வைத்தார் என்கிறது விவிலியம். இயேசு சிலுவையில் அறையப்பட்டதும் இந்த மாட்டுக் கொட்டிலும் புகழ்பெற்றது. மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று வழிபடத் தொடங்கினார்கள். கி.பி. 330ஆம் ஆண்டு கொன்ஸ்டடைன் என்ற முதல் கிறித்துவ மன்னன் ஆட்சிக்கு வந்தான். இவன் இந்த வழிபாட்டுத் தலம் மீது ஒரு கற்கோவிலைக் கட்டினான். அதன் பிறகு கி.பி. 600ஆம் ஆண்டில் ஜஸ்டீனியன் என்ற அரசன் கோவிலைச் சுற்றிலும் ஒரு பெரிய பாதுகாப்பு அரணை அமைத்தான். எனினும், கி.பி. 1089இல் அரேபியர் படையெடுத்துவந்து கோவிலைத் தகர்த்து அழித்தார்கள். ஆனால் இயேசு பிறந்த இடம் தரைமட்டத்திற்குக் கீழே இருப்பதால் அது அழிவிலிருந்து தப்பியது என்கிறார்கள். கி.பி. 1244இல் மீண்டும் கட்டப்பட்ட இக்கோயில் 1489ஆம் ஆண்டு மற்றுமொரு அழிவைச் சந்தித்தது. அதன் பிறகு கோவில் வளர்ந்து இப்போது உள்ள தோற்றத்தைப் பெறுவதற்கு மூன்று நூற்றாண்டுகள் பிடித்தன என்கிறார்கள் வரலாற்று ஆசிரியர்கள்.

கோவிலின் மையப் பகுதியிலிருந்து கீழ் நோக்கிச் செல்லும் படிகள் வழியே இறங்கிச் சென்றால் இயேசு பிறந்த இடத்தையும், அவர் கிடத்தப்பட்ட இடத்தையும் காணலாம். இரண்டு இடங்களிலும் இரண்டு பாறைகள் உள்ளன. காலம் காலமாக மக்கள் தொட்டுத் தடவி வழிபட்டதால், இவை இரண்டும் சலவைக் கற்கள் போல் பளபளப்பைப் பெற்றுள்ளன. இவற்றை இசுரேல் அரசின் தொல்லியல் துறையினர் (Israel Exploration Society and Institute of

இயேசுநாதர் தம் சீடருக்கு பிரார்த்தனை செய்வது எப்படி என்பதை
விளக்கி ஒரு பிரார்த்தனையும் சொல்லித்தந்த இடம்

Archaeology of the Hebrew University) ஆய்வுக்கு உட்படுத்தி அங்கீகாரம் வழங்கியுள்ளனர்.

பிரார்த்தனையிடத்தின் மீது எழும்பியுள்ள கோவில். கோவிலின் சுவரில் உலகின் சிறப்பான 35 மொழிகளில் பிரார்த்தனை எழுதப்பட்டுள்ளது.

இயேசுவின் சமகாலத்தவன் ஏரோது என்ற மன்னன். இவன் மிக நீண்ட காலம் ஆட்சியில் இருந்திருக்கிறான். மசாதா (எபிரேய மொழியில் கோட்டை என்று பொருள்) என்ற ஊரில் ஒரு செங்குத்தான மலையின் உச்சியில் கட்டப்பட்டிருந்த ஒரு கோட்டைக்குள் இவன் கி.பி.42இல் தஞ்சம்புகுந்தான். இவனை யூதர்கள் ஒரு புறமும், அப்போது ஆட்சியிலிருந்த எகிப்திய அரசி கிளியோபாத்ரா மறுபுறமும் வேட்டையாடினார்கள். அதனால் இவன் மசாதா கோட்டையைப் பல ஆண்டுகள் முற்றுகைக்கு ஈடு கொடுக்கும் வண்ணம் மாற்றியமைத்தான். அரச குடும்பத்தவருக்கு, வெந்நீர் ஆவிக்குளியல்

அறைகளுடன் கூடிய ஒரு மூன்றடுக்கு மாளிகைப்பகுதி; 700 போர் வீரர்கள் தம் குடும்பத்தோடு வாழ்வதற்கு உறைவிடங்கள்; அவர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்குத் தேவையான உணவு, தண்ணீர் போன்றவற்றைச் சேமித்து வைக்க வசதிகள் ஆகியவற்றுடன் கோட்டையைத் திருத்தினான். மழைக்காலத்தில் மலைப்பகுதியில் சீறிப் பாயும் காட்டாற்று வெள்ளத்தை, அதன் வேகத்தைப் பயன்படுத்தி மலையின் உச்சிக்குக் கொண்டுவந்தான்.

ஆயினும் இந்தக் கோட்டையை ரோம் நாட்டுப் போர் வீரர்கள் தகர்த்து அழித்தனர். அவர்கள் விட்டு வைத்தவற்றைக் காற்றும் மழையும் கரைத்தன. இந்தக் கோட்டையை இசுரேல் அரசு புதுப்பித்து வருகிறது. அகழ்வாய்வு மூலம் வெளிப்பட்ட பகுதிகள் மீது சுவர்களை எழுப்பியுள்ளார்கள். பழங்காலத்தில் எப்படி கட்டப்பட்டிருந்ததோ, அப்படியே, அப்போது பயன்படுத்திய கற்கள், பூச்சுகள் ஆகியவற்றையே பயன்படுத்திக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தோண்டிக் கண்டுபிடிக்கப்பட்ட மூலச்சுவரில் கோடிட்டுக் காட்டி 'இது முன்னால் இருந்த சுவரின் பகுதி; இதற்கு மேல் இருப்பது நாங்கள் கட்டியது' என்று எழுதியும் வைத்திருக்கிறார்கள். இப்படி அவர்கள் மிகுந்த ஈடுபாட்டுடன் பழமையைப் பாதுகாப்பது எம்மை மிகவும் கவர்ந்தது.

எருசலேம் நகரின் கிழக்குப்பகுதியில் இருக்கிறது புகழ் வாய்ந்த ஒலிவ மலை. இதன் உச்சியிலும், சாரலிலும், அடிவாரத்திலும் பல வரலாற்றுச் சிறப்புடைய கோவில்கள் உள்ளன. மலையின் முகட்டில்தான் இயேசு தன் சீடருக்கு, எப்படி பிரார்த்தனைசெய்வது என்பதை விளக்கி, ஒரு பிரார்த்தனையையும் சொன்னார் என்கிறது விவிலியம். இந்த இடத்தில் ஒரு பெரிய கோவில் எழுந்துள்ளது. கோவிலின் சுவர்களில் இயேசு அருள் செய்த பிரார்த்தனை (பரமண்டலங்களில் இருக்கும் எங்கள் பிதாவே! உம்முடைய இராச்சியம் வருக!.....) உலகின் முக்கிய மொழிகளாகக் கருதப்படும் முப்பத்தைந்து மொழிகளில் எழுதப்பட்டுள்ளது. அவற்றில் ஒன்று எமது தமிழ் என்பதைக் கண்டதும் மிகவும் பெருமையாக இருந்தது. எபிரேய மொழியில் "தமிழ்" என்ற சொல்லைத் "தமுல்" என்று சொல்வார்கள் போலும் (நம் நாட்டிலும் பலர் அப்படித்தானே சொல்கிறார்கள்!). "தமுல்" என்ற தலைப்பின் கீழ் பிரார்த்தனை முழுவதும் தமிழில் காணப்படுகிறது.

ஒலிவ மலையின் அடிவாரத்தில் "கெத்சமனே" என்ற தோட்டம் உள்ளது ('கெத்சமனே' என்றால் எபிரேயத்தில் எண்ணெய்ச் செக்காம்). இயேசு தாம் பாடுபடத் தம்மைக் கையளிப்பதற்கு முந்தைய இரவில் அவர் இரத்த வியர்வை சிந்த பிரார்த்தனை செய்தது இந்தத் தோட்டத்தில்தான். இங்குள்ள ஒலிவ மரங்களில் சில மிகவும் பழமை வாய்ந்தவை. ஒரு மரம் இயேசுவின் காலத்தைச் சேர்ந்தது என்றார்கள். "ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக மரங்கள்



பிரார்த்தனை தமிழில்! தமிழைத் "தமுல்" என்பார்கள் போலும் எபிரேய மொழியில்.

உயிர் வாழுமா?" என்று நாம் கேட்டதற்கு, "இச்ரேலில் நான்காயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த ஒரு மரம் கூட (ஏப்ரகாம் காலத்தைச் சேர்ந்தது) இருக்கிறது. இவையெல்லாம் Institute of Archaeology of the Hebrew University*யின் அங்கீகாரம் பெற்றவை. நீங்கள் மீண்டும் இங்கு வந்தால் கூட்டிக்கொண்டு போய்க் காட்டுவோம்," என்றார் எமது வழிகாட்டி.*

எஃகுச் சிதறல்கள் – 2

நுண்மை, நுட்பம், உறுதி என்னும் பொருளில், தொடக்கத்தில் வழங்கப்பட்டிருக்கும் இச்சொல், அத்தன்மைகளை ஏற்கத்தக்க உலோகத்திற்குச் சிறப்பாக இரும்பிற்கு ஆகி வழங்கப்பட்டிருக்கலாம். தேனிரும்பு போல்வனவற்றிற்கு இத்தன்மைகள் குறைவாதலின், உருக்கு (Steel) என்னும் இரும்பு வகைக்கே பெயராகி வழங்கப்படுகிறது.

சங்கத் தொகையுள் எஃகு என்னும் சொல், வேல், அரிவாள், வாள், கத்திரிகை, கத்தி, வில், இலை, கூர்மை, நுண்மை, எஞ்சுதல் என்னும் பத்து வகைப் பொருட்களிலும், எஃகம் என்னும் சொல் வேல், கோடரி, படைக் கருவிகள் என்னும் மூவகைப் பொருட்களிலும் ஆளப்பட்டுள்ளன. இவற்றை மேலோட்டமாக நோக்குங்கால், எஃகு என்னுஞ் சொல் பெரும்பாலும் உருக்கினாலாக்கப்படும் இருப்பாயுதங்களைக் குறிக்கப் பயன்படுத்தப் பட்டிருப்பது புலனாகும்.

பயன்படுத்தப்பட்டுள்ள செவ்வி நோக்கி, நச்சினார்க்கினியர் 'எஃகிடைத் தொட்ட' என்னும் கலி. 32ஆம் செய்யுளில் இடம்பெற்றுள்ள எஃகு என்பதற்குக் கத்திரிகை (Scissors) என்று சரியாகப் பொருள் கொண்டுள்ளார். அவரது கருத்திற்கு "இடைத்தொட்ட" (ஊடே சென்று வெட்டிய) என்னும் தொடர் அரணாகிறது. கலி. 36ஆம் செய்யுளில் இடம்பெற்றுள்ள 'வாளிடைப்படுத்த வயங்கீரோதி' (36-23) என்னும் அடியில், வாள் என்பதற்குச் செவ்வி நோக்கி இவ்வாசிரியர் கத்திரிகை என்று பொருள் கூறியுள்ளார்.

இவற்றை நோக்குங்கால் எஃகு என்பது "கத்திரிகை"யை மட்டும் குறிக்கும் பெயராகாது என்பதும், அது தாங்கள் கருதியது போல, இருப்பாயுதக் கருவிகளைச் சுட்டும் பொதுப்பெயரென்பதும், கலித்தொகையின் ஓரிடத்தில் கத்திரியைச் சுட்டும் வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதும், 'வாள்' என்னும் பொதுச்சொல்லால் 'கத்திரிகை' சுட்டவும் பெறும் என்பதும் புலனாகும்.

மகளிர் முடி திருத்தப்பட்டதனைக் கலித்தொகை ஆட்சியாலும், உரையாலும் நன்குணரமுடிகின்றது. மகளிருக்கும், குதிரைக்கும் சிலேடை தோன்றுமாறு அமைந்த (கலி. 96-8) 'ஐங்கூந்தல் பன் மயிர்க் கொய் சுவல்' என்னும் தொடருரையால் மகளிர் கூந்தலுக்கும், குதிரையின் சுவலுக்கும் (பிடரி மயிர்) கத்திரித்து ஒப்பனை செய்வது உண்டென்பதனை உணரலாம். மக்கள் ஒப்பனையில் முடிதிருத்தம் அன்றே உளது என்பது தவறாகாது.

அ.மா. பரிமணம்

10. தமிழகக் குகைக் கல்வெட்டுகளில் சமணம்

ஐராவதம் மகாதேவன்

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்நாட்டில் இயற்கைக் குகைகளில் கல்வெட்டுகள் முதன்முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றைக் கண்டறிந்த தொல்லெழுத்தியல் அறிஞர்கள், அவை "பிராமி எழுத்துகளில் பாளி மொழியில் பௌத்த மதத்தினர் பொறித்த கல்வெட்டுகள்" என்றே கருதினர். இக்கல்வெட்டுகளின் எழுத்துகள் பெரும்பாலும் அசோக மன்னனின் கல்வெட்டுகளில் காணப்படும் பிராமி எழுத்துகளை ஒத்திருப்பதாலும், அசோகனின் கல்வெட்டுகள் பாளி மொழியில் உள்ளதாலும், அவை பௌத்த மதத்தைப் பரப்புவதற்காகப் பொறிக்கப்பட்டவை என்பதாலும் இவ்வாறு அறிஞர்கள் கருதினர். ஆயினும் கல்வெட்டுகளை முழுமையாகப் படித்தறியுமுன்னரே இக்கருத்துகள் கூறப்பட்டன.

பின்னர் கே.வி. சுப்ரமணிய அய்யர் முதலிய பல அறிஞர்கள் மேற்கொண்ட ஆய்வுகளின் மூலம் தமிழகக் குகைக் கல்வெட்டுகள் தமிழில் எழுதுவதற்காக பிராமியிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட தமிழ்-பிராமி எழுத்துகளில் எழுதப்பட்டுள்ளன என்றும், சமயச் சார்பான சில பிராகிருதச் சொற்களைத் தவிர இக்கல்வெட்டுகளின் மொழி தமிழே என்றும், தமிழகத்தில் அக்காலத்தில் பௌத்தத்தை விடச் சமணமே மிகவும் செல்வாக்குடன் இருந்ததைப் பண்டைத் தமிழ் இலக்கியங்களும், இடைக்காலக் கல்வெட்டுகளும் காட்டி நிற்பதால் குகைக் கல்வெட்டுகளும் சமணச் சார்புடையவை என்றும் படிப்படியாகத் தெரியவந்தது. இன்று பெரும்பாலான அறிஞர்கள் இக்கருத்துகளை ஏற்றுக்கொண்டிருப்பினும் இவையும் புறச்சான்றுகளிலிருந்து ஊகிக்கப்பட்டவையே. குகைக் கல்வெட்டுகளின் திருத்தமான பாடங்கள் கிடைக்காத நிலையில் அவை சமணச் சார்புடையவை என்று ஐயமின்றி நிறுவ அகச்சான்றுகள் கண்டறியப்படவில்லை.

கடந்த பல ஆண்டுகளாக நான் தமிழகத்திலுள்ள இயற்கைக் குகைகளுக்கு மீண்டும் நேரில் சென்று தமிழ்நாடு தொல்லியல் துறை வல்லுநர்களின் பேருதவியுடன் கல்வெட்டுகளை மிகவும் கவனமாகப் படியெடுத்து அவற்றின் முழுமையான, திருத்தமான பாடங்களைப் பதிப்பிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறேன். தமிழகக் குகைக் கல்வெட்டுகள் சமணச் சார்புடையவை என்பதற்கு அகச்சான்றுகளாக அக்கல்வெட்டுகளில் காணப்படும் சில முக்கியமான சொற்களைத் தொகுத்தளிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சமணத்திற்கும் மற்ற சமயங்களுக்கும் பொதுவான ஆசாரியர், தம்மம், தான(ம்), ப(ள்)ளி போன்ற பல கல்வெட்டுச் சொற்கள் இக்கட்டுரையில்

இடம்பெறவில்லை. மேலும் கல்வெட்டுகளின் பாடங்களையும் மேற்கோள்களின் முழு விவரங்ளையும் இடமின்மையால் இதில் சேர்க்க இயலவில்லை. அண்மையில் வெளிவர இருக்கும் 'பண்டைத் தமிழ்க் கல்வெட்டியல்' (Early Tamil Epigraphy) எனும் என் நூலில் இவற்றைக் காணலாம்.

I. தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் சமண சமயச் சொற்கள்

1. கணி

சமண சமயத்தில் கணங்கள் என்ற பெயரில் துறவிகளின் குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கணத்திற்கும் தலைமை தாங்கிய மூத்த துறவி கணி என்றழைக்கப்பட்டார். சம்ஸ்கிருதத்தில் க₃ணீ என்பதும், பிராகிருத மொழியில் க₃ணி என்பதும் இச்சொல்லின் மூலமாகும். சமணம், பௌத்தம் ஆகியவற்றுக்கு சமயத் தொடர்பான பல சொற்கள் பொதுவாக இருப்பினும், கணி என்ற சொல் சமணத் துறவிகளுக்கு மட்டுமே உரியது என்பதைச் சமண நூல்களும் பிராகிருத மொழிக் கல்வெட்டுகளும் தெரிவிக்கின்றன. பௌத்த சங்கங்களின் தலைவர்களை இச்சொல் குறித்ததாகச் சான்றுகள் இல்லை.

தமிழகத்தில் மதுரைக்கடுத்த மாங்குளத்திலும் அழகர்மலையிலும் உள்ள குகைக் கல்வெட்டுகளில் அங்கு வாழ்ந்திருந்த சமணத் துறவிகளுக்கு கணி என்ற அடைமொழி தரப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுகள் எழுத்தமைதியின் அடிப்படையில் ஏறத்தாழக் கி.மு. 2-1 நூற்றாண்டுகளைச் சார்ந்தவை என்று கருதலாம். தமிழகத்துக் குகைக் கல்வெட்டுகள் தொடக்கக் காலத்திலிருந்தே சமண சமயத்தைச் சார்ந்தவை என்பதற்கு கணி என்ற இச்சொல் மிகப் பழமையான, முக்கியமான அகச்சான்று ஆகும்.

பல்லவர் காலத்தில் நந்திசங்கத்தைச் சார்ந்த மூத்த சமணத் துறவியான வஜ்ரநந்தி என்னும் பெரியார் கணி என்று அழைக்கப்பட்டார் (பள்ளன்கோயில் செப்பேடுகள், சம்ஸ்கிருதப் பகுதி). சோழர் காலத்திலும் கணி சேகர மருபொற் சூரியன் என்ற சமண முனிவரின் பெயர் ஒரு கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது (தெ.இ.க.I. 66).

கணம் என்ற சொல்லுடன் தொடர்புடைய கணி (கணத்தின் தலைவர்) என்ற இச்சொல் கணித்தல் என்ற வினைச்சொல்லுடன் தொடர்புடைய கணி (சோதிடன்) என்ற சொல்லிலிருந்து வேறானது.

2. அமணன்

ச்ரமண என்ற சம்ஸ்கிருதச் சொல் பிராகிருத மொழியில் ஸமண என்று வழங்கியது. இச்சொல் பிராகிருதக் கல்வெட்டுகளில் பௌத்த, ஜைன,

ஆஜீவிகச் சமயங்களைச் சார்ந்த துறவிகளைக் குறித்தது. ஆயினும் இச்சொல்லிலிருந்து பெறப்பட்ட சமண > அமண என்ற தமிழ்ச் சொற்கள் சமண சமயத்தை மட்டுமே குறிக்கின்றன. (எ-டு) சமணீர்காள் (மணிமேகலை); சமணரொடு புத்தரும், அருகரொடு புத்தர், சமணர் சாக்கியர் போன்ற தேவார வழக்குகள் ஜைன மதத்தினரை அருகர், சமணர் என்றும், பௌத்த மதத்தினரை புத்தர், சாக்கியர் என்றும் தெளிவாக வேறுபடுத்திக் காட்டுகின்றன.

மேட்டுப்பட்டிக் குகைக் கல்வெட்டில் அமணன் என்ற சொல் முதன்முதலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் காலம் ஏறத்தாழக் கி.மு. 2ம் நூற்றாண்டாகும். பின்னர் புகழியூர்ப் புகழிமலைக் கல்வெட்டுகளில் அமண்ணன் என்ற சொல் இருமுறை குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுகளின் காலம் ஏறத்தாழக் கி.பி. 2ம் நூற்றாண்டாகும். பல்லவர் காலத்திய பள்ளன்கோயில் செப்பேடுகளில் வடமொழிப் பகுதியில் வரும் ச்ரமணாச்ரமம் என்ற சொல் அமண்சேர்க்கை என்று தமிழ்ப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸமண என்ற பிராகிருதச் சொல் தமிழில் சமண என்றாகி பின்னர் மொழிமுதல் 'ச'கரம் கெட்டு அமண என்று உருமாற்றம் பெற்றிருப்பது நீண்ட கால மொழியியல் மாற்றமாகும். அமணன் என்ற தமிழ்ச்சொல் கி.மு. 2ம் நூற்றாண்டிலேயே கல்வெட்டில் பயின்றுவருவதால் அதற்கு மிகவும் முந்தைய காலத்திலேயே, அதாவது கி.மு. 4-3 நூற்றாண்டுகளிலேயே, சமணம் தமிழகத்தை வந்தடைந்திருக்கவேண்டும். கர்நாடகத்தில் சிரவணபெளகொள என்னும் தலத்திலிருந்து மௌரிய மன்னன் சந்திரகுப்தனின் மறைவுக்குப் பிறகு அவனுடைய குருவான பத்ரபாகுவின் பிரதான சீடரான விசாகமுனிவர் தமிழகத்தில் சமயப்பணிகளை மேற்கொண்டார் என்று சமண சமய நூல்கள் கூறும் கர்ணபரம்பரையான வரலாற்றை இச்சொல்லாய்வு ஓரளவு உறுதிசெய்கிறது எனலாம்.

3. உப(ச்)சன்

சம்ஸ்கிருத மொழியில் உபாத்யாய (ஆசிரியர்) என்ற சொல் பாளி மொழியில் உபஜ்ஜாய, உபஜ்ஜ என்றும், அர்த்தமாகதி மொழியில் உவஜ்ஜாய, ஓஜ்ஜாய என்றும் உருமாறி வழங்கியது. இச்சொல் திருவாதவூர் குகைக் கல்வெட்டில் உப(ச்)சன் என்றும், கீழவளவு, கொங்கர்புளியங்குளம் குகைக் கல்வெட்டுகளில் உப(ச்)ச-அன் என்றும் எழுதப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுகளின் காலம் ஏறத்தாழக் கி.மு. 2-1 நூற்றாண்டுகளாகும்.

சமண சமயத்தில் பஞ்சபரமேஷ்டிகள் என்று துதிக்கப்படும் ஐவரில் உவஜ்ஜாய என்ற உபாத்தியாயரும் ஒருவர் ஆவர். தமிழகத்துச் சமண வரலாற்றில் சமண சமய சாத்திரங்களைக் கற்றறிந்து பிறருக்குப் போதிக்கும் திறன் படைத்த குரு உபாத்தியாயர் என்று அழைக்கப்படுகிறார். இவர் இல்லற வாழ்வை மேற்கொண்டு சமணக் கோயில்களில் பூசை செய்வது,

சமணர் இல்லங்களில் சடங்குகள் நடத்துவது போன்ற சமயப் பணிகளைச் செய்துவருகின்றார்.

பிங்கலந்தையில் ஓசன் ஆசாரியன் என்றும், சூடாமணி நிகண்டில் ஓசன் உபாத்தியாயன் என்றும், தமிழ் லெக்சிகனில் ஓச்சன் கணக்காயன் என்றும் பொருள் தரப்பட்டுள்ளது.

பிற்காலக் கல்வெட்டுகளில் உபச்சன் என்ற சொல் உவச்சன் என்று திரிந்ததுமல்லாமல் அதன் பொருளும் பிடாரி கோயில் பூசாரி, கோயில்களில் சங்கு, முழவு போன்ற வாத்தியங்களை இசைப்பவன் என்று மாறிவிட்டது.

4. ப(ம்)மித்தி

அழகர்மலைக் குகைக் கல்வெட்டில் ஒரு சமணப் பெண்துறவி ப(ம்)மித்தி என்று அழைக்கப்படுகிறாள். இச்சொல் சமண முனிவரைக் குறிக்கும் பம்மன் (அருங்கலச்செப்பு) என்ற சொல்லின் பெண்பாலாகும். ஆரியாங்கனைகள் எனப்பட்ட சமணப் பெண்துறவியர் திவாகரத்தில் பைம்மை என்றும், பிங்கல நிகண்டில் பைமை என்றும் குறிக்கப்படுகின்றனர். சீவக சிந்தாமணியில் பம்மை என்பது ஒரு சமணப் பெண்துறவியின் பெயராக வருகிறது. இச்சொல்லுக்கு உ.வே. சாமிநாதய்யர் பத்மை என்று பொருள் கூறியிருப்பினும், திவாகர, பிங்கல நிகண்டுகள் குறிப்பிடும் பைம்மை, பைமை என்ற சொற்களும், சீவக சிந்தாமணியில் வரும் பம்மை என்ற சொல்லும், அழகர்மலைக் கல்வெட்டில் வரும் ப(ம்)மித்தி என்ற சொல்லும் பம்மன் என்ற சொல்லின் பெண்பால் என்றும், சமணப் பெண்துறவியரைக் குறிக்கும் பொதுவான சொற்கள் என்றும் கொள்ளலாம்.

5. கந்தி

தமிழ்-பிராமி கல்வெட்டுகளின் இறுதிக் காலமாகிய சுமார் கி.பி. 4ம் நூற்றாண்டைச் சார்ந்த நேகனூர்ப்பட்டிக் குகைக் கல்வெட்டில் தாயும் மகளுமாகிய இரு சமணப் பெண்துறவியர் கந்தி என்று குறிக்கப்பட்டுள்ளனர். கர்நாடகத்தில் பழங்கன்னடக் கல்வெட்டுகளில் சமணப் பெண்துறவியர் பெரும்பாலும் கந்தி என்ற அடைமொழியாலேயே குறிக்கப்படுகின்றனர். ஆயினும் கால வரையறையில் நேகனூர்ப்பட்டிக் கல்வெட்டு பழங்கன்னடக் கல்வெட்டுகளைவிட முந்தையது ஆகும்.

கந்தி என்ற சொல் சம்ஸ்கிருதத்தில் க்$_3$ரந்தி$_2$ன் (கற்றுணர்ந்தவர்), பிராகிருதத்தில் க$_3$ந்தி$_2$ (நூல் இயற்றுபவர்) ஆகிய சொற்களிலிருந்து பெறப்பட்டது ஆகும். கந்தி என்ற சொல் பிற்காலத் தமிழ்க் கல்வெட்டுகளில் காணப்படவில்லை; ஆயினும் இச்சொல் பழந்தமிழில் வழங்கியதற்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன.

கறந்த பால் அனைய கந்தி (சீவகசிந்தாமணி).

கந்தியைக் காணினும் (நீலகேசி).

இடைமடுத்த கந்தி தன் பிழைப்பும் (பரிபாடல், உரைச்சிறப்புப்பாயிரம்)*.

கவுந்தியடிகள் (ஒரு சமணப் பெண்துறவி - சிலப்பதிகாரம்).

கவுந்தி (திவாகரம்).

கந்தி, கௌந்தி (சூடாமணி).

*(கந்தியார் என்ற சமணப் பெண்துறவி சீவகசிந்தாமணியில் நானூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களை இடைச்செருகல்களாகச் சேர்த்துவிட்ட வரலாற்றை இது குறிக்கிறது போலும். சீவகசிந்தாமணியில் உ.வே. சாமிநாதய்யர் குறிப்பு).

II. முற்கால வட்டெழுத்துக் கல்வெட்டுகளில் சமண சமயச் சொற்கள்

தமிழ்-பிராமி எழுத்துகள் காலப்போக்கில் ஓலைச் சுவடிகளில் எழுத்தாணியால் எழுதும் முறையினால் வட்ட எழுத்துகளாக உருமாறி வட்டெழுத்துகள் என வழங்கலாயிற்று. இம்மாறுதல் நிகழ்ந்த காலம் ஏறத்தாழக் கி.பி. 5-6 நூற்றாண்டுகளாகும். இக்காலகட்டத்தைச் சார்ந்த கல்வெட்டுகளை முற்கால வட்டெழுத்துக் கல்வெட்டுகள் எனலாம். இவை மிகவும் குறைவான எண்ணிக்கையிலேயே கிடைத்துள்ளன. இவற்றில் பல சமண சமயத் தொடர்பு கொண்டவையாகும். இக்கல்வெட்டுகளிலிருந்து சில அரிய சமண சமயச் சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன.

6. ஆராதனி

இது ஆராதனை என்ற சொல்லின் மாற்றுருவமாகும். இச்சொல் பறையன்பட்டுப் பாறைக் கல்வெட்டில் காணப்படுகிறது. இதன் காலம் ஏறத்தாழக் கி.பி. 5-ம் நூற்றாண்டாகலாம். ஆராதனை என்ற தமிழ்ச் சொல்லுக்குப் பூசனை என்பது பொதுவான பொருளாகும். ஆயினும் ஆராதனி என்ற கல்வெட்டுச் சொல்லை ஜைன பரிபாஷையின்படி பொருள் கொள்ள வேண்டும். ஆராஹண (ஆராத,ந) என்ற சொல்லுக்கு அநசந (உண்ணாநோன்பு) என்று பிராகிருத மொழி அகராதியில் பொருள் தரப்பட்டுள்ளது. (அனசனம் என்பதற்கு விளக்கம் கீழே காண்க.) ஒரு சமணத்துறவி சாகும்வரை உண்ணாநோன்பு இருந்ததையே, 'ஆராதனி நோற்று முடித்த' என்று பறையன்பட்டுக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இதையே 'ஆராதநெ நோந்து' என்று ஒரு பழங்கன்னடச் சமணக் கல்வெட்டு குறிப்பிடுகிறது (A.N. நரசிம்மையா, எண் 33, கி.பி. 7ம் நூற்றாண்டு). மற்றொரு பிற்காலக் கன்னடக்

கல்வெட்டில் 'ஆராத$_4$நா விதி$_4$' நோற்று உயிர்நீத்த சமணத் துறவியைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது (ARE B.239/1947-48, கி.பி. 13ம் நூற்றாண்டு). மேலும் முடிபு(கன்னடம்), முடிவு (தமிழ்) என்ற சமண சமயச் சொற்கள் உண்ணாநோன்பிருந்து உயிரை முடித்துக்கொள்வதையே குறிப்பிடுகின்றன (P.B. தேசாய் 1957).

7. அனசனம்

திருநாதர்குன்று பாறைக் கல்வெட்டில் காணப்படும் இவ் வடமொழிச் சொல்லுக்கு 'உண்ணாமை' என்பது நேரிடைப் பொருளாகும். ஆயினும் சமண வழக்கில் இது உண்ணாநோன்பிருந்து உயிர் நீத்தலையே பெரும்பாலும் குறிக்கிறது. சமணத் தமிழிலக்கியங்களில் இச்சொல் ஆளப்பட்டுள்ளது:

அண்ணல் அனசனத் தவம் அமர்ந்தான் (யசோதர காவியம்).

அனசன நோன்பு கொண்டான் (நாககுமார காவியம்).

அனசனாதி தபசு (நீலகேசி 1, உரை).

8. நிசீதிகை

கலிங்க அரசன் காரவேலனின் உதயகிரிக் கல்வெட்டு (கி.மு. முதல் நூற்றாண்டு) சமண முனிவர்களின் இருக்கைகளை நிஸீதியா என்று குறிப்பிடுகிறது. பறையன்பட்டிலும் திருநாதர்குன்றிலும் சமணத் துறவிகள் உண்ணாநோன்பிருந்து உயிர் நீத்த இருக்கைகள் நிசீதிகை என்று குறிப்பிடப்பட்டுள்ளன. இதே சொல் திருநாதர்குன்றிலேயே பொறிக்கப்பட்டுள்ள ஒரு பிற்காலக் கல்வெட்டிலும் வருகிறது (தெ.இ.க. XVII. 261, கி.பி. 10ம் நூற்றாண்டு). கர்நாடகத்தில் சிரவணபெளகொள என்ற தலத்தில் பெரும்புகழ் பெற்ற கோமடேசுவரர் சிலையை நிறுவிய சாமுண்டராயனின் தங்கை புளியப்பை தமிழ்நாட்டில் விஜயமங்கலத்தில் உண்ணாநோன்பிருந்து உயிர் நீத்த இடத்தை அங்கிருக்கும் ஒரு கல்வெட்டு நிஸிதிக என்று குறிப்பிடுகிறது (ARE 597/1905). பழங்கன்னட மொழியிலுள்ள பல சமணக் கல்வெட்டுகளில் நிஸிதிகெ என்ற சொல் பரவலாகக் காணப்படுகிறது.

இறுதியில் குறிக்கப்பட்டுள்ள ஆராதனி, அனசனம், நிசீதிகை என்ற மூன்று சொற்கள் காணப்படும் வட்டெழுத்துக் கல்வெட்டுகள் (கி.பி. 5-6 நூற்றாண்டுகள்) காலத்தால் பழங்கன்னட மொழியிலுள்ள சமணக் கல்வெட்டுகளை விட முந்தியவை எனினும் இச்சொற்கள் கர்நாடகத்துச் சமணரிடமிருந்தே தமிழகச் சமணரிடை பரவின என்று கருத இடமுண்டு.

---

4. பொதுப்பகுதி

1. பெருமைச் சுவடுகள்

திவான்பகதூர் எஸ். கிருட்டிணசாமி அய்யங்கார்

கோ. வேணிதேவி

இந்திய வரலாற்றை எழுதிய நம்நாட்டு அறிஞர்களும் மேலைநாட்டு அறிஞர்களும் பெரும்பாலும் வடஇந்திய வரலாற்றிற்கே அதிக முக்கியத்துவம் வழங்கினர். இந்திய வரலாற்றில் தென்னிந்தியாவின் பங்கு அதிகம் இடம்பெறாத நிலை. இந்நிலையை முற்றிலும் மாற்றித் தென்னிந்திய வரலாற்றின் பின்புலத்தையும், சிறப்பையும் வெளிக்கொணர்ந்து உலகறியச் செய்த மாமேதைகளான வி. கனகசபைப்பிள்ளை, பி.டி. சீனிவாச அய்யங்கார், மு. இராகவைய்யங்கார் போன்ற அறிஞர்கள் வரிசையில் வந்து, வரலாற்றாய்வாளர்களின் மனதில் நிற்கும் பெருந்தகை திவான்பகதூர் எஸ். கிருட்டிணசாமி அய்யங்கார் ஆவார்.

இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்று மேதைகளின் பட்டியலில் முதன்மையானவராக இடம்பெறும் எஸ். கிருட்டிணசாமி அய்யங்கார் கி.பி. 1871ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் பதினைந்தாம் நாள் கும்பகோணத்தில் பிறந்தவர். இளம் வயதிலேயே தந்தையார் காலமானதால், உடன்பிறந்த சகோதரரின் உதவியுடன் பெங்களூரில் தம் கல்விப் பயணத்தைத் தொடங்கினார். இளமைக் காலத்தில் கிருட்டிணசாமியைக் கவர்ந்த பாடங்கள் இயற்பியலும் கணிதமுமாக இருந்தன. பெங்களூரில் மையக் கல்லூரியில் இளங்கலைப் பட்டத்தைப் பெற்றார். அதே நகரத்தில் ஒரு பள்ளியில் பணியாற்றிக்கொண்டு கணிதத்தைப் பாடமாக எடுத்து முதுகலை படிப்பைத் தொடர்ந்தார். மைசூர் மாநிலத்தில் சிக்மகளூர், கோலார் போன்ற இடங்களுக்கு பணிமாற்றம் செய்யப்பட்ட காலத்தில் கிருட்டிணசாமியின் ஈடுபாடு கணிதத்தை விட்டுவிட்டு வரலாற்றின் பக்கம் திரும்பியது. அறிவியல் மேதைகளாக ஆயிரக்கணக்கானவர்கள் திகழமுடியும். ஆனால் வரலாற்றறிஞர்களாக ஒருசிலரே வரமுடியும். ஆதலின் பிற்காலத்தில் ஒரு வரலாற்று மேதை உருவாக வேண்டும் என்பது ஆண்டவனின் சித்தம் போலும்.

வரலாற்றைப் பாடமாகக் கொண்டு 1899ஆம் ஆண்டு முதுகலைப் பட்டத்தையும் பெற்ற கிருட்டிணசாமி, பள்ளி ஆசிரியராகத் தம் பணியினைத் தொடங்கித் தன்னம்பிக்கையாலும், அயராத உழைப்பாலும், முயற்சியாலும்

பல்வேறு உயர்பதவிகளை வகித்து, ஆங்கிலேய அரசின் திவான்பகதூர் பட்டத்தைப் பெற்றவர். கிருட்டிணசாமியின் கன்னி முயற்சியாக முதலில் வெளியிடப்பட்டது அவர்தம் முதுகலை ஆய்வேடான "History of Mysore under Wodeyars". 1900ஆம் ஆண்டு மே மாதம் "Madras Review" என்ற ஆய்விதழில் இவ்வாய்வேடு வெளியிடப்பட்டது. இதன் பயனாகக் கிருட்டிணசாமி பெங்களூர் மையக் கல்லூரியில் வரலாற்றுத்துறையில் விரிவுரையாளராகப் பொறுப்பேற்றார். பின்னர் அதே கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியரானார்.

தம்முடைய உழைப்பாலும், திறமையாலும் முன்னேறிய கிருட்டிணசாமி ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளையும் தம் கண்களாகக் கொண்டு புலமை பெற்று, பல கட்டுரைகளை எழுதத்தொடங்கினார். 1914ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறைப் பேராசிரியராக நியமிக்கப்பட்ட கிருட்டிணசாமி மும்முறை இந்திய வரலாறு, தொல்பொருள் ஆய்வுத்துறைகளின் தலைமையை ஏற்று நவம்பர் 1929ஆம் ஆண்டு முடியப் பணியாற்றினார். 1919ஆம் ஆண்டு கல்கத்தா பல்கலைக்கழகத்தின் பேராசிரியராக நியமிக்கப்பட்ட கிருட்டிணசாமி "Contribution of South India to Indian Culture" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றிக் கல்கத்தா பல்கலைக் கழகத்தின் "மதிப்புறு முனைவர்" பட்டம் வழங்கப்பெற்று கௌரவிக்கப்பட்டார்.

சென்னைப் பல்கலைக்கழகத்திலும் பின்பு கல்கத்தா பல்கலைக் கழகத்திலும் பணியாற்றிய காலத்தில், அப்போதைய வரலாற்று மேதைகளான பி.டி. சீனிவாச அய்யங்கார் போன்றவர்கள் தொடர்பும், இந்தியக் கல்வெட்டுத் துறையின் கல்வெட்டாய்வாளர் வி. வெங்கைய்யா, இந்தியத் தொல்லியல் துறையைச் சேர்ந்த இ. ஹுல்ஷ் போன்றவர்களின் தொடர்பும் இவர்தம் வரலாற்றாய்வு அணுகுமுறையைச் செம்மைப்படுத்தவும், நெறிப்படுத்தவும் வாய்ப்பமைத்தன. அறிஞர் வெங்கையாவும், ஹுல்ஷும் இணைந்து தென்னிந்தியாவின் கல்வெட்டுகளைப் படியெடுத்துப் பதிப்பித்துக் கொண்டிருந்த நிலையில் கிருட்டிணசாமி இம்மேதைகளுடன் தொடர்பு கொண்டு ஆய்வுக்கட்டுரைகள் வழங்கியுள்ளார். இவ்வறிஞர்களின் படைப்புக்களை முன்னுதாரணமாகக் கொண்டு சோழர் ஆதிக்கம், சோழர் ஆட்சிமுறை குறித்துக் கட்டுரைகள் எழுதி ஹுல்ஷ் அவர்களின் பாராட்டைப் பெற்றார். பல வரலாற்று இதழ்களில் பொறுப்பேற்றும், வரலாற்றுக் குழுக்களில் பங்கேற்றும் தம்முடைய முத்திரையைப் பதித்தவர் கிருட்டிணசாமி அய்யங்கார். "Journal of Indian History" இதழின் பதிப்பாசிரியராகப் பொறுப்பேற்றுச் செயற்பட்டதும், 1931ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் இந்திய

வரலாற்று மாநாட்டிற்குத் தலைமைப் பொறுப்பேற்று நடத்தியதும் இவண் குறிப்பிடத்தக்கன.

உலக அளவில் எடுத்துக்கொள்வோமேயானால், எண்ணிலடங்கா வண்ணம் பல்லாயிரக்கணக்கான கல்வெட்டுகள் பலவிடங்களிலும் காணக்கிடைப்பது தென்னிந்தியாவில்தான். ஐரோப்பிய அறிஞர்களும், நம் நாட்டு வரலாற்றறிஞர்களும் பெரும்பாலான கல்வெட்டுகளைக் கண்டுபிடித்துப் படியெடுத்துள்ளனர். இன்றும் இப்பணி தொடர்ந்து நடந்துவருகிறது. இதே போன்று ஓலைச்சுவடிகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கல்வெட்டுத்துறை, தொல்பொருள் ஆய்வுத்துறை போன்ற வரலாற்றோடு தொடர்புடைய துறைகளோடு சேர்ந்து பணியாற்றி அறிவியல் கண்ணோட்டத்துடன் வரலாறு படைக்கவேண்டும் என்பதை வலியுறுத்தியவர் கிருட்டிணசாமி. எத்தகைய உள்நோக்கத்திற்கும் வரலாற்றை உட்படுத்தாமல் பலவகையான சான்றுகளை ஆதாரமாகக் கொண்டு எந்தச் சார்பும் இல்லாமல் வரலாற்றை வரலாறாகப் படைக்கவேண்டும் என்று ஆணித்தரமாக நம்பிய R. G. பண்டர்காருக்கு இணையாகக் கிருட்டிணசாமி அய்யங்காரை வரலாற்று ஆய்வாளர்கள் கருதுவர்.

இலக்கியம் மனிதனின் எண்ணவோட்டத்தில் உருவான வெறும் கற்பனை அல்ல, அது அந்தந்த காலகட்டத்தின் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் ஒரு காலக் கண்ணாடி என்ற உணர்வைத் தென்னாட்டில் வரலாற்றறிஞர்களிடையே உண்டாக்கியவர் எஸ். கிருட்டிணசாமி அய்யங்கார். இக்கூற்றை மனதில் கொண்டு அவரால் உருவாக்கப்பட்டதுதான் "Manimekalai in its Historical Setting" என்னும் நூல். கிருட்டிணசாமியை முன்னோடியாகக் கொண்டு சங்க இலக்கியங்களையும், சங்க காலத்திற்குப் பின் தோன்றிய சிலப்பதிகாரம், மணிமேகலையாகிய இரட்டைக் காப்பியங்களையும், திருக்குறள் உள்ளிட்ட கீழ்க்கணக்கு நூல்களையும் மூலாதாரங்களாகக் கொண்டுதான் பிற்கால அறிஞர்கள் தமிழர் சமுதாய - பண்பாட்டு வரலாற்றை எழுதமுனைந்துள்ளனர். தமிழ் இலக்கியம் மட்டுமல்லாமல், வடமொழி இலக்கியங்கள், பிறமொழி இலக்கியங்கள் தரக்கூடிய வரலாற்றுச் செய்திகளையும் எடுத்துக்கொள்ளவேண்டியதன் அவசியத்தை அறிஞர்களுக்கு உணர்த்தியவர் கிருட்டிணசாமி. இலக்கியச் சான்றுகளை மூலாதாரங்களில் ஒன்றாகக் கொண்டே கிருட்டிணசாமி தம்முடைய அனைத்து ஆராய்ச்சி நூல்களையும், கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

எஸ்.கே. அய்யங்கார் என்று வரலாற்றறிஞர்களின் மத்தியில் பிரபலமாக விளங்கும் கிருட்டிணசாமியால் இயற்றப்பட்ட நூல்களாகிய 'Contribution of South India to Indian Culture', 'South India and Her Muhammadan

Invaders', 'Manimekalai in its Historical Setting', 'The Beginnings of South Indian History', 'The Evolution of Hindu Administrative Institutions in South India', 'The History of Tirupathi' போன்றவை இன்றளவும் வரலாற்றறிஞர்களுக்குப் பயன்படும் நூல்களாகும். 'Forgotten Empire' என்ற தலைப்பில் விஜயநகர வரலாற்றை எழுதிய ராபர்ட் சீவலுடன் சேர்ந்து 'Historical Inscriptions of South India' என்ற தொகுதியினை உருவாக்கினார் கிருட்டிணசாமி. அவரால் படைக்கப்பட்ட மற்றொரு நூலான 'Sources of Vijayanagar History' முழுமை பெறாத நிலையில் வெளிவந்தது. 'Cambridge History of India' என்ற நூலின் மூன்றாம் தொகுதியின் பொறுப்பேற்று வெளியிட்டது இவண் குறிப்பிடத்தக்கது. Indian Antiquary, Journal of Indian History போன்ற ஆய்விதழ்களின் பொறுப்பாசிரியராகவும் இவர் பணியாற்றினார்.

மணிமேகலையில் காணப்படும் புத்த மதத் தத்துவத்தின் பின்னணியைக் கருத்தில் கொண்டு மணிமேகலையின் காலத்தைக் கணித்து அக்காப்பியம் சங்ககாலத்திற்குப் பின் சங்ககாலத்தின் தொடர்ச்சியாக வந்த இலக்கியமென்பார் கிருட்டிணசாமி. தமிழக வரலாற்றின் புதிராக அமைந்து இருண்டகாலம் என வழங்கப்படும் களப்பிரர் காலத்தைக் கி.பி. 300லிருந்து 700வரை என்று வரையறுத்து வெளியிட்டவரும் இவரே. முகமதியர் படையெடுப்பால் தென்னகம் பாதிக்கப்பட்டாலும், இந்தியப் பண்பாட்டைக் கட்டிக் காத்த பெருமை விஜயநகரப் பேரரசைச் சாரும் என்பதை, இந்தியப் பண்பாட்டில் தென்னிந்தியாவின் பங்கு எனும் தலைப்பில் தாம் ஆற்றிய உரையில் தெளிவாக விளக்கியுள்ளார் கிருட்டிணசாமி. சங்கம் நிறுவப்பட்டுத் தமிழர் பண்பாட்டின் உறைவிடமாகத் திகழ்ந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தொன்னகரமாகிய மதுரை, முகமதியர் ஆட்சிக்குட்பட்டபொழுது அவர்களைத் துணிந்து எதிர்த்து வெற்றிகண்டு, முகமதியர் ஆட்சியிலிருந்து மதுரையை மீட்ட இளவரசர் குமார கம்பணர், தமிழர் ஆட்சிக்கும் பண்பாட்டிற்கும் ஆற்றிய அரும்பணியை 'South India and Her Muhammadan Invaders' என்ற தம் நூலில் விளக்கியுள்ளார்.

கிருட்டிணசாமி சென்னை மாகாணத்திலிருந்த இளம் வரலாற்றறிஞர்களைப் பெரிதும் ஊக்குவித்தார். சென்னையில் 'School of History' என்ற அமைப்பைத் தோற்றுவித்து வரலாற்றுப்பணியில் ஆய்வாளர்களை ஈடுபடுத்தினார். ஒரு நல்ல அறிஞர் தம்மால் உருவாக்கப்பட்ட நற்பணி தம்மோடு முடிவுபெறாமல் தமக்குப் பிறகும் தொடரும் வண்ணம் வாரிசுகளை உருவாக்குவது அவசியமாகிறது. அங்ஙனம் செய்யும் பொழுது அவர்தம் பெயரும் சிறப்பும் நிலைபெற்று நிற்கும். தம்மால்

தொடங்கப்பெற்ற வரலாற்றாய்வுப் பணி தொடரும் வகையில் 'Sources for the History of Vijayanagar' எழுதிய A. அரங்கசாமி சரஸ்வதி, 'History of the Nayaks of Madura' எழுதிய R. சத்தியநாத அய்யர், 'History of the Pallavas of Kanchi' எழுதிய R. கோபாலன், 'Hindu Administrative Organisations' எழுதிய V.R.R. தீக்ஷிதர் போன்ற அறிஞர் பெருமக்களுக்கு வழிகாட்டியாக விளங்கி அவர்களையும் படைப்பாளிகளாக்கிய பெருமை கிருட்டிணசாமி அய்யங்காரையே சேரும்.

இங்ஙனம் இந்தியத் துணைக்கண்டத்திலும் பிற நாடுகளிலும் உள்ள பல வரலாற்றறிஞர்களின் பார்வை தென்னிந்தியாவின் பக்கம் திரும்பக் காரணமாக இருந்த எஸ். கிருட்டிணசாமி அய்யங்காரைத் "தென்னிந்திய வரலாற்றின் தந்தை' என்றழைப்பது சாலப் பொருத்தமாகும்.

காதல் வரலாற்றில் காணும் வரலாறு

'காவல் பொருந்திய வீட்டில் நுழையும் கள்வனைப் போல் வாளையை உண்ணுவதற்காகப் பைய நடக்கும் நாரைகள் நிரம்பிய ஊரன் என் நாணழித்துச் சென்றான். அவன் திரும்பி இச்சேரி வரின், அவன் உரிமைப்பெண்கள் காணுமாறு அவன் மாலையையும் ஆடையையும் பிடித்துக்கொண்டு, ஆரியர் பழக்கி வைத்த பெண் யானைகள் ஆண் யானைகளைக் கொணர்ந்து சேர்க்குமாறு போல அவன் தோளை என் கூந்தலால் கட்டி அவன் மார்பைச் சிறைசெய்வேன். அவ்வாறு செய்ய முடியாது போயின் என் தாய் போற்றி வளர்த்த என் அழகு, தேவைப்பட்டவர்க்கு வழங்காதவன் பொருள் போல யாருக்கும் பயன்படாது ஒழிவதாக', எனச் சூளுரைக்கிறாள் ஒரு பெண் (அகம் 276).

இந்தக் காதல் சூளில் 'சிறை பிடிப்பு' மட்டுமா வெளிச்சமாகிறது? ஆரியர் யானை பிடிப்பவர் என்பதும், அவர் எப்படி அத்தொழிலைச் செய்தனர் என்பதும் வரலாற்றுக் கீற்றுகளாய் மின்னவில்லையா?

2. நூல் மதிப்புரை

நூல் : திருவாவடுதுறை ஆதீன வரலாறு

ஆசிரியர் : ச. கிருஷ்ணமூர்த்தி

வெளியீடு : ஆ. உண்ணாமலை, 12/1, புதுப்பேட்டை வடக்குத் தெரு, சிதம்பரம் - 608 001.

பக்கங்கள் : 222. விலை : ரூ. 50.00.

சரித்திரச் செம்மல் ச. கிருஷ்ணமூர்த்தியின், 'திருவாவடுதுறை ஆதீன வரலாறு', இலக்கியம், கல்வெட்டு, செப்பேடு ஆகியவற்றின் துணையோடு உருவாக்கப்பட்டுள்ளது. 'இப்பணியைச் செய்ய எனக்கும் ஓரளவு தகுதி இருப்பதாகவே நம்புகிறேன்' என்று என்னுரையில் ச. கிருஷ்ணமூர்த்தி முன் வைக்கும் கூற்றின் உண்மைத்தன்மையை நூலைப் படிக்கும் எவரும் உய்த்துணரலாம். கடுமையான உழைப்பு, தளர்வறியாக் களஆய்வு, திருமடத்து அலுவலர்களோடு இணங்கிப் போகக்கூடிய பொறுமை ஆகியவற்றின் காரணமாக ஆசிரியர் இந்நூலைத் தரமான தரவுக் களஞ்சியமாகப் படைத்துள்ளார். பாராட்டவேண்டியது நம் கடமை. பல்வேறு திருமடங்களோடு தமக்குள்ள தொடர்பை வெளிப்படுத்துமிடங்களில், அவ்வவ்மடத்து அதிபர்களைப் பற்றிய தம் கருத்துக்களையும் மிக மென்மையாக, அதே சமயம் தெளிவாக ஆசிரியர் எடுத்துரைக்கும் விதம், அவரது ஆய்வு நேர்மையையும் கருத்துத் துணிவையும் காட்டுவதாகவுள்ளது.

நமசிவாய தேசிகரை முதலாம் பட்டமாகக் கொண்டு தொடங்கும் திருவாவடுதுறை மடத்தின் வரலாறு இன்றைய தலைவர் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிகரை இருபத்து மூன்றாவது பட்டமாகக் காட்டி முடிகிறது. இவ்விருபத்து மூன்று நாயகர்களின் வரலாற்றை மிகுந்த அருமைப்பாட்டுடன் தொகுத்துச் சொல்லியிருக்கும் ச. கிருஷ்ணமூர்த்தி, இடையிடையே தம் முயற்சிகளின் விளைவாய்க் கண்டுபிடிக்கப்பட்ட புதிய தரவுகளையும் சுட்டிக் காட்டத் தவறவில்லை. இம்மடம் தொடர்பாக அவர் அவ்வப்போது எழுதி வந்துள்ள கட்டுரைகளை ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளார். இம்மடம் குறித்து அவர் எழுதி வெளிவந்துள்ள அனைத்துக் கட்டுரைகளின் பட்டியலையும் நாள், இதழ் விவரங்களுடன் இந்நூலின் பின்னடைவாகத் தந்திருந்தால் மிகு பயன் விளைந்திருக்கும். அடுத்த பதிப்பில் ச. கிருஷ்ணமூர்த்தி இம்முறையை மேற்கொள்ளலாம்.

திருமடத்தின் தொடக்கக் கால வரலாற்றில் உறுதியான சான்றுகள் இல்லாமையின் தொய்வு ஏற்பட்டுள்ளது. அத்தொய்வை நீக்க

ச. கிருஷ்ணமூர்த்தி சில துணிவான ஊகங்களை மேற்கொள்கிறார். அம்பலத்தாடிப் பண்டாரத்தை ஆதீனகர்த்தராகக் கொள்ளும் இடம் (ப.15). பெரிய பண்டாரத்தைக் காறுபாறு அல்ல என முடிவு செய்யுமிடம் (ப.50) ஆகியவற்றைச் சான்றுகளாகக் காட்டலாம். தம்மால் துணிந்து முடிவுகொள்ள முடியாத இடங்களில் அய்யப்பாடுகளை வெளிப்படையாகவே தெரிவித்துள்ள நூலாசிரியரின் ஆய்வுநேர்மை பாராட்டத்தக்கது. தட்சிணாமூர்த்தி தேசிகர்தான் ஏகாம்பரம் பிறைசூடும் பண்டாரமா என்று கேள்வியெழுப்பித் தெரியவில்லை என்று நூலாசிரியரே பதிலுரைத்திருக்கும் இடத்தைக் குறிப்பாகக் கூறலாம் (ப.16).

நாயக்க அரசர்கள், அவர்தம் கீழிருந்து ஆண்ட பாளையக்காரர்கள், அக்கால ஊர்ப்புற பெருந்தனக்காரர்கள் எனப் பலர் வரலாறு ஆதீன வரலாற்றோடு சேர்ந்து வெளிப்படுவது, செப்பேடுகள், ச. கிருஷ்ணமூர்த்தி வழி நமக்கு வழங்கியிருக்கும் கொடையாகும். ஒவ்வோர் ஆதீனத்திலும் உள்ள செப்பேடுகள் அனைத்தையும் தொகுத்து வெளியிடுவது இன்றியமையாதது என்பதை இதனால் அறியலாம். ச. கிருஷ்ணமூர்த்தி அந்தத் திருப்பணியையும் மேற்கொள்ளவிருப்பதாக நூலில் அறிவிப்புச் செய்திருப்பது ஆறுதலானது. அவர் திருவாவடுதுறையுடன் நிற்காமல் தாம் தொடர்பு கொண்டுள்ள அனைத்து மடங்களிலும் உறங்கிக்கிடக்கும் அனைத்துச் செப்பேடுகளையும் வரலாற்று வெளிச்சத்திற்குக் கொணர முயல்தல்வேண்டும்.

திருவாவடுதுறை மடத்தின் இருபத்து மூன்று பட்டங்களில் மிகச் சில பெருமக்களே மொழியார்வமும், நாட்டார்வமும், மனிதநேயமும் கொண்டு விளங்கியமை இவ்வரலாற்றால் தெரியவருகிறது. அப்பெருமக்களின் அரிய தொண்டுகளை இந்நூல் இல்லையேல் அறிந்து, மகிழ்ந்து, பெருமிதம் கொள்ள வழியில்லை. அடக்கமாய் அருந்தொண்டாற்றி மறைந்த அப்பெருந்தகைகளை நினைக்குந்தோறும் உளம் பூரிக்கிறது. சமஸ்கிருத மோகத்தில் மூழ்கிக் கிடக்கும் சில மடங்களுக்கு நடுவில் தமிழை முதன்மைப்படுத்திச் செயற்படும் திருவாவடுதுறைத் திருமடமும் அதன் ஆதீனகர்த்தர்களும் பாராட்டி வணங்கத்தக்கவர்களாக விளங்குகிறார்கள்.

திருவாவடுதுறைத் திருமடத்தின் தற்போதைய பட்டமாகத் திகழும் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிகரைப் பற்றி ச. கிருஷ்ணமூர்த்தி மிக விரிவாக எழுதியுள்ளார். அப்பெருந்தகையின் பண்புநலன்கள் பற்றி நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளவை அனைத்தும் நூற்றுக்கு நூறு உண்மையாகும். வணக்கத்திற்குரிய தேசிகரவர்களுடன் உரையாடிப் பயன்பெற்றவர்களுள் அடியேனும் ஒருவன். எளிமையின் சின்னமாகத் திகழும் சுவாமிகள், திருமட சம்பிரதாயங்களில் மனிதநேயத்துடன் கூடிய பல மாற்றங்களை

உருவாக்கியவர்கள். எதற்கும் சினப்படாதவர்கள். மடத்து வெளியீடான 'ஆடவல்லான்' நூலில் காணப்படும் பிழைகளைச் சுட்டிக்காட்டியபோது, 'குறித்துக்கொடுங்கள், திருத்தப் பதிப்பில் சேர்த்துக்கொள்ளலாம்', என்று கூறிய பெருந்தன்மையாளர். முள்ளிக்கரும்பூர் கோயிலைக் கண்டறிந்து தூய்மைப்படுத்தி மாணவர்கள், ஊரார் உதவியுடன் வழிபாட்டிற்குக் கொண்டுவந்தபோது திருவாவடுதுறையிலிருந்து நேரில் வந்து இறைவனைத் தரிசித்து முள்ளிக்கரும்பூர் மண்ணிற்குப் பெருமைசேர்த்தவர் இப்பெருமகனார். நூலாசிரியரைப் போல் உடனுறைந்து, உடனேகி, உரியன கற்று உரைத்திடும் வாய்ப்புப் பெற்றிலேனாயினும், உணர்வுபூர்வமாகப் பழகிச் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிகரவர்களின் அன்பிற்குப் பாத்திரமானவன் என்ற பேறு பெற்றவன் அடியேன். அதனால் நூலாசிரியரின் தேசிகர் குறித்த எடுத்தோதல்களிலுள்ள ஒழுங்கையும், உண்மைத்தன்மையையும் மிக நுணுக்கமாக அநுபவித்து அறிதல் இயல்வதாகிறது.

ச. கிருஷ்ணமூர்த்தியின், 'திருவாவடுதுறை ஆதீன வரலாறு', திருமடத்து வரலாறு எழுதுவோர்க்கு வழித்துணையாக, முன்மாதிரியாக அமையத்தக்க நூலாகும்.

— இரா. கலைக்கோவன்

பக்கம் வரும் பெருமீன்

சங்க காலத்துப் பரதவர்கள் பெரிய அளவிலான மீன்களை எப்படிப் பிடித்தனர்? அகப் பாடலொன்று (210) அருமையாக விளக்குகிறது. குறுகிய வாயிலையுடைய குடிசைகளில் வாழும் கொலைத் தொழில் பரதவர் பெரிய மீன்களைப் பார்த்ததும் தம் கையிலிருக்கும் பேருளிகளை அவற்றின் மீது எறிவர். உளி உடலில் தாக்கிப் புகுந்ததும், இரத்தம் பீறிட வலியால் துவளும் மீன், வானவில்லைப் போலத் தாவி, அலைகள் நிறைந்த கடல்பரப்பைக் கலக்கி, அங்குமிங்குமாய்ப் புரண்டு, இரத்தப் பெருக்கால் வலிமை குன்றி, படகின் பக்கத்தில் வந்து விழும். பிறகென்ன ! அள்ளியெடுக்கும் பரதவர்க்கு அலைகள் வழங்கிய உணவாகவோ அல்லது அங்காடிச் செல்வமாகவோ பெருமீன் உருமாறும்.

3. அன்புள்ள உங்களுக்கு

தாங்கள் அன்புடன் அனுப்பிய வரலாறு - 7 கிடைக்கப்பெற்று மகிழ்ந்தேன். ஒரே மூச்சில் படித்துக்கொண்டுள்ளேன். 'வரலாறு' படைத்துள்ளீர்கள். மனமார்ந்த பாராட்டுக்கள்.

14.5.99

புலவர் முனைவர் செ. இராசு எம்.ஏ., பிஎச்.டி.,
கொங்கு ஆய்வு மையம்,
7, என்.ஜி.ஜி.ஓ. காலனி முதல் வீதி,
ஈரோடு - 638 009.

பேரன்புடையீர், வணக்கம். தேனஞ்சுச் செய்தியில், 'பிற திருமுறையாசிரியர்களோ, கல்வெட்டுகளோ இத்தேனைந்து முழுக்காட்டலைக் குறிப்பதாகத் தெரியவில்லை' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கல்வெட்டில் உளதா என்பது பற்றி யானறியேன்.

ஆனால் பத்தாம் திருமுறை (திருமந்திரம் தேவார காலத்திற்கு முந்தியது, பிந்தியது என்பது பற்றிய கருத்து கருதவேண்டியதன்று) பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

"மஞ்சன மாலை நிலாவிய வானவர்
நெஞ்சினும் ஈசன் நிலைபெறு காரணம்
அஞ்சமு தாமுப சாரமெட் டெட்டொடும்
அஞ்சலி யோடும் கலந்தர்ச்சித் தார்களே"

ஏழாந்தந்திரம் 11, சிவபூசை 5.

அப்பரின் தேனைந்தும் திருமூலரின் அஞ்சமுதும் ஒன்றினையே குறிக்கும் என்பதில் ஐயமின்று.

முருகனுக்குப் பயன்படுத்தும் இற்றை நாள் பஞ்சாமிர்தம் பண்டு சிவனுக்குப் படைத்த பஞ்சமுதாகாது. இந்நாளில் பழனிப் பஞ்சாமிர்தத்தில் இடம்பெறும் பேரீச்சை நம்நாட்டுப் பழமா என்று எண்ணல்வேண்டும்.

திருமூலர் அப்பருக்கு முற்பட்டவராயின், சிவனுக்குத் தேனைந்து முழுக்காட்டு கூறும் அப்பர் பாடல் முதல் நிலை எனல் இயலாது.

திருமூலர், அப்பர்-சம்பந்தருக்கும், சுந்தரருக்கும் இடைப்பட்டவராகார், முற்பட்டவராவர் என்பது திருத்தொண்டத்தொகை தெளிவாக உணர்த்தும் உண்மைகளுள் ஒன்று.

பஞ்சாமிர்தத்திற்குத் 'தேனைந்து' என்பதனைக் காட்டிலும், 'அஞ்சமுது' என்பது நல்ல தமிழாக்கமாகுமன்றோ!

திருவண்ணாமலையில் சிவபூசனையில் பஞ்சாமிர்தம் இன்றும் பயன்பட்டுப் பிரசாதமாக விற்கும், வழங்கப்படும் பழக்கம் இருப்பதனைப் பார்த்துள்ளேன்.

16.4.99 **அ.மா. பரிமணம்**
தஞ்சாவூர்.

பேரன்புடையீர், வணக்கம். மேலும் பஞ்சமுது பற்றி ஒரு சான்று. நூல் - தத்துவப் பிரகாசம்; ஆசிரியர் - சீர்காழி தத்துவப் பிரகாசர். காலம் கி.பி. *1350-1375* என்பர். பாடல் *82.*

"ஆவாக னாதிசெய்தே அர்க்கியமும் கொடுத்தே
அங்க நியாசம் செய்து பஞ்சமுத்திரையும்
ஓவாமல் இதயத்தால் காட்டிப் பாத்தியமும்
ஓரிருகால் சமனார்க்கியங்கள் முக்கால் ஒருகால்
நாவார நமசுதா சுவாகா என்று
நாடியே கொடுத்ததற்பின் கொள்ளு மஞ்சனங்கள்
ஓவாது கவ்வியமும் குறுபஞ்சா வமுதம்
உயர் பலோதகமு சுத்தோதகமும் கொண்டே"

பஞ்ச பலோதகம் = ஐந்து பழச்சாறு; பஞ்சாமிர்தத்தில் இடம்பெறும் பொருட்களை நான் தெளிந்த பின்னர்த் தெரிவிப்பேன். அப்பருக்கு முந்தைய ஐந்தமுத ஆட்சி கிடைத்திலது.

23.4.99 **அ.மா. பரிமணம்**
தஞ்சாவூர்.

அன்புள்ள ஆசிரியர்க்கு,

தேனஞ்சு - நல்ல தேனான துணுக்கு. ஒரு சொல்லில் பண்டைய வழக்கமும், வரலாறும் துளிர்க்கிறது. பஞ்சாமிர்தத்திற்குப் பதில் தேனஞ்சு எனக் கையாளலாமே! புதிய கல்வெட்டுப் பகுதியில் கட்டளைக் கலித் துறையில் வஞ்சப் புகழ்ச்சி அரிய செய்தி.

திருவானைக்கா கல்வெட்டுகள் வழி புகழ்பெற்ற பெரிய திருக்கோவில்களிலேயே படியெடுக்கப்படாதிருந்த கல்வெட்டுகள் இருக்கும்போது ஆய்வாளர் கண்ணிலும் படாத பழங்கோவில்களில் ஒளிந்துள்ள கல்வெட்டுகள் எத்தனை எத்தனையோ!

மருவி வழங்கும் ஊர்ப்பெயர்களின் மூலம் அறியும்போது எத்தனை மகிழ்ச்சி. அந்தவநல்லூர் - அந்தநல்லூர்; பொன்னமார்பதி - பொன்னமராபதி - பொன்னமராவதி (பக். 37). புதிய கல்வெட்டுகள் பகுதியில் உள்ள அரிய சொற்களுக்கு நாம் உணர்ந்த பொருளைப் பின்குறிப்பாக வெளியிடலாம். அதனைக் கண்ணுறுவோர் மேலும் சரியான பொருளைத் தரலாம் அல்லவா? புணிசுடன் (பக். 24) கும்பிட்டு (20) அடைப்படி (26) அற்றைக்குறை அறுப்பாக (29) வம்பும் (34).

கையெழுத்துப் போடத் தெரியாதவரைக் 'கைநாட்டுப் பேர்வழி' என்பது போலக் கல்லாதவரைத் தற்குறி எனக் குறித்திருப்பது (பக். 43. சொக்கபட்டர் தற்குறி) நல்ல செய்தி. கற்பிற்கு இயைவதோ தோழி! - துணுக்குச் செய்தியில் 'தெய்வம் தொழாஅள் ......' குறள் கருத்தையே கலித்தொகையும் காட்டியுள்ளது. கலிப்பாடல் முன்னோடியன்று. காலத்தால் குறளுக்குப் பிந்தியது. மலையடிக்குறிச்சிக் குடைவரையும் கல்வெட்டுகளும் காணாதார்க்கும் காட்டும் அனுபவம் இது. அகரம் - நகர் < நகரம் என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபு என்பது சரியான செய்தி. சிறுகனூரின் கிழக்கில் அகரம் என்னும் ஓர் ஊர் உள்ளது. செந்தண்டன் என்னும் கல்வெட்டு இருமுறையும், கட்டாணை என்னும் கல்வெட்டு நான்கு முறையும் வெட்டப்பட்டுள்ளது புதிய செய்தி. நல்லதோர் ஆய்வு. இவ்வாறு வெட்டுவதற்கு வேறு காரணம் இருக்குமோ?

கேள்விக்குறியாக நிற்கும் நம் கடந்த காலத்தின் எதிர்காலம் கட்டுரையில் ஆசிரியரின் ஏக்கமும் ஆதங்கமும் புரிகிறது. தமிழர்களின் பெருமையை உலகுக்குக் காட்டும் நம் வரலாற்றுச் செல்வங்களை நாளும் இழக்கின்றோமே! கோவில்கள் வேண்டாம், அவற்றின் சொத்து மட்டும் வேண்டும் என்பாரை என் செய்ய? சிற்ப அறிஞர் வே. இராமன் அவர்கள் கட்டுரை நல்ல முயற்சி. கட்டட அமைப்பைக் கண்டு காலமுறை கூறுவார்க்கு வழிகாட்டி. இம்முயற்சி தொடர்க.

பி. தமிழகன்
2, பிச்சையம்மாள் நகர்,
திருச்சிராப்பள்ளி - 620 021.

மதிப்பிற்குரிய ஐயா,

மலையடிக்குறிச்சிக் குடைவரையும் கல்வெட்டுகளும், வீரசிகாமணிக் குடைவரையும் கல்வெட்டுகளும் ஒப்பீடுகளுடன் அமைந்த முழுமையான ஆய்வுக் கட்டுரைகளாகும். படிக்கும் எவரையும் அவ்விடங்களைக் காண வேண்டும் என்று எண்ணத்தூண்டும் வகையில் அமைந்துள்ளதைப் பாராட்டாமல் இருக்கவியலாது. கேள்விக்குறியாக நிற்கும் நம் கடந்த காலத்தின் எதிர்காலம் ஆசிரியர் மட்டுமல்ல, கலையுணர்வு கொண்ட நெஞ்சங்கள் உடையோர் அனைவரது கண்களிலும் நீரை வரவழைக்கும். அழிந்துவரும் இத்தகைய கலைக்கோயில்களைக் காப்பது எப்படி? காலம்தான் பதில் தரவேண்டும்.

பெருமைச்சுவடுகள் - பகுதி பாராட்டப்படவேண்டியதொன்றாகும். வரலாற்றறிஞர்களின் வரலாற்றை அறிந்துகொண்டு அவர்கள் வழி வரலாற்று மாணவர்கள் செல்ல வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை.

16.7.99

ஸ்தபதி வே. இராமன்
38/5, புதிய சுற்றுலா மாளிகைக் குடியிருப்பு,
திருச்சிராப்பள்ளி - 620 020.

'மலையடிக்குறிச்சிக் குடைவரையும் கல்வெட்டுகளும்' கட்டுரை படித்தேன். கட்டுரையாசிரியர்களுக்கு என் பாராட்டுக்கள். நல்லமுறையில் எழுதப்பட்டிருக்கும் இவ்வாய்வுக் கட்டுரையில் குறிக்கப்படும் சேந்தனின் கல்வெட்டு பாண்டிய நாட்டில் கிடைக்கும் காலத்தால் முற்பட்ட தமிழ் எழுத்துக்களிலமைந்த கல்வெட்டாகும். குறிப்புகளின் கீழ்க் காணப்படும் தரவுகளும் சிறப்பானவை. தரமான ஆய்விதழாக வரலாறு வளம்பெறுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

ஐராவதம் மகாதேவன்
18A, நான்காம் கடல் நோக்குச் சாலை,
வால்மீகி நகர், திருவான்மியூர்,
சென்னை - 600 014.

நன்றி

இந்த இதழ் உருவாகப் புதிய கல்வெட்டுகள், கட்டுரைகள் தந்துதவிய ஆய்வர்கட்கும், விளம்பரங்கள் தந்துதவிய அருளாளர்கட்கும், அவற்றை வாங்கித்தந்த அன்புள்ளங்களுக்கும் வரலாற்றின் கனிந்த கைகூப்பு.

4. அங்கும் இங்கும்

1. திருச்சிராப்பள்ளி நாணயவியல் கழக நான்காமாண்டு நிறைவு விழா

1998 ஜனவரித் திங்கள் இருபத்தைந்தாம் நாள் ஞாயிறன்று நிகழ்ந்த இவ்விழாவில், தினமலர் ஆசிரியர் திரு. இரா. கிருஷ்ணமூர்த்தி நாணயக் கண்காட்சியைத் திறந்துவைத்துச் சிறப்புரையாற்றி விழா மலரை வெளியிட, இரா. கலைக்கோவன் மலரைப் பெற்றுக்கொண்டு வாழ்த்துரை வழங்கினார். கருத்தரங்காக அமைந்த காலை அமர்விற்குத் திரு. கி. ஸ்ரீதரன் தலைமையேற்றார். ஆறு கட்டுரைகள் வழங்கப்பட்டன. கோயிற்கலை தொடர்பான மதிய அமர்விற்கு இரா. கலைக்கோவன் தலைமையேற்றார். 'தஞ்சாவூர் ராஜராஜீசுவரத்தின் தனிச் சிறப்புகள்' என்ற தலைப்பில் ஜெ. நளினி, மு. நாகேசுவரியும், 'ஆர உறுப்புகள்' என்ற தலைப்பில் ம. ரங்கநாயகி, நா. இளவரசியும், 'இடைநாழிகை' என்ற தலைப்பில் கா. ஸ்ரீதேவி, பு. புனிதாவும், 'இறவாதான் ஈசுவரத்து மகரதோரணங்கள் - ஓர் ஆய்வு' என்ற தலைப்பில் பேராசிரியர் சீ. கீதாவும், 'விமானம்' என்ற தலைப்பில் மு. நளினியும், 'தென்வாயில் ஸ்ரீ கோயில் பெருமண்டபம்' என்ற தலைப்பில் முனைவர் அர. அகிலாவும், கீழ்க்கணக்கு நூல்களில் பொருளாதாரம் என்ற தலைப்பில் பேராசிரியர் கோ. வேணிதேவியும் ஆய்வுக் கட்டுரைகள் வழங்கினர்.

2. ஆனந்தரங்கர் அறக்கட்டளைக் கருத்தரங்கு

1998 மார்ச்சுத் திங்கள் முப்பதாம் நாள் மாலை ஐந்து மணியளவில் புதுச்சேரி ஆனந்தரங்கர் மாளிகையில் நிகழ்ந்த இக்கருத்தரங்கிற்குப் புதுவைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சிவ. வி. நாராயணன் தலைமையேற்றார். எட்டு ஆய்வுக் கட்டுரைகள் வழங்கப்பட்டன. இரா. கலைக்கோவன் 'வரலாற்று நிலை' குறித்துக் கட்டுரையளித்தார்.

3. இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் இருபத்தொன்பதாம் கருத்தரங்கு

1998 மேத்திங்கள் 23-24இல் திண்டுக்கல் காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் மைய ஆய்வர்கள் பங்கேற்றனர். இரா. கலைக்கோவன், 'பேடி ஆடல்' என்ற தலைப்பிலும், மு. நளினி, 'சென்னை அருங்காட்சியகச் செப்பேடுகள்' எனற தலைப்பிலும், முனைவர் அர. அகிலா 'அமணி கல்வெட்டு' என்ற தலைப்பிலும், பேராசிரியர் கோ. வேணிதேவி 'கீழ்க்கணக்கு நூல்கள் சுட்டும் மகளிர்' என்ற தலைப்பிலும் ஆய்வுக் கட்டுரைகள் வழங்கினர். இவ்வமைப்பின் 1997ஆம் ஆண்டுக் கருத்தரங்கில் வழங்கப்பட்ட முந்நூறுக்கும் மேற்பட்ட கட்டுரைகளுள்,

மு. நளினியின் 'புதிய கல்வெட்டுகளும் புதிய தரவுகளும்' எனும் கட்டுரை சிறந்த கட்டுரையாக அறிவிக்கப்பட்டு, மு. நளினி சிறப்பிக்கப்பட்டார்.

4. பாடல், ஆடல், நாடகக் குழுக்கள் தேர்வுக்களம்

நடுவண் அரசின் செய்தி, ஒலிபரப்புத்துறை அமைச்சகத்தின் சார்பில் ஆகஸ்டுத் திங்கள் ஏழு, எட்டாம் நாட்களில் தென்னூர் தட்சிண பாரத இந்தி பிரச்சார சபாவில் தமிழ்நாட்டுக் கலைக்குழுக்களின் தேர்வுக்களம் அமைந்தது. நாட்டுப்புறக் கலைகள், நாடகங்கள், தொடர்பான இந்தத் தேர்வுக்களத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட கலைக்குழுவினர் பங்கேற்றுத் திறன்காட்டினர். இத்தேர்வுக்களத்தின் ஐந்து நடுவர்களுள் ஒருவராக இரா. கலைக்கோவன் பொறுப்பேற்றிருந்தார்.

5. அருங்காட்சியக வார விழா 1998

1998 ஆகஸ்டுத் திங்கள் 3-9 நாட்களில் திருச்சிராப்பள்ளி அருங்காட்சியக வார விழா, அலுவலக வளாகமான இராணி மங்கம்மாள் மன்றத்தில் நாணய, ஓவியக் கண்காட்சிகளுடன் நிகழ்ந்தது. நாணயக் கண்காட்சியை திரு. கி. ஸ்ரீதரன் தொடங்கிவைக்க, ஓவியக் கண்காட்சியை இரா. கலைக்கோவன் தொடங்கிவைத்து, 'கருகத் திருவுள்ளமோ' என்ற தலைப்பில் உரையாற்றினார். 9.8.1998 ஞாயிறன்று காலை 9.30 மணியளவில் நிகழ்ந்த வரலாற்றுக் கருத்தரங்கிற்கு சீதாலட்சுமி ராமசாமி தன்னாட்சிக் கல்லூரி வரலாற்றுத்துறைத் தேர்வுநிலை விரிவுரையாளர் திருமதி சீ. கீதா தலைமையேற்றார். அத்துறை முதுகலை மாணவியர்கள் ம. ரங்கநாயகி, ஜெ. நளினி, ரெ. மாலதி, கா. ஸ்ரீதேவி, பு. புனிதா தமிழரசி ஆகியோரும், டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையக் கல்வெட்டாய்வாளர் முனைவர் அர. அகிலாவும் ஆய்வுக் கட்டுரைகள் வழங்கினார்.

6. தேவார மூவர் இசைக்கலை விழா

திருச்சிராப்பள்ளி இராமலிங்கர் பணி மன்றத்தார் தில்லைநகர் மக்கள் மன்றத்தில் 14.08.98 முதல் 17.08.98 வரை நடத்திய தேவார மூவர் இசைக்கலை விழாவில் 16.08.98 ஞாயிறன்று, 'சோழர் காலத்தில் ஆடற்கலை' என்ற தலைப்பில் இரா. கலைக்கோவன் ஆய்வுரை நிகழ்த்தினார். குன்றக்குடி தவத்திரு பொன்னம்பல அடிகளார் அருளுரையாற்றினார்.

7. மனவளம் நூல் வெளியீட்டு விழா

தமிழறிஞர் இரா. இளங்குமரனார் எழுதிய மனவளம் என்ற நூல் அல்லூர்த் திருவள்ளுவர் தவச்சாலையில் செப்டம்பர்த் திங்கள் இருபத்தொன்பதாம் நாளன்று வெளியிடப்பட்டது. இந்நூலை

இரா. கலைக்கோவன் வெளியிட்டுத் திறனாய்வுரை நிகழ்த்தினார். இரா. இளங்குமரன் ஏற்புரை வழங்கினார்.

8. தமிழ் ஆய்வு இதழ்கள் கருத்தரங்கம்

1998 டிசம்பர்த் திங்கள் பதினொன்றாம் நாள் பச்சையப்பன் கல்லூரியில் மூன்று அமைப்புகளின் கூட்டிணைவான முயற்சியால் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பல தமிழ் ஆய்விதழ்களைப் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் வழங்கப்பட்டன. முனைவர் கி. ர. அநுமந்தனின் தலைமையில் அமைந்த நான்காம் அமர்வில் சீதாலட்சுமி ராமசாமி தன்னாட்சிக் கல்லூரி வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் கோ. வேணிதேவி 'வரலாறு' இதழ் பற்றிய ஆய்வுக் கட்டுரையை வழங்கினார்.

9. தமிழக அறிவியல் பேரவை ஏழாம் தேசியக் கருத்தரங்கம்

டிசம்பர்த் திங்கள் 26-27 நாட்களில் ஆழ்வார்க்குறிச்சி ஸ்ரீபரமகல்யாணி சுற்றுச்சூழல் அறிவியல் மையத்தில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் சார்பில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பல அறிவியல் ஆய்வுத்துறைகளைச் சேர்ந்த தமிழறிஞர்கள் பங்கேற்றுக் கட்டுரைகள் வழங்கினர். 27.12.98 அன்று மாலை நடந்த நிறைவுவிழாவில் இரா. கலைக்கோவன் நிறைவுப் பேருரையாற்றினார்.

ஞாயிறு பாலைக்குத் தெய்வமா?

கலித்தொகைப் பாடலொன்று (16) ஞாயிற்றைப் பாலை நிலத் தெய்வமாகக் குறிப்பதாகக் கூறும் நச்சினார்க்கினியர், மழையையும் காற்றையும் தருகின்ற ஞாயிறு பாலைக்குத் தெய்வமாயினமை, 'மாயோன் மேய' என்னும் சூத்திரத்தான் உணர்க என்கின்றார் (தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்பு, பக். 103). பருதியஞ் செல்வனும் திகிரியஞ் செல்வியும் பாலைக்குத் தெய்வமென்பர் அடியார்க்கு நல்லார் (தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்பு, பக். 177). கலித்தொகை உரையாசிரியர் இ.வை. அனந்த ராமையரோ, 'ஆதித்தன் எல்லா நிலத்திற்கும் பொதுவென மறுக்க', என்கிறார். எவர் கூற்று சரியென்று அறிஞர்கள் கருத்துக் கூறுவார்களா?

5. உண்டாலம்ம இவ்வுலகம்

ஜமால் முகமது கல்லூரி வளாகத்தில்தான் பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பொறுப்பேற்றிருந்த பேராசிரியப் பெருந்தகை முனைவர் ச. முத்துக்குமரனாரை முதன்முதலாகச் சந்திக்கும் பேறமைந்தது. அப்போது நான் பல்கலைக்கழகப் பேரவை மன்ற உறுப்பினனாக இருந்தேன். அறிமுகம் செய்வித்தவர் பல்கலைக்கழகத் தமிழாய்வுத்துறைத் தலைவர் பேராசிரியர் மா. இராமலிங்கனார்.

புத்தனாம்பட்டி நேரு நினைவுக் கல்லூரியில் ஏற்பட்ட சிக்கலொன்றை நேர்செய்ய பாரதிதாசன் பல்கலைக்கழகம் அமைத்த மூவர் குழுவொன்றில் நானும் உறுப்பினனாக நியமிக்கப்பட்டிருந்தேன். அது தொடர்பாகத் துணைவேந்தருடன் இரண்டாம் சந்திப்பு. உள்ளூர்க்காரன் என்ற முறையில் என்னைக் குழுவில் சேர்த்திருப்பதாகக் கூறினார். கல்லூரிச் சிக்கலைத் தீர்வு செய்யக்கூடிய குழுவில் என்னை நியமிக்க அவருக்குத் தேவையாக இருந்தது 'உள்ளூர்க்காரன்' என்ற தகுதி மட்டும்தான் என்று நான் கருதவில்லை. அவருடைய உள்மனதில் என்னிடம் எப்படியோ நம்பிக்கை பிறந்திருந்ததை உணர்ந்தேன்; அதற்காக மகிழ்ந்தேன். பார்வையிலேயே ஒருவர் தகுதியை நிர்ணயித்துவிடக்கூடிய ஆற்றல் அப்பெருந்தகையிடம் இருந்தது.

எங்கள் மருத்துவ மன்ற உறுப்பினரும், சிறந்த நாடக ஆசிரியரும், தேர்ந்த கலைஞருமான மருத்துவர் சு. தியாகராசனின் மகள் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் பயின்றுகொண்டிருந்தார். மிகச் சிறந்த மாணவியான அவர் நன்கு தேர்வெழுதியிருந்தும் இறுதியாண்டுத் தேர்வில் தோல்வியடைந்திருந்தார். அதற்கான காரணம் அப்போது தேர்வாளராக இருந்த மருத்துவர் ஒருவரின் முறைகேடான செயல்தான் எனத் தெரியவந்தது. மருத்துவர் தியாகராசன் இதுபற்றி எங்களிடம் கூறி வருந்தியபோது உடன் துணைவேந்தரைத் தொடர்புகொள்ளச் செய்தேன். (அப்போது தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி பாரதிதாசன் பல்கலையின் கீழ் இருந்தது.) தகவலறிந்த துணைவேந்தர் உடன் உரிய விசாரணைக்கு ஏற்பாடு செய்தார். சென்னைப் பொது மருத்துவமனை மருத்துவ வல்லுநர் ஒருவர் கொண்டு தேர்வு முடிவைப் பரிசீலிக்க வைத்தார். எந்தத் தவறும் செய்யாத அந்த மாணவி தேர்வில் மிகச் சிறந்த மதிப்பெண்களுடன் வெற்றிபெற்றிருந்ததை அறிந்ததும் கல்வியமைச்சரையே நேர்முகம் கண்டார். மாணவியின் வாழ்க்கையில் அந்த நேர்முகம் ஒளியேற்றிவைத்தது. 'யாரோ ஒருவருடைய மகள்தானே' என்று நினைத்திடாமல், தம் பல்கலையின் ஓரங்கமான மாணவி என்ற கருத்தோடு நியாயம் வழங்க அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் என் உள்ளத்தில் அவர்பாலிருந்த மதிப்பையும் மரியாதையையும் பன்மடங்காக்கின.

பேராசிரியப் பெருந்தகை வீ.ப.கா. சுந்தரனார் இசைத்தமிழ் மேதை. 'இதனை இதனால் இவர் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவர் கண் விடல்', துணைவேந்தரின் இயல்பான போக்கு. தருமபுரம் திருமடத்தில் சுந்தரனார் ஆற்றிய இசைத்தமிழ் உரையில் தமையிழந்த துணைவேந்தர் அவரைச் சிராப்பள்ளி வரவழைத்தார். சிராப்பள்ளி வந்த சுந்தரனாரைத் துணைவேந்தர் இல்லத்திற்கு அழைத்துச்செல்லும் சாரதி வேலை எனக்கு வாய்த்தது என் பேறு. துணைவேந்தர் இல்லத்தில் இசைக் கலைக்களஞ்சியத்திற்கு வித்திடப்பட்டது. சுந்தரனார் சிராப்பள்ளிக்குக் குடிபெயர்ந்தார். கலைக்களஞ்சியத்திற்கு அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுவில் நானும் ஓர் உறுப்பினனாக இருந்தேன். சுந்தரனார் என்னை மகனாய்க் கருதிப் பழகினார். எங்களுக்குள் கருத்து வேறுபாடுகள் வரும். என்றாலும் அது எங்கள் அன்புறவில் ஊடாட நாங்கள் அனுமதித்ததில்லை. அவரது முதல் தொகுதியின் முதற் பகுதி தயாரானபோது அதைப் படித்துக் கருத்துச் சொல்லுமாறு சுந்தரனார் கேட்டார். நான் படித்தபோது சில இடங்கள் நெருடின. அவரிடம் விவாதித்தபோது நெருடல்களை நேர்செய்ய அவர் ஒப்பவில்லை. அவற்றை நேர்செய்து வெளியிடுவதே முறையென்று எனக்குத் தோன்றியது. அதனால் துணைவேந்தரிடம் எடுத்துரைத்தேன். நான் சொன்னது அனைத்தும் கேட்டுத் தெளிந்த பிறகு, 'சுந்தரனார் விருப்பம் போல் விட்டுவிடுங்கள். அவர் எழுதியவாறே பதிப்பித்துவிடுவோம். குறைகள் இருப்பதாகப் படிப்பவர் எழுதட்டும். அவற்றை அடுத்த பதிப்பில் சரி செய்து கொள்ளலாம்' என்று முடிவுரைத்தார். அவருடைய அந்த முடிவு எத்தனை பொருத்தமானது என்பதைப் பின்னாளில் நான் உணர்ந்தேன். எனக்குத் தோன்றிய நெருடல்களைச் சரிசெய்தே வெளியிடவேண்டும் என்று அப்பெருந்தகை கூறியிருந்தால் சுந்தரனாரின் மூன்று தொகுதிகள் ஒரு நாளும் வெளிவந்திருக்காது. எதையும் இருபுறத்தும் நன்கு கேட்டுச் சீர்தூக்கிப் பார்த்து, எது நடைமுறைக்கு ஏற்புடையதோ அதையே மேற்கொள்வது அவர் இயல்பு. அந்த இயல்பு அவருக்குப் பல்லாற்றானும் பெருமை சேர்த்துள்ளது.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொறுப்பு எளிதானதல்ல. நாளும் பொழுதுமாய்ப் பல இடையூறுகள், பல பணித்தளங்களில் உற்பத்தியாகும். சில மிகப் பெரிதாக வடிவெடுத்தும் பார்த்திருக்கிறேன். பேராசிரியர் ச. முத்துக்குமரனார் அவற்றைக் கையாளும் விதத்தில் அவரது ஆளுமை நன்கு புலப்படும். இங்கு எழுதமுடியாத பல இடையூறுகளைத் தம் நேர்மைத் திறத்தாலும், அறிவாற்றலாலும், அநுபவ முதிர்வாலும் பக்குவமாக அப்பெருந்தகை எதிர்கொண்டதைக் கண்டு ஒரு மாணவனாய் அந்த பாங்கைப் பயில முயன்றிருக்கின்றேன். இடையூறுகளை, இவை உடனுக்குடன் தீர்க்க வேண்டியவை, இவை ஆறப்போட்டுத் தீர்க்கவேண்டியவை என்று சட்டென அடையாளம் கண்டுகொள்ளும் திறம் அவரிடம் இயல்பாகவே இருந்ததால் எந்த இடையூறும் அப்பெருந்தகையிடம் நல்ல முடிவையே கண்டது.

வரலாற்றில் துணைவேந்தருக்கிருந்த ஈடுபாடு இணையற்றது. பல்கலைக்கழகச் சார்புடைய தஞ்சாவூர் குந்தவை நாச்சியார் கல்லூரியில் வரலாற்றுக் கருத்தரங்கொன்றிற்கு அவர் ஏற்பாடு செய்தபோது, 'Relevance of History Today and Tomorrow' என்ற பொதுத் தலைப்பைத் தேர்ந்திருந்தார். பொறியியல் மேதையான அவர் அக்கருத்தரங்கின் தொடக்கவுரைக்காக நூலகத்திலிருந்த டாயன்பியின் அத்தனை வரலாற்றுத் தொகுதிகளையும் படித்துக் குறிப்பெடுத்ததை நானறிவேன். செய்வன திருந்தச் செய் எனும் கோட்பாட்டில் அழுத்தமான நம்பிக்கையுடையவர் அவர் என்பதைப் பன்முறை அநுபவத்தில் கண்டிருந்த எனக்கு அவரது மாணவப் பாங்கு வியப்பளிக்கவில்லை. பல்கலைக்கழக நல்கைக் குழுவுடன் போராடிப் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் 'வரலாறு' ஒரு துறையாக இடம்பெறச் செய்த பெருமையும் அவருக்குண்டு. அதற்காக அவர் மேற்கொண்ட முயற்சிகள் மகத்தானவை; மறக்க முடியாதவை.

கல்வெட்டு மேதையான பேராசிரியப் பெருந்தகை எ. சுப்பராயலு கொடு மணலில் அகழாய்வு செய்து அரிய தரவுகளையும், பொருட்களையும் சேகரித்த தகவலை அறியநேர்ந்தபோது அவற்றை நேரில் காணத் துணைவேந்தர் ஆர்வமுற்றார். தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டுத் துறைக்குத் தகவல் தந்து பேராசிரியர் எ. சுப்பராயலுவின் மாணவர் திரு. பா. ஜெயக்குமார் (தற்போது முனைவர்) கொடுமணல் அகழ்வுகள் பற்றி விரிவாக எடுத்துரைக்க வகை செய்து, துணைவேந்தர் அவற்றை அறிந்துமகிழ வாய்ப்பேற்படுத்தினோம். அதன் விளைவு பாரதிதாசன் பல்கலைக்கழகம் இந்தியக் கல்வெட்டியல் கழகத்தின் மாநாடொன்றினை ஏற்றுப்போற்றியது.

தமக்கு அனைத்தும் தெரியும் என்று எப்போதும் அவர் நினைத்ததில்லை. கற்றுக்கொள்வதற்கு ஒருபோதும் தயங்கியதேயில்லை. கற்றவரை மதிப்பதையும், அவருக்குப் பாராட்டுச் செய்து போற்றுவதையும் பலமுறை கண்டிருக்கிறேன். சிராப்பள்ளியில் நடந்த தேவார மூவர் விழாவில் என் பொழிவு முடிந்தபோது மனமாரப் பாராட்டியதுடன், பொன்னாடையொன்று வாங்கி வரச் செய்து அவையில் போர்த்தி மகிழ்ந்த அவரின் அன்பு மனம் நினைக்குந் தோறும் கண்களில் நீர் மல்க வைக்கும் தகைமையது. இந்த அன்பு ஆழமானது; வாய்ப்பமையும் போதெல்லாம் பயன் விளைவிக்கும் பாங்கினது.

கல்வியிலும், கற்பிக்கும் முறைகளிலும் பல பயனுள்ள எதிர்கால நோக்குடைய மாற்றங்களை அவர் ஏற்படுத்தினார். எதிர்காலவியலென்றே ஒரு துறையை உண்டாக்கினார். ஆய்வு மாணவர்கள் பயனடைய நிரந்தர நிதியமைப்புகளை உருவாக்கப் பெருமுயற்சி செய்து வெற்றிகண்டார். அவருடைய அயராத உழைப்பால் பல்வேறு துறை சார்ந்த நாற்பதிற்கும் மேற்பட்ட ஆய்வு மாணவர்கள் பயனடைந்தனர். மாணவர்கள் நலத்திற்காகப்

பல்கலைத் திட்டக் குழுவில் பல பயனுள்ள யோசனைகள் அவரால் முன் மொழியப்பட்டதை நானறிவேன்.

சிக்கலான விஷயங்களில் பலரையும் கலந்தாலோசிப்பார். ஆனால் முடிவு அவருடையதாகவே இருக்கும். அந்த முடிவு லாப, நட்டங்களைச் சரியான அளவில் கணக்கெடுத்து மேற்கொள்ளப்பட்டதாகவே அமையும். அவரது முடிவுகள் தவறி நான் கண்டதில்லை. முடிவெடுத்த பிறகு அதை மாற்றிக்கொள்வதும் அவர் இயல்பல்ல.

துணைவேந்தரின் தமிழ்ப்பற்று இணையற்றது. நண்பர்களுடன் உரையாடும்போது தமிழில்தான் பேசுவார். மற்றவர்களும் தமிழில் உரையாடுவதையே விரும்புவார். ஆங்கிலத்தில் இணையற்ற திறன் இருந்தாலும் தமிழ்ச் சிந்தனையாளராக வாழ்பவர். தமிழ், தமிழர், தமிழ்நாடு குறித்த இப்பெருந்தகையின் சிந்தனைகள் பல அரிய நூல்களாக வெளிவந்துள்ளன. தமிழால் முடியாது என்று அரற்றும் 'டமிலர்கள்' இந்த நூல்களைப் புரட்டியாவது பார்க்கவேண்டும். தமிழின் வளமை குறித்தும், ஆற்றல் குறித்தும் அறிஞர்கட்கு ஒரு கண்திறப்பாக அமையவென்றே பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் தமிழரின் தொன்மை அறிவியல், தொழில்நுட்பம் பற்றிய கருத்தரங்கொன்றைத் துணைவேந்தர் நடத்தினார். இருநாட்களில் ஏறத்தாழ நாற்பதுக்கும் மேற்பட்ட அரிய கட்டுரைகள் படித்தளிக்கப்பட்ட இக்கருத்தரங்க நிகழ்வு துணைவேந்தரின் தமிழ் வளர்ச்சிப் பணிகளில் தலையாயதாகும்.

ஆங்கிலத்தில் காலாண்டிதழாக தொடர்ந்து வெளிவந்துகொண்டிருந்த சூழலியல் பற்றிய ஆய்வுக் கட்டுரைச்சுருக்க வெளியீட்டைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடத் துணைவேந்தர் மேற்கொண்ட முயற்சிகள் மகத்தானவை. பல்துறை அறிஞர் குழுவை ஏற்படுத்தி, உடனுக்குடன் சூழலியல் இதழின் கட்டுரைகளைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடச்செய்தார். அரும்பாடுபட்டு அப்பெருந்தகை தொடங்கி வளர்த்த இப்பணி அவர்க்குப் பின் முடங்கிவிட்டது.

பாரதிதாசன் கவிதைகளில் அறிவியல், இந்திய மெய்யியலுக்குத் தமிழர் கொடை எனத் தமிழ் நலம் நாடும் பல கருத்தரங்குகள் துணைவேந்தரின் பணிக்காலத்தில் நிகழ்ந்தன. பல்கலையின் அனைத்துத் துறைகளையும் ஆய்விதழ்கள் தொடங்கி வெளியிடுமாறு பேரவைக் கூட்டத்திலேயே வேண்டுகோள் வைத்தார். பாரதிதாசன் பல்கலைக்கழகத்தைத் தமிழ்நாட்டின் மிகச் சிறந்த பல்கலையாக உயர்த்த அப்பெருந்தகை மேற்கொண்ட முயற்சிகள் ஒன்றிரண்டல்ல. துறைகளின் வளர்ச்சியில் அவர் காட்டிய அக்கறை உலகறிந்த உண்மை.

ஆன்மிகத்தில் துணைவேந்தருக்கு ஆழ்ந்த பற்றுண்டு. அனைத்துத் திருமடங்களுடனும் தொடர்புடையவர். திருக்கோயில்களை தரிசிப்பதிலும்,

அவை குறித்த வரலாற்றாய்வுகளிலும் அவர் காட்டும் ஈடுபாடு இணையற்றது. சில தலங்களுக்கு அவருடன் நானும் சென்றிருக்கிறேன். கல்வெட்டுத் தரவுகளைக் கவனமுடன் கேட்பார். கோயிற் கட்டடக்கலைக் கூறுகளைப் பற்றிக் கருத்துரைப்பார்; பொறியியல் நோக்கில் பல கட்டுமான உத்திகளை விளக்குவார். அவருடன் பயணம்செய்வது அறிவுச் செல்வமூட்டும் இனிய அநுபவமாகும்.

பெரும் பதவியிலிருந்தபோதும் காட்சிக்கு எளியராய், இன்சொல்லராய், யாரும் அணுகத் தக்கவராய், நியாயமான கேட்புகளுக்கு உடன் தீர்வு வழங்குபவராய் விளங்கியவர் பேராசிரியர் ச. முத்துக்குமரனார். நல்ல முயற்சிகளை ஊக்குவிப்பதும், அவற்றிற்குத் துணைநிற்பதும் தம் கடமையென்று கருதிச் செயலாற்றும் இப்பெருந்தகையின் ஆசியுடன் பிறந்த இதழ்களுள் ஒன்றே 'வரலாறு'. என்ன பெயர் வைப்பது என்பதிலிருந்து, எப்படி நடத்துவது, என்னென்ன பொருள்களில் உள்ளடக்கம் அமையலாம், இதழிற்கு நிரந்தர பாதுகாப்பு செய்வதெப்படி என்பது வரை பலவும் கேட்டறிந்து 'வரலாறு' வளர்ந்து நிலைக்க வழிகாட்டியவர் துணைவேந்தர்.

தவறுகளை மன்னிப்பவர்; மறப்பவர். பிழைகளைச் சுட்டிக் காட்டித் திருத்தத் தயங்காதவர். ஆடம்பரத்தை அறவே வெறுப்பவர். தம் பணி நேரம் தவிர பிற நேரங்களில் வேட்டியும் சட்டையுமணிந்து நாட்டுடை நாடுபவர்; சிரித்த முகத்தினர்; சிந்தனை மிளிரும் அருட்கண்ணினர்; யாரையும் எளிதில் ஆட்கொள்ளும் கருணை கலந்த கம்பீரத் தோற்றத்தினர்; தனிப்பட்ட முறையில் யாரிடமும் பகை கொள்ளாதவர்; நட்பிற்காகவும் எல்லைகள் மீறாதவர்; எல்லாவற்றினும் மேலாய் இனிய மனிதர். ஆம்! மனிதம் நிரம்பித் தளும்பும் உண்மையான மனிதர்.

துணைவேந்தரின் துணைவியார் அமைதியே உருவானவர். அடக்கமும், இளநகையும், அன்பான உள்ளமும் அவர்தம் அணிகலன்கள்; துணைவேந்தரின் இயல்புகளுக்கு ஏற்ப அமைந்த பெருமாட்டி. இவ்விருவரின் அன்பும், ஆசியும் எங்கள் பணிகளுக்கு எப்போதும் உண்டு என்ற நினைவே எங்கள் வலிமை.

துணைவேந்தர் பொறுப்பிற்குப் பலர் வருவர்; போவர். ஆனால் திட்பமும், மதிநுட்பமும், மனிதமும் நிறைந்த பேராசிரியப் பெருந்தகை முனைவர் ச. முத்துக்குமரனார் போல்வரே அப்பொறுப்பிற்குப் பெருமை சேர்ப்பதுடன் வரலாற்றிலும் விடிவிளக்குகளாய் இடம்பெறுகின்றனர்.

— இரா. கலைக்கோவன்

6. கட்டுரையாளர்கள்

1. அர. அகிலா
   செட்டிநாடு கலை அறிவியல் கல்லூரி
   திருச்சிராப்பள்ளி - 620 001.

2. ப. அங்கவை
   2/196, யோகி ராம் இல்லம்,
   த. முருங்கப்பட்டி,
   துறையூர் - 621 012.

3. புலவர் செ. இராசு
   கொங்கு ஆய்வு மையம்
   7, என்.ஜி.ஜி.ஓ. காலனி முதல் வீதி,
   ஈரோடு - 638 009.

4. எஸ். இராமச்சந்திரன்
   10A, ரகு பில்டிங், ஏரல் - 628 801.

5. ஸ்தபதி வே. இராமன்
   38/5, புதிய சுற்றுலா மாளிகைக் குடியிருப்பு,
   மன்னார்புரம், திருச்சிராப்பள்ளி - 620 020.

6. இரா. கலைக்கோவன்
   இயக்குநர்
   டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
   48, புத்தூர் நெடுஞ்சாலை, திருச்சிராப்பள்ளி - 620 017.

7. கோ. சங்கீதா
   முதுகலை மாணவி - வரலாற்றுத்துறை
   சீதாலட்சுமி ராமசாமி தன்னாட்சிக் கல்லூரி
   திருச்சிராப்பள்ளி - 620 002.

8. த. சந்திரகுமார்
   5A, ஏழாம் குறுக்குத் தெரு,
   சுந்தரம் நகர், தஞ்சாவூர் - 613 004.

9. ஆறுமுக சீதாராமன்
11, உமா நகர், தஞ்சாவூர் - 613 007.

10. மு. நளினி,
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்,
48, புத்தூர் நெடுஞ்சாலை, திருச்சிராப்பள்ளி - 620 017.

11. ஐராவதம் மகாதேவன்
18A, நான்காம் கடல் நோக்குச் சாலை,
வால்மீகி நகர், திருவான்மியூர், சென்னை - 600 041.

12. சோ. மாலதி
தீனதயாளுநகர், திருஎறும்பியூர்,
திருச்சிராப்பள்ளி - 620 015.

13. சு. முத்துலட்சுமி
வேங்கூர், திருச்சிராப்பள்ளி.

14. தேவமணி ரஃபேல்
AE-1, பத்தாம் முதன்மைச் சாலை,
அண்ணா நகர், சென்னை - 600 040.

15. செ. வாணி
85, மூன்றாவது முதன்மைச் சாலை,
கலைநகர், மதுரை - 625 014.

16. கோ. வேணிதேவி
தலைவர் - வரலாற்றுத்துறை
சீதாலட்சுமி ராமசாமி தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 620 002.

17. கி. ஸ்ரீதரன்
பதிவு அலுவலர், தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை,
திருச்சிராப்பள்ளி - 620 001.

வருந்துகிறோம்

ஆழ்ந்த தமிழ்ப்பற்று, வரலாற்றார்வம், மருத்துவ முதலுதவி முறைகளில் இணையற்ற ஈடுபாடு, உரியார்க்கு உதவும் உளப்பாங்கு என வாழ்ந்த வணிகப் பெருமகனார் திரு. பா. கஸ்தூரிரங்கன் 20.7.2000 இல் அமரரானார். வரலாறு இதழ் தொடங்கப் பேராதரவு நல்கிய அப்பெருந்தகை, இதழின் ஒவ்வொரு தொகுதிக்கும் விளம்பரம் தந்து உறுதுணையானவர். இலக்கியப் புலமையும், வரலாற்றுத் தெளிவும் இயல்பாகவே இழையும் இனிய சொல்லாளரான இப்பெருந்தகையின் மருத்துவ முதலுதவிக் கையேடு தமிழில் வெளிவந்த சிறந்த அறிவியல் நூல்களுள் ஒன்றாகும். தேவார மூவர் விழாவில் தம்மை இணைத்துக் கொண்டு தொண்டர்க்குத் தொண்டராய்ச் சமயப் பணியாற்றிய திரு. பா. கஸ்தூரிரங்கரின் வழிகாட்டல்களை வரலாறு என்றென்றும் நினைவில் வைத்துப் போற்றும்.

வருந்துகிறோம்

டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தின்பால் ஆழ்ந்த பற்றுள்ள நண்பர் திரு மு.ம. கோபாலன், மையத்தின் தொடக்கக் காலச் சொற்பொழிவுகளுக்குப் பார்வையாளராய் வரத்தொடங்கி, மையம் நடத்திய பட்டயக் கல்வி வகுப்பில் மாணவராய்த் தம்மை இணைத்துக்கொண்டு, முயன்று படித்துத் திறனாளராய் மலர்ந்தவர்; தம் அரிய முயற்சியாலும், உழைப்பாலும் திருச்சிராப்பள்ளி நாணயவியல் கழகத்தை நண்பர்கள் துணையுடன் உருவாக்கி வளமுற வளர்த்தவர். உறையூர்ப் பஞ்சவர்ணசாமி கோயில் வார வழிபாட்டு மன்றம் தோன்றக் காரணமானவர். கல்வெட்டியல், நாணயவியல் கருத்தரங்குகளில் கலந்துகொண்டு ஆய்வுக் கட்டுரைகள் வாசித்தளித்த அப்பெருமகனார் 1999ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 17ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார். புன்னகை மாறா முகமும், உழைப்பின் கண் வாரா திருவுண்டா எனுமாறு முயன்று பெற்ற திறமும், நண்பர்க்குதவும் நல்ல உள்ளமும் கொண்டு விளங்கிய அப்பெருந்தகையின் துணையுடன் மையம் கண்டறிந்த புதிய கல்வெட்டுகளை வரலாறு ஆய்விதழ் வெளியிட்டு மகிழ்ந்துள்ளது. வரலாறு இதழின் தோற்றத்திலும், வளர்ச்சியிலும் பெரும்பங்கு வகித்த அப்பெருந்தகையை டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் என்றென்றும் நினைத்திருக்கும்.

வருந்துகிறோம்

வானியல் குறிப்புகள் கொண்டு தமிழ்நாட்டுப் பாண்டிய, சோழ அரசர்களின் காலத்தை நிர்ணயித்தவரும், பாண்டியர் வரலாறு எனும் நூலின் வழி இரண்டாம் பாண்டியப் பேரரசுக் கால அரசர்களை இனங்காண வழி வகுத்தவருமான கல்வெட்டறிஞர் திரு. என். சேதுராமன் 25.06.1999 அன்று அமரரானார். வணிகராக வாழ்க்கையமைந்த போதும், வரலாறு அவரை வளைத்துப்போட்டது. கல்வெட்டுகளின் கவர்ச்சியில் கருத்திழந்த அப்பெருந்தகை தம் வாழ்நாளையே கல்வெட்டாய்விற்கென அர்ப்பணித்தார். இந்தியக் கல்வெட்டுக் கழகத்தின் பாராட்டுச் செப்பேடு பெறுமளவு ஆய்வில் ஆர்வம் கொண்டிருந்தார். டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்திற்குப் பொழிவாற்றவும், மையத்தின் பட்டயக் கல்வி மாணவர்க்குக் கற்பிக்கவும் அவர் வருகைதருவது வழக்கம். அளவற்ற நினைவாற்றலும், நகைச்சுவையுணர்வும், கல்வெட்டாய்வென்று வருவார்க்கு உதவிடும் மனப்பாங்கும் கொண்ட அப்பெருந்தகையைத் தமிழகத் தொல்லியல் கழகமும் பாராட்டி மகிழ்ந்துள்ளது.

அரிய நூல்கள் கொண்ட அவர் நூலகம் பல ஆய்வாளர்கட்குப் பயன்பட்டுள்ளது. செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருக்கும் அப்பண்பாளர் தம் கட்டுரைப்படிகளையும், நூற்படிகளையும் ஆய்வாளர்க்குக் கொடையாக வழங்கிமகிழ்ந்தவர். யாரும் எளிதில் அணுகக்கூடியவராய் விளங்கிய திரு. சேதுராமன் தமிழகத் தொல்லியல் கழகத்தின் தலைவராக விளங்கிப் பெருமைசேர்த்தவர். அவரின் புன்னகை மாறா முகமும், இன்மொழியும், ஆய்வுப் புலமையும் பல இளம் ஆய்வாளர்கட்கு நன்னம்பிக்கை முனைகளாய் அமைந்தன. வரலாற்றுக்கு தம் ஆய்வால் ஒளிசேர்த்த அப்பெருந்தகைக்கு வரலாறு கைகூப்பி அஞ்சலி செலுத்துகிறது.

நல்வாழ்த்துக்கள்

ஷானவாஸ்
மருத்துவமனை

A-20, மெயின் ரோடு,
தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி – 18.

சிறப்பான சித்த மருத்துவ சிகிச்சை பெறச் சிறந்த இடம்

ப்ரியா நர்ஸிங்ஹோம்

8-D, ராமராயர் தெரு, தென்னூர், திருச்சிராப்பள்ளி – 620 017.
தொலைபேசி : 0431–764765, 766381
தொலை நகலி : 0431–766599
மின் அஞ்சல் : drkannan@tr.dot.net.in
இணைய முகவரி : http://www.siddhakannan.com

ஆலோசனை நேரம்
காலை 9 முதல் 11 வரை
மாலை 5 முதல் 8 வரை

பிரபல சித்த மருத்துவ நிபுணர்

Dr. R. கண்ணன், B.I.M. அவர்கள்

ஆலோசனை வழங்குவார்.

நாட்பட்ட தோல் நோய்களான வெண்படை, செதில்படை, தோல்தொற்றுக்கள், காணாக்கடி மற்றும் மூலம், வயிற்றுப்புண், ஆண் மலட்டுத்தன்மை, பக்கவாதம், கீல்வாத நோய்கள், ஒற்றைத் தலைவலி, கிரகணி, முடி உதிரல், பொடுகு, பித்த வெடிப்பு, சிறப்பாக முகவாதம், நாட்பட்ட பால்வினை நோய்கள் மற்றும் அனைத்து நோய்களுக்கும் குணம் காண மேற்கண்ட முகவரியில் அணுகவும்.

முகூர்த்தப்பட்டு, மில் ஜவுளிகள் வாங்க
கைராசியான ஸ்தாபனம்

லக்ஷ்மி
சில்க்ஸ் சென்டர்

மலைவாசல், திருச்சிராப்பள்ளி – 620 002.
போன் : 701344

With Best Compliments From:

✆ 701955

M/s. KALKI JEWELLERY

MALAI VASAL,

43, CHINNAKADAI STREET,

THIRUCHIRAPALLI - 620 002.

Best Wishes

✆ 708282
702977

Vasanta Bhavan

A/c. Restaurant

N.S.B. ROAD, **THIRUCHIRAPALLI** - 620 002.

With Best Compliments From

✆ 701726
703740

NAVEEN AIR TRAAVELS (P) LTD.,

First Floor,
Y.V.D. Complex,
Chathram Bus Stand,
Thiruchirappalli - 620 002.

Liaison Office:

Ratna Building,
581, Anna Salai,
Chennai - 600 006.
✆ 4340091, 4349945

With Best Compliments From

✆ Off : 701931
701102

NEW LAKSHMI JEWELLERY

3, Chinnakadai St.,
Thiruchirapalli - 620 002.

Gratefully received from

Dr. S. VELMURUGAN'S CHARITY

FOR

Educating the Poor Children

வாழ்த்துக்கள்

நலம்விரும்பி

நல்வாழ்த்துக்கள்

✆ 460001

அபிராமி
ஹோட்டல்

மத்திய பேருந்து நிலையம்,

திருச்சிராப்பள்ளி - 620 001.

HYUNDAI
We're listening

beyond

zipDrive™

to fulfilling dreams!

By creating something that makes every other compact car feel small.

By packing big car features into the Santro zipDrive™.

- ➤ The joy of power steering without paying more.
- ➤ A 1000 cc, 4 cylinder, 12 valve MPFI engine for that unbeatable performance.
- ➤ Big car features such as power windows.
- ➤ The security of central locking.
- ➤ Dual side impact bars and engine sub-frame for added protection.
- ➤ Extra space with the multi-function Tall-Boy™ design.
- ➤ Front and rear head rests for total safety.
- ➤ Wider tyres for better road grip and driving comfort.

Now, make your wish come true.

Test drive the Santro zipDrive™.

Join the 1,29,000 delighted Hyundians who've made it the No.1 best seller in the last 3 consecutive months.

SANTRO zipDrive™
The complete family car

HYUNDAI **POPULAR Hyundai**

4, Bharathiar Salai, Thiruchirappalli - 620 001. ✆ 0431 - 411777

ஜோதி ஆப்செட் பிரிண்டர்ஸ், திருச்சிராப்பள்ளி - 2. ✆ 700416